





# நடுவூர்ப் பழுத்த நன்மரம்




வெளியீடு
யா/இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம்
ilavalaimeihandan@yahoo.com

# நடுவூர்ப் பழுத்த நன்மரம்

வெளியீடு :

**யா/ இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம்**

**ilavalaimeihandan @yahoo.com**

**- 2009 -**

| | |
|---|---|
| நூலின் பெயர் | : நடுவூர்ப் பழுத்த நன்மரம் |
| அனுசரணையாளர் | : திருமதி கிருபாசக்தி தர்மதாசன் |
| இதழாசிரியர் | : திருமதி . இந்திராவதி யோகலிங்கம் |
| முகவரி | : யா/ இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம் இளவாலை வடக்கு, இளவாலை. |
| பக்கங்கள் | : 199 |
| தாள் அளவு | : $B_5$ 70gm |
| பிரதிகள் | : 400 |
| அட்டைப்பட வடிவமைப்பு | : திரு. ச. கஜந்தன் |
| கணனி வடிவமைப்பு | : திருமதி அன்னலட்சுமி இராசேந்திரம் |
| அச்சுப்பதிப்பு | : ஸ்ரீ சுப்பிரமணிய அச்சகம், 63, **B.A.** தம்பி லேன், யாழ்ப்பாணம். |

J/ILAVALAI MEI HANDAN
MAHA VIDYALAYAM

# நடுவூர்ப் பழுத்த நன்மரம்




## வள்ளல் ஏழூர் இராசரத்தினம் அவர்கள்
## 1898-06-29 ..... 1949-12-05

இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலய நிறுவுநர் வள்ளல் ஏழூர் இராசரத்தினம் அவர்களின் அறுபதாவது நினைவு தினத்தில்(01-12-2009) அன்னாரின் திருமகள் திருமதி கிருபாசக்தி தர்மதாசன் அவர்களின் அனுசரணையுடன் வெளியிடப்பெற்றது.

**விரோதி வருடம் கார்த்திகைத் தீபத் திருநாள்**
**01-12-2009**

ilavalaimeihandan@yahoo.com

# சமர்ப்பணம்



மெய்கண்டானை நிறுவி மேன்மையுற வைத்த வள்ளல் ஏழூரரின் அறுபதாவது ஆண்டு நினைவு நாளில் நடுவூர்ப் பழுத்த நன்மரமாய் வாழ்ந்த அன்னாருக்கே இந்நூல் சமர்ப்பணம்

**மலர்க் குழுவினர்**

# தமிழ்மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!
வானமளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே!
ஏழ்கடல் வைப்பினும் தண்மணம் வீசி
இசை கொண்டு வாழியவே!
எங்கள் தமிழ் மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே!
சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!
தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ்நாடே!
வாழ்க தமிழ் மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே!
வானம் அறிந்த தனைத்து மறிந்து
வளர்மொழி வாழியவே!

# பொருளடக்கம்


| | |
|---|---|
| 01. சமர்ப்பணம் | |
| 02. தமிழ்மொழி வாழ்த்து | |
| 03. பொருளடக்கம் | |
| 04. இதழாசிரியரின் உள்ளத்திலிருந்து | 01 |
| 05. மலர்க்குழு | 02 |
| 06. மகுடவாசகம் | 03 |
| 07. வித்தியாயல கீதம் | 04 |
| 08. ஆசியுரைகள் | 05 - 07 |
| 09. வாழ்த்துரைகள் | 08 - 15 |
| 10. பாடசாலை விபரம் | 16 |
| 11.பாடசாலையில் கடமையாற்றிய அதிபர்கள் விபரம் | 17 |
| 12. மாணவர் உறுதிமொழியும் கொடிக்கீதமும் | 18 |
| 13. அதிபரின் எண்ணத்திலிருந்து | 19 |
| 14. சிந்து நடைக் கவிதை (வை.க.சிற்றம்பலம்) | 20 |
| 15. வை. க. சிற்றம்பலம் அவர்களின் உள்ளத்திலிருந்து.... | 22 |
| 16. மெய்கண்டான் கல்வியின் விழுமியங்கள் | 24 |
| 17.சிந்து நடைக் கூத்து | 29 |
| 18. சைவப்பண்பாட்டுப் பாரம்பரியம் | 39 |
| 19. கலைக்கோவிலே! வளமிகுந்து வாழிநீடு! | 43 |
| 20. எனது பார்வையில் மெய்கண்டான் | 44 |
| 21. புரட்சிக்கனல் | 47 |
| 22. பாடாண்திணை | 49 |
| 23. தொடர்பாடலில் உடல்சார் மொழியின் முக்கியத்துவம் | 56 |
| 24. சிறந்த கற்பித்தல் ஒரு பார்வை | 62 |
| 25. கற்கக் கசடற.......... | 69 |
| 26. சைவ சமய அற்புதங்கள் | 75 |
| 27. ஆடற்கலையின் மகத்துவம் | 85 |
| 28. ஆசிரியரிடம் காணப்படும் பண்புகள் | 88 |
| 29. கல்விச் சிந்தனை | 90 |
| 30. வாணி துதிப்பாடல் | 90 |

| | |
|---|---|
| 31. MY SCHOOL | 91 |
| 32. FLOWERS | 91 |
| 33. மாதா பிதா குரு தெய்வ வழிபாட்டுக் கீதம் | 92 |
| 34. நாட்டார் இலக்கியங்கள் | 93 |
| 35. SEASONS | 95 |
| 36. The problem of drought | 97 |
| 37. Water management in srilanka | 98 |
| 38. Senior citizens and we | 99 |
| 39. தகவல் பரிமாற்றம் | 100 |
| 40. SHORT CUT | 103 |
| 41. தாயே நீ வாழி! | 104 |
| 42. Our computer room | 105 |
| 43. தாய்மை | 106 |
| 44. இலட்சியப் பாதை நோக்கி | 108 |
| 45. மனை அலங்கரிப்பில் மலர்கள் | 111 |
| 46. Our school library | 112 |
| 47. புகழுறு பழைய மாணவர் விபரத்திரட்டு | 113 - 182 |
| 48. பாடசாலைக் கிடைப்படம் | 183 |
| 49. ஆசிரியர்கள் விபரம் | 184 |
| 50. தொண்டர் ஆசிரியர்கள் விபரம் | 186 |
| 51. கல்வி சாரா ஊழியர்கள் விபரம் | 186 |
| 52. தரம் 5 புலமைப்பரிசில் பெறுபேறுகள் | 187 |
| 53. பல்கலைக்கழகம் கல்வியிற் கல்லூரிக்கு தெரிவானோர் விபரம் | 188 |
| 54. மெய்கண்டானின் வளர்ச்சிப் பாதையில்..... | 190 |
| 55. நன்றிகள் | 193 |
| 56. எதிர்காலக் கிடைப்படம் | 194 |
| 57. பின்னிணைப்பு | 195 |
| 58. வித்தியாலய ஸ்தாபகரது நினைவுரை | 198 |
| 59. கணிதப் புதிர் | 199 |

# இதழாசிரியரின் உள்ளத்திலிருந்து.....



ஈழமணித் திருநாட்டின் இதயமாகத் திகழும் யாழ்ப்பாணத்தின் வடபால் அமைந்துள்ள இளவாலைக் கிராமத்தின் கண் சைவப் பாரம்பரியத்தைக் கடைப்பிடிக்கும் யா/இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தை நிறுவிய வள்ளல் ஏழூரர் கனவை நனவாக்கும் வகையிலும் பாடசாலைச் சமூகத்தினரின் ஆற்றல்களை வெளிச்சமிட்டுக் காட்டும் வகையிலும் "நடுவூர்ப் பழுத்த நன்மரம்" உங்கள் கைகளில் மலராகத் தவழ்கிறது.

வள்ளல் வாழ்ந்த காலத்துக் கட்டுக் கோப்புகளுக்கும் அப்பால் எல்லோருக்கும் கல்வி வாய்ப்புக் கிடைக்க வேண்டும் என்ற நோக்கில் சமூகத்துடன் போராடி ஏழை எளியவர்களுக்கும் கல்வி வாய்ப்பைப் பெற வழிசமைத்த புரட்சி வீரனின் எண்ணத்திற்கு ஏற்ப சாதனைகள் நிலைநாட்டப்படுகின்றமை கண்கூடு.

சுயநலம் மிகுந்த இக்காலத்திலும் நிறுவுநரின் அறுபதாவது ஆண்டு நிறைவு தினத்தை முன்னிட்டு வெளியிடப்படும் இம் மலரிற்கு முழுமையான அனுசரணை வழங்கிய ஸ்தாபகரின் செல்வமகளாம் திருமதி கிருபாசக்தி தர்மதாசன் அவர்களைப் போற்றுகின்றேன்.

இப் பாடசாலையின் சாதனைகளையும் ஏழூரர் என்ற நடுவூர்ப் பழுத்த நன்மரத்தில் உருவாகிய கனிகளான புகழுறு பழைய மாணவர்களின் விபரங்களையும் உள்ளடக்கி வெளிவரும் இந்நூலிற்கு இதழாசிரியராக இருப்பதையிட்டு பெருமகிழ்வடைகின்றேன்.

"நடுவூர்ப் பழுத்த நன்மரம்" என்ற நூலில் 1998ம் ஆண்டு வெளியிடப்பட்ட பவள மலரின் பின்னரான பாடசாலை தொடர்பான தகவல்களை வெளியிட உதவிய அதிபர், ஆசிரியர்கள் அனைவருக்கும் எனது உளங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் இந்நூல் சிறப்புற அமைய உதவிய அனைத்து அன்புள்ளங்களுக்கும் மலர்க்குழு சார்பாகவும் பாடசாலைச் சமூகத்தின் சார்பாகவும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி

இதழாசிரியர்,

**திருமதி இ. யோகலிங்கம்** B.A. P.G.D.E.

# மலர்க்குழு

**தலைவர்** - திரு. ச. சிவானந்தராசா (அதிபர்)

**இதழாசிரியர்** - திருமதி இ. யோகலிங்கம்

**செயலாளர்** - திருமதி சு. கிருபானந்தராசா

**செயற்குழு உறுப்பினர்கள்**

திரு. செ. ஆனந்தீஸ்வரன்

திரு. தி. பரமேஸ்வரன்

திரு. மு. சுரேஸ்குமார்

திருமதி வ. இராமச்சந்திரன்

திருமதி பு. திருநாவுக்கரசு

திருமதி க. பத்மராஜா

திருமதி மா. உதயகுமார்

திரு. ச. கஜந்தன்

திரு. வி. விஸ்ணுகரன்

## மகுட வாசகம்

*வாழக் கல்மின்*
*(LEARN TO LIVE)*

## தூர நோக்கு

*(VISION)*

*சமநிலை ஆளுமையுள்ள நிறைவான பிரஜைகளை உருவாக்கல்*

## பணிக்கூற்று

(MISSION STATEMENT)

*வளரும் உலகின் எதிர்கால சவால்களுக்கு முகம் கொடுக்கக் கூடிய சமநிலை ஆளுமையுள்ள கல்வி, கலை, பண்பாடு, ஒழுக்கம் நிறைந்த நற்பிரஜைகளை உருவாக்கல்*

# - 2009 -

# வித்தியாலய கீதம்

இராகம் : கல்யாணி　　　　　　　　　　　　　　　　　　　　　　தாளம் : ஆதி

வாழிய மெய்கண்டான் மா வித்தியாலயம்
நீடிசை யோடு பல்லூழி

ஏழுர் ராசரத்தினமா மகிபன்
இளவா லைக்கருள் நிதியம்
வாழக் கல்மின் எனும்பேர் இலட்சிய
வாசக மாண்பொருள் தந்தே　　　　　　　　　　- வாழிய

தாமரை ஏடு தீபம் நல் இடபம்
தாங்கிய இலச்சினை யாலே
தண்ணளி ஞானம் ஒளியொடு தருமம்
தரணியில் நாம் பெற நின்றே　　　　　　　　　　- வாழிய

கல்வியும் கலையும் ஒழுக்கமும் பெருக
காண்பெரும் புகழெமக் காக்கி
வாழ்க.... வாழ்க... வாழ்க.....
மாநிலம் போற்றிட வாழ்க　　　　　　　　　　- வாழிய.

பாடல் ஆக்கம்
**சைவப்புலவர் திரு.சு.செல்லத்துரை**

இசையமைப்பு
**இசைமாணி திரு. ந. ஸ்ரீராம்குமார்**

உ
சிவமயம்
குருபாதம்

# நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம்

ஸ்தாபகர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்

**குருமகா சந்நிதானம் ஆதி முதல்வர்**

ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்



## இரண்டாவது குருமகா சந்நிதானம்

அவர்கள் அருளிய

# அருளாசிச் செய்தி

**அன்புசார் பெருந்தகையீர் :-**

இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம் தனது ஸ்தாபகரை நினைவுகூர்ந்து நூல் வெளியிடுவதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றோம். இளவாலை மக்களின் கல்விக்காக நீண்ட காலமாக பணியாற்றிக் கொண்டிருக்கும் பாடசாலை இன்று பல வளர்ச்சிகளைக் கண்டு தலை நிமிர்ந்து நிற்பது அனைவருக்கும் மகிழ்ச்சியைத் தருகின்றது. இந்நூலில் மாணவர்களின் ஆக்கங்களும், அவர்களுடைய அறிவை மேலும் வளர்த்தெடுக்கின்ற வகையில் செய்திகளும் வெளிவருவது வளர்ந்து வரும் மாணவ சமுதாயத்திற்கு விருந்தாக அமைகின்றது. முப்பொருள் விளக்கமாகிய சித்தாந்த தத்துவத்தை மெய்கண்டான் வித்தியாலயம் சமயத்தோடு சேர்ந்த கல்வி வாழ்க்கையையும் எமக்கு உணர்த்துகின்றது. இதனை நிறுவிய ஏழூர் இராசரத்தினம் அவர்களுடைய சமயப் பற்றும் மொழிப்பற்றும் எமக்கு வெளிப்படையாக உணர்த்துகின்றன. இன்று வரை தொடர்ந்து செயற்படுத்தி வரும் அதிபர் ஆசிரியப் பெருமக்களை வாழ்த்திப் பாராட்டுகின்றோம். கல்விப்பணி, ஒழுக்கம், சமயம் சேர்ந்த வாழ்க்கை முறையாக தொடர்ந்து பணியாற்ற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். ஸ்தாபகரை நினைவு கூர்ந்து இம்மலர் வெளியிடும் அதிபர், ஆசிரியர், மாணவர்கள், நலன்விரும்பிகள் அனைவரையும் இறைவன் ஆசீர்வதிப்பாராக.

**"என்றும் வேண்டும் இன்ப அன்பு"**

இரண்டாவது குருமஹா சந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞான சம்பந்த பரமாசார்ய சுவாமிகள்



## கீரிமலை நகுலேஸ்வரர் ஆதீன முதல்வர்
## சிவஸ்ரீ. கு. நகுலேஸ்வரக் குருக்கள்

அவர்கள் அருளிய

# அருளாசிச் செய்தி

கீரிமலை நகுலாம்பிகை சமேத நகுலேஸ்வரா் அருட் கடாட்சத்தால் மேன்மையுற்றிருக்கும் இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம் அதன் நிறுவுநர் வள்ளலார் ஏழூர் இராசரத்தினம் அவர்களின் அறுபதாவது ஆண்டு நினைவு தினத்தையொட்டி இந்நூலை வெளியிடு கின்றது. இதற்கு அனுசரணையாக நிறுவுநரின் செல்வ மகளாம் திருமதி. கிருபாசக்தி தர்மதாசன் அவர்கள் விளங்குகின்றார். சைவத்தையும் தமிழையும் போற்றி வளர்க்கும் அடிப்படை எண்ணத்துடன் ஆரம்பிக்கப்பட்ட வித்தியாலயம் வள்ளல் ஏழூரர் மனம் போல பெரியதொரு நிறுவனமாகி உயர்கல்விக்கழகமாகத் திகழ்கின்றது. நடுவூர்ப்பழுத்த நன்மரமாக வள்ளல் ஏழூரர் திகழ அம்மரத்தில் காய்த்த நற்கனிகளாக மெய்கண்டான் கல்வியால் உயர்ந்த பார் போற்றும் புகழுறு மாணவர்கள் பலர் விளங்குகின்றனர். தகுதி வாய்ந்த அதிபர்கள், ஆசிரியர்கள், நன்மாணாக்கர்கள் பலரையும் தன்னகத்தே கொண்டு எக்காலமும் மிளிர்ந்து வருகின்றது. ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விமான்களின் ஆக்கங்களைக் கொண்டமைந்ததாக வெளியிடப்படும் இந்நூலுக்கு ஆசியை வழங்கி மகிழ்வடைவதோடு மேன்மேலும் இப்பாடசாலை உன்னத நிலையை அடைய எல்லாம் வல்ல நகுலேஸ்வரர் பெருங்கருணையை வேண்டி நிற்கிறேன்.

**கு. நகுலேஸ்வரக்குருக்கள்**
**நகுலேஸ்வரர் தேவஸ்தானம்,**
**கீரிமலை.**



# அருட்தந்தை
# சூசை அன்ரன் ஜோர்ஜ்
அவர்களின்
# ஆசிச் செய்தி

யா / இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயத்தின் நிறுவுநர் வள்ளல் ஏழூர் இராசரத்தினம் அவர்களின் அறுபதாவது நினைவு தினம் 01-12-2009 அன்று கார்த்திகைத் தீப நாளில் கொண்டாடப்படுவதையிட்டு இப்பாடசாலையின் பழைய மாணவன் என்ற முறையில் பேருவகை கொள்கிறேன்.

எமக்கு மிகவும் அண்மையிலுள்ள கல்வி அபிவிருத்தி, பௌதீக வள அபிவிருத்தியில் மிகவும் சிறந்து விளங்கும் ஏனைய கல்லூரிகளுக்கு இணையாகக் கல்வியில் பல முன்னேற்றப்படிகளைத் தாண்டிப் பல அறிஞர்களை, ஆசிரியர்களை வளவாளர்களாக உருவாக்கிய இப்பாடசாலை யின் பெருமையை நினைத்து இறும்பூதெய்துகின்றேன்.

அன்றைய தினம் நிறுவுநர் வள்ளல் ஏழூர் இராசரத்தினம் அவர்களின் நினைவாக வெளியிடப்படவுள்ள நினைவு நூலிற்கு ஆசியுரை வழங்குவதற்கு எனக்குப் பணிக்கப்பட்ட அரும்பெரும் வாய்ப்புக்காக உள்ளம் கனிந்து நன்றி நவில்கின்றேன்.

கார்த்திகைத் தீப ஒளியினிலே மீண்டும் மீண்டும் இப்பாடசாலை புகழ் பெறவும், எனக்கு அன்னையாக இருந்து கல்வி என்னும் அரும்பாலைப் பருகவும் அடித்தளமிட்டுக் கட்டியெழுப்பிய இப்பாடசாலையின் நிறுவுநரின் நினைவு நூல் செழிப்புற ஆசி கூறி நிற்கின்றேன்.

நன்றி.

**இயக்குநர்**
மறைக்கல்வி நடுநிலையம்,
ஆயர் இல்லம்,
யாழ்ப்பாணம்.



## திருமதி கிருபாசக்தி தர்மதாசன்

அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

வள்ளல் சரவணமுத்து ஏழூர் இராசரத்தினம் அவர்களின் அறுபதாவது சிரார்த்த தினத்தன்று வெளிவர இருக்கும் "நடுவூர்ப் பழுத்த நன்மரம்" எனும் நூலிற்கு வாழ்த்துச்செய்தி எழுதுவதில் மிகுந்த பெருமை அடைகிறேன்.

இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் ஆரம்ப, இடை நிலைக் கல்வியைப் பெற்று பயனடைந்த புகழுறு பழைய மாணவர் களைக் கௌரவிக்கும் முகமாக அவர்களது விபரங்களைத் தாங்கிய ஆவணமாக வெளிவரும் இந்நூலின் ஆக்கத்திற்கு சகல வழிகளிலும் முன்னின்று உழைத்த சகலரும் போற்றப்பட வேண்டியவர்கள்.

வருங்கால சந்ததியினர் தங்களின் முன்னோர்களைப் பற்றி அறிய இந்நூல் ஒரு வரலாற்று ஆவணமாகத் திகழும் என்பது திண்ணம். இன்றைய மாணவர்கள் இனிவரும் மாணவர்கள் தாமும் இவ்வாறு இடம்பெற வேண்டும் என்ற குறிக்கோளை முன்வைத்து உழைக்க இது ஒரு சந்தர்ப்பமாக அமையும்.

'வரப்புயர' என்பது போல மாணவர்கள் தமக்கென ஒரு குறிக்கோள் கொண்டு செயற்பட்டால் மாணவ சமூகம் முன்னேறும். மாணவர் முன்னேற பாடசாலை முன்னேறும். பாடசாலை முன்னேற கிராமம் முன்னேறும். கிராமம் பல் கோணத்திலும் முன்னேறி சமயமும், தமிழும் செழித்தோங்க எல்லாம் வல்ல ஆனைவிழுந்தான் விநாயகரைப் பிரார்த்திக்கின்றேன்.

எனது காலத்தில் இத்தகையதொரு நூல் வெளிவரச் சந்தர்ப்பம் கிடைத்தமைக்கு மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

**திருமதி கிருபாசக்தி தர்மதாசன்**
ஓய்வுபெற்ற ஆசிரியர்



# "நடுவூர்ப் பழுத்த நன்மரம்" வாழ்க

இளவாலை வடபாலில்
இனிதான நடுவூரில்
பழமரமாய் வாழ்ந்திட்ட
பண்பாளர் ஏமூரர்
வளமான கற்பகமாய்
வாண்மையுடன் நாட்டிவைத்த
இளவாலை மெய்கண்டான்
எழில் ஞானக் கனிசொரிய
அளவில்லா மாணவர்கள்
அருங்கல்விக் கனியருந்தி
வளமாக வாழ்வாங்கு
வாழ்கின்ற வளங்காட்டும்
அழகான இந்நூலை
அவ்வள்ளல் நினைவாக
உளமாரத் தந்தவர்கள்
உயர்வோடு வாழியவே.

சைவப்புலவர்
**சு. செல்லதுரை**
ஓய்வுபெற்ற அதிபர்



## வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர்

அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

யா/இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தின் ஸ்தாபகர் வள்ளல் ஏழூர் இராசரத்தினம் அவர்களின் அறுபதாவது நினைவு தினத்தை முன்னிட்டு "நடுவூர்ப் பழுத்த நன்மரம்" என்ற மலர் காரத்திகைத் தீப நன்னாளில் வெளியிடுவதையிட்டு பெருமகிழ்வடைகிறேன்.

வலிகாமம் கல்வி வலயத்தின் தெல்லிப்பளைக் கோட்டத்தில் அமைந்த பாடசாலைகளில் ஒன்று யா/இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம். இப்பாடசாலை ஏழூர் காலத்தில் வேரூன்றி இன்று கிளை பரப்பி பெரு விருட்சமாக விளங்குகின்றது. மிகவும் வசதி குறைந்த பிள்ளைகளின் அறிவுப் பசிக்கு இப்பாடசாலை விருந்தளிப்பதோடு நிறுவுநரின் சிந்தனைக்கு அமைவாகவும் "வாழக்கல்மின்" என்ற மகுட வாசகத்திற்கு ஏற்பவும் சேவையாற்றி வருகிறது.

இப்பாடசாலை சிறப்புடன் திகழ்வதற்கு சேவையாற்றி வரும் பாடசாலைச் சமூகத்தின் பங்களிப்பைப் பாராட்டுவதுடன் நூல் வெளியீடு சிறப்படையவும் வாழ்த்துகிறேன்.

நன்றி

**திரு. ப. விக்கினேஸ்வரன்**
வலிகாமம் கல்வி வலயம்
மருதனார்மடம்



# சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சுச் செயலாளர்

அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தை நிறுவிய வள்ளல் ஏழூர் இராசரத்தினம் அவர்களது அறுபதாவது நினைவு தினம் 2009.12.01 கொண்டாடுவதையிட்டும், இத்தினத்தில் இப்பாடசாலையில் கல்வி கற்று உயர்கல்வி, உயர் தொழில்கள் பெற்று சமூகத்திற்காகப் பயன்பட வாழ்ந்த, வாழ்கின்ற பழைய மாணவர்கள் தகவல்களைத் திரட்டி வெளியிடும் இம் மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதிலும் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

பாடசாலைக் கல்வி ஆரம்பித்த காலத்திலேயே ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை அக்காலம் தொட்டுச் சான்றோர் பலரை உருவாக்கிய பெருமை கொண்டது. ஒரு மாணவருக்கு ஆரம்பக் கல்வியின் போது இடப்படும் அத்திவாரமே அவர் எதிர்காலத்தில் உயர் கல்வியில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்ள துணைபுரிகின்றது. அந்த வகையில் நானும் இப்பாடசாலை மூலம் உயர் பதவியில் இருக்கின்றேன். மேலும் இப்பாடசாலையின் வளர்ச்சியையும், சாதனைகளையும் இப்பாட சாலையில் உயர்கல்வி பெற்று சமூகத்திற்குப் பயன்பட வாழ்ந்த, வாழ்கின்ற சான்றோர்கள் பற்றி எழுத்துருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலைச் சமூகம் அனைவரையும் மனதாரப் பாராட்டி வாழ்த்துவதோடு இப்பாடசாலை மேன்மேலும் பல சாதனைகளைப் படைக்க வேண்டும் என எல்லாம் வல்ல ஆனைவிழுந்தான் பிள்ளையாரை வேண்டுகின்றேன்.

**இ. இரவீந்திரன்**
இ.நி.சேவை,
செயலாளர்,
சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சு,
வடமகாணம் திருகோணமலை.



## யாழ். பல்கலைக்கழக பீடாதிபதி

அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

யா/இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம் நிறுவுநர் தினத்தையும் அவர் தொடர்பான நூல் வெளியீடொன்றையும் மேற்கொள்வதை யிட்டு நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். இப்பாடசாலையின் நிறுவுநரான ஏழூர் இராசரத்தினம் அவர்களின் அறுபதாவது நினைவுநாள் கொண்டாடப்படுவது பாடசாலை வளர்ச்சியின் ஒரு மைற்கல் என்றே குறிப்பிடுதல் வேண்டும். இப்பாடசாலையின் நிறுவுநர் இதன் ஆசிரியராகவும் அதிபராகவும் கடமை யாற்றியது மட்டுமன்றி இப்பாடசாலையை உருவாக்கிய சிற்பியாகவும் விளங்குவது இப்பிரதேச மக்கள் செய்த பெரும்பயன் என்றே குறிப்பிடுதல் வேண்டும். சைவத் தமிழ்ப் பாரம்பரியத்தில் தமது பிள்ளைகளைக் கற்பிக்க வேண்டும் என்ற நோக்குடன் மக்களின் தேவையைப் பூர்த்தி செய்ய பெரியார் ஏழூர் இராசரத்தினம் அவர்கள் எடுத்த முயற்சி இப்பாடசாலையின் உருவாக்கம்

பாடசாலை நிறுவுநர் கொண்டிருந்த நல்ல நோக்கமே எத்தனை இடப்பெயர்வுகளின் பின்னரும் யா/இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம் வீறுநடை போடுவதற்கு காரணமாகும். பாடசாலைமீது அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் கொண்டிருக்கும் பற்றே இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு காரணம் எனக் கூறினால் அது மிகையாகாது. இப்பாடசாலையின் வளர்ச்சியின் ஒரு தூணாக நிறுவுநர் ஏழூர் இராசரத்தினம் அவர்களின் நூல் வெளியீடு அமைந்துள்ளது. இந்நூலில் மாணவர்களது பல தரப்பட்ட ஆக்கங்கள் வெளிவருவது நூலின் சிறப்பை மேலும் வலுவூட்டியுள்ளது என்றே குறிப்பிடுதல் வேண்டும். இந்நூலை வெளியிடுவதற்கு நிறுவுநர் அவர்களின் புதல்வி வழங்கும் ஒத்துழைப்பு பாடசாலையின் வளர்ச்சிக்கு மேலும் வலுவூட்டுவதாகவுள்ளது. எந்தவொரு பாடசாலையிலும் நிறுவுநரது குடும்பத்தினர் காட்டும் அக்கறை அப்பாடசாலையின் வளர்ச்சியை இரட்டிப்பு மடங்காக மாற்றும் என்பதில் ஐயமில்லை.

நிறுவுநர் ஏழூர் இராசரத்தினம் அவர்களின் நூல் வெளியீட்டையும் நிறுவுநர் தினத்தையும் நடாத்த எடுத்த இந் நன்முயற்சியைப் பாராட்டுவது நம் எல்லோரதும் கடமையாகும். இவ்விழாவிற்காக உழைத்த அனைவரையும் பாராட்டுவதோடு இவ்விழாச் சிறப்பாக அமைய எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கோண்டாவில் மேற்கு
கோண்டாவில்
14.11.2009

**க.தேவராஜா**
பீடாதிபதி
முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடம்



## பிரதேச செயலர்

அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

எமது பிரதேசத்தின் முன்னணிப் பாடசாலைகளில் ஒன்றான யா/ இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தின் ஸ்தாபகர் வள்ளல் ஏழூர் இராசரத்தினம் அவர்களின் அறுபதாவது நினைவுதினம் கார்த்திகைத் தீப நன்நாளில் கொண்டாடப்படுவது மிகவும் பொருத்தமானதே. கல்வி எனும் தீப ஒளியேற்றி பலரது மனங்களிலும் நீங்காது இடம்பெற்றவர் ஸ்தாபகர் அவர்கள். அன்னாரின் வழிநின்று தொடர்ந்து தொண்டாற்றி வரும் அவர்கள் குடும்பத்தார் பங்கு மிகவும் போற்றுதற்குரியது. ஓர் ஸ்தாபனத்தின் வளர்ச்சியில் ஆவணப் படுத்தல் மிகவும் முக்கிமானதொன்று. இந்தவகையில் இங்கு வெளியிடப்படும் இந்நினைவு நூல் பாடசாலையின் பல்வேறு துறைகளின் சாதனைகளுடன் பாடசாலை சமூகத்தினரின் ஆக்கங்களை உள்ளடக்கி வருவது நிச்சயம் எல்லோர் உள்ளங்களுக்கும் அறிவுத்தீபத்தை ஏற்றி வைத்து பாடசாலையின் வளர்ச்சிப் பாதையில் ஓர் மைற்கல்லாக அமையும்.

இந்நூல் வெளிவருவதற்கு ஆக்கபூர்வமான பங்களிப்பு வழங்கிய அனைவரையும் நன்றியுடன் வாழ்த்துகின்றேன்.

**திரு சு. முரளிதரன்**
பிரதேச செயலர்,
பிரதேச செயலகம்,
தெல்லிப்பளை.



## கோட்டக்கல்விப் பணிப்பாளர்

அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

ஒரு சமூகத்தின் நிலைபேற்றிற்கு அடிப்படையானது கல்வி. அந்த வகையில் அக்கல்விப் பாரம்பரியங்களைப் பேணி வருகின்ற நிறுவனமாகப் பாடசாலை விளங்குகின்றது. நாட்டிற்கு நல்ல பிரஜைகளை உருவாக்கு வதிலும் நாட்டின் உயர்வில் பங்கெடுக்கும் தலைவர்களை உருவாக்கு வதிலும் பாடசாலைகளின் பங்கு அளப்பரியது.

இத்தகைய பெருமைகளை எல்லாம் தன்னகத்தே கொண்டுள்ள யா/இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தை ஸ்தாபித்த நிறுவுநர் ஏழூர் இராசரத்தினம் அவர்கள் அமரத்துவம் அடைந்து அறுபதாவது ஆண்டு நிறைவையொட்டி இந்நூல் வெளியிடப்படுவது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

வள்ளல் ஏழூர் இராசரத்தினம் அவர்கள் இப்பாடசாலையை நிறுவி அதிபராக,ஆசிரியராக,சமூக சேவையாளராக நின்று பல தளங்களில் இப்பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளார். அன்னாரின் வழியில் அவருடைய மகளும் இற்றைவரை பாடசாலைக்குப் பல்வேறு வழிகளிலும் பெரும்பங்கு ஆற்றி வருகின்றார். இன்று இப்பாடசாலை பெரிய பாடசாலைகளுடன் போட்டிபோடும் அளவிற்குச் சிறந்த பெறுபேறுகளையும் சாதனைகளையும் ஈட்டித்தரமான பாடசாலையாக விளங்கி நிற்கின்றது.

இப்பாடசாலை மேலும் வளர்ந்து பரந்து கல்விப்பணியில் சிறப்புற்று விளங்க எல்லாம் வல்ல இறைவனை வணங்கி வாழ்த்துகின்றேன்.

**திரு. க. கைலாசநாதன்**
கோட்டக்கல்விப் பணிப்பாளர்.
தெல்லிப்பளைக் கோட்டம்.



**கல்வி, பண்பாட்டலுவல்கள்,**

**விளையாட்டுத்துறை அமைச்சு**

**வடக்கு மாகாணசபை**

**உதவிச் செயலாளர்**

அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

யா / இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தின் ஸ்தாபகர் வள்ளல் ஏழூர் இராசரத்தினம் அவர்களின் அறுபதாவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அன்னாரது நினைவாக நினைவு நூல் வெளியிடப் படுவதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன்.

இவ்வாறு பாடசாலையை ஸ்தாபித்து அப்பாடசாலைக்கு ஆசிரியராக வும் பின்பு அதிபராகவும் கடமையாற்றி பல்வேறு வழிகளிலும் இப்பாடசாலை யின் வளர்ச்சிக்கு பெரிதும் உதவி புரிந்த வள்ளல் என்ற வகையில் இந்நினைவுமலர் வெளியிடுவது அவர்தம் சேவைக்கு மதிப்பூட்டு வதாக அமைகின்றது.

இந்நூலில் பாடசாலையின் அபிவிருத்தி மற்றும் மாணவர்களின் சாதனைகளும் உள்ளடக்கப்பட்டிருப்பது இம் மலரை மேன்மேலும் சிறப்பித்து நிற்கின்றது.

இந்நூல் வெளியீடானது சிறப்புற அமைய எனது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**க. சிவகரன்**

உதவிச் செயலாளர்,

கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு,

வட மாகாணம்.

# பாடசாலை தொடர்பான அடிப்படைத் தகவல்கள்

| | | | |
|---|---|---|---|
| 01 | பாடசாலையின் பெயர் | :- | யா/இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம் |
| 02 | ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு | :- | 1922 |
| 03 | பாடசாலைத் தரம் | :- | 1C |
| 04 | கல்வி மாவட்டம் | :- | யாழ்ப்பாணம் |
| 05 | கல்வி வலயம் | :- | வலிகாமம் |
| 06 | பாடசாலையின் நிறம் | :- | கருஞ்சிவப்பு, மஞ்சள் |
| 07 | மகுட வாசகம் | :- | வாழக்கல்மின் |
| 08 | இல்லங்கள் | :- | கலைமகள் (பச்சை), மலைமகள் (றோஸ்), அலைமகள் (நீலம்) |
| 09 | உயர்தர வகுப்பு ஆரம்பம் | :- | 1980 |
| 10 | மகாவித்தியாலயம் ஆக்கப்பட்டது | :- | 1980.02.01 |
| 11 | இடப் பெயர்வின் பின் புனரமைப்புத் தொடங்கிய ஆண்டு | :- | 1997 |

# பாடசாலையில் கடமையாற்றிய அதிபர்களின் விபரம்

| | | |
|---|---|---|
| 01 | திரு.ச.சிதம்பரப்பிள்ளை | 1922 - 31.07.1926 |
| 02 | திரு.வே.கனகசபாபதி | 01.08.1926 - 1933 |
| 03 | திரு.வி.கணபதிப்பிள்ளை | 1933 - 31.08.1941 |
| 04 | திரு.சி.சுப்பிரமணியம் | 01.09.1941 - 31.12.1943 |
| 05 | திரு.பொன்னம்பலம் | 01.01.1944 - 30.04.1944 |
| 06 | திரு.இ.சீனித்தம்பி | 01.05.1944 - 31.12.1948 |
| 07 | திரு.க.மயில்வாகனம் | 01.01.1949 - 04.05.1952 |
| 08 | திரு.ச..சுப்பையா | 05.05.1952 - 31.12.1965 |
| 09 | தரு.க.நவரத்தினம் | 01.01.1966 - 31.12.1970 |
| 10 | திரு.வ.செல்லையா | 01.01.1971 - 15.10.1973 |
| 11 | திரு.மு.சிவராஜரட்ணம் | 16.10.1973 - 27.05.1974 |
| 12 | திரு.சு.செல்லத்துரை | 28.05.1974 - 27.03.1998 |
| 13 | திரு.அ.பேரம்பலம் | 28.03.1998 - 12.07.2005 |
| 14 | திரு.ச.சிவானந்தராசா | 15.08.2005 - இன்று வரை |

(பொன்மலர், காங்கேசன் மலர் என்பவற்றில் இருந்து தகவல் பெறப்பட்டது)

# மாணவர் உறுதியுரை

மெய்கண்டானின் மாணவர் நாங்கள்
மேன்மை பெறவே கற்றிடுவோம்
கல்வியில் உயர்வோம் மெய் நெறி காப்போம்
கலைபல பயில்வோம் கவின்பெறுவோம்
வள்ளல் ஏழூர் காட்டிய வழியில்
வாழக் கற்போம் வளம்பெறுவோம்
வாழக்கல்மின்! வாழக்கல்மின்! வாழக்கல்மின்!!!

# கொடிக்கீதம்

பல்லவி

மெய்கண்டான் அன்னைக் கொடி ஏற்றிடுவோம் - கல்வி
மேன்மை எல்லாம் பெருகப் போற்றிடுவோம்
(மெய்கண்டான்)

அனுபல்லவி

பொய்மை அறியாமை இருள் அகன்றே - உலகில்
மெய்மை அறியும் கல்வி ஒளி பெருக
(மெய்கண்டான்)

சரணம்

வள்ளல் ஏழூர் புகழ் பேசும் கொடி - இது
வாழக் கற்போரை வரவழைக்கும் கொடி
உள்ளத்தில் உண்மை ஒளி ஏற்றும் கொடி -இது
உத்தமராக்கி எமை உயர்த்தும் கொடி. (மெய்கண்டான்)

பாடல் ஆக்கம்

சைவப்புலவர் **சு. செல்லதுரை**

## எங்கள் அதிபர்



திரு. சங்கரப்பிள்ளை சிவானந்தராசா

S.L.P.S. 2-I

# அதிபரின் எண்ணத்தில் ......

1922ம் ஆண்டு நிறுவப்பட்டு 84ஆவது அகவையை அடைந்து பெரு விருட்ஷமாகத் திகழும் சைவப் பாரம்பரியத்துடன் ஒன்றித்த மெய்கண்டான் மகா வித்தியாலயத்தின் அதிபர் என்ற வகையிலும், பாடசாலையானது ஒரு சந்ததியிலிருந்து அடுத்த சந்ததிக்குக் கடத்தப்பட வேண்டிய முதுபெரும் முதுசமாகத் திகழ வைப்பத்திலும் பாடசாலை சமூகத்திற்காகவும் சமூகம் பாடசாலைக்காகவும் என்ற ஏழூரரின் சிந்தனையினின்றும் வழுவாத இக் கல்வி நிறுவனத்தின் அதிபராகக் கடமையாற்றுவதையிட்டு பெரு மகிழ்ச்சி யடைகிறேன்.

ஸ்தாபகரும் அவர் எண்ணத்தில் உதித்த பாடசாலையும் நன்மரமாக நிற்க அவர் சிந்தனைக்கேற்ப வெளியிடப்படும் வெளியீடுகள் அனைத்தும் நன்கு பழுத்த கனிகள் போற் திகழும் சாதனைகளை உள்ளடக்கி இந்நூல் வெளிவருவதையிட்டு மனநிறைவு கொள்கின்றேன்.

கிராமப்புறப் பாரம்பரியங்கள் இறுக்கமாகப் பேணப்பட்ட காலத்திலும் மனையாளின் மாங்கல்யத்தையே பயன்படுத்திப் பாடசாலையை நிறுவிய ஏழூரரின் வள்ளற் தன்மையை இவ்விடத்தில் வியந்து நிற்கிறேன். பாடசாலை நிறுவிய காலத்தில் ஏழூர் இராசரத்தினம் அவர்களின் தலைமையில் இயங்க ஆரம்பித்து பாடசாலை தொடர்ச்சியாக பல அதிபர்களின் சேவையில் வளர்ச்சி அடைந்திருப்பது கண்கூடு.

நிறுவுநரின் அறுபதாவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு வெளிவரும் நடுவூர்ப் பழுத்த நன்மரம் போன்ற மலர்கள் தொடர்ச்சியாக வெளிவரவும் காலத்தால் அழியாததும் வரலாற்று ஆவணமாகப் பேணப்பட வேண்டியது மான இது போன்ற மலர்கள் புகழுறு பழைய மாணவர்களின் பங்களிப்பின் மூலம் வெளிவர வேண்டும் என்பதே எனது அவா!

காலத்தின் மாற்றங்களுக்கு ஏற்ப புதிய மாற்றங்களை உட்படுத்தி சைவப் பாரம்பரியத்தினின்றும் ஏழூரரின் எண்ணத்தினின்றும் வழுவாது அவரின் நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் முன்னின்று செயற்பட முயற்சிப்போமாக.

**திரு. ச. சிவானந்தராசா**
அதிபர்

உ
சிவமயம்

# இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம்



## ஸ்தாபித்த
## ஏழூர் இராசரத்தினம்
## சிந்து நடைக் கவிதை

இளவாலை யூரிலொரு இளைஞன்
எல்லோரும் நன்கறிந்த பெரியன்
வளமாக மெய்கண்டான் தாபித்தே - கல்வி
வான்பயிரை வளர்த்தவொரு வரதன்.

உளமார இளவாலைச் சிறுவர் - தங்கள்
உரிமையுடன் மெய்கண்டானில் சேர்ந்து
தனமாகக் கல்விகற்க வைத்தான்
தன் மானம் முன்னின்ற தனயன்.

சைவத்தமிழ் வித்தியா விருத்திச் சங்கத்
தருமர் இராச ரத்தினம் துணையால் - அரசின்
மெய்கண்டானை நன்கொடை சேர்த்தான்
மேன்மகனாம் ஏழூர் ரத்தினப் பேரான்.

தன்னுடைய ஆதனங்க ளோடு - வாழ்வின்
தன் தலைவி சொத்துகளுஞ் சேர்த்து - மற்றும்
பொன்னுடனே பொருளெல்லாம் ஒன்றாய்
புகழ்சேர் மெய் கண்டானுக்கே ஈந்தான்.

ஆரம்பத்தில் ஊரவர்கள் துணையாம் - நன்றே
ஆக்கிய அவ்வித்யா லயத்தை - விடாமல்
ஆரமாகத் தோளிலே சுமந்தான் - ஏழூர்
வள்ளலவன் சைவத்தையே நினைத்தானே.

தேவையான மாணவருஞ் சேர தகுந்த
தேவையான ஆசிரியர் வைத்தான்
ஆவலாக ஐந்துவரை வகுப்பை நடாத்தி
அதன்மேலே க.பொ.த.வும் வைத்திடச் செய்தான்.

கிளிபோ லொரு பெண்மகவு பெற்றே ~ அதற்கு
கிருபாசக்தி எனவும் பெயரிட்டு விட்டான்
தளிராக குழந்தை வளர்காலம் ~ இறைவன்
தாளடியைத் தான்சேர்ந்து விட்டான்.

தனியரசன் போலேழூர் செல்ல ~ அருமைத்
தாயே அப்பிள்ளையைப் படிப்பித்து ~ மேலாம்
புனித பட்டதாரி ஆசிரியையாக
போற்றும்படி உயர்த்திவிட்டாள் பொறுத்தே.

தன்மரபுக் கேற்ற மணாளன் ~ ஆசான்
தனைமணந்து இருவரும் கற்பித்துப் பின்னர்
மன்னரென ஓய்ந்தபின்பு மணாளன்
மறைந்தாலும் கிருபாசக்தி தளர்ந்தாள் தனித்தே.

இறைவனது துணைகொண்டு கிருபா ~ என்றும்
கிறுங்காத தந்தை தாயை நினைத்தேயிந் நாளும்
உறைவிட மொன்றில் வாழ்ந்தாலும் ~ தந்தை
உரிமையெண்ணி நினைவு மலர் வெளியிட்டாள் தானே.

**வேறு**

தனக்கென உரிமை யான
தக்க ஆதனங்க ளெல்லாம்
வனப்புடை மெய்கண்டானை
வளர்த்திட எழுதினாளே.

இறைவன்தாள் ஒன்றே போதும்
எனநினை கிருபா சக்தி
பிறையென சுகமாய் வாழ
பிரான்கழல் போற்றுவேனே.

வணக்கம்.

முதுபெரும்புலவர் கலாபூஷணம்
**புலவர்மணி வை. க. சிற்றம்பலம்**
முன்னாள் மெய்கண்டான் ஆசிரியர்

# யாழ்/இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தை நிறுவிய வள்ளல்

# ஏஷர் இராசரத்தினத்தின் 60ஆம் ஆண்டு நினைவு மலர்

இந்த மெய்கண்டான் வித்தியாலயத்திற்குச் சென்ற 1951ஆம் ஆண்டளவில் உதவி ஆசிரியனாக நியமிக்கப்பட்டேன். அக்காலம் பண்டிதர் க. மயில்வாகனம் அதன் அதிபராகக் கடமையாற்றினார். சுமார் பதினைந்து ஆசிரியரைக் கொண்ட அப்பாடசாலையில் சைவம், தமிழ் ஆசிரியரே கடமையாற்றினர். க.பொ.த. வகுப்பு வரை மாணவர்கள் கல்வி கற்றனர். நெசவும் ஒரு பாடம். மாணவரும் சுமார் நானூறு அளவில் கற்றனர்.

கீரிமலை, கருகம்பனை, முள்ளானை, சித்திரமேழி முதலிய அயற் கிராமங்களிலிருந்து சைவங்கருதி வந்து படித்தனர். ஆசிரியர் இன்று போல அன்றும் தமது கடமையைச் செய்தனர். நான் ஐந்தாம் வகுப்பிற்குப் பொறுப்பாகவும், எட்டாம் வகுப்பிற்கு சமயம், தமிழ்ப் பாடங்களும், க.பொ.த. வுக்கு சுகாதாரமும் படிப்பித்தேன். ஒரு ஆங்கிலப் பாடசாலைக்கு நிகராக மெய்கண்டானும் அரசினால் மதிக்கப்பட்டுள்ளது. மண்டபம் போன்ற விசாலமான கட்டிடத்தில் மேற்குப் பக்கமாக இரு அறைகளும் இருந்தன. ஆசிரிய சங்கங்களாலும் ஏற்றமாகவே அன்றும் கணிக்கப் பெற்றது. பெரும் பாலும், இதன் தலைமையாசிரியர்கள் இடைக்காடு, கரவெட்டி, துன்னாலை யிலிருந்தே வந்து கடமையாற்றியவர்கள்.

நான் இந்து போட்டில் 1935ஆம் ஆண்டில் எனது 21வது வயதிற் சேர்ந்து ஆசிரியத் தொழில் புரிந்துவந்தேன். வருடாவருடம் சைவ வித்தியா விருத்திச் சங்க ஆண்டுவிழா நடப்பதுண்டு.

1940ம் ஆண்டளவில் ஒரு ஆண்டுவிழா யாழ் / சன்மார்க்க போதினி கல்லூரியில் நடந்தது. விழாவெல்லாம் முடிந்து, அங்கத்தவரைத் தெரிவு செய்யும் நேரம். ஆண்டுதோறும் தன்னுடைய வாணாள் முழுவதும் புதிய பள்ளிக்கூடங்களைக் கட்டிப் பெருஞ்சாதனை புரிபவர். ஸ்ரீ சுப்பிரமணியம் இராசரத்தினம் என்பது உலகறிந்த உண்மை. அன்று சங்கத் தலைவரைத்

தெரியும் நேரம் வேறொரு சைவப் பெரியார் தலைவர் தேர்தலுக்கு முன்னின்றார், பெருஞ்சபையினின்றும் எழுந்தார், ஏழூர் இராசரத்தினம் எழுந்து காரசாரமாகச் சொல் மழை பொழிந்தார். எங்கும் நிசப்தம் குடிகொண்டது. அவர் கூறியது, தனது தொழிலில் அக்கறை காட்டாத நாவலர் பணியே தன் பணியாக ஆண்டுதோறும் புதிய புதிய பாடசாலைகளைக் கட்டி வருகிறார். இந்த இராசரத்தினம் என்பதறியாது கதிரையிலிருந்தபடியே தொண்டு செய்ய எண்ணி, இங்கு ஒருவர் பிரிந்தாரெனில், அவரைப் பற்றி எதைத்தான் நான் கூறுவேன் என்று உரத்த தொனியில் முழங்கினார். தலைவருக்கென வந்தவர் மெல்ல எழுந்து நடையிடவே, ஏழூரரும் பேசிப் பேசிப் பின் சென்றார். ஆயினும் அவரை அழைத்து இருத்தினர் ஏனையோர்.

1946ல் க.பொ.த. வகுப்பை வைப்பதற்கு ஏழூரர் மிகப் பிரயாசைப் பட்டதாக அறிந்தேன். அக்காலம் ஏழூரர் ''என்னால் ஆனதை ஓரளவு மெய்கண்டானுக்குச் செய்தேன். நமது ஊரிலிருந்து ஒரு தலைமை ஆசிரியர் வந்தபின்புதான். இது மேலும் மேலும் வளரும்'' என்றும் சொன்னாராம். இது அக்காலக் கதை. அவ்வார்த்தையை உண்மையாக்கிவிட்டார், பல வருடங்களின் பின் அதிபராக வந்த இளவாலை சைவப்புலவர் திரு. சு. செல்லத்துரையவர்கள். பழைய மண்டபத்தின் கிழக்குப் பக்கமாக ஒரு பெரிய மாடிக் கட்டிடத்தை அமைத்தார்.

இப்படியான சைவத்தில், தமிழில் பேரபிமானமுடைய ஏழூர் அந்த நிர்வாகத்திலும் ஒருவராக இருந்ததாகக் கேள்வியுற்றேன். அவரது ஒரே மகள் கிருபாசக்தி நான் படிப்பித்த ஐந்தாம் வகுப்பிலே சித்தி பெற்று தொடர்ந்து கற்று பல்கலைக்கழகம் சென்றார் என்பது குறிப்பிடவேண்டும். தந்தை நினைவாக இம்மலரை வெளியிடும் அவரை வாழ்த்துகின்றேன்.

முதுபெரும் புலவர்
**வை. க. சிற்றம்பலம்**
முன்னாள் மெய்கண்டான் ஆசிரியர்

# வள்ளல் ஏழூர் இராசரத்தினம் நிறுவிய மெய்கண்டான் கல்வியின் விழுமியங்கள்

**(பன்மொழிப் புலவர் த. கனகரத்தினம் பி.ஏ. (இலண்டன்) கல்வி டிப்ளோமா)**

**வ**ள்ளல் ஏழூரர் அறுபதாவது நினைவு தினத்தில் எழுபத்தைந்து (75) ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்த எனது பள்ளி வாழ்க்கையை நினைவு கூருவதில் மகிழ்ச்சியடைகிறேன். எனது தமிழ்க் கல்வியின் ஆரம்பம் மெய்கண்டான் தான். எனது பிறந்த ஊர் மயிலங்கூடல். மெய்கண்டான் இருக்கும் இளவாலை ஊரும் எமது ஊரிலிருந்து ஒரு கிலோ மீற்றர் தூரம். மெய்கண்டான்தான் அந்த நாளில் அயலிலிருந்த ஒரேயொரு சைவத் தமிழ்ப் பாடசாலை. நானும் 1932ஆம் ஆண்டில் பாலர் வகுப்பிற் சேர்க்கப்பட்டேன். பெற்றோர் ஒற்றை மாட்டுவண்டியில் கூட்டிச் சென்று விடுவார்கள். பின்பு கூட்டிவருவார்கள். பாடசாலைத் தளத்தில் மணல் பரப்பப்பட்டிருந்தது. தரை மணலில் சுட்டுவிரலால் அ, ஆ எழுதித்தான் படித்தோம். இதுதான் நல்ல முறையென இப்போதுள்ள உளவியலாளர் உணர்ந்து கூறுகின்றனர். முதலாம் வகுப்புக்கு வந்தபின் தான் கற்பலகை (சிலேட்) பென்சில் உபயோகித்தோம்.

இரண்டாம் வகுப்பு ஆசிரியர் ஏழூரர்தான். கணக்கு, வாசிப்பு எல்லாம் படிப்பிப்பவரும் அவர்தான். டிசிப்பிளின் (ஒழுக்கக் கட்டுப்பாடு) மாஸ்டரும் அவரே, உள்ளூர் (Logal Manager) மனேஜர் என்றும் அழைக்கப்பட்டார். அவர் எமக்கு ஒரு வழியில் சொந்தக்காரரும் கூட.

யான் கீழ்ப்பிரிவிலே படிக்கும்போது பாடசாலை ஓலைக் கட்டடம், இரண்டு ஓலைக் கட்டடங்கள் 'ட' வரிசையில் இருந்தன. இரண்டாம் வகுப்புப் படிக்கும் காலத்தில் பெரிய மண்டபம் மாதிரியான ஓடு போட்ட கட்டடம் உருவானது. இதுவும் படிப்படியான வளர்ச்சிதான். இக்கட்டடத்தில் தான் எஸ். எஸ். சி. (சி.பா.த) வரை யானும் படித்தேன். 1939 - 1942 வரை உலக யுத்தக் காலம். கூப்பனுக்குத் தான் அரிசி கிடைக்கும். பஞ்ச காலந்தான். இக்கட்டான இக்காலத்திற்கூட மதிய உணவும் வழங்கப்பட்டது.

10.00 மணிக்கு பிள்ளைகள் எல்லோருக்கும் தேநீரும் வழங்கப்பட்டது. ஏழூராரும் ஒரு வள்ளல் அல்லவா?

இவரது பாடசாலைத் தொண்டுக்கு இவருடைய இரு சகோதரர் (சின்னவர், சீனியர்) களும் கைகொடுத்துதவினார்கள். சமயக்கல்வி விடயத்திலும் மெய்கண்டானில் நாங்களும் முறையான பயிற்சிகளைப் பெற்றோம். வெள்ளிக்கிழமை தோறும் ஆனைவிழுந்தான் பிள்ளையார் கோவிலுக்குப் பிள்ளைகள் செல்வது வழக்கம். ஆனைவிழுந்தானும் பாடசாலைக்கு அண்மையிலேதான் இருந்தது. காலைப் பூசையில் கலந்து கொள்வோம். தேவாரம் கற்பிப்பதற்கே ஓர் ஆசிரியர் வந்துபோவார். திரு. மயில்வாகனம் என்பவர்தான் தாளத்துடன் காவி உடையில் தினமும் வருவார். இவரும் ஏழூராரின் சொந்தக்காரர்தான். விசேட சமயச் சொற்பொழிவுகளும் நிகழ்ந்தன. நாங்கள் அம்பலவாண சுவாமியாரின் சொற்பொழிவுகளையும் கேட்டு மகிழ்ந்தோம்.

**ஏழூராரின் பரந்த மனப்பான்மை** பல வழிகளிற் பிரகாசித்தது. இத்தகைய பண்பாடுகள் சிறுவர்களாகிய எங்களின் மனத்தில் ஆழமாகப் பதிந்தது என்பதுதான் உண்மை. அந்தக் காலத்திலேயே இழிசினர்களின் பிள்ளைகளும் எம்முடன் கற்றனர். அவர்களுடைய கல்வியிலும் உள்ளூர் மனேஜராகிய ஏழூரார் அக்கறை காட்டினார். சன்மானம் கூட வழங்கினார், அவர்களுக்கும் பல வசதிகள் செய்து கொடுத்தார். உயர் சாதிமானாகிய அவரின் சமரசம், பரந்த மனப்பான்மை பாராட்டுக்குரியன. வீடு வீடாகச் சென்றும் பிள்ளை களைப் பிடித்து வந்து கல்வி கற்கச் செய்தார்.

'இந்துப் போட்' பாடசாலைகளுள் மெய்கண்டானும் சிறந்த பாடசாலையாக விளங்கியது. இதற்குப் போட்டியாக பன்னாலையில் ஒரு தனியார் பாடசாலை 'சென் ஹென்றி' (ஹென்றி அரசர் கல்லூரி) கிறிஸ்தவ ஆங்கிலக் கல்லூரி, 'கொன்வென்ற்' கிறிஸ்தவ பெண்கள் பாடசாலை என்பன சூழலில் இருந்தன. கற்பிக்கும் ஆசிரியர் தரத்திலும் மெய்கண்டான் தான் எங்கள் பாடசாலைக் காலத்திலும் முதலிடம் வகித்தது.

இடைக்காடு கணபதிப்பிள்ளை பண்டிதர் (தலைமை ஆசிரியர்), இடைக்காடு சின்னக்கணபதிப்பிள்ளைப் பண்டிதர், குரும்பசிட்டி வ. நடராசப் பண்டிதர், சுப்பையாப் பண்டிதர் (பின்நாளில் தலைமை ஆசிரியர்) முள்ளானை கணபதிப்பிள்ளை மாஸ்டர் (முள்ளியவளை த.பா. தலைமையாசிரியர்) போன்ற தலைசிறந்த பண்டிதர்களிடம் கற்கும் வாய்ப்பை எமக்கெல்லாம் மெய்கண்டான் வழங்கியது. ஆங்கிலமும் ஒரு பாடமாகக் கற்பிக்கப்பட்டது. கருகம்பனை கதிரிப்பிள்ளை மாஸ்டர் அதற்குப் பொறுப்பாகவிருந்தார். எஸ் எஸ் சி. (சி.பா.த.) வகுப்பில் கணிதம், ஆரம்ப விஞ்ஞானம் முதலிய பாடங்களை எங்களுக்குப் படிப்பித்தவரும் அவரே. விஞ்ஞானக் கல்வியைத் தமிழிற் படிப்பித்த சில தமிழ் பாடசாலைகளுள் மெய்கண்டானும் ஒன்றாகத் திகழ்ந்தது. எல்லா வகுப்புகளிலும் நான் முதல் மாணாக்கனாக வந்து விடுவேன். அதனால், எல்லா ஆசிரியர்களின் பாராட்டையும் அன்பையும் பெற்றுக் கொண்டேன்.

யான் 1942 இல் எஸ். எஸ். சி. வகுப்புச் சித்தியெய்தினேன். அதன்பின், பிரவேச பண்டித வகுப்பு, ஆசிரிய கலாசாலைப் புகுமுக வகுப்பு என்பனவும் மெய்கண்டானில் நிகழ்ந்தன. அவற்றிலே கற்கும் வாய்ப்பும் எனக்கேற்பட்டது. இந்த வசதிகள் காரணமாகக் குறைந்த ஆண்டுகளில் எஸ் எஸ் சி. யின் பின் சைவாசிரிய கலாசாலைக்கும் தெரிவானேன்.

எனது 16 ஆவது வயதிலேயே ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக்குத் (பலத்த போட்டிப் பரீட்சையில்) தெரிவானவன் என்ற சாதனையும் எனக்குண்டு. அந்த ஆண்டில் மெய்கண்டானிலிருந்து தெரிவான ஒரேயொரு மாணவனும் யானே. இவற்றிற்கெல்லாம் மெய்கண்டான் கல்விதானே காரணம். எங்கள் காலத்தில் ஆசிரிய பயிற்சிக்கும் ஒரு தொகை கட்டணம் (உணவு விடுதி என்பனவற்றிற்காக) செலுத்தல் வேண்டும்.

மூன்று வருட பயிற்சிக்காகத் தெரிவு செய்யப்பட்ட எனக்கு இரண்டு வருடங்களில் வெற்றிகரமாகப் பயிற்சி நிறைவுற்றது. கல்வித் திட்டத்தில் ஏற்பட்ட மாற்றம்தான் பயிற்சி காலக் குறைப்பிற்குக் காரணம். அத்திட்டத்தின்படி பயிற்சிக் கலாசாலைக்கு நுழைவு வயது 18ற்கு மேல்

இருக்க வேண்டும். எனது சாதனையில் 18 வயதில் பயிற்சி முடிந்து வெளி யேறியமையும் ஒன்றாக அமைந்துவிட்டது.

மெய்கண்டான் கல்விதான் எனது கல்வி உயர்கல்விக்கும் பன்மொழிப் பயிற்சிக்கும் சரியான அடித்தளமாய் அமைந்தது. சிறந்த ஆசிரியர்களை நாடி உயர்கல்வி கற்பதற்கு மெய்கண்டான் ஆசிரியர்கள் தான் சிறந்த வழிகாட்டிகளாயும் அமைந்தனர். இலவசக் கல்வித் திட்டம் வர முன்பே இலவசமாகக் கல்வி புகட்டிய மெய்கண்டான் ஆசிரியர்களுக்கும் வள்ளலார் ஏழூரருக்கும் மனமார்ந்த பாராட்டுக்கள். குருதக்ஷிணை கொடுக்காத கடப்பாடும் உண்டு.

எமக்கு உயர்கல்வி வழங்கியவர்களின் வரிசையில் இலக்கிய கலாநிதி, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, சிந்தனைச் செல்வர் பொ. கைலாசபதி, அதிபர் சி. சுவாமிநாதன்,(சை.ஆ. கலாசாலை), வித்துவ சிரோன்மணி சி. கணேசையர் (குருகுலக்கல்வி), சமஸ்கிருத சிரோமணி சீதாராமையர், மகோபாத்தியாயர் இராமையர் போன்றோர்களிடம் எமது உயர் தமிழ்க்கல்வி சமஸ்கிருதக் கல்வி என்பவற்றைக் கற்றுப் பட்டம் பெற முடிந்தது.

பிற்காலத்தில் மொழிக் கல்வியில் ஏற்பட்ட ஆர்வத்தினால் பாளி, சிங்களம் ஹிந்தி, மலையாளம் ஆகிய (7 மொழிகள்) மொழிகளிலும் தேர்ச்சி பெறவும் உயர் சான்றிதழ்கள் பெறவும் முடிந்தது. பன்மொழிப்புலவர் என்ற பட்டத்தையும் கொழும்புத் தமிழ்ச் சங்கமே வழங்கியது. அது மட்டுமன்றி சில வருடங்களுக்கு முன் 'சங்கச் சான்றோன்' என்ற விருதையும் நீண்ட காலச் சங்கப் பணிக்காக வழங்கிக் கௌரவித்தது.

எங்கள் காலத்தில் மெய்கண்டானில் ''சாரணியம்'' இருக்கவில்லை. சேவை மனப்பான்மையை வள்ளலார் ஏழூராரிடமிருந்தும் மெய்கண்டான் ஆசிரியர்களிடம் இருந்தும் கற்றுக் கொண்டேன். அதன் பயனாகக் கொழும்பிலுள்ள பிரபல பாடசாலைகளாகிய தேஸ்டன் கல்லூரி, இசிப்பத்தனா (கிறீன்லண்ட்ஸ்)க் கல்லூரி ஆகியவற்றில் பயிற்சிபெற்ற சாரணர் ஆசிரியராகவும் விளங்கினேன். சாரணியத்திலே உயர் சான்றிதழையும்

பெற்றிருந்தேன். (தருசின்னப் பயிற்சி - Wood Badge) அதுமட்டுமன்றி தலைமையக ஆணையாளராகவும் (H.Q. Commissioner) பல பாராட்டு இதழ்களும் கிடைத்தன. 'றெட்குறொஸ்' (Red Cross) 'சென்ற் ஜோண்ஸ் அம்புலன்ஸ்' சங்கங்களிலும் சேர்ந்து கடமையாற்றினேன். சான்றிதழ் களும் பெற்றுக் கொண்டேன்.

என்னுடன் எஸ். எஸ்.சி. வகுப்பில் கற்ற மாணாக்கர்களும் மெய்கண் டானுக்குப் புகழ் சேர்த்திருக்கிறார்கள். அவர்களுள் மயிலங்கூடல் சி. பொன்னையா(யா/நாவலர் வித்தியாலயம்), கருகம்பனை வ.கந்தையா (நகுலேஸ்வர வித்தியாலயம்), சித்திரமேழி வித்துவான் வ.செல்லையா ஆகியோர் பயிற்சி பெற்ற ஆசிரியர்களாகவும், தலைமையாசிரியர்களாகவும் விளங்கினார்கள்.

அன்று மெய்கண்டான் மண்டபத் தூண்களின் பருமனைப் பார்த்து ஆச்சரியப் பட்டோம். நல்ல அத்திவாரத்தில் தொடங்கிய மெயகண்டான் 'வித்தியாலயம்' என்ற நிலைக்கு உயர்ந்து வளர்ந்தது. அழகான கட்டடங்கள் பெரிய விளையாட்டுத்திடல் என்பவற்றுடன் காட்சி அளித்தது. பல துறைகளிலும் வளர்ச்சிகண்டது. பல போட்டிகளிலும் வெற்றிகண்டது. இவற்றிற்கெல்லாம் தலைமையாசிரியாராக விளங்கிய சைவப்புலவர் சு. செல்லத்துரை அவர்கள்தான் பிரதான காரணம். மேலும் எம்மைப் போன்று அவரும் மெய்கண்டானின் பழைய மாணவரே. அவர் தலைமை யாசிரியராக விளங்கிய காலத்தில் ஏழுர் இராசரத்தினம் அவர்களது பொன் விழா (1978) நினைவுதினம் ஒன்றில் நினைவுப் பேருரை வழங்குவதற்காக எம்மையும் அழைத்துக் கௌரவப்படுத்தினார்.

பிள்ளையார் போன்று தொந்தி வயிற்றுடன் 'ஆஜானுபானுவாக'க் காட்சி தந்த ஏழுரர் நினைவு எம்போன்ற மாணாக்கர்களின் மனதை விட்டகலாதன்றோ!

*Panmozhipulavar*
***T. Kanagarathnamn***
*10A. 4 2nd Lane,*
*WELLAWATTE*

# ஸ்தாபகரின் மனையாள்



திருமதி.சின்னப்பிள்ளை ஏழூர் இராசரத்தினம்

மாடிக் கட்டிடங்கள் மகிழ்வான மாணவர் குழாம்
நித்தமும் சுகம் தரும் நிழல் தரும் மரங்கள்
அத்தனை வனப்பும் அற்புதமாய் அமைந்த சாலையில்
ஸ்தாபகராம் ஏழூரரின் அன்பு மனையாளுக்கு ஓர் கவிதை

உத்தமியே ஓடு போடக் காசு இல்லை யாது செய்வேன் என
உள்ளம் வாடி நின்ற வள்ளல் ஏழூரர் நிலை கண்டு மனைவியவள்
தாலி பெண்ணுக்கு வேலி யெனும் தார்மீக மந்திரம் தானுணர்ந்தும்
தங்கத் தாலியை கழற்றியவள் தன் கணவன் கரம் வைத்தாள்

தன்னலம் ஏதுமின்றி தன் கணவர் தொண்டுணர்ந்தாள்
தரணி போற்றும் நாயகியாய் தன் பெயர் பொறித்து நின்றாள்
ஏழைப் பிள்ளைகளின் எதிர்காலம் சிறக்க எண்ணி
எளிமையில் இன்பம் கண்டு எமக்காக வாழத்துணிந்தாள்

பிறர் பிள்ளை தலை தடவ தங்கள் பிள்ளை தான் வளர்ந்தாள்
தாயைப் போல் பிள்ளை என்று தங்களின் பெயர் காத்தாள்
உலகம் உள்ளவரை உங்களின் பெயர் நிலைக்கும்
உத்தமியே பத்தினியே உங்களை அன்புடனே என்றும் நினைத்திடுவோம்.

## சிந்து நடைக் கூத்து

# வள்ளல் ஏழூர்

இதில் வரும் செய்திகள் யாவும் உண்மையானவை. பாத்திரங்களும் உண்மை யானவை. சிறிதும் கற்பனை இல்லாத உண்மைக் கதை இது.

**பாத்திரங்கள்**

| | | |
|---|---|---|
| **கலை** | - | கலைமகள் - மாணவி |
| **தேவி** | - | கலைமகளின் தாய் |
| **ஏழூர்** | - | ஏழூர் இராசரத்தினம். இவரே 1922இல் இப் பாடசாலையை நிறுவியவர். |
| **சிவா** | - | சிவசுப்பிரமணியம், (ஊர்ப்பெரியவர்) |
| **கனக** | - | கனகநாயகம் - அக்காலத்துச் சட்டத்தரணி. |
| **வறிய மாணவர்கள்** | - | முருகன், மணியம், வாணி, செல்வன், செல்வி, சிறீ |
| **தந்தை** | - | ஒரு பெற்றார் |
| **தாய்** | - | ஒரு பெற்றார் |
| **ஹின்டுபோட்** | - | சைவவித்தியாவிருத்திச் சங்கச் செயலாளர். ஹின்டு போட் இராசரத்தினம் |
| **சின்ன** | - | ஏழூரரின் மனைவி சின்னப்பிள்ளை |
| **கிருபா** | - | ஏழூரரின் மகள் கிருபாசக்தி. |

### காட்சி 1

**(வைகைக்கரை தேடியல்லோ...மெட்டு)**

(தாயும் மகளும்)

**கலை :** பாடம் படிக்கப் போறன் அம்மாவே கேளும்
நானும் பள்ளிக்கூடம் போகப் போறன் அம்மாவே கேளும்
நல்லதொரு பள்ளியிலே அம்மாவே என்னை - நீங்கள்
நல்ல நாளில் சேர்த்திடுவீர் அம்மாவே கேளும்

**தேவி :** கண்மணியே என்னுயிரே கலையழகே வாடி
உன்னைக் கல்வி கற்க வைத்திடுவேன் கண்மணியே வாடி
மெய்கண்டான் பள்ளியிலே என்மகளே உன்னை - நானும்
மேன்மையுடன் சேர்த்திடுவேன் என்மகளே வாடி

வசனம் : எனதருமை மகளே! உன் விருப்பப்படியே உன்னை மேன்மை மிக்க மெய்கண்டானில் கல்வி கற்க வைப்பேன். இப்போதே செல்லலாம் என்னோடு வா மகளே!

தேவி
கலை
மெய்கண்டானை நோக்கியல்லோ அம்மாவும் நானும் இப்போ
மிக விரைவாய்ப் போகிறோமே அம்மாவும் நானும்.

கலை : (வசனம்) ஆகா என்ன அழகான இடமம்மா
(முத்தான மகனே...... வாய் திறந்து...... மெட்டு)
அழகான நல்ல சோலையம்மா- நல்ல சோலையம்மா
இந்த அதிசயத்தை அம்மா நீ பாரேன் அம்மா.

தேவி : சோலையிது கல்விச்சாலையடி - கல்விச் சாலையடி
நீயும் கல்வி கற்கும் கல்விச் சோலையடி
தாமரைமேல் தாயார் சரஸ்வதிபார் - தாயார் சரஸ்வதிபார்
தங்கமே நீ தொழுது வணங்கிடடி.

கலை : தங்கச்சிலை அம்மா தங்கச்சிலை - இந்தத் தங்கச்சிலை
வந்த செய்தி சொல்வாய்.

தேவி : தங்கமனம் கொண்ட வள்ளலடி - ஏழூர் வள்ளலடி
அவர் தந்ததிந்தக் கல்விச் சாலையடி
வள்ளல் ஏழூர் கதை சொல்லுகிறேன்கேள் - கதை சொல்லுகிறேன் கேள்.
அந்த வரலாற்றை இதோ கண்டிடுவோம்

வசனம் : என் மகளே கலையழகி இந்த மெய்கண்டான் கல்விச்சாலையைத் தந்த வள்ளல் ஏழூர் இராசரத்தினம் அவர்களின் வரலாற்றை காட்டுகிறேன் பார்.அதோ....................பார்.

## காட்சி 2

(நானும் ஆதிசிவன்மைந்தன் ... மெட்டு)

ஏழூர் : நானும் இளவாலை மண்ணின் மைந்தன் - இங்கு
ஏழூர் என்று சொல்லுவார்கள் என்னை எல்லோரும்
இந்த மண்ணில் நல்லோரே
ஏழூரில் சொந்தமுண்டு - இங்கு
எண்ணில்லாத ஏழைகளின் பந்தமுமுண்டு - அவர்
சிந்தனையுண்டு.

எல்லோரும் கற்க வேணும் - இங்கு
ஏழை எளியோரும் கல்வி கற்றிட வேண்டும் - அறிவு
பெற்றிட வேண்டும்.

**வசனம் :** பாவம் ஏழைச் சிறுவர்கள் எத்தனை பேர் கல்வி
கற்கவழியின்றியோ வாடுகின்றார்களே.

**(கண்டு வந்தேன் பெண்ணெ... மெட்டு )**

**சிவா :** சிந்தனையேன் ஏழூர் சிந்தனையேன் - உனக்கு வந்ததுயர்
என்ன சொல்லிடுவாய்

**கனக :** நாமிருக்கமனம் வாடலாமோ - ஏழூர்
நமக்குரைப்பாய் உனக்கு வந்ததுயர்

**ஏழூர் :** (வசனம்) அதோ சில சிறுவர்கள் வாடிய முகத்துடன்
வருகிறார்கள். அவர்களைப் பாருங்கள்.

**(மலராய் மலரெடுத்து .... மெட்டு)**

**ஏழூர் :** வாட்டமென்ன பிள்ளைகளே - பிள்ளைகளே நீங்கள்
வாடிவரக் காரணமேன்.

**வசனம் :** நீங்கள் பாடசாலைக்கு போகவில்லையா.

**முருகன் :** சைவரென்று சொல்லி என்னை ஐயாவே என்னை
தாம் சேர்க்க மாட்டோமென்றார்.

**சிவா :** (வசனம்) கிறீஸ்தவ பாடசாலை ஆனதால் சைவர்களைச் சேர்க்க
மறுத்துவிட்டார்களோ உமக்கு என்ன நடந்தது?

**மணியம் :** மதம் மாறவில்லை யென்று - ஐயாவே என்னை
மறுத்துரைத்துக் கலைத்து விட்டார்.

**கனக :** (வசனம்) மதம் மாறவில்லை என்று மறுத்தார்களா?
உமக்கு என்ன நடந்தது?

**வாணி :** நெற்றியிலே நீறழித்து - ஐயாவே என்னை
ஒற்றைக் காலில் நிற்க வைத்தார்.

**சிவா :** (வசனம்) அப்படியா நீர் ஏன் போகவில்லை.

**செல்வன் :** காற்சட்டை ஊத்தையென்று - ஐயாவே என்னை
கடித்துரைத்துக் கலைத்து விட்டார்.

**செல்வி :** காசு கட்டவில்லையென்று - ஐயாவே என்னை
கலைத்துவிட்டார் அடித்தடித்து

**கனகர் :** (வசனம்) நீ ஏன் அப்பா போகவில்லை.

**சிறீ :** உணவுமில்லை உடையுமில்லை - ஐயாவே எனக்கு
ஒருவழியும் தெரியவில்லை

**ஏழூர் வசனம் :** பிள்ளைகளே! நீங்கள் கலங்க வேண்டாம். உங்களுக்கு உடையும், உணவும் தந்து புத்தகமும் தந்து இலவசமாய் நீங்கள் கல்வி கற்க நாங்கள் வழி செய்வோம். நீங்கள் கலங்காதீர்கள்.

ஏழைமக்கள் கல்வி கற்க - நண்பர்களே நாங்கள்
ஏதும் வழி தேட வேண்டும்.

**ஏழூர் :** (வசனம்) நண்பர்களே ஏழைச் சைவப் பிள்ளைகள் கல்வி கற்பதற்கு வழியின்றி வாடுகின்றார்கள். இங்குள்ள கிறீஸ்தவக் கல்லூரிகளில் இவர்களுக்கு இடமில்லை. அங்கு கற்பதானால் பணம் வேண்டும். மதம் மாற வேண்டும். சைவப் பண்பாட்டைக் கைவிட வேண்டும். ஆதலால் சைவப் பிள்ளைகளின் கல்விக்கு நாம் வழி செய்ய வேண்டும்.

**(சத்தியத்தைக் கங்கை தட்டாதே ........ மெட்டு)**

**சிவா :** எங்கள் தமிழ் மன்னர் ஆண்ட பூமி - இது
எங்கள் தமிழ் சைவம் செழித்த பூமி.

**கனக :** எங்கிருந்தோ வந்த பறங்கியரால் - இங்கு
எங்கள் பண்பாடெல்லாம் சிதைந்ததையா.

**வசனம் :** 1505 இல் போர்த்துக்கேயர் வரமுன்பு இங்கு எல்லாரும் சைவர்களாகவே இருந்தார்கள். இங்கு வியாபாரத்துக்காக வந்த போர்த்துக்கேயப் பறங்கிகள் எங்கள் சைவாலயங்களைத் தரைமட்டமாக்கிச் சைவப் பண்பாட்டையும் சிதைத்து விட்டார்கள்.

**சிவா :** பறங்கி பின்னால் வந்த ஒல்லாந்தரும் - எங்கள்
பண்பாடெல்லாம் சிதைத்துப் பாழடித்தார்.

**கனக :** அவர்கள் பின்னே வந்த ஆங்கிலரும் - எம்மை
ஆசை காட்டி மிக மோசம் செய்தார்.

**வசனம் :** பறங்கியர் பின் வந்த ஒல்லாந்தரும் அவர் பின் இப்போது ஆட்சி செய்யும் ஆங்கிலேயரும் எங்கள் சுதந்திரத்தைப் பறித்து அடிமைத்தனத்தைப் புகுத்திவிட்டார்கள்.

**ஏழூர் :** ஆங்கிலத்தைக் கற்றுக் கிறீஸ்தவராய் - பலர்
அடிமைகளாய் வாழ வைத்துவிட்டார்.

**வசனம் :** எங்கள் தமிழ், எங்கள் சைவம், எங்கள் சுதந்திரம் எல்லாம் பறிபோவதைப் பார்த்திருக்கலாமா.

**சிவா :** நல்லை நகர் தந்த நாவலரின் - வழியில்
நாம் தொடர்வோம் நல்ல கல்விப் பணி

**வசனம் :** நாவலர் பெருமான் காட்டிய வழியில் நாமே சைவப் பாடசாலை தொடங்குவோம்.

**ஏழூர் :** சைவத் தமிழ்ப் பாடசாலையொன்றை - நாங்கள்
தொடங்கிடுவோம் இளவாலையிலே

**கனக + சிவா :** தோள் கொடுப்போம் நாங்கள் துவளவிடோம் - நீங்கள்
தொடங்கிடுவீர் சைவப் பாடசாலை.

**ஏழூர் வசனம் :** நன்றி நண்பர்களே எதிர்வரும் நல்ல நாளில் பாடசாலையை ஆரம்பிப்போம்.

## காட்சி 3
### (அறிந்திடுவீர் தெரிந்திடுவீர் .............)

**ஏழூர் :** நல்லவரே வல்லவரே எல்லோரும் வாரும் - இன்று
நல்ல நாளில் பள்ளிக்கூடம் தொடங்குகிறோம். வாரும்

**சிவா :** உணவு தந்து உடையும் தந்து புத்தகமும் தருவோம் - உங்கள்
பிள்ளைகளை எம்மை நம்பிக் கொண்டு வந்து சேர்ப்பீர்.

**கனக :** பலகலைகள் தமிழ் சைவம் ஆங்கிலமும் கற்போம் - உங்கள் பண்பாட்டில் கல்வி கற்போம் பிள்ளைகளே வாரும்.

(நெற்றியில் திருநீறும் சந்தனமும் அணிந்து மாணவர்கள் வருதல்..... கல்வி கற்பித்தல்.)

**ஏழூர் வசனம் :** வாருங்கள் பிள்ளைகளே முதலில் கடவுளை வணங்குவோம்.

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானகுரு வாணிபதம் நாடு.

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்
ஆலயம் தொழுவது சாலவும் நன்று.
தந்தை சொல் மிக்க மந்திரமில்லை
தாயிற் சிறந்தொரு கோயிலுமில்லை

**கலை :** (வசனம்) முந்தி ஊத்தை உடுப்போடு திரிந்தவர்களுக்கு இந்த நல்ல உடுப்புகள் யார் கொடுத்தாரம்மா.

**தேவீ :** வள்ளல் ஏழூரர் தான். உடுப்பு மட்டுமல்ல புத்தகமும் சாப்பாடும் கூடக் கொடுத்தார்.

## காட்சி - 4

## (ஏழூர், ஆசிரியர் இருவர், மாணவர், கனகசபாதி)

**ஏழூர் :** அன்பர்களே நாங்கள் எங்களை ஆதரிக்கக் கூடியவர்களின் வீடுகளுக்கு நவராத்திரி காலத்தில் பண்ணிசை பாடிச் சென்று பாடசாலைக்குப் பணம் சேர்த்து வரவேண்டும்.

**ஆசிரியர் :** நல்ல யோகனை ஐயா அப்படியே செய்வோம்.

**(ஆசிரியர்களும் மாணவர்களும் பாடிச் செல்லல்)**

கன்னித்திங்கள் வருகுது ஐயா கருத்துடன் நவராத்திரிக்கு
கண்ணகை அம்மன் பூசைகள் செய்யக் காசு பணம் வேண்டும்
பொன்னைப் போலே நிறமுள்ள கனியும் பூமடைகாய்மடையாம்.
புனிதாய் அப்பம் இளநீர்ப்புஷ்பம் புனுகுசவ்வாதுடனே வண்ணப்
பள்ளியில் படிக்கும் பிள்ளைகள் மாதாமனை தோறும் வாங்கு
பணங்கள் அரிசிகள் கொண்டு வந்திடுங்கள் பூசைக்கு.

(ஆசிரியர்களும், மாணவர்களும் வீடு தோறும் பாடிச் செல்லல்)

**(அத்தரல்லோ அத்தர் .............. மெட்டு)**

**தந்தை :** மெத்த மெத்த மெத்த நல்ல தொண்டு - நாங்கள்
மேன்மையுடன் உதவி செய்திடுவோம்.

**தாய் :** ஏழைகட்குக் கல்வி அறிவளித்தல் - இந்த
ஏழுலகும் கோடி புண்ணியமே.

(பணம் கொடுத்தல்)

**ஏழூர் :** உள்ளவர்கள் செய்யும் உதவியினால் - இங்கு
இல்லாதோர்க்கு கல்வி நாம் அளிப்போம்
எல்லோருமே எல்லாம் பெற்றுவாழ - நீங்கள்
எல்லோருமே தர்மம் செய்திடுவீர்.

**காட்சி - 5**

**(நானும் ஆதிசிவன் ................ மெட்டு)**

**ஹின்டுபோட் :** நானும் ஹின்டுபோட்டர் ராசரத்தினம் - இலங்கைச்
சைவ வித்தியாவிருத்திச் சங்க மனேச்சர்
பாடசாலை மனேச்சர்,
சைவர் வாழும் ஊர்கள் தோறும் - நாங்கள்
சைவப் பாடசாலை கட்டிக் கல்வி தருவோம்
பதிவுசெய்து தருவோம்.

**வசனம் :** நீங்கள் தானே ஏழூர் இராசரத்தினம். நான் ஹின்டுபோட் ராசரத்தினம். நாங்கள் சைவ வித்தியா விருத்திச் சங்க மூலம் சைவப் பாடசாலைகள் கட்டிப் பதிவு செய்து வருகின்றோம். நீங்கள் இங்கொரு சைவப் பாடசாலை நடத்துவதாக அறிந்து உங்களைப் பார்க்க வந்தேன்.

**ஏழூர் :** வணக்கம் ஐயா உங்கள் வரவு நல்வரவாகுக. எங்கள் பாடசாலையையும் பதிவுசெய்து தருவீர்களா.

**ஹின்டு :** அதற்காகத்தானே உங்களைத் தேடி வந்தேன். பதிவுசெய்து உங்கள் ஆசிரியர்களுக்கு அரசாங்கம் சம்பளம் கொடுக்க வழி செய்வோம்.

**ஏழூர் :** நானும் கும்பிடப்போன தெய்வம் - ஐயா
கோடி நமஸ்காரம் செய்தேன் தேடியே வந்தீர்
உம்மை நாடியே நின்றேன்.

**ஹின்டு :** இரட்டை ராசரத்தினங்கள் - நாங்கள்
ஹின்டு போட்டர் ஏழூர் என்று எங்களைச் சொல்வார்
நல்ல காரியம் வெல்வோம்.

**வசனம் :** ஏழூர்! உங்கள் பாடசாலைக்கு ஒரு நிரந்தரக் கட்டிடம் அமைக்க ஆவன செய்யுங்கள்.

**ஏழூர் :** ஆகட்டும் முயற்சிக்கின்றேன்.

**கலை :** யாருடைய காணியில் கட்டினார்கள் அம்மா.

**தேவி வசனம் :** வள்ளல் ஏழூர் இராசரத்தினம் அவர்கள் தன்னுடைய 28 பரப்புக் காணியையும் பாடசாலைக்குக் கொடுத்து நல்ல மனம் படைத்தோரின் உதவியுடன் பாடசாலையைக் கட்டினார். பாடசாலைக்கு ஓடு போடப் பணம் இல்லையே என்று மனம் வாடினார். அப்போது,

**(அறிந்திடுவீர் தெரிந்திடுவீர் ............)**

**ஏழூர் :** என்னவளே என்துணையே என்னவளே கேளாய் - இங்கு
எனக்கு வந்த துன்பமொன்று என்னவளே கேளாய்

**சின்ன :** என் துணைவா என்னவரே என்னதுயர் என்று - நீரும்
எனக்குரைப்பீர் என்னாலே ஆனதெல்லாம் செய்வேன்.

**ஏழூர் :** நல்லவர்கள் பெரியவர்கள் உதவியுடன் இங்கு - நானும்
நல்லதொரு பாடசாலை கட்டிவிட்டேன் இன்று
கூரையோடு போடுதற்கு ஏதும் வழியில்லை - எந்தன்
குலமகளே என்னவளே ஏதும் வழி சொல்லாய்.

**சின்ன :** கையினிலே வெண்ணெய் வைத்து நெய்க்கலையலாமோ - என்றன்
கணவரே நும் மாங்கல்யம் கைகொடுக்கு மன்றோ.

ஏழூர் : மாங்கல்யமா மாங்கல்யமா மங்கையரே முறையா - உன்றன்
மாங்கல்யத்தை விற்று ஓடு போடுவது முறையா

சின்ன : பல்லாயிரம் ஏழைகட்குக் கல்விநிழல் கொடுக்கும் - அந்தப்
பாக்கியத்தை எங்களுக்கு மாங்கல்யமே கொடுக்கும்.

ஏழூர் வசனம் : நீ அதிசயமான தெய்வப் பெண்ணம்மா. உன் தியாகத்தின்
நிழலிற்கூட நாம் நிற்க முடியாது.
(மாங்கல்யத்தை வாங்குதல்)

கலை : அந்த அம்மா தாலிக் கொடியையே கொடுத்தாவா?

தேவி வசனம் : ஆமெடி கண்ணே! அதோ அந்த ஏழூர் மண்டபக் கூரை
ஒடுகள் அந்தத்தாலிக் கொடி தந்த பாக்கியமடி

கலை : அவர்கள் இப்பவும் இருக்கிறார்களோ.

தேவி : வள்ளல் ஏழூர் 1949 தீபத்திருநாளில் தெய்வமாகி விட்டார்.
அவரின் இடத்துக்கு அவர் மகள் கிருபாசக்தி இருக்கிறார்.
அதோ,

**(வைகைக்கரை தேடி ............)**

கிருபா : வள்ளல் ஏழூர் செல்வமகள் கிருபாசக்தி நானே - அவ
வாறாவாம் வாறாவாம் வள்ளல் பள்ளிக் கூடம்
அன்னை தந்தை செய்தபெரும் புண்ணியத்தினாலே - அவர்
ஆக்கி வைத்த பள்ளிக்கூடம் பார்க்கவென எண்ணி.

அதிபர் : வரவேண்டும் வரவேண்டும் வள்ளல் திருமகளே - உங்கள்
வரவு நல்லவரவாக வரவேண்டும் அம்மா
பெற்றவர்கள் செய்த தவம் பெருகிவளர்ந்திருக்கு - இந்தப்
பெருமையெல்லாம் பார்த்திடுவீர் பெண்ணரசி நீரே.

கிருபா : வாயிலிலே சரஸ்வதியின் வரவேற்பைக் கண்டேன் - இங்கு
வானுயர்ந்த மாடியொடு மண்டபங்கள் கண்டேன்
தெய்வீக நிழலில் கல்வித் தேன் சொரியக் கண்டேன் - இன்னும்
தேவையென்ன சொல்லிடுவீர் செய்து தருவேன் நான்.

அதிபர் : உளமகிழ்ந்து மாணவர்கள் ஓடி விளையாட - ஒரு விளையாட்டு மைதானம் வேண்டும் அம்மா தாயே

கிருபா : தந்திடுவேன் தந்திடுவேன் காணியொன்று நானே - நீங்கள் தகுந்த விளையாட்டரங்கு ஆக்கி மகிழ்வீரே.

அதிபர் : தந்தை வள்ளல் தாயும் வள்ளல் பிள்ளையுமே வள்ளல் - இந்தத்

தங்கமனம் நிலைக்குமம்மா சரித்திரத்தில் என்றும்
மண்ணும் விண்ணும் உள்ளவரை மாதரசே - உங்கள்
மகிமை சொல்லி நன்றி சொல்லி மகிழ்ந்து தொழுவோம் நாம்.

கலை : இந்தப் பெரிய விளையாட்டு மைதானம் இவ தந்ததா அம்மா

தேவீ : ஆமாம் இவர்களுக்கு எந்தப் பெரிய மனம் என்று பார்த்தாயா.

கலை : அப்போ. இந்தச்சிலை ஏழூரரின் தங்கச்சிலை தானே.

தங்கச்சிலை தங்கச்சிலை தங்கச்சியே பார் நீ - ஏழூர்
தாள்களிலே நாம் பணிந்தால் எண்ணியது கிடைக்கும்.

(1997 முதல் மெய்கண்டான் நிறுவுநர் தினத்தில் ஆண்டு தோறும் மேடையேற்றப்பட்டு வருகிறது.)

ஆக்கம்

**சைவப்புலவர் சு. செல்லத்துரை**

# உப அதிபர்



திரு.செல்லையா ஆனந்தீஸ்வரன்
SLTS I



மலர்க்குழு

# ஆசிரியர்குழாம்



அமர்ந்திருப்போர்,
திரு.செ.ஞானசொரூபன் திரு.மு. சுரேஸ்குமார், திரு. தி.பரமேஸ்வரன்
திரு. செ. ஆனந்தீஸ்வரன் (உப அதிபர்)
திரு. ச. சிவானந்தராசா (அதிபர்) திருமதி. சு. கிருபானந்தராசா
திருமதி. த. ஞானச்சந்திரன் திருமதி. வ.குமாரலிங்கம்
திருமதி. பு. திருநாவுக்கரசு

முதல் வரிசை
திருமதி.வ.இராமச்சந்திரன், செல்வி. ம. யூஜின்ஷர்மிலானி. திருமதி. ச. இலட்சியன் செல்வி. ச. சின்னத்துரை திருமதி. க.பத்மராஜா திருமதி.ஜி.விக்கினேஸ்வரன் செல்வி. சி. சியாமளா செல்வி. க. சுலோசனா திருமதி. சி. ஞானசேகரன் திருமதி. மா. உதயகுமார் திருமதி. .இ. யோகலிங்கம் செல்வி. க. மதிவதனி செல்வி. செ. சுகிர்தா.

இரண்டாவது வரிசை
திருமதி. க. பரமேஸ்வரன் திரு. இ. விக்கினேஸ்வரன் திரு. வி. விஸ்ணுகரன்
திரு. சி. பாலகிருஸ்ணன் திரு. சு. சுரேஸ்குமார் (O,E,S) திரு. ச.கஜந்தன்
திருமதி. யோ. ஸ்ராலின்



ஆரம்பப்பிரிவு
மாணவர்களும் ஆசிரியர்களும்



இடைநிலை, மேற்பிரிவு
மாணவர்களும் ஆசிரியர்களும்

# யா/இளவாலை
# மெய்கண்டான் மகா வித்தியாலயமும் சைவப் பண்பாட்டுப் பாரம்பரியமும்

சைவப் பண்பாட்டுப் பாரம்பரியங்களில் ஒன்றான தியாகத்தின் அடித் தளத்தில் எழுப்பப் பெற்ற கல்லூரி யா/ இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம்.

"ஏழுரைப் போல எடுத்த கருமத்தை
வாழ்வூரச் செய்யும் வலிபடைத்தோர் - யாழூரில்
யாரையுமே காணோம்......... எனப் பண்டிதமணி அவர்களின் புகழாரம் பெற்ற வள்ளல் ஏழூர் இராசரத்தினம் அவர்களின் தியாகச் சின்னம் கொடையின் சின்னம், சைவப் பண்பாட்டுப் பாரம்பரிய சின்னம் என இக்கல்லூரி பல பரிமாணங்களைப் பெற்று விளங்குகின்றது அவரின் பெயரால் இக்கல்லூரி இருக்கும் காணிப் பெயரே 'அம்பலவர் வளவு" தில்லைக் கூத்தனின் திருப்பெயரில் அமைந்த காணியில் ஏழூர் வள்ளலின் அயராத முயற்சியாலும் அவரின் வள்ளல் தன்மையினாலும் ஏனையோரின் ஒத்துழைப்பினாலும் குறிப்பாக ஏழூர் வள்ளலின் மனைவியாராகிய சின்னப்பிள்ளை அவர்களின் தாராள மனத்தினாலும் தோற்றம் பெற்ற கல்வி நிறுவனமே இக்கல்லூரி.

இக்கல்லூரி பல சிறந்த அதிபர்களையும்,பல நல்லாசிரியர்களையும் கொண்டு பல சாதனைகளைப் படைத்த கல்லூரி பல நூற்றுக்கணக்கான நன் மாணாக்கர்களை இச்சமூகத்திற்குப் பெற்றுக் கொடுத்த கல்லூரியும் இதுவாகும்.

இக்கல்லூரியின் இப்பெருமை பற்றி ஏன் குறிப்பிடுகின்றேன் என்றால் நாவலர் பெருமான் யாழ் மண்ணிலே தோன்றியிருக்காவிட்டால் நாமெல் லோரும் இன்று அசைவர்களாகவே இருந்திருப்போம். நாவலர் வழியிலே நின்ற நல்லவர்களின் பண்பாட்டுச் சின்னம் இக்கல்லூரி.

"யாதாயினும் ஒரு சமயத்தை மெய் என்று நம்புகின்றவன் அந்தச் சமயத்தின் வழி ஒழுகும் ஒழுக்கம் இல்லாத பொழுது பயன் பெறான்.

அந்தச் சமயத்திற்குரிய கடவுள் இவரென்பதும் அவருடைய இலக்கணங்களும் அவரால் விதிக்கப்பட்ட புண்ணியங்களும், விலக்கப்பட்ட பாவங்களும், அப்புண்ணிய பாவங்களின் பலன்களாகிய சுகதுக்கங்களும், அவரை வழிபடும் முறைமையும், அந்த வழிபாட்டினாலே பெறப்படும் பிரயோசனமும் ஆகிய இவைகளை அறியும் அறிவு உதியாதபோது அந்த ஒழுக்கம் உண்டாகாது. சற்குருமுகமாக விதிப்படி பெறப்படும் சமயநூற்கல்வி கேள்வி இல்லாத போது அந்த அறிவு உதியாது. ஆதலால் ***கல்வியும், அறிவும், ஒழுக்கமும்*** ஆகிய இந்த மூன்றும் வேண்டும். இது எல்லாச் சமயத்தாருக்கும் ஒத்த துணிவு" (ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் அறிவுரை)

இன்றைய காலகட்டத்திலும் நாவலரின் சைவப் பண்பாட்டுப் பாரம்பரியத்தின் விழுமிய நிலையங்களாக ஒரு சில கல்விக்கூடங்கள் மிளிர்கின்றன. அவற்றில் இக்கல்லூரியும் ஒன்றே! எனத் துணிந்து கூறலாம். கல்வி, அறிவு, ஒழுக்கம் என்பவற்றில் சோடை போகாது வீறு நடைபோடுகிறது.

இப்பாடசாலையில் சைவ விழாக்கள் பூசைகள் வழிபாடுகள் என்பன குறைவிலாது இடம்பெறுவது கண்கூடு. மாசித்திங்கள் முதலாம் நாள் "மகா வித்தியாலய தினம்" ஆகக் கொண்டாடப்படும். அத்தினத்திலே பாடசாலைக்கு அருகாமையில் இருந்தருளாட்சி புரியும் ஆனைவிழுந்தான் விநாயகர் ஆலயத்தில் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகிய அனைவரும் கலந்து வழிபாடு இயற்றுவர். விஷேட அபிடேக ஆராதனைகள் இடம்பெறும். அன்றைய தினத்திலே, இப்பாடசாலையில் சேவை ஆற்றி வேறு பாடசாலைகளுக்கு மாற்றலாகிச் சென்ற ஆசிரியர்களுக்கு சேவைநலன் பாராட்டும் புதிதாக வருகைதந்த ஆசிரியர்களுக்கு வரவேற்பு உபசாரமும் இடம்பெறும்.

இதே மாசி மாதத்தில் "எண்ணுதற்கெட்டா எழிலார் கழலுடைய நகுலேசப் பெருமானின் மஹோற்சவத்தின் 7ம் ஆம் திருவிழா உபயம் இப்பாடசாலையின் மிகப்பெரிய கைங்கரியம் "என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே.." என்ற திருஞானசம்பந்தமூர்த்தி நாயானாரின் திருவாக்கு இப்பாடசாலை அதிபர், ஆசிரியர், மாணவர்க்கு இத் திருவிழா உபயம் கிடைத்து அதைச் செய்து வழிபடும் பாக்கியம் கிட்டியுள்ளது. என்றால் மிகையல்ல.

" ஆலயம் தொழுவது சாலவும் நன்று " என்பது முதுமொழி. ஆகவே திருவிழாவை உபயமாக அதுவும் பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்றான நகுலேஸ்வரத்தில் செய்ய என்ன புண்ணியம் செய்தனரோ?

பாடசாலை ஆலயத்தில் காலை வேளையில் மாணவ சிறார்கள் தாம் பறித்த மலர்கொண்டுமாலைகட்டி தேவார பாராயணத்துடன் பூசைசெய்யும் அற்புதக்காட்சி கண் கொள்ளாக்காட்சியாகும். அது பின்வரும் அப்பர் பெருமானின் தேவாரத்தை ஞாபகமூட்டுவதாக விளங்குகின்றது.

" வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனைச்
சூழ்ந்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்ந்தவா வினையேன் நெடுங்காலமே "

ஆவணிமாதத்தில் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவரும் ஐந்தாம் ஆண்டுப் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களும் இணைந்து " மாதா, பிதா, குரு, தெய்வவழிபாடு செய்வார்கள். இச் செயற்பாடு சைவப்பண்பாடடுப் பாரம்பரியத்தைச் சமூகத்தில் பழக்க மாக்கிப் பின் வழக்கத்திற்கு கொண்டுவர உதவும் ஒரு கைங்கரியம் எனலாம். தமக்குக் கல்வி போதிக்கும் ஆசிரியர்களையும், தமக்கு அருளாசி வழங்க வரும் குருமாரையும் பெரியோரையும் தம் பெற்றோரையும் பாதம் பணிந்து வழிபாடு செய்து இறை வழிபாட்டுடன் பரீட்சைக்கான அனுமதி அட்டையை பெறும் காட்சி ஓர் உணர்வுபூர்வமான நிகழ்வாகும். அங்கே மாணவர்கள் பெற்றோரையும் ஆசிரியர்களையும் வழிபாடு செய்யும்போது அவர்கள் தாம் அதற்குத் தகுதியானவர்கள் தானா? எனப் பெற்றோரையும் ஆசிரியர்களையும் எண்ணத்தூண்டும். எனவே இச்செயற்பாடு ஒரு கல்லில் இருமாங்காய் என்பது போல் செயற்பலன் உள்ளதாகின்றது. இதை நான் இப்பாடசாலையில் பணியாற்றிய காலங்களில் கண்டும் உணர்ந்தும் களிப்புற்றேன்.

"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவவானினும் நனிசிறந்தனவே"

என்பது ஆன்றோர் வாக்கு "ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது" இது பழமொழி. எனவே " அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" எனப் படித்தால் மட்டும் போதுமா? அதை நீங்கள் செய்கையில் உணரவேண்டாமா? உணரவேண்டும் உணர்த்த வேண்டும் என்பதற்காக இக்கல்லூரியில் இச் செயற்பாடு முன்னெடுக்கப்படுவது பாராட்டப்படவேண்டிய ஒன்றாகும். இதனை ஏனைய கல்லூரிகளும் பின்பற்றினால் இன்றைய இளைய சமுதாயத்தைக் குறைகூறும் சந்தர்ப்பம் இல்லாது ஒழித்துவிடும் ஒரு அர்த்தபுஷ்டியான

சமுதாயம் மலர உந்துசக்தியாக அமையும் என்பது எனது உறுதியான நம்பிக்கையாகும்.

புரட்டாதி மாதத்தில் இடம்பெறும் வாணி விழாவும் மிகவும் கோலாகலமாக இடம்பெறும். கோலப்போட்டி, மாலைகட்டும் போட்டி, சகல கலாவல்லிமாலைப் போட்டி, பேச்சுப் போட்டி என மாணவரின் சமய ஈடுபாட்டை அதிகரிக்கச் செய்யும் நிகழ்வுகள் மிகவும் நியாயமான முறையில் இடம்பெற்றுப் பரிசில்களும் வழங்கப்படும். இவற்றைவிடச் சமயக்குரவர்களின் குருபூசைகளும் மெய்கண்டாரின் குருபூசையும் மிகச்சிறப்பாகக் கொண்டாடப்படும்.

கார்த்திகை மாதப் பௌர்ணமித் திதி, பாடசாலை நிறுவுநராகிய ஏழூர் வள்ளல் அமரத்துவமான நன்னாள். அத்தினமே பாடசாலைப் பரிசளிப்பு விழா நாளாகக் கொண்டாடப்படுகிறது. இது "நன்றி மறவாமை" என்ற சைவத்தமிழ்ப் பாரம்பரியத்தின் குறியீடு எனலாம். இப்பாடசாலையில் கல்விச் செயற்பாட்டினூடாக வெளிப்படுத்தப்படும். சமய சமூக விழுமியங்கள் பலபரிமாணம் கொண்டவை. சுருக்கமாக

கடவுள் நம்பிக்கை, நன்றி மறவாமை, அன்புடைமை, தன்னம்பிக்கை விருந்தோம்பல், பணிவுடமை, பெற்றோர் பெரியோரை மதித்தல்

எனத்தொடுத்துக் கூறலாம். இங்கு சேவையாற்றி ஓய்வு பெற்ற அதிபர்கள், ஆசிரியர்கள் சேவையில் உள்ள அதிபர் ஆசிரியர்கள் ஆகிய அனைவரும் பாராட்டுக்குரியவர்கள். ஏனெனில் இன்றைய காலகட்டத்தில் விழுமியப் பண்புகள் கிள்ளுக்கீரையாகி கிலோ என்ன விலை? என்று கேட்கும் காலாமாகிவிட்டது. பன்னிருதிருமுறைகளும் பதினான்கு மெய்கண்டசாஸ்திரங்களும் மதிக்கப்படுகின்றன. போற்றப்படுகின்றன. பாடசாலையின் பெயரே பண்பாட்டின் நிலைக்களன் அதுவே மெய்கண்டான் என்ற பெயர் மெய்மை காணும் நெறியின் சின்னம் என்றால் மிகையல்ல.

சுபம்

அன்பே சிவம்

**திரு. செ. பாலச்சந்திரன்**
ஆசிரியர்
யா/ வைத்தீஸ்வராக் கல்லூரி

ஸ்தாபகர் ஏழூர் இராசரத்தினம் அவர்களின்
செல்வமகள்



"நடுவூர்ப்பழுத்த நன்மரம்" நூலின் அனுசரணையாளர்
திருமதி.கிருபாசக்தி தர்மதாசன்

# கலைக் கோவிலே!
# வளம் மிகுந்து வாழிநீடு!

இந்துப் பண்பாட்டின் காப்பகமாம் இளவாலை மண்ணின்
மைந்தர்களை செந்நெறியிற் செலுத்தி நன்கு சீர்ப்படுத்தி
செந்தமிழும் சைவமும் சீராய்ப் புகட்டும் மெய்கண்டான் அன்னையை
சிந்தை குளிர வாழத்திடுவோம் சீரோடு பொலிய நீடு!

மண்ணில் அனைவரும் கற்றோங்க வேண்டும் என்னும்
எண்ணங் கொண்ட எங்கள் வள்ளல் ஏழூர் இராசரத்தினம்
திண்ணிய நெஞ்சுடன் தன் மனைவியின் மாங்கல்யம் விற்று
வண்ணமுறக் கட்டிய கலைக்கோவிலே வளம் மிகுந்து வாழி நீடு!

எந்தையும் ஏழூரரும் ஒன்றாக கல்விப்பணிபுரிந்த கூடம் இது
எந்திரியாய் என் அண்ணனை வடிவமைத்த கூடம் இது
செந்தமிழில் எனைக் கவிதை சிந்தவைத்த கூடம் இது
சுந்தரமாய் சமூகத்தை உயர்த்தி நிற்கும் ஏணி இது

ஆரா அமுதமென எந்தனுக்கு ஆங்கிலமொழி யறிவை
சீராக ஆரம்ப வகுப்புகளில் அன்னை நீ ஊட்டியதால்
ஊரார் வியக்கநான் புனைந்த ஆங்கிலக் கவிதைகளை
பேராவலொடு பதிப்பித்து பெருமை சேர்த்தேன் உந்தனுக்கு

போட்டிகள் பரீட்சைகள் விழாக்கள் வருகையிலே
நாட்டமொடு உத்திகளை ஆசிரியர் நன்றே பயிற்றுவித்து
கோட்ட வலய மாவட்ட மாகாண மட்டங்களில்
ஈட்டிய வெற்றிகளால் மெய்கண்டானின் கொடி மேலே பறக்குது பார்

ஊசிவழிச் செல்லும் நூல் போல இக் காசினியில்
ஆசி பெற்றார் நிறுவுநரின் திருமகளும் ஆசிரியராக
தேசிழந்துபோகாது மெய்கண்டானின் வளம் பேணி
நேசிக்கின்றார் இக் கலைக்கோவிலை நிலமும் நிதியும் உபகரித்து

ஆறு தசாப்தங்களிற்கு முன் கார்த்திகை தீபத்திருநாளிதில்
நீறாகியதே நிறுவுநர் ஏழுர் இராசரத்தினத்தின் பூதவுடல்
மாறாது அவர் புகழ் மெய்கண்டானில் மென்மேலும் நிலைத்து நிற்க
பேறாக அவரின் ஆன்மா சிவன் கழலில் பெற்றிடு பேரமைதி.

**செல்வி நகநந்தினி சங்கரப்பிள்ளை**
விசேட பயிற்சி (ஆங்கிலம்)

# எனது பார்வையில் மெய்கண்டான்

யாழ் குடாநாட்டிற்கு வடக்கே அமைந்துள்ள இளவாலைக் கிராமத் துக்குப் புகழ் சேர்க்கும் வகையில் சைவத்தையும் தமிழையும் பேணி எல்லாத் துறைகளிலும் சிறந்து விளங்கும் கல்விச்சாலையே மெய்கண்டான் மகா வித்தியாலயம்

1505 இல் யாழ் வந்த போர்த்துக்கேயர்களாலும் அவர்களைத் தொடர்ந்து வந்த ஒல்லாந்தர் மற்றும் ஆங்கிலேயரினாலும் சைவமும் தமிழும் அழிக்கப்பட்டு சைவத் தமிழ் மக்கள் அடிமையாக்கப்பட்டு அவர்களின் மதம் மொழி கல்விச்சுதந்திரம் பறிக்கப்பட்டது. பணவசதி படைத்தவர்களுக்கும் கிறிஸ்தவ மதத்தவர்களுக்கும் மட்டுமே கல்வி பெற முடிந்தது. அக்காலத்தில் ஏதிலிகளான வறிய சைவ மாணவர்களின் நன்மை கருதி 1922ம் ஆண்டு வள்ளல் ஏழூர் இராசரத்தினம் அவர்கள் நல்மனம் படைத்த பெரியோர்களின் துணைகொண்டு இப்பாடசாலையை தன்னுடைய சொந்தக் காணியில் ஆரம்பித்தார்.

அவரே அப்பாடசாலையின் ஆசிரியராகவும் கடமை ஆற்றினார்.

> "...............................
> அன்ன யாவிலும் புண்ணியம் கோடி ஆங்கோர்
> ஏழைக் கெழுத்தறிவித்தல் மிகப் பெரிய புண்ணியம்
> \- பாரதியார்

நாளடைவில் இலங்கை சைவவித்தியா விருத்திச்சங்க முகாமையாளர் இந்துபோட் இராசரத்தினம் அவர்களின் உதவியுடன் பாடசாலை வளம் பெறத் தொடங்கியது. அதன் பின்னர் பல அதிபர்களின் அயராத உழைப்பினாலும் முயற்சியினாலும் கல்விச்சாலை பலதுறைகளிலும் வளர்ச்சி அடைந்தது.

"பாடசாலை சிந்தித்தும் செயற்பட்டும் வாழும் ஒரு சமூக நிலையம்" (யோன்டூயி) என்பதற்கு இணங்க இப்பாடசாலையை இந்தியாவிலுள்ள சாந்தி நிகேதனத்திற்கு ஒப்பிட்டுக்கூறுவர். "வாழக்கல்மின்" எனும் மகுட வாசகத்துடனும் "எல்லோர்க்கும் கல்வி" என்னும் இலட்சியத்துடனும் சமய வர்க்க பேதமின்றி கல்வி பெறுவதற்காக எவர் வந்தாலும் ஆதரித்து கல்வி வழங்கும் பண்பு இன்றுவரை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

நான் 1979ம் ஆண்டிலிருந்து 1991ம் ஆண்டு வரை ஆசிரியராகப் பணிபுரிந்த காலத்திலும் பின் 1998ம் ஆண்டு அதிபராகக் கடமை ஏற்ற பின்பும் மெய்கண்டான் பலவிதமான பௌதீக வளங்களைப் பெற்று வளர்ச்சி அடைந்தது.

ஆயினும் ஒரு கல்விச்சாலையானது தனது பௌதீக வளத்தில் வளர்ச்சி பெறுவது மட்டும் அல்லாது சிறந்த கல்வியை வழங்குவதன் ஊடாக நாட்டுக்கு உகந்த நற்பிரசைகளை அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றில் மாற்றத்தை ஏற்படுத்தி பூரணமான மாணவர்களாக வழங்குதல் வேண்டும்.

"கண் உடையார் என்பவர் கற்றோர் முகத்து இரண்டு
புண் உடையார் கல்லாதவர்"

என்பது வள்ளுவரின் வாய்மொழி இதற்கேற்ப மாணவர்களை கல்வியில் சிறந்த நிலையை அடையச் செய்தல் மூலமாகவே ஒரு பாடசாலை உயர் நிலையை அடைய முடியும். இதற்கு அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் நலன்விரும்பிகள் கல்விப் பகுதியினர்களின் உன்னதமான பணிகள் அவசியமாகின்றன. அதாவது நேர்த்தன்மை, புதிய சிந்தனைகள் மாணவர் நலன்விருத்தி, கல்வி விருத்தி, இணைப்பாடவிதான விருத்தி ஆகியவற்றை மையப்படுத்தி இயங்கி அவர்களை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்ல வேண்டும்.

அவ்வாறனவர்களின் உன்னதமான பணியினாலேயே மெய்கண்டான் கல்விச்சாலை அன்றுமுதல் இன்றுவரை சிறப்புற்று வருகின்றது. மாணவர்கள் எக்காலத்திலும் எப்பிரச்சனைகளிற்கும் முகம் கொடுத்து பரீட்சைகளில் சித்தி அடைந்து பல்கலைக்கழகம், தொழில்நுட்பக் கல்லூரிகள், கல்வியியற் கல்லூரிகள் ஆகியவற்றுக்குச் சென்று உயர் நிலை அடைந்துள்ளார்கள். இதுதவிர இணைப்பாட விதான செயற்பாடுகளான கலைகலாசாரப் போட்டிகள் விளையாட்டுப் போட்டிகள் ஆகியவற்றில் கோட்ட, வலய, மாவட்ட, மாகாண, தேசிய மட்டங்களில் பங்கு பற்றி பல பரிசில்கள், வெற்றிக் கேடயங்கள் பெற்று தமக்கும் பாடசாலைக்கும் பெருமை தேடித்தந்துள்ளார்கள். கல்விச் சாலை வரலாற்றிலேயே முதல் தடவையாக 2007 க.பொ.த (சா/த) பரீட்சையில் எல்லாப் பாடங்களிலும் அதிவிசேட சித்திகளை (10A) மாணவி ஒருவர் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

"மாறிக் கொண்டிருப்பது மாளா இயற்கை
மாட்சியில் படைத்தது மாந்தர் இனத்தை
ஏறிக் கொண்டிருக்கும் காலப்படிகளில்
மனிதன் எத்தனை புதுமைகளை செய்தான் முடிவில்?"

என்னும் கேள்விக்கு விடையாக மெய்கண்டானின் கல்விச்சமூகம் திறம்படச் செயற்பட்டு வருகின்து. மென்மேலும் இப்பாடசாலை சிறப்புற்று விளங்க அனைவரும் ஒன்று சேர்ந்து செயற்படுவோம்.

" இன்பங்கள் யாவும் பெருகும்
இங்கு - யாவரும் ஒன்றென்று கொண்டால்"

பாரதியார்


**திரு. அ. பேரம்பலம்**

யா/ இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலய
ஓய்வு பெற்ற அதிபர்

நினைவுச் சின்னங்கள் விழுகின்றன. நாடுகள் அழிகின்றன. நாகரிகங்கள் தேய்கின்றன மாய்கின்றன. விழாதவை, அழியாதவை, தேயாதவை, மாயாதவை நல்ல நூல்களே.

**கிளாறன்ஸ் டே**

## எமது பாடசாலையின் பவளவிழாவின் பின்னர் சேவையிலிருந்து ஓய்வு பெற்றோர்



**திரு சு.செல்லத்துரை**

அதிபர் சேவை தரம் 1

S.L.P.S. - 1

1974 - 1998



**திருமதி சிவகாமி தர்மபாலா**

ஆசிரியர் சேவை தரம் 1

S.L.T.S. - 1

1987 - 2008



**திரு. அ. பேரம்பலம்**

அதிபர் சேவை தரம் 1

S.L.P.S. - 1

1998 - 2005

# எங்கள் ஸ்தாபகர் ஒரு புரட்சிக் கனல்

ஏறக்குறைய நூறு ஆண்டுகளுக்கு முன் ஒருநாள் வாட்ட சாட்டமான ஒரு வாலிபன் வயது பத்தொன்பது இருபது இருக்கும். வெள்ள வாய்க்கால் வழியாக நடந்து செல்கின்றார். ஏதோ ஆழ்ந்த சிந்தனையில் சென்றவன் சுற்று முற்றும் பார்க்கிறான் வெள்ளைக்கவுண், சப்பாத்து, புத்தகப்பை மாணவிகள் பையன்கள் கட்டைக்களிசான் சேட், புத்தகப்பை எல்லாருடைய கழுத்திலும் கறுப்பு நூலில் தொங்கும் வெள்ளிக்குருசு. இவர்கள் எங்கே போகின்றார்கள்? இளவாலை கன்னியாஸ்திரி மடத்துக்கும் பிறதர் மடத்துக்கும் ஏன் போகின்றார்கள்? கல்வி கற்கப் போகின்றார்கள். இவர்களுக்கு சேட், கவுண் சப்பாத்து, புத்தகங்கள் சிற்றுண்டி, மதிய உணவு எல்லாமே இலவசமாகக் கிடைக்கும். எதிர் காலத்திலும் வேலை வாய்ப்பு. கைநிறையச் சம்பளம். வாழ்க்கை வசதிகள் எல்லாமே உண்டு. மறுபுறம் ஆடுமாடு மேய்ககும் சிறுவர்களும், ஆண்களும் பெண்களும் அழுக்கேறிய சிற்றாடைத் துண்டுளை அரையும் குறையுமாக இடுப்பில் சுற்றிக் கொண்டு ஆடு மாடுகள் மேய்ப்பதற்கும் வயல்கள் தோட்டங்களில் சிறுசிறு குற்றேவல் செய்வதற்கும் காலையில் கஞ்சியோ, கூழோ, பழையதோ உண்டும் உண்ணாமலும் இலந்தைப்பழம் நாவற்பழம் கொய்யாப்பழம் பொறுக்கிக் கொண்டும் காலையில் கோவிற்பக்கம் சென்றவர்கள் விபூதி சந்தனம் அணிந்து கோவில்களில் அகப்பட்ட பிரசாதத்தையும் கொறித்துக் கொண்டு திரியும் வீதிச்சிறார்களின் பவனி.......... பத்தடி தாண்டினதும் பிள்ளையார் ஆலயக் காலைப்பூசையை முடித்துக்கொண்டு நிலச் சுவாந்தர்களும் அரசாங்க உத்தியோகத்தர்களும் ஆண்கள் பட்டுவேட்டி சால்வை கைகளில் மணிக்கட்டு கைச்சங்கிலி விரல்களில் தங்க மோதிரம், நெற்றியில் சந்தனப்பொட்டு மேனி முழுவதும் நறுமணம் கமழும் விபூதிப்பூச்சு பெண்கள் மணவறைக்குச் செல்வார்கள் போல் நடமாடும் நகைக்கடைகளாகப் பலவித அலங்காரங் களோடும் கைகளில் அர்ச்சனைத்தட்டு ஏந்திச் சென்ற காட்சிகள் அற்புதமாக இருந்தன. இவ்வாறான காட்சியைக் கண்ணுற்ற இளம் ஏழூரரின் இரத்தம் கொதித்தது. மார்பு விம்மிப்புடைத்தது. மனிதனுக்கு மனிதன் இத்தனை

ஏற்றத்தாழ்வுகள். தகப்பன், கணவன், சகோதரன் உழைப்பில் பெண்கள் ஆடை, அணி வாங்குவதற்கும் பிறருடைய உத்தரவை எதிர்பார்க்க வேண்டுமா? இன்ன இன்ன தெய்வங்களைக் கூட இன்னார் வணங்கக் கூடாது என்ற கட்டுபாடா? என்ன கொடுமை? இந்த நிலையை மாற்றி அமைக்க வேண்டும். ஏழை பணக்காரன் உயர்ந்தவன், தாழ்ந்தவன், எஜமான், அடிமை என்ற பேதம் இருக்கக் கூடாது. ''சாதிகள் இல்லையடி பாப்பா குல உயர்வு தாழ்வு சொல்லுதல் பாவம்'' என்ற மகாகவி பாரதியின் குரல் இவர் செவிகளில் ஓங்கி ஒலித்தது.

இவற்றுக்கெல்லாம் கல்வி அறிவு இல்லாமை தொழில் வருவாய் இல்லாமை என்பதை உணர்ந்து கொண்டார். இளைஞரான ஏழூரர் அன்று தொடக்கம் அவருடைய சிந்தனை செயல் எல்லாமே சமத்துவம் சகோதரத்துவம், கல்வி, பாடசாலை என்னும் நான்கு வழிகளில் பெருகிப் பிரவாகித்தது. அதன் வெளிப்பாடுதான் இன்றைய யா/ இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம்.

**அது காலத்தால் அழியாது! மனித இனம் இருக்கும் வரை நீடித்து நிலைத்து நிற்கும்.**

திரு. மு. சிவராசரத்தினம்
M.A. S.L.E.A.S
இளைப்பாறிய உதவிக் கல்விப் பணிப்பாளர்
இளவாலை.

ஞானவான்களுக்கு வாழ்க்கை ஒரு திருவிழா
- எமர்சன்

**ஸ்தாபகர் ஏழூர் இராசரத்தினம் அவர்களின் மருமகன்**

**அமரர் சண்முகம் தர்மதாசன் அவர்கள்**







தோற்றம்
08-04-1938

மறைவு
03-03-2008

சொத்து வேண்டாம் சுகம் வேண்டாம்.
கொண்டவளின் தொண்டின் சுகம் போதும் என உணர்ந்து .
மனம் ஒத்து கரம் கோர்த்து மன முவந்தீர்ந்தார் பல தொண்டு
மாண்பு மிகு வள்ளலாரின் மருமகனாம் தர்மதாசன்

எல்லைக்கே வழக்காடும் எம்மவர் வாழும் பூமியில்
இருபத்தேழும் பரப்புக் காணியைக் கூடத் துச்சமெனத் தானுணர்ந்து
சின்னஞ் சிறு மொட்டுக்கள் சிரித்து மகிழ்ந்து விளையாட
மைதானம் உருவாக மகிழ்ந்தளித்தார் தம் காணியதை

வள்ளல் பரம்பரையில் வந்து சேர்ந்த உத்தமரே
ஆசிரியப்பணியை அரும்பணியாகக் கொண்டவரே
மெய்கண்டான் அன்னையின் மேன்மைக்கு உழைத்தவரே
ஆண்டாண்டு தோறும் அகம் உருகி அஞ்சலி செலுத்துவோம்.



# பாடாண்திணை – சில குறிப்புகள்

ஆய்வுச் சுருக்கம்

திரு. பொ. செங்கதிர்ச்செல்வன்
சிரேஷ்ட விரிவுரையாளர்,
தமிழ்த்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

**(தொல்காப்பியப் பொருளதிகாரம், அகத்திணைகளாகக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, பெருந்திணை, கைக்கிளை என்பவற்றைக் குறிப்பிடுகின்றது. இவற்றிற்குப் புறமாக வெட்சி, வஞ்சி, உழிஞை. தும்பை, வாகை, காஞ்சி ,பாடாண் என்பவற்றையும் கூறுகின்றது. இவற்றுள் கைக்கிளைக்குப் புறமாக அமைந்த பாடாண்திணையை அறிமுகப் படுத்துவதாக இக்கட்டுரை அமைகின்றது. )**

தொல்காப்பியப் புறத்திணை இயலின் ஏழாவது திணையாக விரித்துரைக்கப் படுவது பாடாண்திணையாகும. இத்திணையுள் ஒழுக்கம், அறிவு, திரு, ஆற்றல், ஈகை, வீரம் முதலிய பெருமிதப் பண்புகளை ஆளுதற்குரிய தலைமகனது ஒழுகலாறுகள் விரித்துரைக்கப்படுகின்றன.

பாடாண் என்ற சொல்லைப் பாடு+ஆண் என இரண்டாகப் பிரித்து தலைமகனின் ஒழுகலாறுகளை விரித்துரைப்பது எனப்பொருள் கொள்வர்.தலைமகனின் அகவாழ்விலும் புறவாழ்விலும் தோன்றும் பெருமிதப் பண்புகளை பாடுவதே பாடாண்திணையாகும். இப்பொருளமைதியைப் பின்பற்றியே ஐயனாரிதனாரும் "ஒளியும் ஆற்றலும் ஓம்பா ஈகையும் அளியும் என்றிவை ஆய்ந்துரைத்தன்று" என்கிறார்.

பாடாண்திணை, அகத்திணை ஏழனுள் ஒன்றாகிய கைக்கிளைக்குப் புறனாக அமைந்தது எனவும் அது எட்டு வகைப்படும் எனவும் தொல்காப்பியர் கூறுவார்.

"பாடாண் பகுதி கைக்கிளைப் புறனே
நாடுங் காலை நாலிரண்டுடைத்தே" [2]

பாடாண்திணை கைக்கிளைக்குப் புறனாய் அமைந்ததற்கு பின்வரும் காரணங்களை உரையாசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

01. கைக்கிளை ஒரு நிலத்திற்கு மட்டும் உரிமையுடையது ஆகாது. எல்லா நிலத்திலும் வரும், அங்ஙனம் பாடாணும் ஒரு நிலத்திற்கு உரிமையுடையது ஆகாது.

02 கைக்கிளை ஒருதலைக்காமம் ஆகிய பொருண்மையுடையது. பாடாண் பாட்டும் ஒருவனை ஒருவன் யாதானும் ஒரு பயன் கருதிய வழி பாடுவது.

03 கைக்கிளையாகிய காமப்பகுதிக்கண் மெய்ப்பெயர் கூறப்படும் அங்ஙனமே பாடாண்பாட்டிலும் மெய்ப்பெயர் கூறப்படும்.

04 கைக்கிளை போலப் பாடாண்பாட்டும் செந்திறத்தாற் கூறப்படும் என இளம் பூரணரும்.

05 கைக்கிளையில் காதற்கூற்றுப் பாராட்டு தலைவன்மாட்டாவது போல் பாடாண் கூற்றும் புகழ்வோர் தன் பக்கலில் அமைந்துள்ளது.

06 கைக்கிளை போல் இழுக்கு நீக்கித் தருக்கியவே சொல்லி இன்புறுதல் போலப் பாடாணில் பழி தழுவாப் புகழ்மை ஒன்றே பயின்று வருமென ச.சோ. பாரதியாரும் [3] கூறுகின்றனர்.

உரையாசிரியர்கள் தாம் விரும்பியபடி உரை எழுதுவதற்கு களமாக அமைந்தது தொல்காப்பியப் பொருளதிகாரம் என்பது அறிஞர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயமாகும். அதற்கிணங்க புறத்திணைகளுள் இறுதியான பாடாண் மிகுந்த உரை வேறுபாடுகளுக்கு ஆளாகிக் கற்போருக்கு மயக்கத்தை ஏற்படுத்துவதாக உள்ளது.

"நாடுங்காலை நாலிரண்டுடைத்தே" என்ற பகுதிக்கு நாலிரண்டாவன:-

01. கடவுள் வாழ்த்து வகை,
02. வாழ்த்தியல் வகை
03. மங்கல வகை
04. செவியறிவுறுத்தல்
05. ஆற்றுப்படை வகை
06. பரிசிற்றுறை வகை
07. கைக்கிளை வகை
08. வசை வகை

என்பவை என இளம்பூரணரும் [4]

1. பாடாண் திணையுள் ஓதப்படும் பொருட்பகுதிகள், 2. வெட்சி, 3, பொதுவியல் 4. வஞ்சி, 5. உழிஞை, 6. தும்பை, 7. வாகை, 8. காஞ்சி என்பவை என நச்சினார்க்கினியாரும்.[5]

1. கொடுப்போர் ஏத்துதல், 2. கொடார்ப்பழித்தல், 3. இயன்மொழி வாழ்த்து, 4. வாயிற் காவலர்க்குரைத்த கடைநிலை, 5. கண்படை நிலை, 6. கபிலை கண்ணிய வேள்வி நிலை, 7. வேலின் நோக்கிய விளக்கு நிலை, 8. வாழ்த்தியல் வகையெனவும்

1. வெட்சி, 2. வாகை, 3. வஞ்சி, 4. காஞ்சி, 5. உழிஞை, 6. ஐந்திணை, 7. தும்பை 8. கைக்கிளை எனவும் இருபொருளை ச.சோ. பாரதியாரும்[6] பலவாறு கூறுகின்றனர்.

"ஆசிரியர் தொல்காப்பியனார் புறத்திணையின் வகையாகத்தாம் கூறும் தொகையினைத் தாமே விரித்துக் கூறுதலை வழக்கமாக் கொண்டுள்ளார் என்பது 'உழிஞை இரு நால் வகைத்து' எனக்கூறிய அவர் 'கொள்ளார் தேஎம் குறித்த கொற்றமும்' முதலாக ஆறெயில் ஈறாகச் சொல்லப்பட்ட நாலிரு வகைத்தே என அவ்வகைகளை விரித்துக் கூறியுள்ளமையால் நன்கு புலனாகும்.அவ்வாறே 'பாடாண்திணை நாலிரண்டுடைத்தே' எனக்குறித்த தொல்காப்பியர் தாம் சுட்டிய நாலிருவகையினையும் இவையென அடுத்து வரும் நூற் பாக்களில் விரித்துக் கூறியுள்ளார் என கொள்ளுதலே தொல்காப்பிய நூற்போக்குக்கு ஏற்புடையதாகும்." எனப் பேராசிரியர் வெள்ளைவாரணர் [7] கூறுவது இங்கு மனங்கொள்ளத்தக்கதாகும்.

"அமரர் கண் முடியும் அறுவகையானும்
புரைதீர் காமம் புல்லிய வகையினும்
ஒன்றன் பகுதி ஒன்றும் என்ப".[8]

இச்சூத்திரம் பாடாண் பாட்டின் வகை எட்டனுள் ஒன்றாகிய தேவரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பாடப்படும் பாடாண் பாட்டு அறுவகைப்படும் என்கிறது. இதற்கு விளக்கம் தரும் இளம்பூரணர்,

1. கொடிநிலை, 2.கந்தழி, 3.வள்ளி, 4. புலவராற்றுப்படை, 5.புகழ்தல் 6.பரவல் என்பவற்றைக் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு ' அமரர் கண்ணே வந்து முடியுமெனவே அமரர் வேறு என்பதும் அவர் கண்ணே வந்து முடிவன வேறு என்பதும் பெற்றாம். அவை முனிவரும் பார்ப்பாரும் ஆநிரையும் மழையும் முடியுடை வேந்தரும் உலகுமாம் என நச்சினார்க்கினியரும் விளக்கம் கூறுகின்றார்.

'இதுமுற்குறித்த எண்வகைகளுள் ஏழினை விரித்துரைக்கின்றது.எனவும்

'வழக்கியல் மருங்கின் வகைப்பட நிலைஇப்
பரவலும் புகழ்ச்சியும் கருதிய பாங்கினும்
முன்னோர் கூறிய குறிப்பினும் செந்துறை
வண்ணப் பகுதி வரைவின்றாங்கே'[9] என்பது பாடாண்பகுதி எட்டினுட் கூறப்படாதெஞ்சிய ஒரு சார் பொருட்பகுதியாகிய செந்துறை வண்ணப் பகுதியினைப் பகுத்து விளக்குகின்றது' எனவும் வெள்ளை வாரணர் கூறுகின்றார். மேலும் "அமரர்கண் முடியும், அறுவகை, புரைதீர் காமம் புல்லிய வகை ஒன்று ஆகிய எழு

வகைகளையும் ஒன்றன் பகுதி ஒன்று என்ப " என முன்னோர் கூற்றாக பிரித்தும் அவ்வெழுவகையுடன் செந்துறை வண்ணப்பகுதி வரைவின்றாங்கே"என எட்டாவதாக இணைத்தும் கூறியது முற்குறித்த எழு வகைகளும் புறமும் அகமுமாகிய செய்திகளைப் பற்றிப் பாடப்பெறுவன என்றும் முற்கூறிய செந்துறை வண்ணப்பகுதி ஒன்றும் செயற்கை வகையானன்றித் தன்னியல்பிற் பாடப்பெறுவது என்றும் பகுத்துணர்ந்து கோடற்பொருட்டென கொள்ளவேண்டியுள்ளது"[10] என்கின்றார்.

ஆனால் புறத்திணையியலுள் முன்னர் உரைக்கப்பட்ட 1. வெட்சி, 2. வஞ்சி, 3.உழிஞை, 4.தும்பை, 5.வாகை, 6.காஞ்சி என்ற ஆறுவகையுடன் அமரர் கண்முடியும் அறுவகை(தேவர்ப்பாடாண்) புரைதீர்காம்ம புல்லிய வகை ஆகிய இரண்டையும் முன்னர் கூறிய ஆறோடு கூட்டி எட்டு வகையாகக் கொள்ளுதல். பொருத்தமுடைய தாகலாம் என்று கூறி பாடாண் திணை, வெட்சிப்பாடாண், வஞ்சிப்பாடாண், உழிஞைப் பாடாண் தும்பைப்பாடாண். வாகைப்பாடாண். காஞ்சிப்பாடாண். தேவர்ப்பாடாண், மக்கட்பாடாண் என எட்டு வகைப்படும் எனவும் அமரர் கண்முடியும் அறுவகை,

"கொடிநிலைக் கந்தழி வள்ளி என்ற
வடு நீங்கு சிறப்பின் முதலன மூன்றும்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே என்பதாலும்
"காமப்பகுதி கடவுளும் வரையார்
ஏனோர் பாங்கினும் என்மனார் புலவர்" என்பதாலும் அறியப்படும்.என வீ.செயராமன்"[11] கூறுவது ஆராய்ச்சிக்குரியதாகும்.

அமரர்கண் முடியும் அறுவகையினுள் முதல் மூன்றாகிய கொடிநிலை கந்தழி, வள்ளி ஆகிய மூன்றின் பொருளையும் உறுதி செய்வதிலும் உரையாசிரியர் களிடையே கருத்து மாறுபாடுகளைக் காண்கின்றோம். இவை கடவுள் வாழ்த்தோடு வருவனவாகும்.

இளம்பூரணர் இப்பகுதிக்கு உரை எழுதும் பொழுது அவர் காட்டும் உதாரணப் பாடல்கள் வாயிலாகப் பொருளை உய்த்துணருமாறு எழுதியுள்ளார். கொடி நிலையாவது ஒரு மன்னனின் கொடியைத் திருமாலின் கொடியோடு உவமிப்பது என்றும் கந்தழியாவது ஒரு மன்னன் மற்றொரு மன்னனின் கந்தாக அல்லது பற்றுக்கோடாக உள்ள மதிலை அழித்த வீரச் செயலை திருமால் சோவரணை அழித்த வீரச்செயலோடு உவமிப்பது என்றும் உதாரணப்பாடல்களால் உய்த்துணரச் செய்து, எஞ்சிய வள்ளியைக் கூறுங் கால் 'வள்ளியிற் சார்ந்து வருமாறு வந்தவழி கண்டு கொள்க' என்றும் கூறியுள்ளார்.

கொடிநிலை என்பதற்குக் கீழ்த்திசைக் கண்ணே நிலைபெறத் தோன்றும் வெஞ்சுடர் மண்டிலம் என்றும்,கந்தழி என்பது ஒரு பற்றுக்கோடின்றி அருவாகித்

தானே நிற்கும் தத்துவம் கடந்த பொருள் என்றும் வள்ளி என்பது தண்கதிர் மண்டிலம் என்றும் பொருள் கொள்கின்றார் நச்சினார்க்கினியர்.

"மாற்றாரை வென்றுயர்த்த கொடியின் சிறப்புணர்த்தும் கொடிநிலை என்ற துறையும், மாற்றாரது அரணை அழித்த வெற்றித் திறத்தைக் குறிக்கும் கந்தழி என்னும் துறையும் தறுகண்மையினால் போருடற்றிய வீரர்க்கும் பரிசிலர்க்கும் வரையாது வழங்குதலாகிய மாறா வண்மையைக் குறிக்கும் வள்ளி என்னும் துறையும் பாட்டுடைத் தலைவரோடு இயைத்துப் பாடப்பெறும் நிலையில் கடவுள் வாழ்த்தொடு பொருந்திவரும்" என வெள்ளைவாரணரும் கூறுகின்றார். "குழவி மருங்கினும் கிளவதாகும்"[12] என்பதன் மூலம் தொல்காப்பியர் மக்கள் குழந்தையாக வளரும் பருவத்தும் காமப்பகுதியாகிய பாடாண் பாட்டு பாடப்பெறுவதற்குரியதாகும் என்கிறார். பிற்காலத்துப் பிள்ளைத்தமிழ்ப் பிரபந்தங்கள் தோன்றி வளர்வதற்கு வேராக அமைந்தது இச்சூத்திரம்தான் என்பது அறிஞர்கள் முடிவாகும்.

அடுத்துவரும் சூத்திரம் தன்னிகரில்லாத் தலைவன் ஊரின்கண் உலா வந்து தோன்றும்பொழுது அவனைக் கண்டு காதல் கொண்ட மகளிர் தமது காதலைப் புலப்படுத்துரைப்பதாகச் செய்யுள் செய்தலும் நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும் பாடல் சான்ற புலனெறி வழக்கொடு பொருந்திய நிலைமைக்கண் புரைதீர்க்காமப் பகுதியாகவே கொள்ளப்படும் என்பதனைப் புலப்படுத்துகின்றது.

"ஊரொடு தோற்றமும் உரித்தென மொழிப"[13]

"வழக்கொடு சிவணிய வகைமையான"[14]

இவ்வகையாற் பாடப்பட்டனவாக முத்தொள்ளாயிரச் செய்யுட்கள் அமைந் துள்ளமை இங்கு ஒப்புநோக்குவதாகும். பிற்கால உலாப் பிரபந்தங்களுக்கும் இதுவே மூல காரணமாக அமைகின்றது எனலாம்.

பாடாண் பாட்டிலே ஒருவரது மெய்ப்பெயர் கூறப்படும் என்பதனை "மெய்ப்பெயர் மருங்கின் வைத்தனர் வழியே " என்பது புலப்படுத்துகின்றது.

இனி, இவ்வாறான சர்ச்சைக்குரிய பாடாண் திணைக்குரிய துறைகளை நோக்குவோம்.

" கொடுப்போர் ஏத்திக் கொடார்ப் பழித்தலும்

.............................................................................

தொக்க நான்கும் மொழிப"[15]

1. கொடுப்போர் ஏத்திக் கொடார்ப் பழித்தல் - இரவலர் பரிசிலர் முதலியோர்க்கு வேண்டுவன கொடுக்கும் வண்மையாளரைப் புகழ்ந்து அங்ஙனம் வரையாது வழங்கும் உள்ளம் இல்லாதவர்களைப் பழித்தல்.

2. அடுத்தூர்ந்தேத்திய இயன் மொழி வாழ்த்து - தலைவனிடம் சென்று அவன் செய்தியேயன்றி அவன் குலத்தோர்க்கு இயல்பான செய்தியையும் அவன்மேல் ஏற்றிப் புகழ்தல்.
3. கடைநிலை - சான்றோர் வாயில் காக்கின்றவனுக்கு தம் வரவைத் தலைவனிடம் உணர்த்தும்படி கூறுதல்.
4. கண்படை நிலை - அரசரும் மற்றத் தலைவரும் அவையில் நெடும்பொழுது இருந்த இடத்து மருத்துவரும் அமைச்சரும் அவர் கண்படுத்தலைக் கருதிக் கூறுதல்.
5. வேள்வி நிலை - இன்னல் வந்த காலத்தில் உயர்ந்தோர் மொழிப்படி பசுவைப் பிராமணர்களுக்கு தானமாக வழங்குதல் என்பது நச்சியின் கருத்து.
6. விளக்கு நிலை - தம் செங்கோலோடு விளக்கும் ஒன்றுபட்டு எரியும்படி செயதல்.
7. வாயுறை வாழ்த்து - ஒரு தலைவன் விரும்பாதவிடத்தும் அவனுக்கு உறுதி பயத்தலைச் சான்றோர் வேண்டி வாய்மொழிபட அவனை வாழ்த்திக் கூறுதல்
8. செவியறிவுறூஉ - ஆடம்பரமின்றிப் பெரியோர் நடுவில் தங்கி வாழ்வதே கடப்பாடு எனக்கூறுதல்.
9. புறநிலை வாழ்த்து - இன்ன கடவுள் காப்ப நீ வாழ்க எனக் கூறுதல்
10. கைக்கிளை - முன்பு ஒத்த அன்பினராயிருந்து பிற்காலத்தே தலைவன் வேறு மகளிர் வசப்பட்டுத் துறந்தலால் வருந்திய பெண்பாலைப் பற்றி இடைநின்ற சான்றோரும் பிறரும் கூறி அவளை ஏற்றுக்கொள்ளும்படி வேண்டுதல் என்ற பத்துத்துறைகளைக் கூறி மேலும் பத்துத்துறைகளை அடுத்த சூத்திரத்திலே கூறுகின்றார்.

" தாவில் நல்லிசை கருதிய கிடந்தோர்க்குச்

.........................................................................

காலம் மூன்றொடு கண்ணிய வருமே"[16]

1. துயிலெடை நிலை துயின்ற அரசனை அவரது நற்புகழ்கூறிச் சூதர்கள் துயி லெழுப்புதல். இதுவே பிற்காலத்தில் திருப்பள்ளியெழுச்சி எனப்படுகிறது.
2. ஆற்றுப்படை, கூத்தர், பாணர், பொருணர், விறலியர் என்ற நால்வரும் தாம் அரசன் ஒருவனிடம் பெற்ற பெருஞ்செல்வம் பற்றி எதிர்வந்த வறியவருக்கு அறிவுறுத்தி அவரும் அவ்வரசனிடம் சென்று தாம் பெற்றவை பெறுமாறு கூறுதல்.
3. பெருமங்கலம் - அரசன் சினம் அகற்றித் தான் பிறந்த சிறப்புடைய நாளிலே கொண்டாடுதற்குரிய விழா. இது வெள்ளணி எனவும் படும்.
4. நீராட்டு மங்கலம் நன்னாளை ஆண்டு தோறும் கொண்டாடும் நிலையில் நிகழும் புண்ணிய நீராட்டு விழா.

5. குடை மங்கலம் - அரசனது கொற்றக் குடையினது இயல்பு

6. வாண் மங்கலம் - அரசனது வாளை நீராட்டி வழிபடுதலும் பேயும் பிறரும் வாழ்த்துதலும்

7. மன்னெயில் அழித்த மண்ணு மங்கலம் - பகைவர்களது மதிலை அழித்து கழுதை ஏரால் உழுது வெள்ளை வரகும் கொள்ளும் விதைத்து மங்கலம் அல்லாதவற்றைச் செய்து அரசன் மங்கல நீராடுதல்.

8. பரிசில் கடைஇய கடைக்கூட்டு நிலை - பரிசில் விரும்பி வந்தவன் தன் குடும்பத்தின் வறுமை கூறித்தான் விரும்பிய பொருளை வேண்டிக் கேட்டல்.

9. இருவகை விடை - வேண்டிய பரிசிலைப் பெற்றவன் தான் பெற்றதை உயர்த்திக் கூறித் தலைவன் விடை கொடுத்தபின்பு தானும் அவனிடம் விடை கொண்டு செல்லுதல்.

10. ஓம்படை - பலவகைத் தீய சகுனங்களால் பாடாண் தலைவருக்குத் தோன்றிய தீங்கு கண்டு அவரால் உதவி பெற்றவர் அவர்க்கு 'தீங்கின்றாக' என்று கூறுதல் - இவை மக்கட் பகுதியாகிய பாடாண் துறைகளென உணர்க என்கின்றார் மு.இராகவையங்கார்.[17]

எனவே பாடப்படும் தலைமகனது ஒழுகலாறுகளை கூறும் பாடாண்திணை எட்டுப்பகுதிகளையும் இருபது துறைகளையும் கொண்டு அமைந்துள்ளதெனலாம்.

**அடிக்குறிப்புகள்:**

1 ஐயனாரிதனார், புறப்பொருள், வெண்பாமாலை, கொளு 1. ப 197
2 தொல்காப்பியம், பொருளதிகாரம், புறத்திணையில் நச்சினார்க்கினியம் சூ.80 பக் – 282
3 பாரதியார் ச.சோ.தொல்காப்பியர் பொருட்படலம் ப.68
4 தொல்காப்பியம் பொருளதிகாரம், புறத்திணையியல், இளம்பூரணம் சூ.78 உரை,ப.149
5 மே.கு.நூ.நச்சினார்க்கினியம் சூ.80 உரை,ப.282
6 பாரதியார் ச.சோ.தொல்காப்பியர் பொருட்படலம் ப.52
7 வெள்ளைவாரணர் க.,தொல்காப்பியம்,
புறத்திணையியல் வளம் உரை வளம், ப.65
8 தொல்காப்பியம் பொருளதிகாரம்,புறத்திணையியல் நச்சினார்க்கினியம் சூ . 81 பக் – 285
9 மே.கு.நூ,சூ.82 ப.288
10 வெள்ளைவாரணர் க.,மே.கு.நூ,ப.67
11 செயராமன் ந.வீ,இலக்கணஆய்வுக் கோவை ப.72
12 தொல்காப்பியம் பொருளதிகாரம், புறத்திணையியல் நச்சினார்க்கினியம் சூ . 84 பக் – 294
13 மே.கு.நூ,சூ.85ப.295
14 மே.கு.நூ,சூ.86ப.295
15 மே.கு.நூ,சூ.90ப.304
16 மே.கு.நூ,சூ.91ப.316
17 மு.இராகவையங்கார், தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி ப.93

# தொடர்பாடலில் உடல்சார் மொழியின் *(Boby Language)* முக்கியத்துவம்

**கலாநிதி கிருஸ்ணபிள்ளை விசாகரூபன்**
பல்கலைக்கழகம்.
யாழ்ப்பாணம்.

**தொ**டர்பாடல் (Communication) என்பது ஒருவர் மற்றொருவருடன் தனது எண்ணங்கள், கருத்துக்கள், செய்திகள், பொழுதுபோக்கு அம்சங்கள் முதலானவற்றை வழங்குவதான செயற்பாட்டினைக் குறித்து நிற்கிறது. உடனுள்ள பிறமனிதர்களுடன் தொடர்பு கொள்ளும் இத்தேவை உணவு, உறைவிடம் என்ற பொருட்தேவைகளுக்கு அப்பால் முதன்மை இடம் பிடித்துள்ளது.

தகவல் தொடர்பாடல் செயற்பாட்டில் தகவல் பரிமாற்றம், தகவலைப் பதிவு செய்தல், தகவலைப் பரப்புதல் மீட்டுருவாக்கம் செய்தல் முதலான முயற்சிகளில் காலத்துக்குக் காலம் பல்வேறு மாறுதல்களும் நவீன உத்திகளும் இடம் பெற்று வந்துள்ளன. இப்பின்புலத்தில் இன்றைய விஞ்ஞான வளர்ச்சியானது தொடர்பாடல் செயற்பாட்டில் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தி உள்ளது. ஆரம்ப காலங்களில் பயன்படுத்தப்பட்ட தொடர்பாடல் சாதாரணமாக வழக்கொழிந்து வருவதனைப் பார்க்க முடிகிறது. தகவலை எளிதாகப் பரிமாறிக் கொள்தல், தகவலை விரைவாகப் பரிமாறிக்கொள்தல் என்ற அடிப்படைகளில் நவீன கருவிகள் பலவும் இன்று பாவனைக்கு வந்துள்ளன. மின்னஞ்சல் (Electronic Mail), குரல் அஞ்சல் (Voice mail), அறிக்கைப் பலகை முறைமைகள் (Bulletin Board systems), இன்டர்நெற் (Internet), செயற்கைக்கோள் தொடர்பாடல் சாதனங்கள், தொலைநகல்(fax), பேஜிங்(Paging) முதலான பல்வேறு தொடர் பாடல் சாதனங்கள் புழக்கத்தில் உள்ளன. ஆயினும் உடல்சார் மொழியின் முக்கியத்துவம் என்பது நவீன உலகில் இன்று வரை முக்கியத்துவம் பெற்ற ஒன்றாகவே இருந்து வருவதனைப் பார்க்க முடிகிறது. உலகளாவிய நிலையில் நடைபெற்றுவரும் ஆய்வுகளும் இதனையே குறிப்பிடுகின்றன.

உடல்சார் மொழி (Body language) குறித்த விளக்கத்தினைத் தருதல் இவ்விடத்தில் அவசியமானதாகிறது. பேச்சு மற்றும் எழுத்தைத் தவிர நமது செய்கைகள், பாவனைகள், நடவடிக்கைகள் உணர்த்தும் செய்திகளைப் பொதுவாக உடல்சார் மொழி எனக் கருதிக் கொள்ளலாம். பேசாமல் பேசுகின்ற இத்தொடர்பாடல் முறையினை ஆங்கிலத்தில் (Non- Verbal Communication) என்று குறிப்பிடுவர். மனித இனம் தோன்றிய காலத்தில் இருந்தே இம்மொழி வழக்கில் இருந்து வருகிறது. ஆயினும் இம்மொழியின் முக்கியத்துவத்தினைப் பலரும் முழுமையாக உணர்ந்து கொள்ளவில்லை என்றே குறிப்பிடலாம் போலத் தோன்றுகிறது.

லண்டன் பல்கலைக்கழகம் அண்மையில் மேற்கொண்ட ஆய்வின்படி வார்த்தைகள் வழியான தொடர்பாடல் என்பது வெறும் இருபது சதவிகிதம் மட்டுமே என்றும் உடல்சார் மொழியூடான தொடர்பாடல் மூலமாகவே மீதமுள்ள எண்பது சதவிகிதமும் நிறைவேற்றப்படுவதாகவும் தெரிய வந்துள்ளது. மனிதர்கள் சராசரியாக நிமிடத்திற்கு முப்பது முதல் நூறு வரையிலான வார்த்தைகளைப் பேசுவதாகவும் ஆயினும் அதைவிட வேகமாக மனதின் (mind) ஓட்டம் இருப்பதாகவும் சொல்லப்படுகிறது. இவ்வாறான பின்புலத்தில் உடல்சார் மொழியின் பங்கு பெரிதும் முக்கியத்துவம் பெறுகின்றது.

ஒருவருடன் நாம் பேசும்போது எமது பேச்சை மட்டும் ஒருவர் கவனிப்ப தில்லை. மாறாக நாம் பேசும்போது எப்படி அமர்ந்திருக்கிறோம் அல்லது நிற்கிறோம், எப்படி எல்லாம் கைகளை ஆட்டிப்பேசுகிறோம், பேசும் போது கண்களை எங்கெல்லாம் சுழல விடுகிறோம், எப்படிச் சிரிக்கிறோம் இவ்வாறான எல்லாவற்றையும் அவர் கவனித்துக் கிரகித்துக் கொள்வார். நாமும் அவ்வாறு செய்கிறோம். மேற்குறிப்பிட்ட செய்கைகள் எல்லாம் தம்மைப் பற்றிப் பிறருக்குப் பலவற்றைச் சொல்லி விடுகின்றன என்பதே உண்மை.

உடல்சார் மொழி என்பது வெறும் பார்வையும் உடல் அசைவும் மட்டுமல்ல, நாம் அணிந்திருக்கும் உடை, அதன் நிறம், பயன்படுத்தும் பொருட்கள் இவை எல்லாமே இதனுள் அடங்கும். குறிப்பாக சிலவகைக் கம்பனிகளின் பொருட்களைப் பயன்படுத்துவதே சிலருக்குக் கணிப்பைக் கொடுத்து விடுகிறது.

குறிப்பிட்ட ஒருவர் (மரியாதைக்குரியவர்) வரும்போது அவரை எதிர் கொள்ளும் நிலையில் தரையில் முகம் புதைய ஒரு வணக்கம் செய்தலினூடே பெற்றுக் கொள்ளும் மதிப்பு என்பது தனியானது.

நம்மில் பலரும் இடத்துக்குத் தகுந்தவாறு உடை உடுத்திக் கொள்வதை வழக்கமாகக் கொண்டிருப்பதில்லை. எல்லாவித நிகழ்வுகளுக்கும் பெரிதும் ஒரே மாதிரியாகவே செல்கிறோம். இது தவறானதாகும். ஒவ்வொரு தரத்தினைப் பற்றியும் இந்தச்சமூகம் சிலகணிப்புக்களை வரித்துக் கொண்டுள்ளது. அதற்கேற்பவே எமது நடத்தைகளும் இருக்க வேண்டும் என வகைவகையாக அமையும் நிகழ்வுகளுக்கேற்ப ஆடைகளை உடுத்திக் கொள்வதன் மூலம் சிலவற்றை உணர்த்திக் கொள்ளமுடியும். கீழைத்தேசச் சூழலில் ஆசிரியர் ஒருவர் வகுப்பறைக்கு வரும் போது இறுக்கமான டெனிம் காற்சட்டையும், ரீசேட்டும் அணிந்து வந்தால் மாணவரிடத்து அது நேர் எதிர்மாறான அர்த்தத்தையே கொடுக்கும். இறுக்கமில்லாத காற்சட்டை , வேட்டி, சேலை இவற்றுக்கான மதிப்பே தனியானதாகும். உடைகள் தொடர்பில் கவனிப்புக்குரிய பிறிதொருவிடயம் அவற்றின் நிறமாகும். சமூகப் பிரபலங்களும் அரசியல்வாதிகளும் வெள்ளை மற்றும் வெளிர் நிறங்களாலான ஆடைகளை உடுத்துவதன் மூலம் பிறருக்குப் பலவற்றைச் சொல்ல நினைக்கிறார்கள், சொல்கிறார்கள். வெள்ளை ஆடைகளை உடுத்துவதன் மூலம் தம்மைத் தூய்மையானவர்களாகக் காட்டிக் கொள்ளப் பலரும் முனைகிறார்கள். கடும் நிறங்களை விரும்பி அணிபவர்கள் தொடர்பில் சில கணிப்புக்கள் உலவி வருகின்றன.

ஒருவருடைய சிகை அலங்காரம் கூட ஒருவரைப் பற்றி உயர்த்திவிடுகிறது. வயது, தொழில், பால்நிலை இவற்றுக்கு ஏற்ப சிகையினை அலங்கரித்துக் கொள்வதில் காட்டும் நாட்டம் புறந்தள்ளக் கூடிய ஒன்றல்ல.

அலுவலகம் ஒன்றில் ஒருவரைச் சந்திக்கச் செல்லும் போது அவர்முன் நாம் எவ்வாறு இருக்கிறோம், ஆசனத்தை எவ்வாறு கையாளுகின்றோம், சந்திப்பின் நிறைவில் ஆசனத்தை எவ்வாறு மீளவும் முன்பு இருந்ததைப்போல ஒழுங்குபடுத்துகிறோம். இவை எல்லாம் கூட உடல்சார் மொழிகளே எனலாம்.

உறங்கச் செல்லும்போது கட்டிலில் ஏறிப்படுப்பவர்களில் பலரும் துயில் கலைந்து எழும்பும்போது கட்டிலை மீளவும் தட்டிவிரித்து ஒழுங்கமைத்துச் செல்லாது அவ்வாறே விட்டுவிட்டுச் செல்கிறார்கள். ஆடை மாற்றுகையிற் கூட ஆடைகளைப் பாம்பு செட்டை கழற்றுவது போல வட்டமாகவோ அல்லது கும்பலாகவோ அவ்வவ்விடத்திலேயே கழற்றிவிட்டுச் செல்கிறார்கள். இது போன்ற செய்கைகள் எல்லாம் எம்மைப் பற்றிப் பிறருக்குப் பலவற்றையும் சொல்லிவிடக்கூடியவையாகும். இவையும் உடல்சார் மொழிகளேயாகும்.

அரச அலவலகங்களில் பிறருக்கு ஓடி ஓடி உதவி செய்யும் பலரும் அவ்வுதவிகளின் நிறைவில் தமது பிடரி முடியைச் சொறிதலினூடே உதவி பெற்றவருக்கு ஒரு விடயத்தைச் சொல்ல முனைகிறார்கள். தம்மைக் கவனிக்க வேண்டும் என்பதே அவ்வுடல் சார் மொழி உணர்த்தும் செய்தியாகும். இடைநிலை மற்றும் கடைநிலைக் கையூட்டுப் பேரங்களில் இதுவே பிரதான உடல்சார் மொழியாக உள்ளது.

உறவினர் மற்றும் விருந்தினர் முன்பு அடம் பிடிக்கும் குழந்தைகளை அடக்குவதற்குப் பெற்றோர் பலரும் பல்வேறு உடல்சார் மொழிகளைக் கையாளுகின்றார்கள். உதட்டைக்கடித்தல், விழியைப் பிதுக்குதல், நாக்கைக் கடித்தல், ஒற்றை விரலை ஆட்டுதல் இப்படி இவை பல வகைப்படும். இவை உணர்த்தும் அர்த்தம் மகனே இன்றைக்கு உனக்கு இருக்கு, இன்றைக்கு சரி, வெளுவை இருக்கு, சாத்து இருக்கு இப்படியாக இருக்கலாம்.

மேடையில் அமர்ந்திருக்கும் பிரமுகர் ஒருவர் பக்கவாட்டில் பார்வையைச் சுழல விட்டால் அதன் அர்த்தம் அவருடைய பிரத்தியேகச் செயலாளருக்கு அல்லது அவருடைய காவலருக்குக் கட்டாயமாகத் தெரிந்திருக்கும்.

விருந்துக்குச் செல்லும் போது நாம் எவ்வாறு நடந்து கொள்கிறோம், எவ்விதமான உணவுகளை எவ்வாறு கட்டளையிட்டுப் பெற்றுக் கொள்கிறோம், அவற்றைப் பிறரை அனுசரித்து எவ்வாறு உண்கிறோம் முதலானவை இத்தொடர்பில் பிரதானமான உடல்சார் மொழிகளாகும். முக்கியமான நிகழ்வுகளுக்குச் செல்லும் போது வெங்காயம் உள்ளிட்ட வாடைவீசும்

உணவுகளை உள்ளெடுப்பதைத் தவிர்ப்பது கூட ஒருவகையான உடல் சார் மொழியே எனலாம்.

ஒருவர் பேசும்போது அவர் கைகளை எவ்வாறு அசைத்துப் பேசுகிறார், அக்கைகளின் பாவம் எவ்வாறு நேரத்துக்குத் தகுந்தாற் போல அமைகிறது என்பனவெல்லாம் ஒருவருடைய மனத்தினைப் பிரதிபலிக்கும் விடயங்கள் என்கின்றார் லண்டனைச் சேர்ந்த உடல்சார் மொழி நிபுணர் ஜெப்ரி பியாற்றி.

வாயில் விரலை வைத்துச் சூப்பாதே, மூக்கைத் தோண்டாதே, நகத்தைக் கடிக்காதே, தும்மும்போது கைக்குட்டையைப்பாவி முதலானவை யெல்லாம் குழந்தைகள் தொடர்பில் பெற்றோர் பயன்படுத்தும் உடல் சார் மொழிக்குறிப்புக்களாகும். உடல்சார் மொழியின் நுட்பங்களைத் தெரிந்தவர் களாக, அவற்றைக் கையாளத் தெரிந்தவர்களாக குழந்தைகள் இருக்க வேண்டும்.

ஒருவர் பேச அரம்பிக்கும் முன்பே அவரைப் பற்றிய கணிப்பீட்டை மூளையானது மனதுக்கு அஞ்சல் செய்து விடுகிறது. இதன் அடிப்படை அங்க மொழியே எனலாம். 'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்', 'முழிக்கிற முழியைப் பார்த்தாலே தெரியும்', 'வெறும் வாய் தான்', 'வாய்ச்சவடால் தான்' என்பது மாதிரியான பழமொழிகளும் மரபுத்தொடர்களும் இத்தொடர்பில் வழங்கி வருகின்றன.

நேர்முகத் தேர்வுகளில் சற்றே இறுக்கமான ஆண்தோரணை கலந்த சாயலுடன் பேசும் பெண்களைவிட பெண்களுக்கேயுரிய மென்மை இழைந் தோடப் பேசும் பெண்கள் வெற்றி பெறுகின்றார்கள். நேர்முகத்தேர்வில் தேர்வாளர்களை நேருக்கு நேர் எதிர்கொண்டு பேசும் பலரும் வெற்றி பெறுகிறார்கள். கேள்விகளுக்குப் பதிலளிப்பது முக்கியம். அதைவிட முக்கியம் உடல்சார் மொழியாகும்.

மேலைநாடுகளில் உடல்சார் மொழிப்பயிலகங்கள் பலவும் செயற்பட்டு வருகின்றன. இப்பயிலகங்களில் உடல்சார் மொழியின் நுட்பங்கள் பலவற்றையும் கற்றுத்தருகின்றார்கள். இக்கலாசாரம் கீழைத்தேச நாடுகளிலும்

விஸ்தரிக்கப்பட வேண்டும். மனிதர்கள் சாதுரியமாகவும் சூட்சுமமாகவும் செயற்படுவது அதிகரித்துச் செல்கிறது. இச்சூழலில் அச்சூட்சுமங்களை வெளிப்படுத்துவதற்கான அல்லது அம்பலப்படுத்துவதற்கான மனித முயற்சிகளும் இன்னொரு புறத்தில் நடந்து கொண்டு தானிருக்கிறது. அதன் வெளிப்பாடுதான் உடல்சார் மொழி குறித்த தீவிரமான சிந்திப்பு எனலாம். உடலியலும் உளவியலும் கலந்த (Meta Communication) நுட்ப உடல்சார் மொழியைப் பொருத்தமுறக் கையாண்டால் உலகம் நாம் விரும்பியவாறு பேசும்.

நன்றி
**"ஜீவநதி'**

பறவைகளைப் போல வானில் பறக்கக் கற்றுக்கொண்டோம்;
மீன்களைப் போல நீரில் நீந்தக் கற்றுக்கொண்டோம்.
அதுசரி,
பூமியில் நாம் மனிதர்களாக நடக்கப் போவது எப்போது?
ஹ்யூ ஜோன்ஸ்

# சிறந்த கற்பித்தல் – ஒரு பார்வை

கலாநிதி (திருமதி) அனுஷ்யா சத்தியசீலன்
சிரேஷ்ட விரிவுரையாளர், தரம் I
கல்வியியற்றுறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

## முன்னுரை

ஆசிரியருக்கான பங்கு பணி பலவாறாக இருந்தாலும் ஆசிரியர் என்று குறிப்பிடும்போது "கற்பித்தலைச் செய்பவர்" அல்லது "கற்பித்தலுக் குரியவர்" என்று பொருள் கொள்ளப்படுதலே வழமை. அந்த வகையில் சிறந்த கற்பித்தலைச் செய்பவர் எவரோ அவரே சிறந்த ஆசிரியராக ஏற்றுக் கொள்ளப்படுவதும் வழமை. அவ்வாறாயின் "சிறந்த கற்பித்தல்" என்றால் என்ன என்று வினவப்படுதலும் இயல்பானதே. அதனால் சிறந்த கற்பித்தல் என்றால் என்ன? சிறந்த கற்பித்தலுக்கான எடுகோள்கள் எவை? கற்பித்தல் படிமுறைகளும் அவற்றில் இடம்பெறும் செயற்பாடுகளும் எவை? இன்றைய சூழலில் சிறந்த கற்பித்தல் என்பதனால் எதிர்பார்க்கப்படுவது என்ன என்ற வினாக்களுக்கு விடை காண்பதாக இக்கட்டுரை இடம்பெறுகின்றது.

## சிறந்த கற்பித்தல் என்றால் என்ன?

சிறந்த கற்பித்தல் என்றால் என்ன என்பதற்கு Hughes (1960) அளித்த விளக்கமானது பின்வருமாறு அமைந்தது. "ஒரு ஆசிரியர் தான் தொடர்பு கொள்ளும் ஒரு பிள்ளையை அல்லது மாணவர் குழாத்தை பொருத்தமான அறிவுத் தேடலுடன் இணைப்பதோடு புதிய சவால்கள், பிரச்சினைகளுக்குத் தன்னால் இயன்றவரை முகம் கொடுத்துப் போராட ஏற்ற வளர்ச்சியையும், விருத்தியையும் அவர்கள்பால் உருவாக்குதலும் ஆகும். Fenster Machor, Richardson (2005) ஆகியோரது கருத்துப்படி சிறந்த கற்பித்தல் என்பது "பொருத்தமான உள்ளடக்கங்களை சில விதிமுறைகள், ஒழுங்குகளுக்கேற்ப போதிப்பதும், போதனையின்போது மாணவர் வயது, உடல், உள பொருத்தப் பாடு, தனிநபர் பெறுமானங்கள் என்பவற்றைக் கருத்தில் இருத்தி பொருத்தமான கற்பித்தல் முறைகளினூடாக மாணவர்களிடம் பொருத்தமான தேர்ச்சிகளை

விருத்தி செய்தலும் ஆகும்". Berlin, David (2005) ஆகியோரது விளக்கமானது பின்வருமாறு இடம்பெற்றது. கற்பித்தலானது மூன்று அம்சங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

1. **கற்பித்தலின் தர்க்கரீதியான நடைமுறைகள் -** (The Logical acts of Teaching) வரைவிலக்கணப்படுத்தல், போதனைசெய்தல், விளக்க மளித்தல், திருத்துதல்
2. **கற்பித்தலின் உளவியல்சார் நடைமுறைகள் -** (The Psychological acts of Teaching) கவனமெடுத்தல், ஊக்கமளித்தல், தூண்டுதல்
3. **கற்பித்தலின் விழுமியம் சார் நடைமுறைகள் -** (The Ethical acts of Teaching) நேர்மை, விட்டுக்கொடுத்தல், புரிந்துணர்தல்.

பேராசிரியர் பிரான்சன் என்பவர் சிறந்த கற்பித்தலானது ஆறு அம்சங்களின் கீழ் வகைப்படுத்தலாம் எனக் குறிப்பிட்டார். அவையாவன:

1. கல்வி இலக்குகளை ஆயத்தம் செய்தல்.
2. மேற்படி இலக்குகளை அடைவதற்காகப் பாடவிதானத்தைப், பாடப்பொருளை ஒழுங்கு செய்தல்
3. வெவ்வேறு வகைப்பட்ட ஆற்றல்களையும், வெவ்வேறு தயார் நிலையில் உள்ள மாணவர்களையும் ஒருங்கிணைக்கக்கூடிய கற்பித்தல் முறைகளைத் தெரிவு செய்தல்.
4. பயன்தரத்தக்க கற்றல், மீட்டல், பிரயோகித்தல் செயற்பாடுகளுக்கு வாய்ப்பளித்தல்
5. கல்வி இலக்குகளின் ஊடாக மாணவர்களின் வளர்ச்சியைத் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்தல்
6. போதிய பின்னூட்டலை வழங்குதல்

மேற்கூறப்பட்ட விளக்கங்களின் அடிப்படையிலும் தொடர்புடைய இலக்கிய மீளாய்வுகளின் அடிப்படையிலும் சிறந்த கற்பித்தலுக்கான எடுகோள்களாகப் பின்வருவன அடையாளம் காணப்பட்டன.

## சிறந்த கற்பித்தலுக்கான எடுகோள்கள்

1. சிறந்த கற்பித்தலானது ஒரு ஆசிரியர் சார்ந்திருக்கும் கலாசாரப் பின்னணியோடு தொடர்புடையது. மேலும் கல்வித் தத்துவங்களோடு பிணைந்தது.

2. வகுப்பறையைப் பொறுத்து ஆசிரியருடைய பொருத்தமான கட்டுப் பாட்டிற்கு உட்பட்டிருக்கும் அதேவேளை கருணையுடன் கூடிய அக்கட்டுப் பாடானது மாணவர்களால் ஏற்றுக்கொள்ளத்தக்கதாகவும் இருக்கும்.
3. ஆசிரியர் - மாணவர் தொடர்பாடல், மாணவர் – மாணவர் தொடர்பாடல் மிக வரவேற்கத்தக்கதாக இருப்பதுடன் கிண்டல், பயம் என்பவற்றுடன் கூடிய எதிர்மறைச் செயற்பாடுகளுக்கு அப்பாற்பட்டதாகவும் அமையும்.
4. மாணவர் ஒவ்வொருவருடைய தனித்துவங்களும், ஏற்றுக்கொள்ளப்படும் அதேவேளை மாணவர் குழுக்களாக (வேண்டத்தகாத விடயங்களைப் பொறுத்து) செயற்படுவதனையும், எதிர்ப்பதனையும் அனுமதியாது.
5. ஆசிரியர் தனது பாடத்துறை, பாடப்பொருள் பொறுத்து கூடிய அறிவு டையவராவதுடன் தனது பாடத்தை மிகவும் நேசிப்பவராகவும் இருத்தல். சிறந்த கற்பித்தலுக்கான எடுகோள்கள் மேற்கூறப்பட்டவையாகும்.

கற்பித்தற் படிமுறைகள் எவை? அவற்றில் இடம்பெறவேண்டிய செயற்பாடுகள் எவை என்பது பற்றியும் அடுத்து நோக்குவோம்.

## கற்பித்தல் படிமுறைகளும் அவற்றிலான செயற்பாடுகளும்

கற்பித்தல் - கற்றலுடன் தொடர்புபட்ட செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு அதனை மூன்று படிமுறைகளாகப் பிரிக்கலாம். இம் மூன்று படிமுறைகளிலான செயற்பாடுகளிலும் வினைத்திறனுடன் ஈடுபடுபவர் எவரோ அவரே சிறந்த கற்பித்தலை மேற்கொள்பவராக இனம் காணப்படத்தக்கவர். அந்த வகையில் அம்மூன்று படிமுறைகளும் வருமாறு:

1. போதனைக்கு முந்திய பருவம் (Pre – Active stage)
2. போதனை நடைபெறும் பருவம் (Inter– Active stage)
3. போதனைக்குப் பிந்திய வருவம் (Post– Active stage)

### 1. போதனைக்கு முந்திய பருவம் (Pre – Active Stage)

கற்பித்தல் - கற்றல் செயன்முறையின் முக்கிய பருவமாக இப்பருவம் கொள்ளத்தக்கது. ஏனெனில் போதனை நடைபெறும் பருவத்தில் இடம்பெறவேண்டிய பொருத்தமான, அவசியமான, வினைத்திறன் மிக்க செயற்பாடுகள் யாவும் இப்பருவத்திலேயே திட்டமிடப்படுகின்றன. இப்பருவத்தில் இடம்பெறும் பொருத்தமான திட்டமிடலே சிறந்த கற்பித்தல் இடம்பெறுவதற்கு வழியமைத்துக் கொடுக்கின்றது. இங்கு பாடநூலை வாசித்தல், பாடஆயத்தம்

செய்தல், பாட நோக்கங்களைத் தீர்மானித்தல், கற்பித்தல் முறைமைகள், நுட்பங்களைத் திட்டமிடல் போன்ற செயற்பாடுகள் இடம்பெறும்.

### 2. போதனை நடைபெறும் பருவம் (Inter– Active Stage)

இப்பருவம் வகுப்பறைக் கற்பித்தல் - கற்றல் நடைபெறும் பருவமாகும். ஏற்கனவே திட்டமிடப்பட்டனவற்றை வினைத்திறனுடன் ஆசிரியர் செயற்படுத்தும் பருவம் இதுவே. இப்பருவத்திலேயே மாணவர் – மாணவர், ஆசிரியர் - மாணவர் பொருத்தமான தொடர்பாடலின் அவசியமும் உணரப்படுகிறது. இப்பருவத்தில் பின்வரும் செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. வகுப்பறைக் கவின்கலை பேணுதல், பாட வளர்ச்சி இடம்பெறுதல், பிள்ளையை அடையாளம் காணுதல், கற்றல் இடம்பெறச்செய்தல், ஊக்கல் வழங்கல், ஒருங்கிணைத்தல், பின்னூட்டல் செய்தல்.

### 3. போதனைக்குப் பிந்திய வருவம் (Post– Active Stage)

கற்பித்தல் - கற்றலின் வினைத்திறனை மதிப்பீடு செய்யும் பருவம் இதுவாகும். இப்பருவத்தில் ஆசிரியர் தனது கற்பித்தற் செயற்பாட்டின் பொருத்தப்பாடு, பொருத்தப்பாடின்மைகளைக் கருத்திற்கொள்ளல், தேவையான மாற்றங்களைச் செய்தல், வேண்டியவிடத்து புதிய முறைமைகள், நுட்பங்களைக் கையாளத் தீர்மானித்தல் போன்ற செயற்பாடுகள் இங்கு இடம்பெறமுடியும்.

## இன்றைய சூழலும் சிறந்த கற்பித்தலும்

இன்றைய சூழலில் யுனெஸ்கோ நிறுவனம் கற்றலுக்கான நோக்கங்களைப் பின்வருமாறு சுட்டியுள்ளது

1. அறிவதற்காகக் கற்றல் (Learning to Know)
2. செயலாற்றக் கற்றல் (Learning to Do)
3. கூட்டாக வாழக் கற்றல் (Learning to Live together)
4. போலக் கற்றல் (LEARNING TO BE)

இத்தகைய நோக்கங்களின்பாற்பட்ட கற்றல் இடம்பெறவேண்டுமாகில் கற்பித்தலானது பின்வரும் அணுகுமுறைகளில் இடம்பெறவேண்டியது அவசியம்.

1. மாணவர் மையப்படுத்தப்பட்டது.
2. தேர்ச்சி மையப்படுத்தப்பட்டது.
3. செயற்பாட்டு அனுபவங்களை வழங்குவது.

கற்பித்தலானது வெறுமனே அறிகைசார் தேர்ச்சிகளை மட்டும் மாணவர் களுக்கு வழங்காது அறிவு, திறன், மனப்பாங்குசார் தேர்ச்சிகளை அனுபவங் களுடாக வழங்குவதாக இடம்பெறவேண்டியது அவசியம்.

இங்கு அறிவு, திறன், மனப்பாங்குசார் தேர்ச்சிகள் எவை என்பது பற்றியும் சுருக்கமாகக் குறிப்பிடுவது பொருத்தமானதாகும்.

I. **அறிகைசார் தேர்ச்சி** -

1. அறிவு (Knowledge)
2. புரிந்து கொள்ளுதல் (Comprehension)
3. பிரயோகித்தல் (Application)
4. பகுப்பாய்வு செய்தல் (Analysis)
5. கூட்டிணைவு (Synthesis)
6. மதிப்பீடு செய்தல் (Evaluation)

II. **திறன்சார் தேர்ச்சி** -

1. பரிசோதித்தலும் நடைமுறைச் செயற்பாட்டுத்திறன்களும் (Experimentation and Practical Skills)
2. உடலியக்கத் திறன்களும் வாய்மொழி மூலமல்லாத தொடர்பாடலும் (Body movements and Non verbal communication)

III. **மனப்பாங்குசார் தேர்ச்சி** -

1. ஆர்வம் (Interest)
2. பாராட்டுதல், மதிப்பளித்தல் (Appreciation)
3. நல்விழுமியங்கள் (Values)

ஆயின் இன்றைய கற்றல் - கற்பித்தற் செயற்பாடு பற்றி சிறிது நோக்குவோம். வகுப்பறைகளில் மேற்குறிப்பிட்ட செயற்பாடாக 5E மாதிரியில் இடம்பெறுவதாகக் கூறப்படுகின்றது. இங்கு 5E மாதிரியானது கிழ்வரும் 5 படிமுறைகளைக் கொண்டிருப்பதைக் குறிப்பிடப்படுகின்றது.

இப்படிமுறையினூடாக கற்றல் - கற்பித்தல் இடம்பெறும் போது மாணவர்களிடையே தேடிக்கற்கும் ஆற்றல், பெற்ற அறிவைப் பலதரப்பட்ட சந்தர்ப்பங்களில் பிரயோகிக்கும் திறன், ஆக்கத்திறன், கிரகிக்கும் தன்மை,

மொழித்தேர்ச்சி, ஆராயும் திறன், பிரச்சினை விடுவிக்கும் திறன் போன்றவை அதிகரிக்க வேண்டும். ஆயின் உண்மையில் இங்கு நடப்பதென்ன? ஆசிரியர் வழங்கும் வெளியீட்டு வடிவங்களை மனனம் செய்து மீள ஒப்புவிப்போராக மாறிக்கொண்டிருத்தல், ஆக்கத்திறன், ஆராயும் திறன், கற்றலுக்காகக் கற்கும் திறன் யாவும் வறிதாகப் போய்க்கொண்டிருத்தல், நல்ல மனப்பாங்குகள் பெற்றுக்கொள்ளப்படுதல் போன்றவற்றில் மேலும் பின்னடைவுகள் காணப்படுத்ல் என்ற நிலைமைகளையே நாளாந்த வகுப்பறைச் செயற்பாடுகளில் கண்டுகொண் டிருக்கிறோம். ஆசிரியரைப் பொறுத்து "மாணவர் செயற்பாடுகள்" எனக் கூறிவிட்டு கைளைக் கட்டியவாறு அங்கும் இங்கும் நடந்து திரிதல், போதிய பொருத்தமான, வேண்டப்படுகின்ற வழிகாட்டல்களைச் செய்யாதிருத்தல் என்பனவும் வகுப்பறைகளில் சாதாரண நிகழ்வுகளாகிவிட்டன. இவற்றுக் கெல்லாம் காரணம் யாது? என நோக்குவோம். பொருத்தமான வினைத்திறன் மிக்க செயற்பாடாகக் கருதப்படும். 5E எம் ஆசிரியர்களிடையே பொருத்தமற்ற தாக, வலுவற்றதாக, வினைத்திறன் அற்றதாகவே காணப்படுகின்றது. (மிகச் சொற்பமானவர்களே வினைத்திறனுடன் இயங்குகின்றார்கள்) என்பதனை வகுப்புக்குள் நுழையும் முன் புரிந்துகொள்ள முடியும். ஆகவே சிறந்த கற்பித்தல் நடைபெறவில்லை என்பதே உண்மை.

ஆயின் இன்றைய கற்பித்தல் செயற்பாடுகள் தொடர்பாகச் சுட்டப்படும் குறைபாடுகளை நோக்குவோம்.

1. இன்றைய 5E கற்றல் - கற்பித்தல் மாதிரியின் அணுகுமுறையை ஆசிரியர் முழுமையாக உணர்ந்து செயற்படாமை.
2. மாணவர்களிடம் எதிர்பார்க்கப்படுகின்ற அறிவு, திறன், மனப்பாங்கு சார் தேர்ச்சிகளை உருவாக்க ஏற்றவாறான கற்பித்தல் இடம்பெறாமை.
3. விசேடமாக இன்று அழுத்தங்கொடுக்கப்படுகின்ற ஆக்கத்திறன் விருத்தி, சுயகற்றல் என்பவற்றுக்கான சந்தர்ப்பங்கள் பொருத்தமானவையாகவும் போதிய அளவிலும் வழங்கப்படாமை.
4. கற்றல் - கற்பித்தலுக்கான பௌதிக வளவசதிகள் போதாமை, இருப்பவையும் வினைத்திறனுடன் பயன்படுத்தப்படாமை.
5. சுருக்கமாகக் கூறுவதாயின் இன்றைய கற்றல் - கற்பித்தல் தொடர்பாக தமக்குரிய பங்கினை, அதன் கனதியினை ஆசிரியர் முழுமையாக உணராமை, அதனால் பொருத்தமாக மாணவர்கள் கற்றற் செயற்பாடு களுள் நுழைய முடியாமை.

## முடிவுரை

காலத்திற்குக் காலம் "சிறந்த கற்பித்தல்" என்பதற்கான விளக்கங்கள் பலவாறாக முன்வைக்கப்பட்டாலும் அதன் பயனாளியாக இருப்பவர் மாணவர்களே. கல்வியூடாகக் காலத்திற்குப் பொருத்தமானதாக, எதிர்பார்க்கப்படும் விரும்பத்தகு மாற்றங்கள், தேர்ச்சிகள் மாணவர் சார்பாகப் பெற்றுத்தரப்படல் அவசியம். அவற்றை உரிய முறையில் பெற்றுத்தர உதவும் வகுப்பறை சார்ந்த ஆசிரியர் செயற்பாடுகள் யாவும் "சிறந்த கற்பித்தல்" என்ற எண்ணக்கருவுக்குள் அடக்கப்படத்தக்கனவேயாகும். அதனால் இன்றைய சூழலில் மாணவர் சார்பாக எதிர்பார்க்கப்படும் விரும்பத்தகு மாற்றங்கள், தேர்ச்சிகளை புரிந்துகொண்டு அதற்கேற்ப ஆசிரியர் செயற்பட்டால் அங்கு "சிறந்த கற்பித்தல்" இடம்பெறுகின்றது எனக்கொள்ளமுடியும்.

**துணை நூல்கள்**


1. Aggarwal J.C (1995), Teacher and Education in a Developing Society, Vikas Publishing House Pvt.Ltd, New Delhi.
2. Huges A.G and Huges W.H (2004) Learning and Teaching, Sonali Publication New Delhi.
3. Arends I.Ricard (1989), learning to teach, mcgraw - Hill Book company. Newyork.
4. Lowman . J (1987),mastering the techiniques of teaching, prentice Hall of India Ltd, New Delhi.
5. சந்திரசேகரன்.சோ (2008) சமகால கல்வி முறைகளின் சில பரிமாணங்கள் சேமமடு பதிப்பகம் கொழும்பு.

# கற்கக் கசடற.....

கலாநிதி (திருமதி) ஜே. இராசநாயகம்
சிரேஷ்ட விரிவுரையாளர்,
கல்வியியற்றுறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



ஒரு மனிதன் பிறப்பிலிருந்து இறப்பு வரை பெற்றுக் கொள்கின்ற அறிவு சார்ந்த அனைத்து விடயங்களும் அவனுக்கு கல்விப் பொருளாகின்றன. கல்வி என்பது தனித்துப் பாடநூல்களிலிருந்தோ,அல்லது ஏனைய நூல்களிலிருந்தோ, அல்லது போதனைகளின் மூலமாகவோ பெற்றுக்கொள்வதல்ல. நம்முடைய வாழ்க்கைக் காலத்தில் நாம் பெறுகின்ற பல்வேறு வகையான அனுபவங்களும் நமக்குச் சிறந்த கல்விப் பொருளாகின்றன. நாம் எவ்வளவு நூல்ளைக் கற்றோம் என்பது முக்கியமானதல்ல. எத்தனை அறிவு தரும் விடயங்களைக் கேட்டும் பார்த்தும் இருக்கின்றோம் என்பதோடு பெரியவர்களின் வாழ்க்கைச் சுவட்டிலிருந்து எத்தனை விடயங்களை ஆய்ந்து எடுத்துள்ளோம் என்பதும் தான் மிகப் பெரிய விடயமாகும். சில வேளைகளில் நாம் பார்ப்பது கேட்பது எல்லாம் மறந்து போகும்போது நம் அனுபவத்தால் உண்மை என்று உணருகின்ற விடயங்கள் மனிதனின் மூளையிலே நிலையாய் நின்று விடுகின்றது. இதனால்த்தான் சிறந்த அனுபவங்களை பெற வேண்டும் என்றும் அனுபவமே கல்வி கல்வியே அனுபவம் என்று கருதும் ஜோன்டுயி தம் அனுபவத்தின் ஊடாகவே இக்கருத்தை புலப்படுத்தி யுள்ளார்.

எம்மைச் சூழவுள்ள மனிதர்களுள் இன்று கற்காதவர்கள் தொகைதான் அதிகம். நிறுவனமயப்படுத்தப்பட்ட கல்விச்சானறிதழ்களைப் பெற்றுக் கொள்ளாதவர்களை இன்று நாம் கற்றவர்கள் இல்லை என்று கூறுகின்றோம். ஆனால் அவர்கள் ஏட்டுக்கல்வியைத்தான் கற்கவில்லை பல விழுமியங்களை, பண்பாடுகளை பல்வேறுபட்ட அனுபவங்களைக் கற்றுள்ளார்கள். பல விடயங்களைத் துறைபோகக் கற்றவர்கள் பலர் இன்று கற்காத மக்கள் என்று எம்மால் கருதப்படுகின்ற மக்களோடு ஒப்பிடும் அளவிற்குக்கூட அருகதையின்றி பல தீய சிந்தனைகளும் தீய செயற்பாடுகளும் உள்ள மாக்களாக வாழ்ந்து

கொண்டுள்ளார்கள். நன்கு கற்ற ஆனால் சிறிதளவேனும் பண்பாடு இல்லாத ஒருவரிடம் நாம் கற்பதை விடுத்து சிறிது கற்ற ஆனால் பண்பாடு நிறைந்த ஒருவரிடம் கற்பதே சிறந்ததாகும்.

நாம் ஆரம்பத்திலிருந்து இன்று வரை எத்தனை நீதிநூல்களையும், அறமொழிகளையும், பழமொழிகளையும் அறிவு நூல்களையும் படித்துள்ளோம். அவைகளில் ஆயிரமாயிரம் பொருள்கள் பொதிந்துள்ளன. ஆனால் நாம் அவைகளில் படித்த விடையங்களைப் பின்பற்றி நடக்கின்றோமா என்பது கேள்விக்குறியாகவேயுள்ளது. கற்கும்போது எவ்வித சந்தேகமும் இன்றிக் கற்பது எவ்வளவு முக்கியமோ அதேபோன்றதே நாம் கற்றதன்படி வாழ்வதுமாகும். தேவையில்லாத விடயங்களையெல்லாம் மனப்பாடம் பண்ணி அதனை ஆசிரியர் களுக்கோ அல்லது பரீட்சையிலோ ஒப்புவிப்பது கல்வியல்ல. நாம் ஒரு விடயத்தைக் கற்கும்போது அதனைத் தெளிந்து கற்க வேண்டும் அதில் எதுவித மயக்கமும் இருத்தல்கூடாது சந்தேகங்கள் இருப்பின் அதனை உடனுக் குடன் தீர்க்க வேண்டும்.

மனிதர்கள் ஒவ்வொருவருக்கும் அறிவுண்டு. சிந்தனையாற்றல் பெற்றவர்கள் அவர்களிடம் புதைந்து கிடக்கும் ஆற்றல்களை முழுமையாக மலரச்செய்வதோடு அவர்களை சமூக நெறிப்படுத்தியும், சமூகப் பொருத்தப்பாடு உடையவர்களாக்கு வதும் கல்வியேயாகும். கல்வியின் மூலம் மனிதனின் வாழ்வு முழுமை பெறுகிறது. மனித இனம் தோன்றிய நாளிலிருந்து கல்விச் செயற்பாடுகள் ஏதோ ஒரு வகையில் நடைபெற்றுக்கொண்டேதான் உள்ளன. ஆரம்ப காலங்களில் குடும்பமே பாடசாலையாகச் செயற்பட்டது. பெற்றோர்கள் சிறந்த ஆசிரியர் களாகச் செயற்பட்டார்கள். பிள்ளைகளும் கற்றவைகளைச் செம்மையாகக் கற்றதோடு கற்றதன்படி ஒழுகலாயினர் காலப்போக்கில் கல்விப் பணியை பாடசாலைகள் பொறுப்பேற்றன.

பாடசாலைகள் பலவகையான நோக்கங்களைக் கொண்டு செயற்படு கின்றன. கல்விச் செயற்பாடுகளை முதன்மையாகக் கொள்ளும் அதேவேளையில் சமுதாயப்பணிகளையும் முன்னெடுத்துச் செல்வதில் ஆர்வம் காட்டுகின்றன. சமுதாயத்தின் பண்பாட்டு மரபினை இளம் சந்ததியினருக்கு உணர்த்துகின்றது. இத்தகைய பண்பாட்டு அம்சங்கள் பலவற்றை இன்றைய கலைத்திட்டம்

உள்ளடக்கியிருக்கின்ற போதிலும் அவற்றைக் கடைப்பிடிக்கும் மாணவர்கள் சமூகத்தில் உருவாகி வருகின்றார்களா? என்பதும் பலத்த சந்தேகத்திற்கிடமாகின்றது. இவ்விடயங்களை மாணவர்கள் கற்கின்றபோது அவதானத்துடன் கருத்தூன்றி கற்கும்போதுதான் அதன் மூலம் பயன் கிடைக்கின்றது. இத்தகைய உயர்பண்புகளை உண்மையில் கற்பதைவிட அதனை எவ்வளவு தூரம் வாழ்க்கையில் கடைப்பிடிக்கின்றோமோ அவ்வளவு தூரம் வாழ்க்கையைச் செம்மைப்படுத்த உதவுகின்றது.

கல்வியானது புதிய கருத்துக்கள், புதிய செயல்முறைகள் ஆகியவற்றின் வளர்ச்சிக்குத் தூண்டுதல் அளிக்கின்றது. தொழில் புரிந்து வாழ்க்கை நடத்த மக்களுக்குப் பயிற்சி அளிக்கின்றது. சமுதாயத்தில் ஏனையோருடன் பொருந்தி வாழ்வதற்கான பயிற்சியை அளிக்கின்றது. ஓய்வு நேரத்தினை பயனுள்ள முறையில் களிக்க உதவுகின்றது. அறிவுப் பெருக்கத்துக்கும் செய்திறன்களது வளர்ச்சிக்கும் உதவுவதோடு ஆன்மீக உணர்வை முழுமைபெறச் செய்கின்றது. இத்தகைய பல அரிய செயற்பாடுகளை வளர்க்கும் கல்வியை பெறுகின்ற நாம் அவற்றை சிறந்த முறையில் கற்று வாழ்க்கையிலே பயன்படுத்தும் திறமை இருக்க வேண்டும் நாம் கற்றுக் கொள்ளும் விடயங்கள் ஒரு போதும் வெறும் தகவற் குவியல்களாக அமையக்கூடாது. அவற்றை இடமறிந்து பயன்படுத்தும் திறமையுடையவர்களாக மாணவர்கள் செயற்பட வேண்டும்.

கல்வி என்பது உண்மையில் "பாடசாலை உள்ளடங்கிய எல்லா ஆதாரங்களினின்றும் நாம் பெறும் அறிவு மற்றும் தகவல் என்று கருத்துக் கொள்ளப்படுகின்றது. ஆனால் இத்தகவல்களை அறிந்து வைப்பது மட்டுமல்லாமல் அதன் முழுப்பயனையும் சமூகம் உணரவேண்டும். அதற்கேற்ற வகையில் பாடத்திட்டம் அமையும் போது கற்ற விடயங்கள் அனைத்தையும் தம் வாழ்க்கையின் பல்வேறு கோணங்களில் நின்றும் அதனைப் பொருத்திப் பார்க்க முடிகின்றது. சமுதாயத்திலுள்ள பல குறைபாடுகள் கல்வியின் மூலம் களையப்படும். விரும்பத்தகுந்த பல செயற்பாடுகளை வளர்ப்பதற்குப் பொருத்தமான கல்வியைக் கற்றால் வாழ்க்கையில் உயர்வு கிடைக்கும். சமுதாயத்தின் மாற்றத்திற்குக் கல்வி சக்தி படைத்ததொரு சாதனமாக விளங்குகின்றது. நாளைய சமுதாயம் எதிர்பார்க்கும் அறிவையும் திறன்களையும் இன்றைய மாணவர்களிடம் வளர்க்கும் வகையில் கல்விப் பொருள் அமைய வேண்டும்.

கல்வி வழி அடிப்படைத் தேவைகளை பாடசாலை, ஆசிரியர்கள் ஊடாக நிறைவேற்ற வேண்டும் என்பது சமூகத்தின் எதிர்பார்ப்பாகும்.

* பாடசாலை சமுதாயத்தின் அடிப்படைக்கலாசாரப் பண்புகளை பிரதிபலித்தல்
* சமுதாயத்தின் தேவையை ஒட்டியே பாடசாலை வளர்ச்சித்திட்டங்கள் அமைதல்.
* சமுதாயப் பணிகளில் நேர்த்தியாகப் பங்கேற்க மாணவர்கள் பணிபுரியும் வகையில் அவர்களின் கல்வி அமைதல்.
* உலகமே தன் சமூகம் என்ற எண்ணத்தை ஏற்படுத்தும் வகையில் சர்வதேச மனப்பான்மையை ஊட்டுதல்.
* சமுதாயத்தினால் உருவாக்கப்படும் குறிக்கோள்களை உருவாக்கிக் கொள்ளும் வகையில் தன்னுடைய கடமைகளில் தேவையானபோது வளைந்து கொடுக்கும் தன்மை பெற்றிருத்தல்.
* இத்தகைய செயற்படு தன்மைகளையெல்லாம் கல்வியின் மூலம் பெற்றுக் கொள்ள வேண்டும்.

கல்வியின் பல்வேறு நோக்கங்களுள் ஒன்று நன்னடத்தையை உருவாக்குதலாகும். ஆகையால் நாம் பெற்ற கல்வியால் நாம் நன்னடத்தை இல்லாதவர்களாயின் அக்கல்வியால் யாதொரு பயனுமில்லை."கடைநிலை உட்கிடக்கைகளை உயரிய நுண்ணறிவால் வெற்றிகொள்வதே கல்வியென்று ஹர்பாட் கூறியுள்ளார். உண்மையிலே நம்மிடமுள்ள தீய, பண்பாடற்ற சிந்தனைகளை நாம் பெற்ற கல்வியின் மூலம் களைந்தெறிய வேண்டும். வாழ்க்கையில் எல்லோரும் நீதிமான்களாக எந்நேரமும் இருப்பதில்லை. இதனால் சில இடங்களில் தவறுகள் ஏற்பட்டுவிடுகின்றன. ஆயினும் அடுத்த நிமிடங்களில் நமது தவறுகள் நம்மை நெருடிச் செல்ல வேண்டும். இன்று பாடசாலை மாணவர்கள் பல்வேறு விதமான தீய செயற்பாடுகளில் ஈடுபடுவதுடன் அவற்றிற்குத் துணைபோகின்றவர்களாகவும் இருக்கின்றார்கள். பெற்றோர்கள், ஆசிரியர்கள், பெரியோர்கள் போன்றவர்களை மதித்து அவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு ஒழுகும் தன்மை குறைவடைந்து வருகின்றது. இதனால் கல்வி என்னும் சாசனத்தில் தவறான போக்குகளை கட்டுப்படுத்துவதற்கான மனவுறுதியினைப் பெற்று சமுதாயத்தில் ஆரோக்கியமான வாழ்க்கை வாழ்வதற்கு ஒவ்வொருவரும் முன்வர வேண்டும். பாடசாலைக் காலத்தில் மாணவர்கள் தம்முடைய குடும்பங்

களில் தங்கியிருக்க வேண்டியவர்களாக உள்ளனர். ஆயினும் தூரநோக்கோடு எதிர்காலத்தையும் நோக்க வேண்டியவர்களாயுள்ளனர். இதனால் குறிக்கப்பட்ட இலட்சியங்களை உடையவர்களாகி அந்த இலட்சியங்களை நோக்கி நடைபோடு பவர்களாக இருக்கவேண்டும். காலப்போக்கில் பொருளாதார ரீதியில் ஏனையோரில் தங்கியிருக்காமல் தன்னைத்தான் காப்பாற்றும் திறனை மாணவப் பருவத்தி லிருந்தே வளர்த்துச் செல்ல வேண்டும். தன்னைச் சுற்றியுள்ள சமூகத்தைப் புரிந்துகொள்ளும் அளவிற்கு அறிவும், திறனும் பெற்றிருக்க வேண்டும். மனிதாபி மானமுடையவனாக வாழ வழிகாட்டும் கல்வியின் நோக்கங்கள் மனிதனிடத்தில் நடத்தை மாற்றங்களை ஏற்படுத்தி விடுகின்றது. பிறவுண்(Brown) என்பவருடைய கருத்துப்படி "கல்வி என்பது நாம் அறிந்து வேண்டுமென்றே கட்டுப்பாட்டுடன் செயற்படுத்தும் ஒரு நடவடிக்கை அதன் மூலம் தனிமனித நடத்தையிலே மாற்றங்களும், தனி நபர்கள் வாயிலாகச் சமூகத்தில் மாற்ங்களும் தோற்றுவிக்கப் படுகின்றன என்கின்றார். இந்த அடிப்படையில் நாம் சிந்திக்கும்போது நாம் பெற்ற கல்வியின் மூலம் எம்மை வளப்படுத்திக் கொள்வதோடு எமக்கூடாக நாம் சமுதாயத்தை வளர்க்க முன்வரவேண்டும். சமுதாய வளர்ச்சி என்பது அரசியல், பொருளாதாரம், விவசாயம், வணிகம், சமயக் கோட்பாடுகள் ஆகிய பல துறைகளிலே மாற்றங்களை உண்டுபண்ணுகின்றது. ஏனெனில் சமூகம் என்பதன் உட்கூறுகள் தான் இவைகளாகும்.

பாடசாலைக் காலம் என்பது மாணவர்களுக்கு மிக முக்கியமான காலப் பகுதியாகும். இக்காலப்பகுதியில் எம்மால் பெற்றுக்கொள்ள முடியாத விடயங்கள் எம்முடைய வாழ்க்கையில் வேறு எக்காலப்பகுதியிலும் பெறமுடியாதது. பாடசாலையில் மாணவர்களுக்கு வழங்கப்படும் தண்டனைகள் உண்மையில் வகுப்பறை ஒழுங்கிற்கும் முகாமைக்கும் ஒரு உடனடித் தீர்வாக அமையுமே தவிர தண்டனைகள் மாணவனது ஒழுக்கத்தை நிரந்தரமாகவே சரியான முறையில் ஒழுங்கமைக்கும் என கருதமுடியாது. ஒவ்வொருவரும் தம்முடைய தவறையுணர்ந்து சரியாக நடந்தால் இத்தகைய தண்டனைகள் எவையும் தேவையில்லாமல் போய்விடும். இதனால் தவறான விடயங்களை முடியுமானவரை தவிர்த்து உண்மைகளை உணர்ந்து நடக்கும் வகையில் எம்மை வழிநடத்துகின்ற கல்வியே உண்மைக் கல்வியாகும். கல்வி மனிதர்களின் ஆன்மீக நடத்தையைத் தூண்ட வேண்டும். இத்தகைய உயர் செயற்பாடுகள் எல்லாம் ஒரு தலைமுறையிடமிருந்து இன்னொரு தலைமுறையினருக்கு வழங்கப்பட்டு

வருகின்றது. இதனால் இத்தகைய பண்பாட்டு அம்சங்கள் மனிதர்கள் மத்தியில் நடத்தையில் மாற்றத்தையும் மெருகையும் ஊட்டுகின்றது எனலாம். இதனால் கற்றலின் விளைவாகத் தோன்றிய கலாசாரம் தான் நாம் ஏனையவர்களிடமிருந்து கற்றுக் கொண்ட விடயமாகும்.

ஆகவே கல்வி என்பது எம்முடைய உட்கிடக்கையின் தீய கூறுகளை யெல்லாம் களைந்து விடுகின்றது. அத்தகைய கல்வியானது தனித்து நூல்களி னூடாக மட்டும் பெற்றுக்கொள்வதல்ல. அனுபவமே சிறந்த கல்விப் பொருளா கின்றது என்ற வகையில் பல்வேறு பெரியவர்களின் வாழ்க்கைச் சுவட்டிலுள்ள விடயங்களைப் பெற்றுக் கொள்வதோடு அதன்படி நடந்து சிறந்த நாட்டைக் கட்டியெழுப்பும் நல்ல பிரஜைகளாகுவோம்.

ஒரு நிமிடத்தை வீணாக்கினால்
ஒரு மணி நேரத்தை வீணாக்கு
வதாகும். ஒரு மணி நேரம்
வீணானால் ஒரு நாள் வீண்.
ஒரு நாள் வீணானால்
வாழ்க்கையே பாழாகிவிடும்

**- ஷோல் ஜெனிட்சின்**



பழையமாணவர் சங்கம்



பாடசாலைஅபிவிருத்திச் சங்கம்

# சைவசமய மரபில் அற்புதங்கள்



பொ. சந்திரசேகரம்
விரிவுரையாளர்,
இந்து நாகரிகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

சிவ சம்பந்தமான சமயம் சைவம், அது மிகப் பழைமையான பண்பாட்டுப் பாரம்பரியத்தை உடையது. சைவசமயம் எது என்பதை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் வரையறை செய்கின்றபோது "பிறப்பும் இறப்பும் உடையவர்கள் பசுக்கள். பசுக்களானவர் தேவர் முதலாகக் கிருமிகள் ஈறாக உள்ள சீவர்கள். பிறப்பும் இறப்பும் இல்லாதவர் பதி ஒருவரே. அந்தப் பதி சிவபெருமான். சிவபெருமானுக்குப் பசுக்களெல்லாம் என்றும் அடிமைகள். சிவபெருமான் அந்தப் பசுக்கள் தோறும் நிறைந்து நின்று அவர்களையெல்லாம் ஆளுந் தலைவர். ஆதலாற் சிவபெருமான் ஒருவரே பசுபதி. இந்த உண்மையை விசுவசித்துச் சிவபெருமானை வழிபடுகின்ற மார்க்கஞ் சைவசமயம். பலரைப் பரம் என்று கொண்டு வணங்குகின்ற சமயம் சைவசமயமாகாது" என்றார்.

சிவபெருமானில் இருந்து வேறாகாதது சிவசக்தி. இந்தச் சிவசக்தியே பார்வதி தேவியார் என்று சொல்லப்படும். ஆன்மாக்களுக்கு அருள் செய்யும் பொருட்டுக் கொண்டருளிய மூர்த்தங்கள். விநாயகக் கடவுள், சுப்பிரமணியக் கடவுள், வைரவக்கடவுள், வீரபத்திரக் கடவுள் ஆகியோராவர். இவர்களுக்குச் செய்யும் வணக்கம், சிவபெருமான் ஒருவரைக் குறித்த வணக்கமேயாம். "முப்பது முக்கோடி தேவர்களைப் பரம் என்று கொண்டு வணங்குகின்ற மார்க்கஞ் சைவசமயம் என்று மூடர்கள் பலர் சொல்லுகின்றார்கள். மனிதர்களைப் போலவே பிறந்து, இறந்து உழலுகின்ற தேவர்களைப் பரம் என்று கொள்வது சைவ சமயத்துக்கு முற்றும் விரோதம்" என்கின்றார் ஆறுமுக நாவலர். எனவே மனிதர்களாகிய எங்களைப் படைத்து எங்கள் ஒவ்வொருவரினதும் உள்ளத்தில் நின்று செயற்படுத்துபவராகிய சிவபெருமானை வழிபடுவதுபோல் பிறதெய்வங் களை வழிபடுவதும், சிவபெருமானைப் போல் அவற்றிற்குச் சமத்துவம் கொடுப்பதும், சிவத்துரோகமாகும். சைவசமய மரபில் கூறப்படுகின்ற அற்புதங்கள்

பற்றிப் பார்ப்பதற்கு முன்னர். அற்புதம் என்றால் என்ன என நோக்குகின்றபோது மதுரைத்தமிழ் அகராதி அதிசயம், அழகு, ஓரலங்காரம், ஞானம், பாவக்குணம், ஒன்பதில் ஒன்று, பிரபஞ்சசிருஸ்டி முதலான பலகருத்தைத் தருகின்றது. பொதுவாகப் பிரபஞ்சத்தில் நிகழுகின்ற அரிதாகிய நிகழ்வுகளை அற்புதம் என்ற வரையறைக்குள் உள்ளடக்கலாம். ஆயினும் சமய நிலையில் இறையிய லுடன் அல்லது பௌதிக அதீதப் பொருளுடன் இணைத்துப் பார்க்கின்ற நிகழ்வுகளை அற்புதம் என்ற வரையறைக்குள் உள்ளடக்கலாம். இயற்கை விதிகளுக்கு இயைபாக அமைகின்ற செயற்பாடுகள் சாதாரண நிகழ்வுகளாக எடுத்தாளப்படுகின்றன. சாதரண நிலைகளுக்குப் புறம்பாக இயற்கைக்கு அதீதமாக அமையும் செயல்கள் அற்புதம் என அழைக்கப் படுகின்றது. இது பௌதிக அதீத சக்தியினால், அல்லது இறைவனினால் அல்லது இறைவனின் நியமத்தினால் நிகழ்த்தப்படுகின்றது. இவ்வாறான அற்புதம் தொடர்பான மர்ம இரகசியங்கள் சார்ந்துள்ள வெளிப்பாடுகளே சமயங்களின் தனித்தன்மைகள் எனவும் கண்டு கொள்ளப்பட்டன.

அற்புதம் பற்றிய மெய்யியல் ரீதியான விளக்கம் மேலைத்தேய அறிஞர்களாலே பெருமளவு தரப்பட்டுள்ளது. சமயம் சார் அடிப்படையில் கிறிஸ்தவ மெய்யியலாளர் அக்குவானஸ் அற்புதங்களை இயல்பான நிகழ் வென்றும், இவை இறைவனால் அல்லது இறை தூதர்களினால் நிகழ்த்து விக்கப்பட்டவை எனவும் குறிப்பிடுகின்றார். மேலும் நிகழ்வொன்று அதிசயத்தை ஏற்படுத்தி அதன் வழி பாராட்டைப் பெறுகின்றபோது அந்நிகழ்வு அற்புதம் எனலாம் என்கின்றார். அற்புதங்கள் வழமைக்கு மாறானவையாக நிகழ்பவை என ஏற்றுக் கொண்டாலும் கூட அத்தகைய நிகழ்வுகளில் இயற்கை சக்திகளின் பங்களிப்புத் தேவையில்லை என நோவல் சிமித் போன்றவர்கள் கருதுகின்றனர். உலகமதங்களான கிறிஸ்தவம், இஸ்லாம், யூதம், பௌத்தம் போன்ற பலவற்றிலும் அற்புதங்கள் கூறுப்படுகின்றன. மக்கள் சமயங்களின் பால் அதிக நம்பிக்கை கொள்வதற்கு இவ் அற்புதங்கள் பெரிதும் உதவுகின்றன. சைவசமய மரபில் தேவாரம், திருவாசகத்தை மையமாக வைத்துப் பார்க்கப்படுகின்ற நாயன்மார்களின் அற்புதங்கள், வடமொழியில் எழுந்த சிவபுராணங்கள், சிவாலயங்களை மையமாக வைத்துப் பாடப்பட்ட தலபுராணங்கள் மற்றும் திருவிளையாடற்புராணம், கந்தபுராணம், பெரியபுராணம் முதலிய நூல்களில் கூறப்படும் பல்வேறு அற்புதச் செயல்கள் குறிப்பிடத்தக்கன.

அற்புதம் என்பது இயற்கைவிதிகளின் சிதைவே எனக் கூறப்படுகின்றது. இயற்கை விதிகளானவை மாற்றமுடியாத திடமான அனுபவத்தின் அடிப்படையில் ஆக்கப்பட்டுள்ளமையால் அற்புதம் எமது அனுபவத்திற்கு முரண்பாடனதாய் அமைகின்றது. எனவே அற்புதம் என்பது உண்மையில் இயற்கைக்கு அதீதம் என்பது மாத்திரமன்றி இயற்கையில் ஒன்றை மறுப்பதாகின்றது. உண்மையில் சைவமரபில் இயற்கையே ஒரு அற்புதமாகப் பார்க்கப்படுகின்றது என்பதற்கு மணிவாசகரின் திருவண்டப் பகுதி தக்கசான்றாகின்றது. இறைவனையே மணிவாசகர் அற்புதன் என்கின்றார். எனவே இயற்கையில் நடக்கும் நிரூபிக்கத் தக்க அதிசயம் போல் நிரூபிக்க முடியாத அதிசயம் அற்புதமாகக் காட்டப் படுகின்றறது. ஆயினும் மெய்யியலாளர்கள் சிலர் கருதுவதுபோல் அவை இயற்கைக்கு அல்லது இயற்கை விதிகளுக்கு முரணானது அல்ல. மணிவாசகர் திருவண்டப் பகுதியில்

"பிரமன்மால் காணப் பெரியோன் காண்க
**அற்புதன் காண்க** அநேகன் காண்க" (திருவண்டப் பகுதி) எனக் குறிப்பிடுவதைக் காணலாம். மண்ணுலகத்தில் உண்மையுள்ளவன் போல் நடித்துச் செயலில் பொய்யான பல காரியங்களைச் செய்து, யான் எனது என்கின்ற மயக்கமாகிய பாம்பு கடித்த வாயிலிருந்து முற்காலத்துச் செய்த வினையாகிய விடமானது மிகுவதால் புலம்பித் திரிகின்றவனும் தனக்கு அடியவனுமாகிய என்னை, அந்தப் பெரிய வேதங்கள் தேடியறியாத அரிய பொருளான எங்கள் பெருமான் முன்வந்து பிடித்துக் கொண்டு பலகாலும் அடித்துத் திருவருளாகிய சர்க்கரைக் கட்டியை முன் அருந்திய, அற்புதச் செயலின் பெருமையை

"நடித்து மண்ணிடைப் பொய்யினைப் பலசெய்து நானென தெனும்மாயக்
கடித்த வாயிலே நின்றுமுன் வினைமிகக் கழறியே திரிவேனைப்
பிடித்து முன்னின்றப் பெருமறை தேடிய அரும்பொருள் அடியேனை
அடித்த டித்துவக் காரமுன் தீற்றிய **அற்புதம்** அறியேனே"

(அற்புதப்பத்து, பா:03)

என அற்புதப் பத்திலே குறிப்பிடுகின்றார்.
சுந்தரர் திருக்கூடலையாற்றூர் திருப்பதிகத்தில் அற்புதத்தை அதிசயம் எனக் குறிக்கின்றார்.

"வடிவுடை மழுஏந்தி மதகரி உரிபோர்த்துப்
பொடியணி திருமேனிப் புரிகுழல் உமையோடும்
கொடியணி நெடுமாடக் கூடலை யாற்றூரில்
அடிகள்இவ் வழிபோந்த **அதிசயம்** அறியேனே." (சுந்தரர் தேவாரம்,பா: )

இறைவன் வேதியர் வடிவம் தாங்கிச் சுந்தரர் முன் நிற்க, சுந்தரரும் முன்நின்ற மறையவரை நோக்கி "திருமுதுகுன்றத்தின் வழியாது? என வினாவ, வேதியர் குடலையாற்றுக்கு வழிகாட்டி தானும் உடன் நடந்துவர கூடலையாற்றூர் வரவே, பெருமானார் மறைய, சுந்தரரும் வியந்து அதிசயமான நிகழ்வாக அதனைக் குறிப்பிடுகின்றார்.

மணிவாசகரும் அதிசயப் பத்தில் அற்புதத்தை அதிசயம் எனக் குறிப்பிடுகின்றார்.
பித்த னென்றெனை உலகவர் பகர்வதோர் காரணம் இது கேளீர்
ஒத்துச் சென்றுதன் திருவருள் கூடிடும் உபாயம தறியாமே
செத்துப் போய் அரு நரகிடை வீழ்வதற்கொருப்படு கின்றேனை
அத்தன் ஆண்டுதன் அடியரிற் கூட்டிய **அதிசயங்** கண்டமே (அதிசயப்பத்து,பா.4)

அதாவது இறைவன் திருவருளை அடைதற்குரிய உபாயத்தை அறியாமல், வீணாயிறந்து போய் நரகத்தில் வீழ்வதற்கு மனமிசைந்திருந்த என்னை அங்ஙனம் வீழவொட்டாமல் தடுத்தாட் கொண்டு தன் அடியாரோடு சேர்த்த அதிசயத்தைக் கண்டோம் அல்லவா? என வியத்தல் காணலாம்.

அற்புதத்தை அப்பர் பெருமான் "கண்டறியாத அதிசயம்" எனக் குறிப்பிடுதல் காணலாம். கைலாசக் காட்சியைத் திருவையாற்றில் காணநேர்ந்ததை
"மாதர்ப் பிறைக்கண்ணி யானை மலையான மகளொடும் பாடிப்
போதொடு நீர்சுமந் தேத்திப் புகுவா ரவர்பின் புகுவேன்
யாதுஞ் சுவடு படாமல் ஐயா றடைகின்ற போது
காதன் மடப்பிடி யோடுங் களிறு வருவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதங் **கண்டறி யாதன கண்டேன்.**"

(நான்காம் திருமுறை, பா.01)

எனக் குறிப்பிடுகின்றார். அதாவது கையிலை மலைக்குச் சென்றபோது ஏற்பட்ட உறுப்பழிவின் சுவடுகள் ஏதும் தோன்றாத வகையில் தீங்கு நீங்கிய யாக்கை கொண்டு, கயிலை மலையிலிருந்து கால்சுவடு படாமல் திருவையாற்றை அடைகின்ற பொழுதில், விருப்பத்திற்குரிய இளைய பெண்யானையோடு ஆண்யானை சேர்ந்து இரண்டுமாக வருவனவற்றைக் கண்டு, அவற்றை அடியேன் சத்தியும் சிவமுமாகக் கண்டதனால் திருப்பாதம், சிவானந்தமாகிய முன் கண்டறியாதனவற்றைக் கண்டவனாயினேன் எனக் குறிப்பிடுகின்றார். எனவே

அற்புதம் என்பது சைவசமய மரபில் அற்புதம், அதிசயம், ஒரு பொழுதும் அறிந்திராத நிகழ்வு போன்ற தன்மைகளில் பயன்படுத்தப்பட்டன. சில வேளைகளில் அவை குறியீட்டுத் தன்மையுடையதாக எடுத்துக் காட்டப் படுகின்றது.

சைவசமய மரபில் நிகழ்ந்த அற்புதங்களை இரண்டாக நோக்கலாம்.

1. இறைவனால் செய்யப்பட்ட அற்புதங்கள்
2. இறை அருளாளர்களால் செய்யப்பட்ட அற்புதங்கள்

இவ்வாறு இரண்டாக வகுத்துக் கூறப்படினும், எல்லா அற்புதச் செயல்களும் இறை அருளினால் நிகழ்கின்றது அல்லது இறைவனின் ஆணையினாலேயே நிகழ்கின்றது. அற்புதமூர்த்தியாகிய இறைவனால் செய்யப்பட்ட அற்புதங்கள் பற்றித் திருவிளையாடற் புராணத்தில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. மணிவாசகரின் கீர்த்தித் திருவகவலிலும் இறை அற்புதங்கள் வியந்து பேசப்படுகின்றது. இவை உயிர்களை ஆட்கொள்ளுதற் பொருட்டு அல்லது பக்குவப் படுத்துவதற்காகச் செய்யப்பட்டது. குருந்தமர நிழலில் குருவடிவாகவந்தும், குதிரைச்சேவகனாகியும் பரிகளை நரிகளாக்கியும், வைகையாற்றைப் பெருக் கெடுத்தோடச் செய்தும், கூலியாளாகப் பிட்டுக்கு மண் சுமந்தும், பன்றிக் குட்டிக்குப் பாலூட்டியும், கால்மாறி ஆடியும் (நடராசப் பெருமான்), வேடுவனாக வந்தும் எனப் பல அற்புதங்கள் கூறப்பட்டுள்ளன.

"நரியைக் குதிரை யாக்கிய நன்மையும்" "மதுரைப் பெருநன் மாநக ரிருந்து குதிரைச் சேவகனாகிய கொள்கையும், ஆங்கது தன்னில் அடியவர்க் காகப் பாங்காய் மண்சுமந்தருளிய பரிசும், உத்தர கோச மங்கையுளிருந்து, வித்தக வேடங் காட்டிய இயல்பும், புவண மதனிற் பொலிந்திருந் தருளித், தூவண மேனி காட்டிய தொன்மையும்" "பூவல மதனிற் பொலிந்தினி தருளிப், பாவநாசமாக்கிய பரிசும், தண்ணீர்ப்பந்தர் சயமம் பெற வைத்து, நன்னீர்ச் சேவகனாகிய நன்மையும், விருந்தினனாகி வெண்கடதனில், குருந்தின் கீழன் றிருந்த கொள்கையும்" (கீர்த்தித் திருவகவல்).

மணிவாசகரின் பார்வையில் இறைவனால் படைக்கப்பட்ட இயற்கையே அற்புதமானது. என்பது அவரது திருவண்டப் பகுதி, கீர்த்தித் திருவகவல் முதலிய பாடல்களினால் தெரிய வருகின்றது.

"வேறுவே றுருவும் வேறுவேறியற்கையும், நூறுநூ றாயிரம் இயல்பினதாகி" (கீர்த்தித் திருவகவல்)

"அருக்கனிற் சோதி அமைத்தோன் திருத்தகு, மதியின் தன்மை வைத்தோன் திண்திறல், தீயின் வெம்மை செய்தோன் பொய்தீர், வானிற் கலப்பு வைத்தோன் மேதகு காலின் ஊக்கங் கண்டோன் நிழல்திகழ், நீரின் இன்சுவை நிகழ்ந்தோன் வெளிப்பட, மண்ணின் திண்மை வைத்தோன் என்றென் யெனைப் பல பிறவும் றெனப்பலகோடியெனைப் பல பிறவும், அனைத்தனைத்தவ்வயின் அடைந்தோன்" எனத் திருவண்டப் பகுதியில் குறிப்பிடுதல் காணலாம்.

வடமொழிப் புராணத்தில் பலவகையான மிகைப்படுத்தல் போன்று அமைகின்ற அற்புதங்கள் கூறப்பட்டுள்ளது. அவை நவீன விஞ்ஞான உலகத்தில் நம்பமுடியாதவை. இதனால் எல்லா அற்புதங்கள் பற்றியதுமான ஒருவகையான நம்பிக்கையீனங்கள் காணப்படுகின்றன. சென்ற நூற்றாண்டில் வாழ்ந்த மௌனத் தவமுனிவர் பொ.கைலாசபதி அவர்கள் புராணத்தில் கூறப்படும் அற்புதங்கள் எதாவது ஒரு யுகத்தில் நடந்த உண்மைச் சம்பவங்களே எனக் குறிப்பிடுகின்றார். எனினும் காலந்தோறும் புராணங்களில் இடம் பெற்ற இடைச் செருகல்களை நாம் நோக்குதல் வேண்டும் என்பது அவர் தம் சிந்தனை. புராணங்களை நாம் கதைவடிவில் பார்ப்பது உண்மை. ஆயினும் அவை ஆழ்ந்த பொருட்சிறப்புடை யவை. புராணங்களின் உண்மையை விளங்கவல்லவர் உயர்தகவுடையவர். இதனை "அர்த்தத்தில் நின்று அர்த்தத்தைப் பார்ப்பது மீமாம்சை ஆராய்ச்சி (பூர்வம் அபரம்). அர்த்தத்தில் நின்று மோட்சத்தை நோக்குவோருக்குப் புராணம் தெரியும். எனக் குறிப்பிடுதல் காணலாம். ஒருவர் ஒரு நூலின் உண்மைத் தன்மையை அறிவதற்கு பன்னிரண்டு ஆண்டுகள் இன்னாச் சொல்லைத் தவிர்க்க வேண்டும் என்கின்றார் மௌனத் தவமுனிவர்.

அற்புதம் பற்றி திருமூலநாயனார் குறிப்பிடுகையில் அற்புதங்கள் இயற்கைக்கு அதீதமானது என்பதற்குக் கொடுக்கும் முக்கியத்துவத்திலும் பார்க்க அதன் ஊடாகப் பெறப்படும் உள்ளீட்டுத் தன்மைக்கு முக்கியம் கொடுக்க வேண்டும் என விளக்குகின்றார். அறியாத மக்களே சிவன் விடத்தை உண்டதாகக் கூறுவர் என்று திருமூலர் குறிப்பிடுவார். ஜீவாத்மா, பரமாத்மா, கீழ் நிலைச் சிவன் நான்கு துரிய நிலைகள் இவற்றுக்கு அப்பாற்பட்ட உலகங்கள் என்பவற்றை விழுங்கி அவற்றைக் கரியாக்கினார். அதாவது அவற்றைத் தன்னுள் அடக்கினார் என்ற கருத்தையே அந் நிகழ்வு வெளிப்படுத்துவதாகக் குறிப்பிடுவர். மேலும் சிவபெருமான் முப்புரம் எரித்தமை தொடர்பாக விளக்கும்போது :

"அப்பணி செஞ்சடை ஆதி புராதனன்
முப்புரஞ் செற்றனன் என்பர்கள் மூடர்கள்
முப்புருமாவது மும்மல காரியம்
அப்புரம் எய்தமை யாரறிவாரே." (திருமந்திரம், 2ம் தந்திரம், பா.5)

சிவபெருமான் திரிபுரம் எரித்த வரலாற்றைப் புராணங்களில் கேட்கின்றபோது அறிவில்லாதவர்கள் அவ்வரலாற்றை மட்டும் கேட்டு, அவ்வளவில் சிவபெருமானைப் புகழ்ந்தொழிகின்றனர். ஆயினும் அவ்வரலாற்றில் அறியத்தக்க உண்மையை அறிகின்றவர் மிகச் சிலரே. அதனால் இரும்பு, வெள்ளி, பொன் என்பவற்றால் ஆகிய மூன்று கோட்டைகளும் முறையே ஆணவம், மாயை, கன்மம் என்னும் மும்மலக்கட்டினைக் குறிப்பனவாகச் சிவபெருமான் அக்கோட்டைகளை எரித்துச் சாம்பலாக்கினான் என்பது அம் மும்மலங்களின் வலியை அழித்துக் கட்டறுத்தருளுவன் என்னும் உண்மையையே சிறப்பாக உணர்த்தி நிற்கும்.

அற்புதங்கள் தொடர்பான நம்பிக்கை இன்மை காலம் தோறும் இருந்து வருகின்றமையைக் கந்தபுராணம் எடுத்து விளக்குகின்றது. கந்தபுராணம் தட்சகாண்டத்தில் தக்கன் சிவபெருமான் செய்தருளிய செயற்கரிய செயல்கள் சிறுபிள்ளைத்தனமானவை என்று கூறுகின்றான். சம்பந்தர் செய்தருளிய செயல்கள் சில சிறுபிள்ளைத்தனமானவை என்று சில நவீன இலக்கிய எழுத்தாளர்கள் கூறுவது போன்றதொரு நிலை. தக்கனின் கேள்விகள் ஒவ்வொன்றிற்கும் ததீசி முனிவர் சிறப்பான விடைகளை அளிக்கின்றார். உதாரணத்திற்கு ஒன்று எடுத்துக்காட்டத்தக்கது. அநாதி மலமுத்தர் எனக் கூறப்படுகின்ற கடவுள் கழியுடன் முழுவெலும்பாகிய கங்காளத்தை ஏந்தித் திரிவாரோ: மயானத்தில் தலையில் இழிந்த மயிரையுந்தரிப்பாரோ பன்றியின் கொம்பையும் இறந்துபட்ட ஆமையின் ஓட்டையும் அணிவாரோ, உலகம் அழியும்படி உயிர்களைச் சங்கரிப்பாரோ எனக் கேட்பதைக் காணலாம். இதற்குத் ததீசி மிக விரிவான விடையை அளிப்பதைக் காணலாம். சிவனே யாவற்றையும் படைக்கின்றான். விஷ்ணு முதலியோரைப் படைத்து அவர்களுக்குரிய தொழில்களையும் தானே வகுக்கின்றான். கால இறுதியில் அவர்களைச் சங்கரிக்கின்றான். சங்கார இறுதியில் ஏகவஸ்துவாய் இருக்கின்றான் என்பதைக் குறிப்பதே அவன் அணிந்திருக்கின்ற பிரமா, விஷ்ணு முதலிய தேவர்களின் மண்டையோடுகள். மற்றொரு காரணம் எல்லாரும் எவர்க்கும் பரமபதி இவரே என அறிந்து, தமது பக்கலை அணுகித்

தீமைகளை எல்லாம் நீக்கி வீடு பேற்று உய்தி கூடுவதற்கு உபகாரமான அருட்செயலே எனக் கூறப்படுகின்றது. எனவே புராணங்களின் உண்மையை விளக்கிக் கொள்ளவல்லவர்களே புராணங்களில் வரும் அதீதமான செயல் களுக்கு விளக்கம் அளிக்கக்கூடியவர்கள். இவற்றை விடுத்துப் புராணங்களின் கதைகளை மட்டும் மக்களுக்குக் கூறுபவர்கள் சமயத்தை கேலிக்குரிய தொன்றாகச் செய்கின்றார்கள்.

நாயன்மார் வரலாறு அற்புதத்துடன் தொடர்புடையது. இவ் அற்புதச் செயல்கள் யாவும் பெரியபுராணத்தில் விரித்துக் கூறப்படுகின்றது. எம்முடைய சாதாரண மனித இயல்புடன் அவ்அற்புதங்களை ஒப்பு நோக்கி அவை நடந்திருக்குமா? எனச் சந்தேகப்படுவது அறியாமை. ஆறுமுக நாவலரின் தமையனார் பெரியபுராண நாயன்மாரின் செயல்கள் பொய் என்று கூறியபோது நாவலர் அவரைத் தண்டிக்க முற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

நாயன்மார்களில் முதன்மையாக வைத்து எண்ணத்தக்க திருஞான சம்பந்தர் வரலாற்றில் பல அற்புதங்களைப் பார்க்க முடிகின்றது. சீர்காழியிலே மூன்று வயதில் ஞானப்பால் உண்டமை, அவ்வயதிலேயே தேவாரம் பாடியமை, திருக்கோலக்காவில் பொற்றாளம் பெற்றமை மற்றும் முத்துப்பல்லக்கு, முத்துக்குடை, முத்துச்சின்னங்கள் பெற்றும், கொல்லிமழவன் புதல்வியைப் பற்றிய முயலகன் என்னும் நோயை நீக்கியும், திருக்கோடி மாடச்செங்குன்றூரில் நச்சுக்காய்ச்சலை தவிர்த்து அடியாரைக் காத்தும், திருவாவடுதுறையில் ஆயிரம் பொன் பெற்றும், திருமருகலில் பாம்பு கடித்த வணிகனை உயிர்த்தெழச் செய்தும் திருமதுரையில் அரசனின் வெப்புநோயை நீக்கியும், தீயிலிட்ட ஏட்டைப் பச்சையாக எடுத்தும், நீரிலிட்ட ஏடு எதிரேறச் செய்தும் பாம்பு கடித்திறந்த பூம்பாவையின் எலும்பைக் கொண்டு திருப்பதிகம் பாடி உயிருடைய உருவமாக்கியும் அருளினார், திருவேபத்தூரில் ஆண் பனைகளைப் பெண்பனை களாக்கி இறுதியில் திருநல்லூர் பெருமணத்தில் நம்பாண்டார் நம்பிகள் திருமகளை மணம்புரியுங்கால் திருமணம் காணவந்தவர்கள் எல்லோருடனும் சிவசோதியில் கலந்தனர். இவ் அற்புதங்கள் பற்றிய உண்மை திருஞான சம்பந்தரின் பாடலில் மட்டுமன்றி, சுந்தரர், அப்பர் பாடல்களிலும் காணப்படு கின்றது. சேக்கிழார் பெரியபுராணத்தில் இவ்வற்புதங்கள் பற்றி விரிவாக் கூறப்பட்டுள்ளது. இவ் அற்புதங்களைத் தர்க்க ரீதியாக நிரூபிக்க முடியாதாயினும் வரலாற்றுரீதியாக நிரூபிக்கும் தன்மை உள்ளதென்பது குறிப்பிடத்தக்கது.

சுந்தரர் திருஞானசம்பந்தருக்கு உலகத்தார் எதிரே தாளம் வழங்கியமையை எடுத்துக் காட்டுகின்றார்.

“நாளும் இன்னிசையால் நற்றமிழ் பரப்பும் ஞான சம்பந்தனுக்குஉல கவர்முன் தாளம் ஈர்ந்தவன் பாடலுக்(கு) இரங்கும் தன்மை யாளனை”

எனக் குறிப்பிடுதல் காணலாம்.

சேக்கிழார் நாயன்மார் பாடல்களின் அகச்சான்றின் அடிப்படையிலும், கல்வெட்டு, இலக்கிய ஆதார அடிப்படையில் பாடியுள்ளார் என்பதைச் சுந்தரர் வரலாற்றில் காணலாம். சுந்தரர் திருக்கோலக்காத் திருப்பதிகத்தில் திருநாவலூரில் வாழ்வார் முன்னே என்னை நோக்கி எனக்கு அடிமையாவாய் என்று ஆவணங்காட்டி பின் திருவெண்ணை நல்லூரில் ஆண்டமையைப்

“அன்று வந்தெனை அகலிடத் தவர்முன் ஆளதாக என்று ஆவணங் காட்டி நின்று வெண்ணெய்நல் லூர்மிசை”

எனக் குறிப்பிடுதல் காணலாம்.

இன்றைய கலியுகத்திலும் பல அற்புதங்கள் நடைபெற்று வருகின்றன. இக்கால அற்புதங்களைப் பின்வருமாறு நோக்கலாம்.

1. உண்மையாக நிகழ்ந்துள்ளது எனக் கருதத் தக்க அற்புதங்கள்.
2. ஆலய நிதிவளர்ச்சி
3. குறித்தநபர் தன்னைப் பிரபலப்படுத்தல் அல்லது சித்து.
4. கட்டுக் கதைகள் அல்லது ஏமாற்றுதல்.

யாழ்ப்பாணத்தில் அண்மைய காலத்தில் நிகழ்ந்ததாகக் கூறப்படும் பல அற்புதங்கள் உண்மைத் தன்மை அற்றவை. நடைபெறும் அற்புதங்களை மக்கள் காரணகாரிய ரீதியில் விளங்கிக் கொள்வார்களானால் அற்புதங்களின் பின்னால் ஏமாறத் தேவையில்லை. இங்கு தரப்பட்டுள்ள ஒருசில நாயன்மார்களின் அற்புதங்களை நாம் உண்மையாக விளங்கிக் கொள்வோமானால். சிலவகைச் சித்திகளைச் செய்து தம்மைக் கடவுளாக, அவதாரபுருஷராகக் கூறிக்கொள் பவர்களின் பின்னால் நாம் செல்லத் தேவையில்லை. இவ்வளவு செயற்கரிய அற்புதங்களைச் செய்த சமய குரவர்கள் தம்மைக் கடவுள் என்று ஒருபொழுதும் கூறியது கிடையாது. அடியவர்களின் வேண்டுகைகளை ஏற்றே இறைவன் அவர்களுக்கு உதவுகின்றானே அன்றி திருநீறு கொட்டுகின்றது, பாதம்

நடக்கின்றது, தீர்த்தம் வருகின்றது, அம்மன் உருவம் தெரிகின்றது எனக் கூறுப்படுவனவெல்லாம் ஒருவகை மாயாஜாலங்களே அன்றி அவை உண்மை யாகாது என்பதைச் சைவமக்கள் ஆராய்ந்து அறிந்து சிவபெருமானே பரமபதி என்பதை உணர்ந்து எக்காலமும் அவரை வழிபட்டு உய்தி பெறுவோமாக.

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

**உதவிய நூல்கள்**


1.மதுரைத் தமிழ்ப் **பேரகராதி,** (முதல் பாகம்), சாந்தியா பதிப்பகம், சென்னை,2004.

2. ஞானகுமாரன், **மெய்யியல்,** செல்வம் வெளியீடு, பருத்தித்துறை, 2003.

3. அருணைவடிவேல் முதலியார்,சி., **திருமூலர் திருமந்திரம்,** தருமையாதீனம், மயிலாடுதுறை, 1997.

4. சி. கணபதிப்பிள்ளை, **தக்ஷ காண்ட உரை,** இந்து மாணவர் சங்கம், பேராதனை,1967.

5. சுவாமி சித்பவானந்தர்,(உரை) **திருவாசகம்,** ஸ்ரீ இராமகிருஷ்ணர் தபோவனம், திருச்சிராப்பள்ளி, 2003.

இணையம்


- www.thevaraam.org
- www.tamil lexicon.mht
- www.Tamil Electronic Library.com


**புத்தகங்கள் இல்லாத வீடு யன்னல்கள் இல்லாத அறையைப் போன்றது.**

**- ஹோரஸ் மான்**



கணனிக்
கற்றல்
நிலையம்



நூலகம்



முகாமைத்துவக் குழு
2009



2008ம் ஆண்டு மாகாணமட்டத்தில் முதற்பரிசு பெற்ற
தென்மோடிக்கூத்து.



வாத்தியக்குழு

# ஆடற்கலையின் மகத்துவம்

**"கலையின்பமே நிலையின்பமாம்"**

செல்வி சியாமளா சின்னராசா
நடன ஆசிரியை
நுண்கலைமாணி (பரதநாட்டியம்)
யா/இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம்

என்றென்றும் காலத்தால் அழியாத அரும்பெரும் கலையாம் ஆடற்கலை. தமிழர் போற்றும் ஆலய வழிபாட்டுக் கலையாகிய ஆடற்கலை தொன்மையும், சிறப்பும், தெய்வீகமும் நிறைந்ததோர் அரிய சாஸ்திரக் கலையாக மிளிர்கின்றது. இக்கலை எமது கலாசாரம் பாரம்பரியம், பண்பாடு போன்றவற்றைப் பிரதிபலித்துக் காட்டி உலகெங்கும் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றது.

உலகிலேயே தொன்மை வாய்ந்த பலவகைக் கலை வடிவங்களில் தமிழரின் கலை வடிவங்கள் அழகும் சிறப்பும் மிக்கவை. இக்கலை வடிவங்களுள் ஆடற்கலையானது ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தோற்றுவிக்கப்பட்டு இன்றும் காலத்தால் அழியாத காப்பியங்களைப் போல் நம் முன்னோர்களினால் வழிவழியாகக் கையளிக்கப்பட்டு வளர்ச்சி பெற்றுக் காணப்படுகின்றது.

பலநூறு ஆண்டு காலமாகத் தமிழக மண்ணில் வளம் பெற்ற ஆடற்கலை இன்று இந்தியாவின் சிறப்புக் கலை வடிவமாகப் பரதநாட்டியம் எனப் பெயர் கொண்டு உலகளாவிய ரீதியல் புகழப்பட்டும் பயிலப்பட்டும் வருகின்றது. இறைவன் அனைத்து வேதங்களையும் மனதில் நினைத்துக் கொண்டு நான்கு வேதங்களிலிருந்தும் எடுத்த அம்சங்களைத் தொகுத்து நாட்டிய வேதத்தை உருவாக்கினார். நாட்டியத்தின் உரையை இருக்கு (ரிக்) வேதத்திலிருந்தும் இசையைச் சாம வேதத்திலிருந்தும் அபிநயங்களை யசூர் வேதத்திலிருந்தும் ரஸபாவங்களை அதர்வண வேதத்திலிருந்தும் எடுத்துத் தொகுத்து ஐந்தாவது வேதமாக நாட்டிய வேதத்தைப் பிரம்மா சிருஷ்டித்தார் என்று நாட்டிய சாஸ்திரம் கூறுகின்றது.

ஆடற்கலையின் மகத்துவம் அதன் தொன்மை மட்டுமல்ல தெய்வீகமும் கூட. பல அணுக்களை இயக்குவிக்கும் பரம்பொருளான நடராஜரால் ஆனந்த

தாண்டவம் ஆடப்பட்டு பரதநாட்டியம் தெய்வீகக்கலை வடிவைப் பெற்றுள்ளது எனலாம். பலகோடி அணுக்களால் உருவாக்கப்பட்ட அதியுயர்ந்த படைப்பான மானிடப்பிறவிக்குள்ளும் அணுக்களின் மூலக்கூற்று நடந்து கொண்டு தான் இருக்கின்றது. ஆகையால் தான் ஆடற்கலை தெய்வீகக்கலையாக உயர்ந்து நிற்கின்றது.

ஆடற்கலைக்குச் சிறப்பினை நல்குவது தாண்டவம் என்னும் ஆடல் முறையாகும். அதன் சிறப்பம்சங்களை நோக்குவோமாயின் "த" ஓசை தாண்டவத்திற்கு முதற்பிறப்பாகும். தாண்டு+அம் = தாண்டவம் இது ஒருவகை ஆடலாகும் சிவதாண்டவம் உலகம் தோன்றவும் வினைகள் நீங்கி வீடுபேறு நல்கவும் சிவபெருமான் ஆடிய ஆட்டம் என்று கூறப்படு கின்றது. சிவபிரான் பிரம்மாவை நோக்கி "பூமியில் நன்றாக நான் தாண்டவம் புரிதல் வேண்டும் ஆதலினால் நாராயணனும் முனிவர்களும் கண்டு மகிழுமாறு நாட்டியத்தின் விதிகளை விதிப்பாய்" எனக்கூறி தாண்டவம் புரிகின்றார். இது ஆடற்கலையில் உள்ள மகத்தான வரலாற்றுச் சிறப்பினை எடுத்துக் காட்டுகின்றது.

நிருத்த, கீத வாத்தியங்களின் சிறப்பானது மும்மூர்த்திகளோடும் மக்களோடும் ஒன்றிணைந்த வரலாறுகளாகக் காணப்படுகின்றன. இறை வனால் படைக்கப்பட்ட இக்கலையை இறைவனை மகிழ்விப்பதற்காகவும் இதனால் தாம் மகிழ்ந்திருப்பதற்காகவும் மக்கள் இக்கலையை ஆற்று கின்றனர். ஆடியும் பாடியும் வாத்தியம் இசைத்தும் இறைவனை வணங்கு கின்றனர். தெய்வீகத் தன்மை வாய்ந்த ஆடற்கலையை நிருத்தியம், நடனம், நட்டம், நாட்டியம், நடம், பரதம், கூத்து, தாண்டவம், நாடகம், என்று பல்வேறு சொற்களால் பண்டைத் தமிழர் வழங்கி வந்தனர்.

உலகளாவிய ரீதியில் நாட்டியங்கள் பல வகைப்படும் பரதம், கதக், குச்சுப்புடி, யட்சகானம், பாகவதநாடகம், மணிப்புரி, ஜாவாநாடகம், மலாய், பர்மாபுவோ, ரோன்சின், மேற்கிந்திய பலே முதலான பல சாஸ்திரிய கிராமிய நாட்டியங்களை இன்று நாம் காண்கிறோம். இவைகளுள் இலக்கண அமைதியும் நிலையான தரமுள்ள ஆடல் நமது பரதமே. பரதம் என்ற சொல்லின் அமைப்பு அதன் பொருளும் எமது கலையறிவுக்கு ஓர் நற்சான்றாகும். இக்கலை காலம் கணிக்க அரிய ஒரு பழமை வாய்ந்த கலை தமிழர் தம் கலைகளுள் தலையாய கலை பரதம் என்றால் அது மிகையாகாது.

ஆடற்கலை தமிழர்களின் அன்றாட செயல்களான விளையாடல், நீராடல், நகையாடல், போராடல், வாதாடல், வேட்டையாடல், சூதாடல், உண்டாடல், திண்டாடல் போன்ற பலவிதமான சொற்கள் ஆடல், பாடல் என்றே முடிவதை ஊன்றி ஆய்வோர்க்கு ஆடல் என்பது மனித உயிரோடும் குருதியோடும் கலந்து நிற்கின்றது என்னும் உண்மையை நன்கு தெரியப் படுத்துகின்றது.

பாவம், இராகம், தாளம் என்னும் மூன்று சொற்களின் முதலெழுத்துக் களால் அமைந்த பரதக்கலை உள்ளத்து உணர்வுகள் உடலின் மாற்றங் களை ஏற்படுத்துவது இயற்கை. அவ் இயற்கை உண்மைகளைக் கூர்ந்து அவதானித்து அமைக்கப்பட்ட நம் ஆடற்கலை முற்காலத்தில் சின்னமேளம் என்று கூறப்பட்டு இன்று பரதம் என்ற பெயரால் உருப்பெற்று ஆடப்படுகின்றது. யாழ்ப்பாணத்திலுள்ள மக்களிடம் இக்கலை இன்று மிகுந்த வரவேற்புப் பெற்றுள்ளது. வெளிநாடுகளிலுள்ள தமிழர்களும் இப்பரதத்தைக் கற்று யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்து அரங்கேற்றம் செய்யும் நிகழ்வுகளும் இன்றைய நாட்களில் நடைபெறுவதை நாம் காண்கிறோம். இந்துக்களின் பண்பாட்டிலே சமயம், தத்துவம், கலை, ஆகிய மூன்றும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்துள்ளன. ஒவ்வொரு கலையும் ஏதோ ஒரு அடிப்படைத் தத்துவத்தை எமக்கு வெளிக் கொணர்வதாக உள்ளபோதிலும் பரதக்கலை எல்லாவற்றிற்கும் மேலாக இறைசக்தியுடன் ஆன்மா இரண்டற ஒன்றிணையும் தத்துவத்தை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்த மகத்தான ஆடற்கலையைப் பயில்வதற்கு மிக உழைப்பும் பெருமுயற்சியும் பக்தி என்னும் அன்பும் சிரத்தை என்ற கால் கட்டுப்பாடும் குருபக்தியும் மிகமிக அவசியம். நாட்டியக் கலையை எளிதிற் கற்றுக் கொள்வதென்பது இயலாத காரியம். உடலின் ஒவ்வொரு பாகத்திலும் அசைவை ஏற்படுத்த வேண்டும். மனதை ஒருநிலையில் இருத்தல் வேண்டும். இடைவிடாத நீண்டநாள் பயிற்சி செய்ய வேண்டும். இவையனைத்தும் ஒருங்கமையுமானால் ஆடற்கலையைக் கற்றுத் தேற முடியும் என்பது திண்ணம். இவ்வாறு ஆடற்கலையின் மகத்துவத்தைக் கூறிக்கொண்டே செல்லலாம்.

**வாழ்க நம் கலை! வளர்க ஆடற்கலை!**

# ஆசிரியரிடம் காணப்பட வேண்டிய பண்புகள்

திருமதி கந்ததர்ஷினி பத்மராஜா
ஆசிரியர்,
யா / இளவாலை மெய்கண்டான் ம.வி.

'தாரமும் குருவும் தலைவிதிப்படியே' என்ற முதுமொழிக்கு இணங்க சிறந்த ஒரு ஆசிரியரால்தான் ஒரு பிள்ளையை நல்ல பிள்ளையாக மிளிரச் செய்யமுடியும். பிள்ளைகள் களிமண்ணிற்கு ஒப்பிடப்படுகின்றார்கள். ஒரு படைப்பாளன் அக்களியைப் பயன்படுத்தி அழகிய உருவங்கள் செய்வது அவனின் ஆற்றலைப் பொறுத்தது. இதே போல் ஆசிரியர்களும் பிள்ளையில் மறைந்திருக்கும் ஆற்றல்களை இனங்கண்டு அவ்வாற்றலை விருத்தி செய்வது ஆசிரியர்களின் தலையாய கடமையாகும். தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட பிள்ளைகளை எதிர்காலத் தலைவர்களாக மாற்றிவிடும் பாரிய பொறுப்பு ஆசிரியர்களுக்குரியது. இத்தகைய பொறுப்பு வாய்ந்த ஆசிரியர்களிடம் நற்பண்புகள் அமைந்திருப்பது அவசியமாகும்.

ஆசிரியர் ஒருவரிடம் தனது பாடத்துறையில் பரந்த தெளிந்த அறிவு இருக்க வேண்டும். பாட அறிவுடன் உலகப் பொது அறிவு, சுற்றாடல் விளக்கம், தொழில் சார்ந்த உளவியல் அறிவையும் பெற்றிருப்பதோடு மாணவர்களைக் கற்றலுக்குத் தூண்டல், அவர்களின் தேவைகள் கல்வி வளர்ச்சியினை மதிப்பிடுதல் போன்ற தொழில் சார்ந்த அறிவையும் பெற்றுக் கொள்ளல். வகுப்பறை ஒழுங்கமைப்பு வகுப்பறை நிர்வாகம் என்பன சிறந்த கற்றல் - கற்பித்தலுக்கு வாய்ப்பாக அமையும்.

பாடத்தை திட்டமிடுதலும், தயாரித்தலும் பற்றிய அறிவும் திறனும் ஆசிரியருக்கு அமைந்திருக்க வேண்டும். வழங்கப்பட்ட பாடத்தை பிள்ளை களுக்கு எப்படி? எப்போது? கற்பித்தல் என்பதைத் தீர்மானிக்கின்றார். இவ்வேளையில் எதிர்பாராத வகையில் எதிர் நோக்கக்கூடிய பிரச்சனைகளை செயற்படுத்தக்கூடிய விதத்தில் பாடத் தயாரிப்பு நெகிழ்ச்சி உடையதாக இருக்கவேண்டும்.

ஒரு ஆசிரியரிடம் இருக்க வேண்டிய இன்றியமையாத மற்றுமொரு பண்பு கவர்ச்சி அல்லது வசீகரத்தன்மையாகும். பிள்ளைகளைத் தன்பால்


ஈர்க்கும் தன்மையானது பிள்ளைகள் வகுப்பறைச் செயற்பாடுகளில் உற்சாகத்துடன் ஈடுபடத் துணைபுரியும். ஆசிரியர்களின் அன்பான வார்த்தைகள் மகிழ்ச்சியூட்டக் கூடிய நடத்தைகள், மாணவரைப் பெரிதும் வசீகரிக்கின்றன. இதன் மூலம் கணிப்புத்தேவை, அன்புத்தேவை, காப்புத்தேவை என்பன நிறைவு செய்யப்படுகின்றன.

கலைத்திறன், படைப்பாற்றல் என்பவற்றோடு மாணவர்களுக்கு மதிப்பளித்தல், பொறுமை, சகிப்புத்தன்மை, புரிந்துணர்வு, கருணை போன்ற பண்புகளுடன் நல்லொழுக்கம் முன்மாதிரியான நடத்தை மாணவர்களுடனும் பெற்றோர்களுடனும் ஆசிரியர்களுடனும் சுமுகமான தொடர்பு எண்ணங்கள் சொல், செயல் தூய்மையாகவும், ஒழுங்காகவும் அமைந்திருப்பது அவசியம்.

பாடசாலையில் கற்பிக்கின்ற ஆசிரியர் ஆசானாக மட்டுமின்றி பல்வேறு நடிபங்குகளை ஏற்று நடப்பவராக இருக்க வேண்டும். மாணவர்களுக்கு நண்பனாக, ஆலோசகராக, ஆய்வாளராக, அவதானிப்பவராக, தாய் தந்தையாக, வழிகாட்டியாக, ஆராய்ச்சியளராக, நீதிபதியாக, மேற்பார்வையாளராக துன்பத்தில் கைகொடுப்பவராக பல்வேறு நடிபங்குகளை ஏற்று நடக்கின்றார்.

இலங்கையில் கல்விக்காகச் செலவிடப்படும் பணத்தின் 80%க்கு மேலதிகமான தொகைப் பணம் ஆசிரியர்களின் சம்பளத்திற்காகவே செலவிடப்படுகிறது. இலங்கைப் பாடசாலைகளில் பண்புசார் மாற்றத்தினை நிகழ்த்துகையில் வளங்கள் அல்லது அமைப்பைப் பொறுத்தமட்டில் பிரச்சனைகள் தென்படுவதில்லை. ஆசிரியர்களின் மனப்பாங்குகளைப் பொறுத்த வரையிலேயே பிரச்சனைகள் காணப்படுகின்றன. என விக்ரோறியா பேக்கர் என்பவர் தனதுஆய்வறிக்கையில் கூறுகின்றார்.

எமது நாட்டின் கல்வியில் அபிவிருத்தி ஏற்பட வேண்டுமாயின் கட்டிடங்கள் பெற்றுக் கொள்வதால் மட்டும் அபிவிருத்தியை ஏற்படுத்த முடியாது. சகல ஆசிரியர்களிடமும் மனப்பாங்கில் மாற்றம் ஏற்படுத்த வேண்டும். எனவே ஒவ்வொரு ஆசிரியரும் கூட்டாளுமைப் பண்பை விருத்தி செய்து சிறந்த ஆசிரியராகத் திகழ்வதன் மூலம் தமது பணியைச் சிறப்பாக ஆற்ற முடியும்.



# கல்விச் சிந்தனை

1. அல்லும் பகலும் கசடறக் கல்
2. ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு
3. இளமையிற் கல்
4. ஈதற்கு உகந்தது கல்வியே
5. உடைமை என்பது கல்வியுடைமை
6. ஊறு தராதது கல்வியே
7. எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்
8. ஏணிப்படியாய் ஏற்றுவது கல்வி
9. ஐயம் திரிபறக் கல்
10. ஒன்று பட்டால் உண்டு வாழ்வு
11. ஓதலின் சிறந்ததன்று ஒழுக்கமுடைமை
12. ஔவை வழி ஒழுகு.

**தொகுப்பு**
**செல்வி வி. பிரவீணா**
**தரம் 2**

# வாணி துதிப்பாடல்

*கலைவாணி நின்பாதம்*
*அலைபாயா மனங்கொண்டு*
*தினம் பணியும் எந்தனுக்கு*
*தித்திக்கும் கலைஞானந்தா.*

*வெள்ளை மலர் பறித்து*
*கொள்ளை அழகு மாலை கட்டி*
*தினஞ் சூட்டும் எந்தனுக்கு*
*தெள்ளு தமிழ்ப் புலமை தா.*

*பைந்தமிழில் பா வடித்து*
*பக்தியுடன் பண்ணிசைத்து*
*தினம் பரவும் எந்தனுக்கு*
*தேன் மதுரக் குரல் வளந்தா*

*வாய் பேசாக் குருபரரை*
*பா இயற்ற வைத்தாயே*
*பைந்தமிழ்க் கவி நான் கேட்க*
*பக்கத்துணையாக நீ வா*

*ஆயகலை அனைத்தும்*
*நேய மொடு நான் பயின்று*
*தூய கலைப் பணி புரிய*
*நீ அருள்வாய் எந்தனுக்கு.*

**செல்வி ச.சகிலா**
**தரம் -10**

பவளவிழாவின் பின்னர்
பாடசாலையின் சேவையின் போது
அமரத்துவம் அடைந்த ஆசிரியை
அமரர் சாந்தினி ஆனந்தராசா



துடுக்கான பேச்சு மிடுக்கான நடையழகு
துன்ப வேளையிலும் துவளாத மனவுறுதி
எடுத்த கருமத்தை எளிதாய் செயற்படுத்தும்
மெய்கண்ட நங்கையின் மெய்யான காதலியாம்

பாலர் முதல் பல்கலைக் கழகம் வரை பயின்று மெய்கண்டானின்
பட்டதாரிகள் வரிசையில் முதல் தன் பெயர் பொறித்து
பாதிச் சேவை தனில் பரமன் அடி சேர்ந்த சாந்தினிக்கு
பாதக் கமலங்களில் கண்ணீர்ப் பூக்கள் காணிக்கையாகின்றன .

# MY SCHOOL

My school name is J/Ilavalai Meihandan M.V . It is a big school . There are six buildings in my school.Two of them are upstair buildings. It is situated in Ilavalai. Mr.S.Sivanantharasa is our principal. Above 350 students are studying in our school. It is a mixed school. Twenty seven teachers are teaching various subjects. From Grade 1 to Grade 13 classes are there. We also have a library. music room, sports room, dance room, science lab, home science room, audio visual room, computer room and a canteen.

A beautiful saraswathy pond is infront of the library. We have a big assembly hall, where we gather on friday for prayer. We also have a play-ground.and we play games there. Our school founder's name is Ezhoor Rajaratnam. My school motto is " learn to live" . I am very proud to belong to my school.

**Miss. K.Sivatharani**
Grade -5

# Flowers

Flowers are one of the most beautiful things that God have created. They bloom in variuos colours like red, pink, yellow, blue, white, orange and purple. Among this flowers there are big and small flowers. Most of the flowers have sweet smell. I like the fragrance of rose and jusmine very much.I like to wear jusmine on my hair.

Flowers add colour and beauty to our lives and nature. In spring season gardens , parks and ponds will be full of different coloured flowers. Even in summer too some flowers make the streets colourful.

There are many flowers in my garden.I love to smell their fragrance and touch their soft petals.I never pluck them unnecessarily.I like flowers so much.

**Miss.R.Babithiny**
Grade 6

# மாதா பிதா குரு தெய்வ வழிபாட்டுக் கீதம்

மாதா பிதா குரு தெய்வம் ~ அவர்
மலரடி தினம் தினம் வணங்குதல் செய்வோம்
ஆதாரமான தெய்வம் அன்னை தந்தை ஆசிரியர்
பாதாரவிந்தங்களை பணிந்து வணங்கிடுவோம். (மாதா)

என்னைச் சுமந்து பெற்று
இதமாய் அரவணைத்துத்
தன்னை உருக்கிப் பாலாய்
தன் வலுவையூட்டி
பொன் எனவே போற்றி புகழுக்கு ஆளாக்கும்
அன்னை பதமலரை அனுதினமும் தொழுதிடுவோம். (மாதா)

சிந்தை செயல்கள் எல்லாம் எந்தன் உயர்வுக்காக்கி
சந்ததமும் முயன்று தன்னுயிர் போலக் காத்து
முந்தி இருக்க வைத்த முன்னறியும் தெய்வம்
தந்தை திருவடியை சந்ததமும் தொழுதிடுவோம்

கல்வி அறிவு ஒழுக்கம் கடமை உணர்வை ஊட்டி
எல்லை இல்லா அன்பால் எம்மை வழிநடத்தி
செல்லும் இடங்கள் எல்லாம் சிறப்பாய் இருக்கவைத்த
நல்லாசிரியர்களை நாளும் தொழுதிடுவோம் (மாதா)

உள்ளம் உருகித்தொழ அள்ளி அருள் பொழிந்து
தெள்ளத் தெளிந்த மனத்திண்ணம் எமக்களித்து
வெள்ளை மனதில் கல்வி வெள்ளம் எனப்பெருக்கும்
வள்ளல் இறைவன் பாதம் வணங்கித் தொழுதிடுவோம் (மாதா)

**ஆக்கம்**

**சைவப்புலவர் சு. செல்லத்துரை**

# நாட்டார் இலக்கியங்கள்

இலக்கியங்கள் காலத்தின் கண்ணாடிகள் என்று கூறப்படுகின்றன. ஏட்டு இலக்கியங்கள், நாட்டார் இலக்கியங்கள் என இரு பெரும் இலக்கியப் பிரிவுகளை உடையது தமிழ்மொழி. இவற்றில் நாட்டார் இலக்கியங்கள் படிப்பறிவற்ற கிராமப்புற மக்களால் உருவாக்கப்பட்டன. யாரால்? எப் பொழுது? பாடப்பட்டவை என்பதைக் கூறமுடியாவிட்டாலும் அரிய பல உண்மைகளையும் இலக்கியச் சுவையையும் நமக்குத் தருகின்றன.

கிராமியப் பாடல்கள், எழுதாப்பாடல்கள், நாட்டுப்புறப் பாடல்கள், வாய்மொழி இலக்கியங்கள் எனப் பலபெயர்களால் அழைக்கப்படும் நாட்டார் பாடல்கள் பாமரமக்களின் உள்ளத்து உணர்ச்சிகளை வெளிக்காட்டுகின்றன. தாலாட்டு, விளையாட்டுப் பாடல்கள், தொழிற்பாடல்கள், மாரியம்மன் பாடல்கள், ஒப்பாரி என நாட்டார் பாடல்கள் பல வகைகளில் உள்ளன.

நாட்டின் பண்பாட்டை அறிவதற்கு நாட்டார் இலக்கியங்கள் சிறந்து விளங்குகின்றன. இவ் இலக்கியங்களிலே உன்னதமான ஆன்மதத்துவம், திருப்தி தத்துவம் என்பன வியக்கத்தக்க கற்பனை வளத்தோடும் உவமைச் சிறப்போடும் வெளிப்படுவதைக் காணலாம். இவ் இலக்கியங்கள் சமுதாய மக்களின் இசை வளர்ச்சிக்கும் மூலாதாரமாக விளங்குகின்றன. மக்களின் இதயப்போக்கு பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், ஆசைகள் என்பவற்றை அளவிடக் கூடிய அளவு கோல்களாக விளங்குகின்றன.

தொழிலாளர்கள் தொழிலைச் செய்யும் நேரத்தில் களைப்புத் தோன்றாத வகையில் பாடும் பாடல்கள் தொழிற்பாடல்கள் எனப்படுகின்றது. மரண வீடுகளில் பெண்கள் கூட்டாகச் சேர்ந்து புலம்பும் ஒப்பாரியும் ஒரு வகை ஆகும். சிறுவர்கள் விளையாடும்போது மகிழ்வாகப் பாடும் விளையாட்டுப் பாடல்களும் உள்ளன.

கழனிகளிலே வேலை நடைபெறும்போது உழவர், உழத்தியர் வாயி லிருந்து வெளிவரும் பாடல்களிலே காதல் கொஞ்சுவதையும் நகைச் சுவை மிஞ்சுவதையும் காணலாம். வயலிலே நெற்பயிர்கள் வாடைக் காற்றிலே அசைந்து நிற்கின்றன. அவர்களோடு சேர்ந்து உழைக்காது வயல் வரம்பிலே

நின்று பெண்ணொருத்தியைச் சுட்டி வேடிக்கை செய்கின்றான் கட்டிளம் காளை ஒருவன். அவன் பெயர் பொன்னுசாமி அவன்

"கண்ணாடி வளையல் போட்டு
களை எடுக்க வந்தபுள்ளே
கண்ணாடி மின்னலிலே
களையெடுப்பு பிந்துதடி"

என்று பாடினான். அவள் உடனே

"வாய்க்கால் வரம்புச்சாமி
வயற்காட்டு பொன்னுசாமி
களை எடுக்கும் பெண்களுக்கு
காவலுக்கு வந்த சாமி"

என்று பதில் சொன்னாள். அந்தப் பதிலிலே கேலியும் கிண்டலும் இளையோடிக் கிடக்கின்றது.

நாட்டார் இலக்கிய இசை மரபைத் தழுவி புலவர்களும் இசைவல்லோர்களும் பாடல்கள் இயற்றியுள்ளனர். திருவாசகத்திலே வரும் மாணிக்க வாசகருடைய அம்மானையிலும் நாட்டுப்புற இலக்கியமரபைக் காணலாம். கோபாலகிருஷ்ணபாரதியாரும், சுப்பிரமணியபாரதியாரும் நாட்டுப்புற இலக்கியங்களிலே வழங்கி வருகின்ற சிந்துகளால் கவரப்பட்டு அவ் இசையமைப்பைப் பின்பற்றியுள்ளனர். எனவே நாட்டுப்புற இலக்கியங்கள் பாமர மக்களின் உணர்ச்சியில் உதித்து எளிமையோடும் இசையமைப்புக்களோடும் தாளவுறுதியோடும் உலாவி வருகின்றன. இசைக்கலை வளர்ச்சிக்கு அடிநாதமாக இவ் இலக்கியங்கள் அமைந்துள்ளன. இத்தகைய சிறப்புடைய நாட்டார் இலக்கியங்களைப் பேணிக்காப்பது கலையார்வம் கொண்டவர் அனைவரினதும் கடமையாகும்.

ஆக்கம்
**பா. சோபனா**
தரம் 9



குருளைச் சாரணர்



ஆண் சாரணியம்



2009ம் ஆண்டுக்கான பெண் சாரணியம்



சிறு தோழியர் குழாம்

# SEASONS

The earth has a variety of seasons and climates as a result of weather. Clouds, wind, rain and snow change the weather. Moon has no air or water. So there are no seasons and climates on the moon.

In Sri Lanka there are two seasons. They are dry season and the rainy season. The seasons in Europe are different from the seasons in Sri Lanka. These countries have four seasons. They are spring, summer, autumn and winter.

When we think about the seasons in Sri Lanka the weather becomes very hot in the dry seasons. Under the heat, streams and wells dry up. In large lakes only some muddy water remains. The fish in them die. The water levels in rivers goes down. Animals in jungles trek miles and miles looking for water. Most of them die on the way. There is suffering every where.

The south west Monsoon and the North, East Monsoon bring rain in the rainy season. Tanks, rivers, streams, wells and water-holes begin to over flow. Trees shrubs and vines become fresh and green. Animals and birds grow fat on the grass, leaves, fruits and seeds. Farmers are happy. They start their cultivation in this season.

In Europe spring is between winter and summer. Summer comes after spring. Autumn comes after summer and before winter. Winter comes next. It comes after autumn and before spring.

Spring is the season that brings new life to vegetation, birds, animals and human beings. Flowers, bloom, birds return home from warmer climates they migrated to, hibernating animals leave their sleeping places

and human beings shed their heavy, thick clothes and go for lighter ones. The winter snow begins to melt. The days grow longer and the nights grow shorter.

Summer is the warmest season of the year. The days are longer than at any time of the year. The direct rays of the sun bring more heat to the earth. It's a season of great joy for everything in nature. People are out doors merrily enjoying life. They take part in games that can be enjoyed in hot weather. In summer trees and vines are bent with fruit.

Autumn is the season between summer and winter. The weather gets a little cooler. The hot weather of autumn is milder than in summer. Autumn is called 'the fall' in some countries as it is the period of falling leaves. The green leaves on trees take many shades as they wither. Autumn is the season when many crops are harvested. As the season ends, lakes and streams begin to freeze. The birds begin to look for warmer climates. People get ready for winter.

Winter comes after autumn. It is the coldest season of the year. The days grow shorter and the nights grow longer. Leaves, flowers, fruits disappear. Birds leave their homes looking for warmer countries. As days pass snow flakes come down. They settle on roof tops, window panes, roads, gardens and on all open places. Life becomes difficult in this season.

Seasons are lovely and they give so many uses to us. They give difficulties too. Any way they are natural and they add beauty to the nature.

By :
**Miss. S. Vatsayini**
Grade 9 A

# The problem of drought

Water is the basic life giver to all living things. All living things other than human beings, adapt them selves to water scarcity. For humans drought is a problem. Under severe drought people migrate to places where water is less scarce.

The problem can be solved to large extent by various means. Much the excess water during the rainy season can be stared preventing drainage in to the sea.Steps have tobe taken to prevent wastage of water Many of our lagoons can be converted into fresh water lakes. This requires the construction of bunds across the shallow water of the lagoons. Other sources of water can be tapped to replenish the salty waters of the lakes.

In places where drought is more servere water supply systems canbe planned out .In times of drought water scarcity is unavoidable but through well planned conservation and distribution system people can have the water they need.

*By:-*
**P. Lavanya**
*Grade 10*

*"Twist optimist and pessimist*
*The difference is droll:*
*The optimist sees the doughtnut,*
*The pessimist , the hole:"*

# Water management in Sri Lanka

We Sri Lankans are lucky that we live in a small island in the Indian ocean which is very near to the equator. We get rain from the two monsoons. The North East monsoon and the south west monsoons. The South west monsoon, sets in May and goes on till October. It gives rain to the South Western parts and the central areas of Sri Lanka. The North East monsoon starts in October and continues till February or March. It gives rain to the Eastern, Northern and North Central regions of Sri Lanka.

We do not have to share our water resources with others like some states in India. As such we are able to manage our water resources and control environmental problems. We have to maintain the good name we have earned "The pearl of the Indian Ocean" because of the natural beauty and climate.

There are two important factors in water management. Our ancient kings have built sereral tanks and canals around Anuardhapura, and Polanaruwa for irrigation purposes. They were able to get products from three crops – the maha crop, the yala crop and the middle crops. There were no famine people. They ate well and shared food with others. They even exported rice to India.

We need water for our daily use like drinking, cooking and washing. In towns and cities people use pipe water from the reservoirs for drinking, cooking and washing. There is possibility of water being misused by keeping the taps open when they are not in use. Water from the rivers is not clean. It should be filtered or heated before drinking.

We use water falls like Victoria, Laxpana, Devon, Castlereigh for generating electricity. We use electricity for our daily needs at home, at offices and factories. We are experiencing power cut nowadays. We need more electrical supply to meet our demands. We need more electrical energy to work our new factories, to light our streets and houses and to run our transport services.

We also need water to keep our parks, gardens, religious centers, markets, schools and fisheries healthy and gay. Water wastage should be controlled. It must be equally distributed to satisfy the needs of the people and keep the beauty of our land.

By : **Miss P. Kajarubi**
Grade 9 A

# Senior citizens and we

Senior citizens are respected as a light house for the youngsters. They have wide experience in the art of living. Really their experiences are good lesson for us. They are our models. We should not fail to respect them. We can learn good habits from them. We should lend them our ears. Their valuable advices make us shine in our society. Our teachers train us to obey the senior citizens.

According to our culture top priority is given to the senior citizens. We consider their blessing and benediction are vital for our success. We should volunteer to for go our seats to the senior citizens public places especially in buses and trains. We are advised by our parents and teachers to extend our helping hands towards the senior citizens.

It is the duty of the children to look after their old aged parents. When the parents become unable to move about, they should be well fed and well cared by us.

In short senior citizens are the asset of the nation. Their deeds and words encourage us to march forward towards our aim.

By:
**Miss P. Dinoya**
Grade 9 A

*"You can fool some of the people all the time; all the people some of the time; but not all the people all the time"*

# தகவல் பரிமாற்றத்தின் வளர்ச்சிப் போக்கு

இத்தனை ஆண்டு கால மனித சமுதாய வளர்ச்சியில் முன்னேற்றம் என்பது தெளிவான எண்ணங்களை வெளிப்படுத்துவதன் மூலம் தான் சாத்தியமாகின்றது. எப்படி முழுமையாகத் தெளிவான எண்ணங்களை வெளிப்படுத்துவது? நவீன தகவல் தொழில்நுட்பத்தை நாம் முழுமையாகப் பயன்படுத்துவதன் மூலம் தான் இத்தகு வெற்றிகரமான தகவற் பரிமாற்றத்தை செயற்படுத்தமுடியும்.

ஒரு விஷயத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்கின்ற ஆர்வம் இயற்கையாகவே மனிதர்களிடம் அமைந்துள்ளது. நவீன யுகத்தில் நாம் பல்வேறு வழிகளில் தகவல்களைப் பரிமாறிக் கொண்டேயிருக்கின்றோம். இவற்றையெல்லாம் விட மிக முக்கியமான நமக்கு மிகவும் பழக்கமான தகவல் பரிமாற்றம் ஒன்று உள்ளது. அது நமது மனித உடலமைப்பே! ஆம் உடலில் உள்ள நரம்புகள் மூளைக்குத் தகவல்களை சரியாக எடுத்துச் செல்வதில் தான் மனித உயிரின் இயக்கமே அடங்கியுள்ளது. ஆகையால் தகவல் பரிமாற்றம் எனப்படுவது மனித உடலிலேயே இயற்கையாக அமைந்துள்ளது. எனவே தகவல் பரிமாற்றம் நமக்கு புதிய விஷயமல்ல.

ஒரு குழந்தை பிறந்தவுடன் முதலில் அழும் ஓசை கூட ஒரு வகைத் தகவல் பரிமாற்றம்தான். முதன்முதலாக குழந்தை தன்தாயுடன் தகவல் களைப் பரிமாறிக் கொள்ள ஆரம்பிக்கின்றது. இந்த இயற்கையான தகவல் பரிமாற்றம் என்ற செயல் காலத்திற்கேற்ப மாறுபட்டு வந்துள்ளது என்பது நமது வரலாற்றின் மூலம் அறிந்த விடயம். முதன்முதலில் தகவல் பரிமாற்றம் எப்படி நடந்திருக்கும்? இதை யாராலும் குறிப்பிட்டு விளக்க இயலாது. குறிப்பாக மனிதர்களுக்கிடையேயான தகவல் பரிமாற்ற முறைகள் பற்றிய விபரங்கள் கூட முழுமையாக இன்று வரை கிடைக்கவில்லை. ஏனெனில் அவை அந்தளவிற்குப் பழமையானவை

இதுவரை எமக்குக் கிடைத்த வரலாற்றுச் சான்றுகளின்படி ஆதி மனிதர்கள் பறைசாற்றுதல், ஆலய மணியை ஒலித்தல், சங்கு முழங்குதல், புகை எழுப்புதல், நெருப்புப் பந்தம் ஏற்றி வைத்தல் போன்ற சைகைக் குறியீடுகளால் தகவல்களைப் பரிமாறிக் கொண்டனர் எனத் தெரிய

வந்துள்ளது. இவ்வகையில் பரிமாறிக் கொள்ளப்பட்ட விடயங்கள் அனைவராலும் ஓரே மாதிரியாகப் புரிந்து கொள்ளும் வகையில் அமைக்கப்பட்டிருந்தன. இவை தொலை தூரச் செய்திப் பரிமாற்றத்திற்குப் பயன்படவில்லை.

1440ம் ஆண்டில் ஜொகனஸ் கூட்டன் பார்க் (Johanes Guten berg) எனபவர் நகர்த்தக்கூடிய எழுத்து அச்சுக்களை முழுமையாக உருவாக்கிய பின்னர் எண்ணங்கள், கருத்துக்கள் மற்றும் செய்திகளை பரவலாக பெரும்பான்மை மக்களிடம் எளிதாகக் கொண்டு செல்ல முடிந்தது. இதன் மூலம் மக்கள் தொடர்பானது வலிமை அடைந்து உலகைப் புரிந்து கொண்டு அதனைக் கட்டுப்படுத்துவதில் அச்சுச் சாதனம் மனிதனுக்கு மிகவும் உதவியாக இருந்தது. இதன் மூலம் அனைத்து மக்களுக்கும் தகவல்களை பகிர்ந்தளிக்க முடிந்தது. இதனால் பல்வேறு துறைகளும் வளர்ச்சி அடைந்தன. அவற்றுடன் கல்வி அறிவும் அனைவருக்கும் பொதுவானது.

தகவல் பரிமாற்றம் என்பது வளர்ந்து வரும் துறை. நாளுக்கு நாள் இது மேலும் மேலும் மெருகேறி வருகின்றது. முதலில் குகை ஓவியங்கள் ஓசைகள் மூலம் தகவல் பரிமாறி வந்த மனிதன் படிப்படியாக முன்னேறி இன்று செயற்கை மூலமாக செய்திகளை பரிமாறி பெரும் பரபரப்பை எற்படுத்தி வருகின்றான். நமது இத்தகைய வளர்ச்சியில் பெரும் பங்கு வகிப்பது அறிவியல் கண்டுபிடிப்புக்கள் தான் என்றால் அது மிகையாகாது.

முதலில் அச்சு ஊடகம் மனிதனுக்கு எளிதாக இருந்தது. காலம் மாறமாற அவனது அவசர வாழ்க்கைக்கு ஏற்ப துரிதமாக தகவல் தொடர்புச்சாதனம் தேவைப்பட அவற்றைக் கண்டுபிடிக்க ஆரம்பித்தான். இதன் விளைவுதான் தந்தி மற்றும் வானொலி போன்றவற்றின் கண்டுபிடிப்பு பின்னர் 1940களில் தொலைக்காட்சி வந்தது. தொலைக்காட்சி கண்டுபிடித்த பின்னர் தகவல்கள் அச்சு ஊடகம் போல் குறிப்பிட்ட மக்களை மட்டும் சென்று அடையாது உலகளாவிய மக்கள் தொடர்பை எளிமைப்படுத்தியது.

இன்றைய மின்னணுத் தொடர்பு சாதனங்கள் எவ்வளவு வேகமாக செயற்படுகின்றன தெரியுமா? இவை மின்சாரத்தின் வேகத்தில் நம்மை வந்து அடைகின்றன. எவ்வித வான் வழி மற்றும் மின் கம்பி இணைப்புக்களின் கூட்டு அமைப்புக்களினாலும் இதற்கு மின்னணுத் தொடர்பை ஏற்படுத்த

இயலும். இன்றைய மின்னணுச் சாதனங்கள் மூலம் தகவல் தொடர்பு ஒரு விநாடிக்கு முந்நூறு ஆயிரம் கிலோமீற்றர் (300000km) வேகத்தில் நம்மை வந்தடையும் என ஆய்வுகள் கூறுகின்றன. வேகமான தகவல் பரிமாற்ற முறையால் நேர விரயத்தையும் பண விரயத்தையும் தவிர்க்கமுடியும். தகவல் தொடர்பு சாதனங்களின் சமீபத்திய வளர்ச்சியாகக் கணணியும் இணையமும் இயங்கி வருகின்றன. மேலும் பல்வேறு புதிய நுட்பங்கள் கண்டுபிடிக்கப்பட்டு வளர்ந்து கொண்டே வருகின்றன. இதனால் தகவல் தொடர்பை பயன்படுத்தாத துறை உலகில் எதுவுமே இல்லை என்று கூறிவிடும் அளவிற்கு வளர்ச்சி பெற்று வருகின்றது.

ஆக்கம்
**செல்வி சு. சுவேதிகா**
**தரம் - 10**

முடிவுகளில் நல்லவை, கெட்டவை என்று எவையும் இல்லை. அதிகம் பயன்தரும் வழிகள் அவ்வளவு பயன் தராத வழிகள் என்ற இரண்டையும் புரிந்து கொண்டு செயல்படுவதே முடிவெடுப்பதின் புத்திசாலித்தனம்.

**- ஃபிலிப் மார்வின்**

# Short cut

| | | |
|---|---|---|
| Left Arrow | - | Previous character |
| Right Arrow | - | Next character |
| Up Arrow | - | Upper character |
| Down Arrow | - | Below character |
| Ctrl + Right arrow | - | Beginning of the next word |
| Ctrl + Left arrow | - | Beginning of the previous word |
| Ctrl + up arrow | - | Beginning of the paragraph |
| Ctrl + Down arrow | - | Beginning of the next paragraph |
| Home | - | Beginning of the line |
| End | - | End of the line |
| Ctrl + Home | - | Beginning of the document |
| Ctrl + End | - | End of the document |
| $F_7$ | - | Spelling and grammar |
| Ctrl + S(or)shift + F12 | - | Save |
| Ctrl + $F_2$ | - | Print Preview |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Ctrl + O | - | Open | Ctrl + shift + D | - | Double underline |
| Ctrl + N | - | New | Ctrl + = | - | Subscript |
| Ctrl + W | - | Close | Ctrl + shift + = | - | Super scripts |
| $F_{12}$ | - | Save As | Ctrl + X | - | cut |
| Ctrl + P | - | Print | Ctrl + C | - | Copy |
| Ctrl + * | - | Show | Ctrl + V | - | Paste |
| $F_1$ | - | Help | Ctrl + Z | - | Undo |
| Ctrl + F | - | Find | Ctrl + Y | - | Redo |
| Ctrl + H | - | Replace | Ctrl + L | - | Left alignment |
| Ctrl + G | - | Go to | Ctrl + J | - | Justified |
| Ctrl + A | - | Select All | Ctrl +M | - | Indent |
| Ctrl + shift + F | - | Font face | Ctrl + Enter | - | page break |
| Ctrl + shift + p | - | Font size | | | |
| Ctrl + B | - | Bold | | | |
| Ctrl + I | - | Italics | | | |
| Ctrl + U | - | Underline | | | |

**Miss. M. Kirushajiny**
Grade - 11

# தாயே நீ வாழி!

சீர்பெருகு இளவாலையம் பெரும்பகுதியில் தோன்றிய
பார்புகழும் பெரியோனாம் வள்ளல் ஏழூர்
பேரிசையை திக்கெட்டும் பரவச் செய்த
ஊருலகம் போற்றும் எம் மெய்கண்டான் தாயே! நீ வாழி!

கல்வியெனும் கருந்தனத்தை கனிவுடனே தந்தாய்
நல்வித்தையெல்லாம் புகட்டி எமை நலம் பெருக வைத்தாய்
பல்துறைசார் வல்லவரைப் பாருக்குகந்தளித்து
சொல்லற்கரிய செயற்றிறனின் சிகரமான தாயே! நீ வாழி!

மெய்கண்டானை நிறுவிய ஏழூரரின் நினைவுகள்
இன்பமாய் கழிந்தன பல ஆண்டுகளாய்
மெய் நெறிஊட்டிடும் மேதகு சேவையால்
எல்லாவர்க்கும் எழில் ஒளி காட்டிட்ட தாயே! நீ வாழி!!

ஜாதி மதமின்றி ஓரினமாய் ஒன்றிணைந்து
கல்வி எனும் பொது மறையைப் பொறுப்புடனே
கற்பிக்கும் ஆசான்களின் கண்டிப்பு பாசத்தில் பணிந்து
கற்கப் பழக்கிட்ட தாயே! நீ வாழி!

பத்துத் திங்கள் தான் எம்மை பெற்றவள் சுமந்து நின்றாள்
எத்தனை வருடங்களாய் பற்றுடன் எமைச் சுமக்கின்றாய்
என்றும் உன்புகழ் நிலைத்திடவே
உண்மை எங்கும் பெருகிடவே தாயே! நீ வாழி!


**செல்வி செ.மேரிசந்திரமலர்**
2010 A/L



கரப்பந்தாட்ட அணி – 2007
17 வயதின்கீழ் பெண்கள்




கரப்பந்தாட்ட அணி – 2007
17 வயதின்கீழ் ஆண்கள்



எமதுபாடசாலைக் கபடி அணி 2009ம் ஆண்டு
தேசியமட்டபோட்டியில் பங்குபற்றிய போது.



2008,2009ம் ஆண்டில் விசேடகல்வித்துறை
சார் நாடகப்போட்டியில் 1ம் இடம்பெற்ற குழுவினர்.



மென்பந்து அணி – 2007
19 வயதின்கீழ் ஆண்



கரப்பந்தாட்ட அணி – 2007
19 வயதின்கீழ் பெண்
வலயமட்டம் 1ம் இடம்



2008ம் ஆண்டுக்கான மாணவதலைவர்களுடன்
ஆசிரியர் குழாம்



கரப்பந்தாட்ட அணி 15 வயதின் கீழ் ஆண்

# OUR SCHOOL COMPUTER ROOM

We all know the importance of the computer in the modern world. Those who don't have computer knowledge are considered a backward person.Nowadays every school has computer facilities. We also have a seperate computer room.

Education department has introduced Information Communication Technology as a subject for the G.C.E( O/L) and G.C.E (A/L) Examination . It has become a necessary qualification to get a job not only in Srilanka but also in foreign countries.

To fulfil this requirement our principal gave us a specious computer room. The first computer was donated by one of our old student Dr.S.Mohan. Other computers were donated by our Education department, D.C.B Minister and " Save the Children" organization. We have seven computers at present. Dr.V.Satgunananayakam from London donated money to our school to renovate our computer room.

We have requested all our old students to help us to expand our project further.

Mrs.Inthiravathy.Yokalingam who teaches I.C.T and G.I.T is incharge of the computer room.We love our teacher as well as learning I.C.T subject.

The way she teaches the subject makes us all learn it with enthusiasm.

**Miss. K. Nalayini**
2010 A/L Arts

# தாய்மை – சிறுகதை

அம்மா சொல்லுங்கம்மா என்னோட அப்பா யாரு? என்னோட படிக்கிறவங்க எல்லாம் அப்பா பந்து வாங்கித் தந்தார். அப்பா பட்டம் கட்டித் தந்தார் என்று சொல்லுறாங்கள் என்னுடைய அப்பா எங்கே?

"பிரவீன் ஏதோ மண்ணில் செய்யவேணும் என்று சொன்னியே வா அம்மாவும் பிள்ளையுமாக செய்வம்"

"எனக்கு முதல்ல அப்பா எங்கே எண்டு சொல்லுங்கோ"

இஞ்சை பார் பிரவீன் உன்ர அப்பா வெளிநாட்டில். நீ நல்லாப் படிச்சு பெரிய ஆளா வரவேணும். இனிமேல் வேற கதைகள், தேவையில்லாக் கதைகள் கதைக்கப்படாது"

" சரி அம்மா நான் விளையாடப் போறன்"

"என்ன மன்னிச்சிடு பிரவீன் என்னால எதுவும் செய்ய முடியாது, எதையும் உன்னிடம் சொல்லவும் முடியாது. அதைப் புரிந்து கொள்ளும் வயதும் இல்லை" என பிரியங்கா மனதிற்குள் சொல்லிக் கொண்டாள். பிரவீண் அவ்விடத்தை விட்டு நீங்கியதும் பிரியங்காவின் எண்ணங்கள் கடந்த காலத்தில் தனக்கு ஏற்பட்ட ஏமாற்றங்கள் கவலைகள் துன்பங்கள் என்பவை பற்றி அசைபோட்டன.

பிரியங்கா அழகும் பண்பும் அறிவும் நிறைந்த 20 வயதுப் பெண். ரங்கநாதன் சுபத்திராவின் அருந்தவப் புதல்வி. அவளுக்கு பணத்திலோ அரவணைப்பிலோ எந்தத் தேவையிலும் குறைவில்லை. வீட்டு வேலைகளைக் கவனிக்க நாற்பது வயதுடைய கிருஸ்ணராஜ் என்பவரை ரங்கநாதன் நியமித்திருந்தார். இதனால் பிரியங்காவிற்கு எந்தக் கவலையுமின்றிப் பட்டாம் பூச்சிபோலப் பறந்து கொண்டிருந்தாள்.

தானொரு வங்கி முகாமையாளராக வர வேணும் என்ற இலட்சியத்தின் போக்கில் போய்க் கொண்டிருந்தாள்.

அன்றொரு நாள் ..............................

"அப்பா எதுக்குவரச் சொன்னீங்க எங்க வெளிக்கிட்டீங்க" பிரியா நமது கிராமத்துக் கோயில் திருவிழா தொடங்கியிருக்குது அங்க போய் 10 நாள் நின்றுவிட்டு வருவோம் அப்படியே உன்ர அம்மம்மாவையும் பார்த்த மாதிரியா யிருக்கும்.

சீக்கிரம் வெளிக்கிடு பிரியா இருட்டுறதுக்குள்ள நாம் போயிடணும் " என்னம்மா நீங்க உங்க பாட்டுக்கு வெளிக்கிடச் சொல்கிறீர்கள் எனக்கு எக்ஸ்ஸாம் இருக்கும்மா நான் எப்படி வர்றது" ''என்னது எக்ஸ்ஸாமா"

''ஆமம்மா மூணுநாள் தொடர்ந்து நடக்குமம்மா'' ''என்னங்க இப்ப எப்படி போறது'' ''அதுதான் நான் யோசிக்கிறன் ஓ பிரியா நீ இங்க இரு நாம இருவரும் கட்டாயம் போக வேண்டியிருக்கு உனக்கு துணையாய் கிருஸ்ணராஜ் இருக்கிறான்.''

"சரியப்பா நீங்க பத்திரமா போயிட்டு வாங்க பிரியா நீ அங்க இங்க போகாதே" "எதுக்கும் ஜாக்கிரதையாய் இரு நாம மூணுநாள்ல வந்திடுவம்" ''சரியப்பா சீக்கரமா வாங்க''

மூணுநாள் வெகுவிரைவாக ஒடியது. மீண்டும் தாயும் தந்தையும் இறுதித் திருவிழாவிற்கு செல்ல ஆயத்தமானார்கள். பிரியங்கா அன்றும் போகமுடியாத நிலை, காரணம் அவளின் நண்பியின் திருமண வைபவம். அவளின் உயிர்த்தோழி என்றபடியால் அவளால் செல்ல முடியவில்லை. கிருஷ்ணராஜ்யை துணைக்கு விட்டுட்டு சென்றுவிட்டார்கள். திருமண வைபவத்தில் இருந்து வீடு வந்தவள் அலுப்புடன் கட்டிலில் சரிந்து கொண்டாள். அந்த அறையில் நுழைந்த கிருஸ்ணராஜ் ...........

பிரியங்கா அழுதாள்: அலறினாள்: தாய் தந்தையரிடம் தனக்கு நிகழ்ந்ததை மறைத்தாள். ஒரு வாரமாக அவளுக்கு சுயநினைவுக்கு வரமுடிய வில்லை. தனியாக இவளை விட்டுட்டு போய்விட்டோம் அது தான் கோபமாக் கும் என தாய் தந்தையர் நினைத்துக் கொண்டனர். ''கிருஷ்ணராஜ் எங்கே'' எனக் கேட்டார். தந்தை, 'அவன் தன்னால் இங்கே வேலை செய்ய முடியா தாம்' என்று ஏதோ காரணங்களை கூறி மழுப்பிக் கொண்டாள்.

குழந்தை உருவாகியது. அதை அழிக்கும் முயற்சியில் தனியார் மருத்துவமனையில் மருந்துகள் வாங்கி வந்து போட்டாள். அது அழிப்பதற் கல்ல ஆக்குவதற்கென கொடுக்கப்பட்டது. பாவம் பிரியங்கா இதனை அறியாது இருந்ததால் மாதம் ஆக ஆக பெற்றோர் சந்தேகித்தனர். அவள் காரணத்தை தனது தாயிடம் கூறிக்கொண்டாள். பெற்றோர் அவமானம் தாங்கமுடியாமல் தற்கொலை பண்ணிக் கொண்டார்கள். பாவம் அவளும் இறக்க எண்ணிக் கொண்டாள். குழந்தை என்ன பாவத்தைச் செய்துகொண்டது. அவள் தாய்மை எனும் வார்த்தைக்கு களங்கத்தை ஏற்படுத்திவிட்டேன் என நண்பியிடம் கூறி அழுதாள். பிரியங்கா தாய்மையுடன் இருப்பதால் அவள் நண்பி தன்னோடு சேர்த்துக் கொண்டாள். குழந்தை பிறந்ததும் எல்லாம் சரியாகிவிடும் என நண்பி ஆறுதல் கூறினாள். குழந்தையும் பிறந்தது. பிரவீன் எனப் பெயரிட்டாள். ''அம்மா வீட்டுப் பாடம் செய்யவேணும்'' என்ற பிரவீனின் குரல் பிரியங்காவைச் சிந்தனையில் இருந்து மீட்டது.

**செல்வி சி. கிருஷ்ணவேணி**

# இலட்சியப் பாதை நோக்கி

(நாடகம்)

பாத்திரங்கள்

| | | |
|---|---|---|
| தாய் | - | கமலம் |
| மகன் | - | கண்ணன் |
| கண்ணனின் நண்பன் | - | கார்த்திக் |

## காட்சி I

**கார்த்திக்** - கண்ணன்! கண்ணன்! கெதியில வாடா நேரம் போட்டுது

**கண்ணன்** - நில்லடா கார்த்திக் வாறன். அம்மா அம்மா எனக்கொரு 500ரூபா தாங்கோ புத்தகம் வாங்கணும்.

**கமலம்** - கண்ணா இண்டைக்கு என்னட்ட அவ்வளவு காசில்லையடா, ஒரு நூறு ரூபா தான் கிடக்கு

**கண்ணன்** - அப்ப அம்மா அந்த நூறு ரூபாவைத் தாங்கோ. அம்மா உங்களுக்கு இந்தக்காசு தேவையில்லதானே.

**கமலம்** - உனக்கு இப்ப காசு தேவையெண்டு சொல்லுறாய். இந்தா நீ கொண்டு போ

**கண்ணன்** - அம்மா நான் போட்டு வாறன்

**கமலம்** - நேற்றைக்கு மாதிரி நேரம் செல்ல வராமல் கவனமாய்ப் போய் கெதியில வாடா. நாட்டு நிலைமை உனக்குத் தெரியும் தானே.

**கண்ணன்** - சரியம்மா நான் வாறன் சரி கார்த்திக் நாங்கள் வெளிக்கிடுவம்

**கார்த்திக்** - அம்மா போட்டு வாறன்

**கமலம்** - சரியப்பு போட்டுவா

**கார்த்திக்** - கண்ணன் வாற கிழமை Exam வருது படிச்சிட்டியோ

**கண்ணன்** - போடா கார்த்திக் படிப்பெண்டா எனக்கு தலையே வெடிக்குது.

**கார்த்திக்** - வெடிக்கும் வெடிக்கும் Exam முடிவு வர

**கண்ணன்** - உந்தக்கதையை அங்கால தூக்கிப்போடு நான் இண்டைக்கு வகுப்புக்கு வர மாட்டேன்

**கார்த்திக் -** ஏனடா?

**கண்ணன் -** சுரேசும் தினேசும் எங்கேயோ போறாங்களாம். என்னையும் வரச்சொன்னவங்கள். அதுதான் போகப்போறன் ஒருக்கா ஜாலியா போய் சுத்திட்டு வருவம்

**கார்த்திக் -** கண்ணன் நான் எத்தினை முறை சொல்லிட்டன் அவங்களோட சேராதையெண்டு அவங்களின்ர பழக்க வழக்கம் எனக்கு பிடிக்கல்லே

**கண்ணன் -** உனக்கு பிடிக்கவில்லையெண்டா எனக்கென்ன. எனக்கு பிடிச்சிருக்கு. நீ எனக்கு ஒரு உதவி செய்யவேணும்

**கார்த்திக் -** என்ர உதவி உனக்கென்னத்துக்கடா

**கண்ணன் -** பகிடி விடாதை. நான் போறதை அம்மாக்கு மட்டும் சொல்லிப் போடாதை. நேரம் போட்டுது.

**கார்த்திக் -** கண்ணன் நான் சொல்லுறனெண்டு கோவிக்காத. உன்ர அம்மா கூலிவேலை செய்து எவ்வளவு கஸ்ரப்பட்டு உன்னைப் படிப்பிக் கிறா. உன்னில எவ்வளவு நம்பிக்கை வைச்சிருக்கிற நீ என்னென்டா இப்பிடி திரியிறாய்.

**கண்ணன் -** உன்ர பிரசங்கம் கேட்க எனக்கு நேரமில்லை நான் போட்டுவாறன்

## காட்சி - II

**கார்த்திக் -** கண்ணன் நான் பாஸ்பண்ணிட்டன்

**கண்ணன் -** என்னடா கார்த்திக் என்ர பெயரை காணேல்ல

**கார்த்திக் -** சொல்லவே கஸ்ரமா இருக்கடா அப்ப கண்ணன் நீ பாஸ் பண்ணலையோ

**கண்ணன் -** என்னடா கார்த்திக் நான் மட்டுமே பாஸ்பண்ணல. ஐயோ நான் என்னடா செய்யுறது ஐயோ................

**கார்த்திக் -** அப்பவும் நான் சொன்னனான் தானே அந்த சுரேஸ், தினேஸ் கூட சேராதையெண்டு. நான் சொல்லச் சொல்ல கேட்டனியே. இப்ப அழுது என்ன செய்யிறது அழாதையடா

**கண்ணன் -** ஐயோ நான் இப்ப என்னடா செய்வன் . அம்மாக்கு என்னடா பதில் சொல்லுறது.

**கார்த்திக்** - நடந்து முடிஞ்ச காரியத்துக்கு ஒண்டும் செய்யேலாது. இனி நடக்கப் போறதத் தான் யோசிக்கவேணும்.

**கண்ணன்** - என்னடா சொல்லுறாய் கார்த்திக்

**கார்த்திக்** - நான் சொல்லுறதை இனியாவது ஒழுங்காகக்கேள் திருப்பி படிச்சு Exam எழுது மனதை தளர விடாதே. உன்னால முடியும் எனக்கு நம்பிக்கையிருக்கு.

**கண்ணன்** - அம்மாவுக்கு என்னடா சொல்லுறது

**கார்த்திக்** - அம்மாவோட நான் கதைக்கிறன். அம்மா ஒண்டும் சொல்ல மாட்டா. அவா உன்மேல உயிரையே வைச்சிருக்கிறா.

**கண்ணன்** - கார்த்திக் இப்பவே நான் ஒரு முடிவுக்கு வந்திட்டன்

**கார்த்திக்** - என்னடா முடிவு?

**கண்ணன்** - அண்டைக்கு உன்ர சொல்லை கேட்டிருந்தா எனக்கிந்த நிலமை வந்திருக்காது. சத்தியமா சொல்லுறன் அம்மாவின்ர ஆசை கனவுகளை நிறைவேற்ற நான் கட்டாயம் படிப்பன்

**கார்த்திக்** - இதைத் தான்ரா உன்னட்ட நான் எதிர்பார்த்தனான்

**கண்ணன்** - என்ர இலட்சியம் நிறைவேறுமட்டும் நான் இனி எந்த வழியிலும் சேரமாட்டேன் கார்த்திக்

**கார்த்திக்** - எனக்கு இப்ப தான் சந்தோசமாயிருக்கடா கண்ணன் இப்பவே நீ பாஸ் பண்ணிட்டாயடா.

**செல்வி. செ. கயேந்தினி**
**2010** A/L

வெற்றி பெற வேண்டுமா?
தகவல் தொடர்புக்கு முதலிடம் கொடுங்கள்.
திறந்த மனதுடன் பேசுங்கள்.
பிறர் சொல்வதைக் காது கொடுத்துக் கேளுங்கள்.

- டேல் கார்னே

# மனை அலங்கரிப்பில் மலர்கள்

மனை அலங்கரிப்பில் மலர்கள் முதன்மையானவை. அழகான கவர்ச்சி யான மலர்களை ஒருவித ஒழுங்குக்கு உட்படுத்தும் போது அவை மேலும் கவர்ச்சியடைகின்றன. இயற்கை மலர் ஒழுங்கு, காய்ந்த மலர் ஒழுங்கு, செயற்கை மலரொழுங்கு என மூன்று வகைப்படும். காய்ந்த மலரொழுங்கு சோக நிகழ்வுகளில் பயன்படுத்தப்படுகிறது. இயற்கை மலர் ஒழுங்கு அழகு கவர்ச்சியை மட்டுமின்றி புத்துணர்வை அழிக்கக்கூடியது.

மலர் ஒழுங்கு செய்வதற்கு மலர்கள், பூந்தாங்கிகள் என்பன தேவையாகும். மலர்கள் புதியனவாகவும் கவர்ச்சியாகவும் இருத்தல் வேண்டும். இயற்கை மலரொழுங்கு ஆயின் ரோஜா, அந்தூரியம், ஒட்கிட் போன்றன வற்றைப் பயன்படுத்தலாம். இயற்கை மலர் தண்டுடன் வெட்டப்பட வேண்டும் இயற்கை மலர்கள் வாடாது இருக்க நீரில் டிஸ்பிறின் அல்லது சிறிதளவு சீனி சேர்த்தல் வேண்டும்.

மலர் ஒழுங்கைக் கவர்ச்சியாகக் காட்டுவதற்கு அழகிய பூந்தாளிகள் பயன்படுத்துதல் வேண்டும். பூந்தாளிகள் கபிலம், வெள்ளை, சாம்பல் போன்ற பொது நிறங்களில் இருக்கலாம். இந்நிறங்கள் எல்லா நிறப்பூச்சுக்களோடும் இசையக்கூடிய ஊசி முனைத் தாங்கிகளே சிறந்தனவாகும். மனையின் பகுதிகளுக்கேற்ப மலர் ஒழுங்கு வேறுபடும். வரவேற்பறையில் உயர்ந்த மலரொழுங்கு பயன்படுத்தப்படுகிறது. இங்கு தொங்கும் மலரொழுங்கும் பயன்படும். ஜன்னல்க் கரையோரங்களில் கொடிமலர் ஒழுங்கு வைத்துப் படரவிடுதல் சிறப்பானதாகும்.

சாப்பாட்டறையில் வைக்கப்படும் மலர்ஒழுங்கு பதிவானதாகவும் வாசனையற்றதாகவும் இருத்தல் வேண்டும். படுக்கை அறையில் வைக்கப்படும் மலரொழுங்கு எளிமையானதாகவும் வாசனையற்றதாகவும் இருத்தல் வேண்டும்.

இவ்வாறாக மனையை அழகாக வைத்திருப்பதற்கு மனை அலங்கரிப்பில் அழகிய மலர் ஒழுங்குகளை செய்ய மலர்கள் எமக்கு உதவுகின்றன.

"மனையலங்காரம் மாண்புறச் செய்வோம்
மனைப்பொருள் மாநிலம் நிலைபெறச் செய்வோம்"

ஆக்கம் :- **ச. லக்ஷிகா**
2010 A/L

# OUR SCHOOL LIBRARY

We have at present an up to date library with all facilities. It is on the ground floor of our new block. It was opened by our Director of Education Mr.P.Vigneswaran on 9th October 2008. We have a librarian in charge of the library. It is kept open from 8.30a.m to 2.30p.m on all working days. It is also kept open during holidays to facilitate the advanced level students to do reference work and borrow books for reading. We have magazines and newspapers in both Tamil and English..

We have more than three thousand books mostly Tamil literature books, English books, Religious books, dictionaries and encyclopedias.

Well wishers and old students presented a lot of books to our school library. Our Education Department gave us a good selection of books in almost all subjects including Science, Mathematics and Technology.

Our teachers encourage us to read more books and prepare our own tutorials and answers in all our subjects

"Reading makes a man perfect" is the motto of our library.

**By. Miss. S. Piriyatharsini**
2010 A/L (Arts)

# செல்வி. காத்தாயினி மகேந்திரகுமார்



கண்ணியம் மிக்க மாணவியாய் கருத்துடனே கல்வி கற்று
கடமையிலே உயர்ந்து நின்று பல போட்டிகளில் பங்கு பற்றி
பரிசில்கள் பல பெற்று பாடசாலைக்குப் புகழ் சேர்த்த
பண்பான மாணவிக்கு பாடசாலைச் சமூகத்தின் வாழ்த்துக்கள்.

அனைத்துப் பாடங்களிலும் அதியுயர் சித்தி பெற்று
மெய்கண்டான் வரலாற்றில் தடம் பதித்த மாணவிக்கு
கல்வியொடு கலைகள் யாவும் மேன்மேலும் சிறக்க.
அதிபரொடு ஆசிரியர் குழாம் அகமகிழ்ந்து வாழ்த்துகிறது.

# மெய்கண்டான் அன்னையின்

## புகழுறு பழைய மாணவர்கள்

## விபரத்தொகுப்பு

# சைவப்புலவர் சுப்பிரமணியம் செல்லத்துரை

## (ஓய்வுநிலை அதிபர்)



பித்தாவத்தை இளவாலையில் சுப்பிரமணியம் பத்தினிப் பிள்ளை தம்பதியினரின் மகனாக 1938-03-28 இல் பிறந்தார். இளவாலை மெய்கண்டான் வித்தியாலய நிறுவுநர் ஏழூர் இராசரத்தினம் அவர்களால் ஏடு தொடக்கப் பெற்று 1944 இல் பாலர் பிரிவில் சேர்ந்தார்.

1954 மார்கழியில் (S.S.C) சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் முதலாம் பிரிவில் சித்தியடைந்தார். 1955 இல் கொழும்பு வீரகேசரிப் பத்திரிகையில் பிழைதிருத்துபவராக (Proof Reader)ச் சேர்ந்து 1956 வரை கடமையாற்றினார்.

ஆசிரிய கலாசாலைப் புகுமுகத் தேர்வில் சித்தியடைந்து 1957 - 1958 இல் பலாலி ஆசிரியர் கலாசாலையில் பயிற்சி பெற்றுப் பயிற்றப்பட்ட ஆசிரியரானார். 1963 இல் சென்னை சைவசித்தாந்த மகா சமாசத்தின் சைவப்புலவர் தேர்வில் சித்தியடைந்து சைவப்புலவர் பட்டம் பெற்றார்.

1960 - 1968 மன்னார் சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி ஆசிரியராகவும், பெற்றார் , ஆசிரியர் சங்கச் செயலாளராகவும் மன்னார் இந்து சமய வளர்ச்சிச் சங்கச் செயலாளராகவும் பணி செய்தார்.

1969 - 1970 கீரிமலை நகுலேஸ்வர வித்தியாலய ஆசிரியராகவும் 1971 தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி ஆசிரியராகவும் சேவை செய்தார். 1971 - 1974 முதலாந் தரத் தலைமை ஆசிரியராகப் பதவி உயர்வு பெற்று வவு / மாங்குளம் அ.த.க. வித்தியாலய அதிபராகப் பணிபுரிந்தார்.

1975 - 1998 வரை இளவாலை மெய்கண்டானில் முதலாந் தர அதிபராகப் பணியாற்றினார். பாடசாலையை மகா வித்தியாலயமாக்கி க.பொ.த. உயர்தர வகுப்பைத் தொடக்கி மாடிக் கட்டிடம், விளையாட்டுத் திடல், திறந்தவெளியரங்கு, சிறுவர் பூங்கா, நிறுவுநர் சிலை முதலானவற்றை அமைத்துப் பாடசாலையை வளர்த்தார். 1998.03.27 இல் ஓய்வு பெற்றார்.

நாடகத்துறையில் அதிக ஈடுபாடு கொண்ட இவர் 1965இல் "ஆதவனே மன்னிப்பாய்" எனும் நாடகத்தை மன்னார் அரசாங்க உத்தியோகத்தர்களை நடிகர்களாகக்

கொண்டு மேடையேற்றி கலைக்கழக முதற் பரிசைப் பெற்றார். தொடர்ந்து நூற்றுக்கு மேற்பட்ட நாடகங்களை நெறிப்படுத்திப் பல பரிசுகளைப் பெற வைத்துள்ளார்.

உரை நாடகம், இசை நாடகம், நாட்டிய நாடகம், தாளலய நாடகம், சிந்துநடைக் கூத்து, தெருக்கூத்து, வில்லுப்பாட்டு முதலான பலவகைப் படைப்புக்களை ஆக்கியுள்ளார். 2007 அரங்கப் படையல்கள் என்னும் நாடக நூலையும் வெளி யிட்டுள்ளார்.

காடிவளை இந்து இளைஞர் சனசமூக ஸ்தாபகத் தலைவராகவும் (1952) போஷகராகவும் அதன் பொன் விழா வரை (2002) சேவை செய்துள்ளார். தெல்லிப்பழை வடமேற்கு கிராம அபிவிருத்திச் சங்கச் செயலாளராக (1974 - 1982) இருந்து மெய்கண்டான் வீதி அகலமாக்கி தாரிட்டு பஸ் ஓடச் செய்யவும் உழைத்துள்ளார்.

தெல்லிப்பழைக் கலை இலக்கியக்களம், ஆரிய திராவிடபாஷாபிவிருத்திச்சங்கம், பு. இ. சைவப்புலவர் சங்கம், யாழ் சைவபரிபாலனசபை, நாவலர் தர்மகர்த்தா சபை, அ. இ. திருமறைமன்றம், ஒல்லுடை ஞானவைரவர் ஆலய பரிபாலன சபை முதலான சமய சமூக நிறுவனங்களில் பொறுப்பான பதவிகளில் இருந்து சேவை செய்துள்ளார்.

காரைக்கால் வரலாறும் திருவூஞ்சலும், வாக்கும் வாழ்வும் , கோமாதா, அரங்கப் படையல், ஆத்மவிமோசனம், மங்கல தரிசனம், கல்வளை அந்தாதி உரை விளக்கம், காரைநகர் ஆண்டிக்கேணி ஐயனார் புராண உரை, சிவநெறி, அண்ணா பொன் ஏடு முதலான பல்வகை நூல்களின் ஆசிரியராவார்.

மெய்கண்டான் பொன்மலர், காங்கேயன் கல்வி மலர், சித்தாந்த ஞானக் களஞ்சியம், நகுலேஸ்வர குரு பவளமலர், கந்த பவளமலர், மெய்கண்டான் பவளமலர், நித்தியகல்யாணி, சைவப்புலவர்கள் வரலாறு, வலிவடக்குப் பிரதேச மலர் முதலான மலர்களின் ஆசிரியர்களில் ஒருவராகத் திகழ்ந்துள்ளார்.

கலைஞான கேசரி (2002), கலாபூஷணம் (2004), சித்தாந்தச் செல்வன் (2005), சிவநெறிப் புலவர் (2005), கலைச்சுடர் (2005) முதலான கௌரவப் பட்டங்கள் பலவும் பெற்றுள்ளார்.

சிறந்த சொற்பொழிவாளர், நாடக ஆசிரியர், கவிஞர், நூலாசிரியர், உரையாசிரியர். எழுத்தாளர், வானொலி தொலைக்காட்சிக் கலைஞர், கல்வி வளவாளர் முதலான பன்முகத் திறமைகள் படைத்தவர்.

⌘⌘⌘⌘⌘⌘

# மயிலங்கூடலூர் பண்டிதர் சி. அப்புத்துரை



ஈழத்தின் வடபாலுள்ள புனிதத் தலம் கீரிமலையின் தெற்கே சின்னத்தங்கம் தம்பதிகளுக்கு மகனாக 1928.04.23 பிறந்தவர் தான் பண்டிதர். சி.கதிரிப்பிள்ளை தலைமையில் இயங்கிய விழிசிட்டி சிவஞான வித்தியாசாலையில் ஆரம்பக்கல்வியை ஆரம்பித்து உயர்கல்வியை இளவாலை வடக்கு மெய்கண்டான் வித்தியாலயத்தில் தொடர்ந்தார். ஆரம்பத்தில் இடைக்காடு வீ. கணபதிப்பிள்ளை தலைமையில் நடந்த அப்பாடசாலை பின்னர் காலத்திற்குக் காலம் தலைமை மாறியது. பண்டிதர் வ.நடராஜன், பண்டிதர் சுப்பையா முதலியோரிடம் கற்கும் வாய்ப்பும் கிடைத்தது. 1944ஆம் ஆண்டு இந்தக் காலத்தைய உயர் வகுப்புப் பரீட்சையாகிய சிரேஸ்ட பாடசாலைத் தராதரப்பத்திரப் பரீட்சையிற் சித்தியெய்தினார்.அதன் பின் ஆங்கில மொழித் தேர்ச்சியை விரும்பித் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி யில் சேர்ந்து படித்துக் கொண்டிருந்தார். இந்தவேளை பிரத்தியேகமாக ஆசிரியர் தராதரப்பத்திரப் பரீட்சை எடுக்கக் கூடிய நிலை பிரகடனப்படுத்தப் பட்டது. அப்பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைந்தவர் செயல்முறைப்பரீட்சைக்கு தோற்ற வேண்டி இளவாலை வடக்கு மெய்கண்டானில் பயிற்சி ஆசிரியராகக் கற்பிக்கத் தொடங்கினார். பாடசாலை நிர்வாகத்தினரின் பணிப்பின் பெயரில் தொடர்ந்தும் அங்கு ஆறு மாதம் கற்பித்துக் கொண்டிருந்தார். பின்னர் வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தில் சேர்ந்து கற்கத் தொடங்கினார். அந்த வேளை அரசாங்க ஆசிரியராகக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டபடியால் 1949.11.01 தொடக்கம் பதவியை ஏற்று வவுனியா அரசினர் கனிஸ்ட வித்தியாலயத்தில் ஆசிரியரானார். 1952.01.01 தொடக்கம் பலாலி அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி பெறும் ஆசிரிய மாணவனாகி 1951.12.31 வரை அங்கு ஆசிரியப் பயிற்சி பெற்றார். பயிற்சிக் கல்லூரியில் சமூகக்கல்வி விரிவுரையாளர் ஆ.வேதநாயகம் அவர்களுடனாகி நாடகங்களில் நடித்து அதிபர் சவரிமுத்துவிடமிருந்து பரிசில் பெற்றுள்ளார்.அந்தப் பயிற்சி பின்னே அவருக்கு உதவியுள்ளது. பயிற்சி நிறைவெய்தியதும் 1954.01.01 தொடக்கம் வட்டவலை அரசினர் சிங்களத் தமிழ்ப்பாடசாலை, தலாத்து ஓயா மத்திய மகா வித்தியாலயம், கலாவரா சிரேஸ்ட பாடசாலை, கம்பளை வித்தியாயலம் முதலிய மலைநாட்டுத் தமிழ்ப் பாடசாலைகளிலும் தையிட்டி கணேச வித்தியாசாலை, கீரிமலை நகுலேஸ்வர வித்தியாலயம் முதலியனவற்றிலும் உதவி ஆசிரியராகப் பணிபுரிந்துள்ளார்.

இந்த வேளையில் ஏழாலையைச் சேர்ந்த பண்டிதர், பண்டிதர் மாணவர் கழகத்தில் 1963 ல் சேர்ந்து இலக்கண வித்தகர் இ. நமசிவாய தேசிகர், இலக்கிய கலாநிதி பண்டிதமணி மு. கந்தையா, சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி, பண்டிதர் செ. துரைசிங்கம், பண்டிதர் ச. பொன்னுத்துரை, பண்டிதர் க. நாகலிங்கம், வித்துவான் க. கந்தசாமி முதலானோரிடம் கற்றுப் பண்டிதர் பரீட்சையிலும் தேர்ச்சி பெற்றார். சென்னை சைவசித்தாந்த மகா சமாசத்தால் நடாத்தப்பட்ட சைவப்புலவர் தேர்விலும் சித்தி பெற்றார்.

பண்டிதர் மாணவர் கழகத்தினர் பண்டிதன் எனப் பெரிய கையெழுத்துப் பிரதியின் ஆசிரியராக பண்டிதர் அப்புத்துரை பணிபுரிந் துள்ளார். 1964ல் அதிசிறப்பு மலராக அச்சுப் பதிக்கப்பட்டு வெளிவந்ததும் உண்டு.

1971-08-01 தொடக்கம் பதவி உயர்வு பெற்ற பண்டிதர் சி அப்பத்துரை தையிட்டி கணேச வித்தியாலயத்தில் நியமனம் பெற்றார். மயிலிட்டி மக்களின் விருப்பின் பெயரில் ஆறு மாத காலம் சேவையுடனாக மாற்றம் பெற்று மயிலிட்டி வடக்கு அமெரிக்க மிஷன் பாடசாலைக்கு 1972.02.01 தொடக்கம் பணியாற்றச் சென்றார். குப்பிழான் தயிலான் கடவை அருள்மிகு ஞான வைரவர் ஆலய பரிபாலன சபையின் செயலாள ராகவும் பணிபுரிகின்றார்.

இவர் அமுதமொழி, நற்சிந்தனை நாற்பது, கொட்டாஞ்சேனை வரதராசவிநாயகர் இரட்டைமணிமாலை, ஒல்லுடை அருள்மிகு ஞானவைரவர் மும்மணிமாலை, நகுலேஸ்வரர் வரலாறும் நான்மணிமாலை , நகுலேஸ்வரம், அறுபத்துமூவர் சைவசமய வாழ்வியற் சிந்தனைகள், மயிலங்கூடல் அருள்மிகு ஞானவைரவ சுவாமிகள் அருள்விருத்தம், மகத்துவ கிரியை விளக்கம், திருமணக் கிரியை விளக்கம், தமிழர் திருமணம், அபரக்கிரியை விளக்கம், தெல்லிப்பளைச் சைவாலயங்கள், இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஈழத்துத் தமிழ்ப் புலவர்கள் வரலாறு, முதலாம் பாகம் , இரண்டாம் பாகம் முதலான புத்தகங்களை வெளியிட்டுள்ளார். தெல்லிப்பளை சைவாலயங்கள் என்ற சைவசமய நூலுக்கு இந்துசமய கலாசார அலுவல்கள் அமைச்சுத் திணைக்களத்தினால் 1997ம் ஆண்டு பரிசு பெற்றது. அமுதமொழி என்ற நூல் வடக்கு கிழக்கு மாகாணத்தில் 2002 ம் ஆண்டு பரிசில் பெற்றுள்ளது. 2004ல் இலங்கை அரசின் கலாபூஷண விருது கிடைத்தது.

⌘⌘⌘⌘⌘⌘

# தம்பு கனகசுந்தரம்



மயிலங்கூடல் இளவாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு.திருமதி தம்பு தம்பதிகளின் மகனாக கனகசுந்தரம் அவர்கள் 1927ம் ஆண்டு பிறந்தார். இவர் தனது ஆரம்பக்கல்வியை யா/ இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் பெற்றுக் கொண்டார். பாடசாலையில் கல்வி பயின்ற காலங்களில் பேச்சுப் போட்டிகளில் பரிசு பெற்றார். 1942ம் ஆண்டு S.S.Cபரீட்சைக்கு தோற்றி சித்தி பெற்றார். 1966ம் ஆண்டு இலண்டன் பல்கலைக்கழகத்தில் B.A பட்டம் பெற்றார். 1983ம் கல்வி டிப்போளமா பட்டம் பெற்றார்.

1967ம் ஆண்டு தொடக்கம் 1985ம் ஆண்டு வரை கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தில் பிரதான பதிப்பாசிரியர், எழுத்தாளராக பணியாற்றினார். கொழும்பு தமிழ்ச்சங்கத்தில் பணிபுரிந்துள்ளார். சாரணியத்தின் தலைமைச் செயலக ஆணையாளராகவும், சென்ஜோன்ஸ் முதலுதவி செஷஞ்சிலுவை சங்கம் போன்றவற்றில் பணியாற்றியுள்ளார்.

கலாசார அமைச்சில் கலாபூசணம் பட்டம் பெற்றார். அகில இலங்கை J.P பட்டம் இந்துசமய கலாசார அலுவல்கள் அமைச்சினால் தமிழ்மணி, கொழும்பு தமிழ்ச்சங்க சான்றோன் ஆகிய பட்டங்களைப் பெற்றார். இவர் சிறுவர் பாடல்கள் சிறுவர்கதைகள் தமிழ் சிங்கள இலக்கிய உறவு, சரளதெமள, ஈழநாடடுப் புலவர்களின் கவித்திறம் செந்தமிழ் வளம் பெற வழிகள் போன்ற நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். 2004ம் ஆண்டு பல்கலைக்கழகத்தில் பன்முக பணிகள் பற்றிய ஆய்வினை மேற்கொண்டார்.

# திருமதி கிருபாசக்தி தர்மதாசன்



மயிலிட்டி காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட ஏழூர் இராசரத்தினம் சின்னப்பிள்ளை தம்பதிகளின் ஏக புதல்வியாக கிருபாசக்தி அவர்கள் 1940.11.02ம் திகதி பிறந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியை 1946ம் ஆண்டு தந்தை உருவாக்கிய பாடசாலையான யா/இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் தொடர்ந்தார். 1951 ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றி சித்திபெற்றார். 1960ம் ஆண்டு பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகி 1964ம் ஆண்டு சிறப்பு கலைமாணியாக வெளியேறினார். 1983ம் ஆண்டு யாழ் பல்கலைக்கழகத்தின் பட்டப்பின் கல்வி டிப்ளோமாவை முடித்துக் கொண்டார்.

இவர் 1976ம் ஆண்டு நு / வெலிமடை முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் முதல் நியமனம் பெற்றுக் கொண்டார். 1979ம் ஆண்டு தொடக்கம் 2000 வரை மயிலிட்டி கலைமகள் மகாவித்தியாலயத்தில் சேவையாற்றி ஓய்வு பெற்றார்.இவர் 1972.08.20ம் திகதி சண்முகம் சிவபாக்கியம் தம்பதிகளின் புதல்வன் திரு தர்மதாசன் அவர்களை மணம் முடித்தார். கணவர் ஆங்கிலப்பயிற்சி, தமிழ்ப்பயிற்சி ஆசிரியர் ஆவார். இவர்கள் இருவரும் மனமுவந்து இப்பாட சாலைக்கு விளையாட்டு மைதானத்திற்கு 27 பரப்புக் காணியை வழங்கினார்கள். இவர் பாடசாலைக்குச் செய்த சேவையின் காரணமாக பாடசாலை மேலும் வளர்ச்சி கண்டு நிற்கின்றது.

இவர் காஞ்சிமாவடி வைகும் செவ்வேள் என்னும் மாவைக் கந்தன் வரலாற்று நூலை 1989 ம் ஆண்டு பங்குனி மாதம் எழுதி வெளியிட்டார். இதனைவிட புவியியல் சஞ்சிகைகளாக தமிழ் தம் புவியியல் அறிவு, புவிவெளியுருவாயில், காற்றடிப்பு சம்பந்தமான கட்டுரைகளையும் எழுதி வெளியிட்டுள்ளார்.

## திருமதி அன்னலட்சுமி கனகசபை



பத்தாவத்தை இளவாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. திருமதி சின்னத்தம்பி தங்கம் தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரியாக அன்னலட்சுமி அவர்கள் 1926-08-21ம் திகதி பிறந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியைக் கற்பதற்கு 1932ம் ஆண்டு யா / இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் இணைந்து கொண்டார். 1942ம் ஆண்டு S.S.C பரீட்சையில் தோற்றி சித்திபெற்றார். நல்லூர் ஆசிரிய கலாசாலையில் 1944 - 1946ம் ஆண்டு வரை பயிற்சி பெற்று பயிற்றப்பட்ட ஆசிரியராக வெளியேறினார். 1954ம் ஆண்டு தொடக்கம் 1958ம் ஆண்டு வரை வீமன்காமம் மகா வித்தியாலயத்தில் சேவையாற்றி ஓய்வு பெற்றார்.

## செல்வி ஜெயலட்சுமி தம்பாபிள்ளை

செல்வி ஜெயலட்சுமி தம்பாபிள்ளை அவர்கள் கருகம்பனையில் வசித்த வேளை 1954ம் ஆண்டு யா/இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் இணைந்து கற்றுக் கொண்டார். 1975-1976 காலப்பபகுதியில் பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் விஞ்ஞானம் (விசேடபயிற்சி) பெற்றார். யா/நடேஸ்வராக் கல்லூரியில் பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியராகக் கடமையாற்றினார். தான் ஓய்வு பெறும் வேளையில் யா/ கீரிமலை நகுலேஸ்வரா மகா வித்தியாலயத்தில் கடமையாற்றி 20.07.2003 அன்று ஆசிரிய சேவையிலிருந்து ஓய்வு பெற்றார்.

# திரு. வைத்திலிங்கம் செகராசசிங்கம்

## J/P (Rtd C.S.M, AMLT(Lond)

### பசுமைப்புரட்சியாளன் உள்ளத்திலிருந்து

எனது தாய்மொழியை இந்த வித்தியாலயத்தில் 1932-1934 ஆண்டு வரை கல்வி கற்றேன். பின்பு புனித ஹென்றி அரசர் கல்லூரியிலும் மட்டக்களப்பு புனித சென் மைக்கேல் கல்லூரியிலும் கற்க அரிய வாய்ப்பு கிடைத்தது. பல வருடங்களுக்கு முன் சைவப்புலவர் உயர் திரு.சு.செல்லத்துரை அவர்கள் என்னை எனது மாமனார் காலம் சென்ற சுப்பிரமணியம் கனகசபை J.P அவர்களால் கட்டப்பட்ட மண்டபத்தில் இடம்பெற்ற ஒரு ஞாபகார்த்த வைபவத்திற்கு அழைத்திருந்தார்.

நேரம் இருந்தபடியால் உயர்திரு ஏழூர் இராசரத்தினம் அவர்களின் மண்டபத்தின் முகப்பு வாசல் படியில் உட்கார்ந்து இருந்தேன். அரச மரத்தின் தென்றல் காற்றும், சரஸ்வதி தாடாகமும், அமரர் உயர் திரு ஏழூர் இராசரத்தினத்தின் பொலிவும் தோற்றமும் அவரின் அயராத முயற்சியையும் திருவெம்பாவைக் காலங்களில் (காலம் சென்ற மயில்வாகனம் வீணை வாசிக்க, பிள்ளைகள் திருவெம்பாவை பாடல்களை) வீடு வீடாக பாடி 5,10 சதமாக அன்னார் சேர்த்த முயற்சியையும் ஞாபகமூட்டியது. சிறிய பாடசாலை இன்று மகா வித்தியாலயமாகத் திகழும் காட்சி அன்னாரின் புனித சேவையின் மகத்துவத்தை வெளிப்படுத்தி நிற்கின்றது. மேலும் ஓங்கி வளர மனமார வாழ்த்துகின்றேன். மூன்று கல்லூரிகளிலும் கற்றதால் நற்பண்புடை மாண்புமிக்க சீலனாயாக்கிய பெருமை இந்த வித்தியாலயங்களைச் சாரும்.

## செல்வி நகநந்தினி சங்கரப்பிள்ளை



புத்தாவத்தை இளவாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு.திருமதி சங்கரப்பிள்ளை தம்பதிகளின் புதல்வியாக நகநந்தினி அவர்கள் 1955ம் ஆண்டு பிறந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியைக் கற்பதற்காக 1958ம் ஆண்டு யா/ இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் இணைந்து கொண்டு தரம் 5 வரை கற்றார். இவர் 1984ம் ஆண்டு தொடக்கம் 1992 வரை பெரியவிளான் றோ.க.த.க. பாடசாலையில் கல்வி கற்பித்தார். 1989ம் ஆண்டு வரை உதவி ஆங்கில ஆசிரியராக ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்தில் கற்பித்தார். 1992-1994 வரை ஆசிரிய பயிலுநராகப் பலாலி ஆசிரிய கலாசாலையில் பயிற்சி பெற்றார். 1995 - 1996 வரை யா/ தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் பணிபுரிந்தார். 1996-1998 வரை யா / இளவாலை புனித ஹென்றி அரசர் கல்லூரியில் பணி புரிந்து ஓய்வு பெற்றார். இவர் ஆங்கிலக் கவிதைகள் புனைவதில் வல்லவர் PEN, NICE போன்ற கவிதை நூல்களை வெளியிட்டுள்ளார்.

## திரு. தம்பிப்பிள்ளை கந்தசாமி

ஏழாலை கிழக்கு ஏழாலையில் வசித்து வருபவரும் கருகம்பனை காங்கேசன்துறையைப்பிறப்பிடமாகக் கொண்டவருமான திரு. தம்பிப்பிள்ளை கந்தசாமி அவர்கள் 1928ம் ஆண்டு பிறந்தார். தனது கல்வியைத் தொடர்வதற்காக 1934ம் ஆண்டு யா/இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் இணைந்து கொண்டார். இவர் 1944ம் ஆண்டு S.S.C பரீட்சையிலும் சித்தி அடைந்தார். 1974-1948 காலப்பகுதியில் கோப்பாய் பலாலி ஆசிரியப் பயிற்சிக் கலாசாலையில் தமிழ்மொழி மூல ஆசிரியப் பயிற்சியும் 1963-1964 காலப்பகுதியில் ஆங்கில மொழி மூலப்பயிற்சியும் (பலாலி) பெற்றார். ஆசிரிய சேவையிலிருந்து 1988ம் ஆண்டு ஓய்வு பெற்றார்.

## திரு. பொன்னம்பலம் சிவகுருநாதன்



சித்திரமேழி இளவாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு.திருமதி பொன்னம்பலம் தம்பதிகளின் புதல்வனாக சிவகுருநாதன் அவர்கள் 1950-02-01ம் திகதி பிறந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியைப் பெறுவதற்காக 1956ம் ஆண்டு யா / இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் இணைந்து கொண்டார். 8ம் தரத்தில் இடம் பெற்ற N.P.T.A. பரீட்சையில் முதற் பிரிவில் சித்தி அடைந்தார். 1983ம் ஆண்டு முதல் 1985 ம் ஆண்டு வரை யாழ் பல்கலைக் கழகத்தில் கற்று விஞ்ஞானப் பட்டதாரியாக வெளியேறினார். 1995ம் ஆண்டு யாழ் பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் கல்வி டிப்ளோமாவை முடித்துக்கொண்டு 1996ம் ஆண்டு வெளியேறினார். ஆசிரிய நியமனம் பெற்று பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் 2 வருடங்கள் பயிற்சி பெற்றார். பல்வேறு பாடசாலைகளில் பல வருடங்கள் சேவையாற்றிய பின்னர் யா / புனித ஹென்றியரசர் கல்லூரியில் 13 வருடங்கள் ஆசிரியராகப் பணிபுரிந்து கடந்த 5 வருடங்களாக பிரதி அதிபராகச் செயலாற்றி 2007.01.31ம் திகதி ஓய்வு பெற்றுள்ளார்.

## தம்பிஐயா அன்ரன் பாலசிங்கம்



மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியையும் கொழும்பு சட்டக் கல்லூரியில் சட்டத்தையும் பயின்ற இவர் இளவாலையில் சட்டத்தரணியாகவும் பிரசித்த நொத்தாரிசாகவும் கடமையாற்றி பின்பு யாழ். மாவட்ட நீதிபதியாகவும், திருகோணமலை மாவட்ட நீதிபதியாகவும், கிழக்கு மாகாண உயர் நீதிமன்ற நீதிபதியாகவும் பதவி வகித்து ஓய்வு பெற்றுள்ளார்.

## திரு. பாலசுப்பிரமணியம் தர்மபாலா



திரு.பா.தர்மபாலா அவர்கள் 1949ம் ஆண்டு பிறந்தார். இளவாலை வடக்கு இளவாலையைச் சேர்ந்த இவர் 1954ம் ஆண்டு யா/ இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் இணைந்து கற்க ஆரம்பித்தார். 1959ம் ஆண்டு புலமைபரிசில் பரீட்சையிலும் சித்தி அடைந்தார். 1964ம் ஆண்டு தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியில் கற்ற இவர் க.பொ.த சாதாரணதரத்தில் சித்தி அடைந்தார். 1968-1971 காலப்பகுதியில் தொழில்நுட்பக் கல்லூரியில் தொழிற்கல்வியை மேற்கொண்டார். 1974-2009 ம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கை போக்குவரத்துச் சபையில் பொறியிலாளராக கடமையாற்றி 22.07.2009 அன்று ஒய்வு பெற்றார். தற்போது ஆனைவிழுந்தான் விநாயகர் ஆலயத்தின் தலைவராக செயற்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

## திருமதி சுகுணாதேவி கந்தவனம்



சுருகம்பனையைப் பிறப்பிடமாகக் கொண்ட சுகுணாதேவி கந்தவனம் அவர்கள் 1945ம் ஆண்டு பிறந்தார். தனது ஆரம்பக்கல்வியைத் கற்பதற்காக 1950ம் ஆண்டு இப்பாடசாலையில் இணைந்து கொண்டார். 1957ம் ஆண்டு தரம் 8 புலமைப்பரிசில் பரீடசையில் சித்தியடைந்தார். பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் கணிதம் (விசேட பயிற்சி) பெற்றார். பல பாடசாலைகளில் கடமையாற்றி 2005ம் ஆண்டு யா/இந்து மகளிர் கல்லூரியில் ஓய்வு பெற்றார்.

மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் கற்பித்த காலத்தில் மேடை யேற்றப்பட்ட எண்கோல நடனம், புள்ளிவிபரவியல் வில்லுப்பாட்டிற்கான கருவாக் கத்தினை வழங்கியுள்ளார். யா/தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் கற்பித்த வேளை மாலை வேளையில் இயங்கிய மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் க.பொ.த சாதாரண மாணவர்களுக்கு கணிதபாடம் கற்பித்தார். 1985 - 1992 காலப்பகுதியில் பகுதிநேர சேவைக்கால ஆலோசகராகக் கடமையாற்றினார்.

# அமரர் வித்துவான் வ. செல்லையா



சித்திரமேழி இளவாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட வயிரவப்பிள்ளை செல்லையா அவர்கள் 1920.04.15 இப்பூவுலகில் பிறந்தார். யா / இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் கல்வி கற்று 1942ம் ஆண்டு S.S.Cயில் சித்தி அடைந்தார். இவர் 1960ம் ஆண்டு சென்னை சர்வ கலாசாலையில் வித்துவான் பட்டம் பெற்றார். யா / இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் அதிபராக கடமையாற்றிய காலப்பகுதியில் (1971 - 1976) ஆரம்பக்கல்வி ஒருங்கிணைந்த பாட முன்னோடிப் பாடசாலையாக உருவாக் கப்பட்டது. இவருக்கு கலாபூஷணம் ஞானசிரோமணி போன்ற கௌரவப் பட்டங்களை கலாசார அமைச்சு வழங்கிக் கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது.

1963ல் யா/ இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் சைவ மகாநாடு ஒன்றை நடாத்தினார். 1964 இல் மட்டக்களப்பில் அகில இலங்கைச் சைவப்புலவர் மகாநாட்டை நடாத்தினார்.

1966இல் கோலாலம்பூரில் நடைபெற்ற உலகத்தமிழ் ஆராய்ச்சி மகா நாட்டில் அகில இலங்கை சைவப்புலவர் சங்கப் பிரதிநிதியாகக் கலந்து கொண்டார். 1967இல் நாவலப்பிட்டியில் ஆத்மஜோதி முத்தையாவின் ஆதரவோடு சைவமகாநாடு நடாத்தினார். அதே ஆண்டு இளவாலை மெய்கண்டான் வித்தியாலயத்தில் நாவலர் விழாவை நடாத்தினார். இவ்விழாவில் நாவலர் உருவப்படம் ஊர்வலமாக எடுத்துவரப்பட்டது.

1968இல் கொழும்பு இந்துக் கல்லூரியில் அகில இலங்கைச் சைவப் புலவர் சங்க மகாநாட்டை நடாத்தினார். 1971இல் யாழ்ப்பாணத்தில் நடந்த உலகத்தமிழ் மகாநாட்டில் பிரதிநிதியாக கலந்து கொண்டார். யா / இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் முதன் முதலாக இல்லங்கள் வகுத்து விளையாட்டுப் போட்டிகள் நடத்தினார். அவ்வாண்டு பாலர் வகுப்பு பொருட்காட்சியும் கலைவிழாவும் சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் அணி வகுப்பு ஒன்றையும் நடாத்தினார். இலங்கை மெய்கண்டான் ஆதீனத்தோடு இணைந்து 1975 இல் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் சைவ சித்தாந்த எழில் ஞானப் பெருவிழாவை நடத்தினார். 1979இல் மலேசிய சுற்றுப்பிரயாணம் ஒன்றை மேற்கொண்டு அங்கு சொற்பொழிவு ஆற்றினார்.

சைவநீதி என்ற மாத சஞ்சிகைக்கு கௌரவ ஆசிரியராகி அதன் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவினார்.

2001ம் ஆண்டு வைகாசி மாதம் கொழும்பில் "சைவசித்தாந்த எழில் ஞானப் பெருவிழா" சிறப்புற நடைபெற நெறிப்படுத்தித் தலைமைதாங்கி நடத்தினார்.

2002ம் ஆண்டு மார்கழி மாதம் கலாசார அமைச்சினால் இவருக்கு கலாபூஷணம் விருது வழங்கப்பட்டது. அன்னார் 2003ம் ஆண்டு மார்ச் மாதம் 6ம் திகதி வியாழக்கிழமை முற்பகல் சிவபதம் அடைந்தார்.

## அமரர் திருமதி பரமேஸ்வரி பார்வதிநாதசிவம்



மயிலங்கூடல் இளவாலையை வசிப்பிடமாகக் கொண்ட திரு திருமதி பிள்ளையினார் தம்பதிகளிற்கு 1936.07.10 மகளாகப் பரமேஸ்வரி அவர்கள் பிறந்தார். இவர் யா/இளவாலை மெய்கண்டானில் கல்வி கற்றுப்பின் புலவர் பார்வதிநாதசிவம் அவர்களை திருமணம் செய்து கொண்டு இனிதே இல்லறம் நடாத்தி வந்தார். இவர் திருநெல்வேலி ஆசிரியர் கலாசாலையில் ஆசிரிய பயிற்சியை முடித்துக் கொண்டு யா/கீரிமலை நகுலேஸ்வர வித்தியாலயத்திலும் யா/வீமன்காமம் மகா வித்தியாலயத்திலுமாக 37 ஆண்டுகளும் சேவையாற்றி 1998ம் ஆண்டு ஓய்வு பெற்றார். இவர் 2002ம் ஆண்டு பத்தாம் மாதம் 03ம் திகதி அமரத்துவம் அடைந்தார்.



## அமரர் சுப்பிரமணியம் நமசிவாயம்

திரு. திருமதி சுப்பிரமணியம் தம்பதிகளுக்கு 1925-09-05 அன்று மகனாகப்பிறந்தார். இவர் இயல்பாகவே பாடும் ஆற்றல்கொண்டவர். இப்பாடசாலையில் ஆரம்பக் கல்வியைக்கற்றார். கல்வி கற்ற காலத்தில் பண்ணிசைப் போட்டிகளில் பங்குபற்றி தங்கப் பதக்கம் வென்றுள்ளார். ஆசிரியராக இருந்த காலத்தில் மாணவர்களை பண்ணிசையில் பயிற்றுவித்து பல தடவைகள் பதக்கங்கள் வெல்ல வழிசமைத்தார். 2004ம் ஆண்டு கலாபூஷணம் விருது பெற்றார். இவர் இறைபதம் அடைந்தாலும் இவருடைய சேவை இன்றும் நிலைபெற்றுள்ளது.

# அமரர் திருமதி சாந்தினி ஆனந்தராசா



மயிலங்கூடல் இளவாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. திருமதி கந்தசாமி தம்பதிகளின் சிரேஸ்ட புதல்வியாக 1964 ம் ஆண்டு சாந்தினி அவர்கள் பிறந்தார். இவர் தரம் ஒன்று தொடக்கம் இப்பாடசாலையில் கல்வி கற்று க.பொ.த.சாதாரணதரப் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றைப் பெற்றதுடன் முதன் முறையாக 1980ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட க.பொ.த உயர்தரக் கலைப்பிரிவில் கல்வி பயின்று சிறந்த பெறுபேற்றை (A B 2C) பெற்று முதன் முதலாக பல்கலைக்கழகத்திற்கு சென்ற பெருமையும் பெற்றார். வலைப்பந்தாட்ட அணி, எறிபந்து அணி ஆகியவற்றில் சிறந்த வீராங்கனையாகச் செயற்பட்டு பாடசாலை அணி வெற்றி பெறக்காரணமானதுடன் மாணவ தலைவியாக இருந்தும் செயற்பட்டார்.

இவர் பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் காலத்திலேயே இவருக்கு ஆசிரிய நியமனமும் கிடைக்கப் பெற்றது. 1988.05.16 ல் கலைப்பட்டதாரியாக வெளியேறினார். 1988.08.31இல் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பட்டமும் பெற்றார். நுவரெலியா கோல்புறூக் தமிழ் மகா வித்தியாலயத்தில் கடமையாற்றி பின்னர் 1990.02.01 தொடக்கம் இளவாலை மெய்கண்டான் மகா வித்தியால யத்தில் கடமையைப் பொறுப்பேற்றார். இவர் இப்பாடசாலையில் கல்வி கற்பிக்கும் காலத்தில் தமிழ்மொழி ஆசிரியராக க.பொ.த உயர்தரம் வரை கல்வி கற்பித்தார். க.பொ.த உயர்தரப் பரீட்சையில் மாணவர்கள் சிறந்த பெறுபேறுகள் பெறுவதற்கு அயராது பாடுபட்டார். தமிழ்த்திறன் போட்டிகளிலும் நாடகங்களிலும் மாணவர்கள் வெற்றிபெறுவதற்கு அயராது பாடுபட்டார். இப்பாடசாலையில் வலைப்பந்தாட்ட அணி, கரப்பந்தாட்ட அணி, உதைபந் தாட்ட அணி ஆகியவற்றை வழிநடத்தி மாவட்ட மாகாண மட்டம் வரை சென்று வெற்றிபெற வைத்த பெருமை இவரையும் சாரும். ஆசிரியர் தின நிகழ்வில் இப்பாடசாலை ஆசிரியர்களின் வலைப்பந்தாட்ட அணியில் இருந்து கோட்ட மட்டத்தில் வெற்றிக் கிண்ணம் பெறக் காரணமானதுடன் பல நாடகங்கள், நிகழ்ச்சிகளை செய்து பாராட்டுப் பெற்றவர். இவர் இப்பாடசாலையில் சேவைக் காலத்தில் இருக்கும் போது நோய் வாய்ப்பட்டதன் காரணமாக 13.12.2003ம் திகதி இறைவனடி சேர்ந்தார். இவரின் மறைவு மெய்கண்டானிற்கு பேரிழப்பாகும்.

# அமரர் திருமதி சாரதாதேவி இரத்தினேஸ்வரன்



இளவாலை வடக்கு இளவாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு.திருமதி நவரத்தினம் தம்பதிகளிற்கு 1944 ம் ஆண்டு மகளாகப் பிறந்தார். இவர் 1949ம் ஆண்டு யா/இளவாலை மெய்கண்டானில் ஆரம்பக் கல்வியைக் கற்பதற்காக இணைந்துகொண்டார். 1959ம் ஆண்டு SSC பரீட்சையில் சித்தியடைந்தார். 1984-1985 காலப்பகுதியில் யா/கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கல்லூரி யில் இணைந்து இந்து சமய ஆசிரியப் பயிற்சியையும் பெற்றுக் கொண்டார். 1987ம் ஆண்டு முதல் யா / இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் ஆசிரியராக நியமனம் ஏற்றார். என் கடன் பணி செய்து கிடப்பதே என்ற சிந்தனையை மனங்கொண்டவராக சைவசமயத்தை சுவையாகக் கற்பித்துக் கொண்டிருந்த ஆசிரியப் பெருந்தகையை யுத்தவடுக்கள் வதைத்து விட்டன. 1995ம் ஆண்டு மார்கழி மாதம் 04ம் திகதி அவர் எம்மை விட்டுப் பிரிந்தது சைவத்திற்கும் மெய்கண்டான் சமூகத்திற்கும் பேரிழப்பாகும்.

# அமரர் திரு. ஏழூர்நாயகம் ஈஸ்வரம்



இளவாலை வடக்கு இளவாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. திருமதி ஏழூர்நாயகம் தம்பதி களிற்கு மகனாக 1955ம் ஆண்டு பிறந்தார். 1960ம் ஆண்டு யா/இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் தரம் ஒன்றில் இணைந்து கற்றார். 1975-1978ம் ஆண்டு வரை யாழ் தொழில்நுட்பக் கல்லூரியில் நிலஅளவை யாளர், படவரைஞர் போன்ற உயர்கல்விகளைக் கற்று மன்னார் கச்சேரியில் புள்ளி விபர ஆய்வாளராக கடமையாற்றினார். இவர் இளவாலை வாசிகசாலை அங்கத்தவராகவும் செயற்பட்டுள்ளார். 1987ம் ஆண்டு இறைவன் திருவடிகளை அடைந்தார்.

# அமரர் செல்வி நகுலநாயகி தம்பாப்பிள்ளை

திரு.திருமதி தம்பாபிள்ளை தம்பதிகளுக்கு மகளாகப் பிறந்த செல்வி நகுலநாயகி தம்பாபிள்ளை அவர்கள் யா/ இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் இணைந்து கல்வி கற்று 1957ம் ஆண்டு S.S.C பரீட்சையில் சித்தி அடைந்தார். பாடசாலையில் கல்வி பயின்ற காலங்களில் ஆங்கிலப் போட்டியில் பங்குபற்றி முதலிடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. 1977-1978 காலப்பகுதியில் பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் விஷேட பயிற்சி (நெசவு) பெற்றுக் கொண்டார்.

இவர் பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலையில் பயிற்றப்பட்ட நெசவு ஆசிரியையாகக் கடமையாற்றி 1998ம் ஆண்டு ஓய்வு பெற்றார். 2005 ம் ஆண்டு 06ம் மாதம் 18ம் திகதி இறைபதம் அடைந்தார்.

# அமரர் திரு. சிறிரங்கம் பொன்னையா

மயிலங்கூடல் இளவாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. திருமதி சிறிரங்கம் தம்பதிகளின் புத்திரனாக பொன்னையா அவர்கள் 1922.07.25ம் திகதி பிறந்தார். இவர் தனது கல்வியைப் பெறுவதற்காக 1939ம் ஆண்டு மெய்கண்டானில் இணைந்து கொண்டார். இவ்வாண்டில் J.S.C. பரீட்சையில் சித்தி பெற்றார். 1942ம் ஆண்டு S.S.C. பரீட்சையில் சித்தி பெற்றார். பாடசாலையில் கல்வி பயின்ற காலங்களில் பண்ணிசை, தேவாரப் போட்டிகளில் பங்கு பற்றி வெற்றி பெற்றார். நவராத்திரி காலத்தில் திரு ஏழூர் இராசரத்தினத்துடன் சேர்ந்து பாடசாலைக்கு நிதி திரட்டினார். 1949ம் ஆண்டு சைவாசிரிய கலாசாலையில் பயிற்சி பெற்று வெளியேறினார். பதுளை நாவலர் வித்தியாலயத்தில் ஆசிரியராகவும் உபஅதிபராகவும் பணியாற்றினார். இவ்வித்தியாலயம் மூலம் தமிழ்த் தொண்டுகளும் செய்து வந்தார். தமிழர் ஆசிரியர் சங்கத்திலும் உறுப்பினராக பணியாற்றினார். 2002.01.15ம் திகதி இறைபதம் அடைந்தார்.

# அமரர் டாக்டர் சுப்பிரமணியம் பொன்னம்பலம்



கீருகம்பனை காங்கேசன்துறையைச் சேர்ந்த சுப்பிரமணியம் சின்னத்தங்கம் தம்பதியினருக்கு மகனாக 1928ம் ஆண்டு பிறந்தார். இவர் தனது ஆரம்பக்கல்வியைக் கற்பதற்காக 1935ம் ஆண்டு சேர்ந்தார். இவர் இலங்கைப் பல்கலைக்கழகம், மருத்துவக் கல்லூரி கொழும்பு, எடின்பேக் பல்கலைக்கழக மருத்துவக் கல்லூரி ஆகியவற்றில் கற்று இறுதியில் ஓர் சத்திரசிகிச்சை நிபுணர் ஆனார். இவர் உயர் வைத்திய நிபுணராக மட்டுமல்லாமல் சீரிய சிந்தனை யாளராகவும் சங்கீத ரசனையுடையவராகவும் திகழ்ந்தார்.

பதில் மாவட்ட வைத்திய அதிகாரி - மொனறாகலையிலும், புத்தளம் சுகாதார வைத்திய அதிகாரியாகவும், யாழ் போதனா மருத்துவமனை,யாழ் பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் 11 அணியைச் சேர்ந்த 600 பேருக்கு மேற்பட்ட மாணவர்களுக்கு சத்திர சிகிச்சையைப் போதித்தார். தனது வாணாள் முழுவதும் தனது மண்ணிலேயே சேவையாற்றிய சேவையாளன்.

# அமரர் செல்வி காஞ்சியன் சாரதாதேவி



வித்தகபுரம் பொற்கலம் தம்பை தெல்லிப்பளையில் வசித்த போதும் யா/ இளவாலை மெய்கண்டானில் 1981ம் ஆண்டு க.பொ.த உயர்தரத்தில் இணைத்து கற்று 1983ல் சித்தி அடைந்தார். யா/மாகாஜனக் கல்லூரி பாரதி வித்தி யாலயம் முல்லைத்தீவு ஆகிய பாடசாலையில் கடமையாற்றி போரினால் 01.02.2006 விசுவமடு முல்லைத்தீவில் அமரானார்.

# அமரர் திரு. கதிரவேலு குலவீரசிங்கம்

வசந்தபுரம் இளவாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் 1955ம் ஆண்டு பிறந்தார். யா/இளவாலை மெய்கண்டானில் தரம் 1ல் இணைந்து S. S.C. வரை கற்றார். தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியில் க.பொ.த உயர்தரம் கற்றார்.. 1979ம் ஆண்டு பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டத்தைப் பெற்றுக் கொண்டார். இளைஞர் சேவைகள் அதிகாரியாகக் கடமையாற்றினார். இவர் லண்டன் மாநிலத்தில் 2006ம் ஆண்டு சிவபதம் அடைந்தார்.

# பிரம்மஸ்ரீ இராம. பாலச்சந்திரக் குருக்கள்



இளவாலைப்பதியிலே இராமசந்திரக்குருக்கள் சறோஜினி அம்மா தம்பதியினருக்கு 2வது மகனாக 1962ம் ஆண்டு 06ம் மாதம் 11ம் திகதி பிறந்தார். இவர் தனது ஆரம்பக்கல்வி (1968) முதல் O/L வரையான கல்வியை யா / இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் கல்வி பயின்றார். மேலும் இவர் தனது சமஸ்கிருத, சமயக் கல்விகளை இணுவில் தர்மசாஸ்திரக் குருகுலத்தில் கல்வி பயின்று "சிவாகமகிரியாதத்துவநிதி" என்னும் பட்டத்தை பெற்றும் 1994ம் ஆண்டு குருக்கள் பட்டத்தையும் தரித்தார். இவர் பல ஆலயங்களின் கும்பாபிஷேகங்களை செய்துள்ளார். அவற்றில் இளவாலை சித்திரமேழி ஞானவைரவர் ஆலயத்தில் பஞ்சகுண்ட பக்ஷ மகா குமபாவிஷேகப் பெருவிழாவை சிவாகம மரபில் சிறப்பாக நிறைவேற்றியதை இட்டு இலங்கை இந்து குருமார் ஒன்றியத்தால் பிரதிஸ்டா குரு "சிவாச்சார்யமணி" என்னும் கௌரவப் பட்டம் வழங்கப் பட்டது. இவர் யாழ்வட்டு, தீவகம், நல்லூர், அச்சுவேலி, எழுதுமட்டுவாழ் போன்ற இடங்களிலுள்ள சில ஆலயங்களில் மகோற்சவம், கும்பாவிஷேகம் முதலியவற்றை நிகழ்த்தியுள்ளார். இவர் தற்போது இளவாலை ஆனை விழுந்தான் பிள்ளையார் கோவிலின் பிரதம ஆதீன குருவாக விளங்குகிறார்.

# திரு. மகேஸ்வரசர்மா மகேந்திரசர்மா



பன்னாலை தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு.திருமதி மகேந்திரசர்மா தம்பதிகளுக்கு மகனாகப் பிறந்தார். 1984ம் ஆண்டு இப்பாடசாலையில் இணைந்து கற்று 1989ம் ஆண்டு க.பொ.த சாதாரண தரத்தில் தோற்றி சித்தியடைந்தார். இவர் பாடசாலையில் கல்வி கற்கும் காலத்தில் மரதன் ஓட்டநிகழ்ச்சியில் பங்குபற்றி பரிசில்கள் பெற்றுள்ளார். 1986ம் ஆண்டு தொடக்கம் கற்பக விநாயகர் ஆலயத்தில் பிரதம பூசகராக உள்ளார். 1993 ம் ஆண்டு ''வேதகானமணி'' என்ற பட்டமும் பெற்றுள்ளார்.

# அருட்திரு. சூசை அன்ரன் ஜோர்ஜ்



நல்லாயன் வீதி இளவாலையை வசிப்பிட மாகக் கொண்ட திரு. திருமதி சூசை தம்பதிகளின் புதல்வனாக அன்ரன் யோர்ஜ் அவர்கள் 1961.11.17ம் திகதி பிறந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியைக் கற்க 1970ம் ஆண்டு யா/ இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் இணைந்து கொண்டார். 1977ம் ஆண்டு க.பொ.த சாதாரண தரத்தில் தோற்றி சித்தி பெற்றார். 1982ம் ஆண்டு க.பொ.த உயர்தரத்தில் தோற்றிச் சித்திபெற்றார். தற்போது றோமன் கத்தோலிக்க குருவாக சேவை புரிந்து வருகின்றார்

மேலும் கிறிஸ்தவனாக இருந்தும் கிறிஸ்தவ பாடசாலையில் இருந்து விலக்கப்பட்டபோது இப்பாடசாலையில் இணைந்து கல்வி பயில உதவிய சைவப்புலவர் திரு. சு. செல்லத்துரை அவர்களையே எனது முதற்குருவாகவும் ஆன்மீகக் குருவாகவும் ஏற்றுள்ளேன் என்பதைத் தெரிவிப்பதில் பூரிப்படை கின்றார். மேலும் தனது கல்வித் தாய்க்கு ஆசிகூறும் வகையில் தன்னை ஆளாக்கிய மெய்கண்டான் அன்னை என்றென்றும் வாழ வாழ்த்துகின்றார்.

# திரு. கந்தையா துரைராஜா



திரு.க.துரைராஜா அவர்கள் திரு.திருமதி கந்தையா தம்பதிகளுக்கு மகனாகப் பிறந்தார். திருகோணமலை, ஸ்ரீலங்கா ரெலிகோம் நிறுவனத்தில் மூத்த நிறை வேற்று அதிகார உள்ளக உதவிப் பொறியிய லாளராக இருக்கின்றார். 1963ம் ஆண்டு தரம் 1ல் இணைந்து கற்க ஆரம்பித்த இவர் 1969ம் ஆண்டு S.S.C. யில் சித்தியடைந்தார். தொலைத்தொடர்புத் திணைக்களத் தில் இணைந்து தொழில்நுட்பப் பயிற்சி நெறியை மேற்கொண்டார்.

இவர் சமய சமூக சேவைகள் செய்வதில் ஈடுபாடுடையவர். இவர் சித்திரமேழி பழனியானந்தன் சனசமூக நிலையத்தின் செயலாளராகவும் கிராம அபிவிருத்திச் சங்கச் செய்லாளராகவும் ஞானவைரவர் ஆலய பரிபாலன சபைச் செயலாளராகவும் பணியாற்றியுள்ளார்.

# திரு. செல்லத்துரை உலகநாதன் சந்திரகுமாரன்

## (பிரதம கணக்காளர்)



இவர் "உதயகிரி" பலாலி தெற்கு வயாவிளானில் உலகநாதன் J.P. (கிராமசேவையாளர்) செல்லம்மா (ஆசிரியை) தம்பதிகளுக்கு இரண்டாவது மகனாக 1963 இல் பிறந்தவர். தாயின் இடமான "புனித வாசம்" பத்தாவத்தை, இளவாலையைத் தற்காலிக வசிப்பிடமாகக் கொண்டு 1969இல் மெய்கண்டானில் சேர்ந்து 1978இல் G.C.E. O/L தேர்வில் சித்தி பெற்றார்.

மெய்கண்டானில் படிக்கும் காலத்தில் சிறந்த விளையாட்டு வீரராகவும் (கரப்பந்தாட்டம்) சிறந்த நடிகராகவும் விளங்கினார். 1977இல் 'கர்வபங்கம்' என்னும் நாடகத்தில் கதாநாயகனாக நடித்து யாழ். மாவட்டச் சிறந்த நடிகராகப் பரிசு பெற்றுள்ளார். காவடியாட்டக் கலைஞனாகவும் விளங்கினார்.

உயர்கல்விக்கு யூனியன் கல்லூரியிற் சேர்ந்து 1981 இல் G.C.E. A/L (வர்த்தகம்) சித்தியடைந்து பல்கலைக்கழகத்துக்குத் தெரிவானார். யாழ் பல்கலைக்கழகத்தில் வணிகத்துறையிற் கற்று (1982 - 1986) வணிகமாணி சிறப்புப் பட்டம் பெற்றார். அளவெட்டி அருணோதயாக் கல்லூரியில் ஆசிரியரானார்.

1995இல் அரசாங்கக் கணக்கீடுகள் டிப்ளோமாப் பரீட்சையில் சித்தியடைந்து கணக்காளர் ஆனார். 1990 - 2007 காலப் பகுதியில் மன்னார்க் கச்சேரியில் பிரதம கணக்காளராகப் பதவி வகித்தார்.

இவர் பல்கலைக்கழகத்தில் பயிலும் காலத்தில் மெய்கண்டானின் பழைய மாணவர்களை ஒன்று திரட்டித் தான் முன்நின்று மெய்கண்டானின் திறந்தவெளி அரங்கான ஏழூர் அரங்கை நிறுவப் பெருந்துணை புரிந்தார். தொடர்ந்து மெய்கண்டானுக்கு உதவிபுரிந்து வருகின்றார்.

திருக்கேதீஸ்வரத் திருப்பணிச்சபைப் பொருளாளராகவும், மன்னார் லயன்ஸ் கழக அங்கத்தவராகவும், மன்னார் நலிவுற்றோர் நலன்காப்பு நிலையத்தின் நிதிச் செயலாளராகவும் இருந்து சமூக, சமயப் பணிகள் செய்து வருகிறார்.

# மயிலங்கூடல் வைத்திய கலாநிதி அ. அன்பழகன்



இளவாலை வடக்கு மயிலங்கூடலில் அப்புத்துரை இரத்தினம் தம்பதிகளுக்கு 1971 மார்ச் ஐந்தாந் திகதி பிறந்த மூத்த மகவுதான் வைத்தியக் கலாநிதி அன்பழகன். அவர் ஆரம்பக் கல்வி பெறுவதற்காக மயிலிட்டி வடக்கு கலைமகள் வித்தியாலயத்திலே 1977ஆம் ஆண்டு சேர்க்கப்பட்டார். அவர் திறமையை அவதானித்த அன்றைய வட்டாரக் கல்வி அதிகாரி முதலாம் ஆண்டு நிறைவிலே மூன்றாம் ஆண்டிற் சேர்க்க அங்கீகாரம் வழங்கியதன் காரணமாக அன்பழகன் மூன்றாம் ஆண்டிற்கு மாற்றப்பட்டார்.

போர்க்காலச் சூழ்நிலை காரணமாக மாற்றம் பெற்று இளவாலை வடக்கு மெய்கண்டான் மகா வித்தியாலயத்தை 1981இல் வந்தடைந்தார். திறமையான மாணவன் என்பதால் க.பொ.த. சாதாரண தரத்தில் நல்ல தேர்ச்சி பெற்றார். இங்கு பெற்ற பரீட்சை முடிவுடன் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் சேர்ந்து உயிரியல் விஞ்ஞானம் கற்றார்.

இளவாலை வடக்கு மெய்கண்டானில் இருந்த காலத்திலேயே நாடக ஆற்றலில் உயர்ந்து நின்ற இவர் மகாஜனக் கல்லூரியில் ஆங்கிலமொழி மூலமான நாடகங்களில் உயர்ந்து நின்றார்.

க.பொ.த உயர்தரப் பரீட்சை முடிவின்படி அந்த ஆண்டு இவர் ஒருவர்தான் மருத்துவத்துறைக்கு காங்கேசன்துறை வட்டாரத்திலிருந்து தெரிவானவர் என்பது குறிப்பிடப்பட வேண்டியது. பல்கலைக்கழகக் கற்கை நெறி முடிந்ததும் ஒரு வருடம் செய்முறைப் பயிற்சியைக் கொழும்பு போதனா வைத்தியசாலையில் தொடர்ந்தார். இவர் மகப்பேற்றுத்துறைச் சிறப்பு வைத்தியராக சிட்னி நகரில் சேவை செய்கின்றார்.

# திரு. சின்னத்தம்பு கணேசலிங்கம்



1939ம் ஆண்டு இளவாலை வடக்கு இளவாலையில் பிறந்த இவர் 1945ம் ஆண்டு இப்பாடசாலையில் இணைந்து கற்றார். கொழும்பு மருத்துவக் கல்லூரியில் கற்ற இவர் ஆரம்ப மருத்துவப் பராமரிப்புப் பிரிவின் வைத்திய அதிகாரியாகக் கடமையாற்றி வருகின்றமை குறிப்பிடத் தக்கது. இளவாலைப் பிரதேசத்தில் ஆரம்ப மருத்துவப் பராமரிப்புப் பிரிவு நிறுவுவதற்கு முன்னின்று செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# திரு. சந்தானசிதம்பரநாதன் சங்கரப்பிள்ளை



இளவாலை வடக்கு இளவாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு.திருமதி சந்தானசிதம்பரநாதன் தம்பதிகளின் மகனாக சங்கரப்பிளை அவர்கள் பிறந்தார். 1953ம் ஆண்டு இப் பாடசாலையில் இணைந்து கல்வி கற்கத் தொடங்கினார். 1975ம் ஆண்டு பேராதனைப் பல்கலைக் கழகத்தின் குடிசார் பொறியியற் பட்டத்தையும் 1984ம் ஆண்டு மொறட்டுவப் பல்கலைக்கழகத்தின் சுற்றாடல் பொறியியல் முதுமாணிப் பட்டத்தையும் 2006ம் ஆண்டு சத்தியசாயி கல்வி நிறுவனம் அவுஸ்ரேலியாவில் மனித விழுமியங்கள் கல்வி டிப்போளமாப் பட்டத்தையும் பெற்றுள்ளார்.

விளையும் பயிரை முளையிலே தெரியும் என்ற கூற்றிற்கு இணங்க மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் கற்ற காலங்களில் இரட்டை வகுப்பேற்றம் பெற்ற இவர் இன்று குடிநீர் வழங்கல் பொறியியற்றுறையில் நிபுணத்துவம் பெற்ற திட்ட முகாமை யாளராக குடிநீர் வழங்கல் பணிமனை கன்பெரா அவுஸ்ரேலியாவில் உள்ளார். இவர் M.I.E (Sri Lanka) இலங்கை பொறியியலாளர் நிறுவனம், M.I.C.E (london) லண்டன் குடிசார் பொறியியலாளர் நிறுவனம், M.I.W.E (london) லண்டன் நீரியல் பொறியியலாளர் நிறுவனம், M.I.P.H.E (london) லண்டன் பொது சுகாதாரப் பொறியிய லாளர், Chartered professional Engineer அவுஸ்ரேலியா. போன்ற தொழிற்கல்வி களையும் கற்றுள்ளார்.

**பார்த்த உத்தியோகங்கள் மற்றும் தொழில்கள்**

இலங்கை நீர்ப்பாசன இலாகாவில் பொறியியல் உதவியாளராகவும், இலங்கை கட்டிடங்கள் திணைக்களத்தில் நிர்மாண பொறியியலாளராகவும், இலங்கைக் குடிநீர் வழங்கல் வடிகால் அமைப்பு அலுவலகத்தில் திட்டமிடல் பொறியிலாளராகவும், இலங்கை குடிநீர் வழங்கல் வடிகால் அமைப்பு அலுவலகத்தில் விசாரணைப் பொறியிய லாளராகவும், சனா, யேமன் உலக சுகாதார நிறுவனத்தில் ஐ.நா தொண்டர் பொறியிய லாளராகவும், லாவோஸ் UNHCHS ஐ.நா தொண்டர் பொறியியலாளராகவும், லாவேஸ் நாடடிற்கானஉலகவங்கியின் Country Officer ஆகவும், கண்டி நீர்வழங்கல் சபையில் சிரேஸ்ட திட்டமிடல் பொறியியலாளராகவும், லாவோஸ் நாட்டிற்கான உலக வங்கி யின் குழுவின் தலைலராகவும், லாவோஸ் உலக வங்கியின் குடிநீர் வழங்கற்றுறை பொறியியல் ஆலோசகராகவும், அவுஸ்ரேலியாவில் ஒப்பந்த அடிப்படையிலான பொறியியலாளராகவும் பல நிறுவனங்களில் கடமையாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## திரு. தம்பிப்பிள்ளை பேரானந்தராஜா



இளவாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. திருமதி தம்பிப்பிள்ளை தம்பதிகளின் புதல்வனாக பேரானந்தராசா அவர்கள் 1964.07.24ம் திகதி பிறந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியைக் கற்பதற்காக 1970ம் ஆண்டு யா/ இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் இணைந்து கொண்டார். பாடசாலையில் கல்வி பயின்ற காலங்களில் மெய்வல்லுனர்ப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றி பெற்றார். 1974ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து யா/ மகாஜனக் கல்லூரிக்குச் சென்று கல்வியைத் தொடர்ந்தார். 1979ம் ஆண்டு க.பொ.த சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றி சித்தி பெற்றார். 1983ம் ஆண்டு க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி சித்தி அடைந்தார். 1985ம் ஆண்டு யாழ் பல்கலைக்கழக மருத்துவபீடத்திற்கு தெரிவாகி கல்வி பயின்று 1992ம் ஆண்டு (MBBS.MD) மருத்துவப் பட்டம் பெற்று வெளியேறினார். 1999ம் ஆண்டு வைத்திய நிபுணராக யாழ். போதனா வைத்தியசாலையில் சேவையாற்றுகின்றார். மருத்துவத்துறை சார்ந்த புத்தகங்கள் CD போன்றவற்றையும் வெளிட்டுள்ளார். சித்திரமேழி ஞான வைரவர் ஆலயத்திருப்பணிகளை 2003ம் ஆண்டு தொடக்கம் செய்து வரு கின்றார். பாடசாலையின் விளையாட்டுத்துறை விருத்திக்காக வருடந்தோறும் தந்தையாரின் நினைவாக நிதி உதவி நல்கிவருவது குறிப்பிடத்தக்கது.

## திரு. சிவராஜரட்ணம் மோகன்



இளவாலை வடக்கு இளவாலையைப் பிறப்பிட மாகக் கொண்ட திரு. திருமதி சிவராஜரட்ணம் தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனாக மோகன் அவர்கள் 1964.08.11 ம் திகதி பிறந்தார். அவர் தனது ஆரம்பக் கல்வியைக் கற்பதற்காக 1970ம் ஆண்டு யா /இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் இணைந்து கொண்டார். 1975ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்று வேறு பாடசாலையில் சேர்ந்து கொண்டார். 1992ம் ஆண்டு யாழ் பல்கலைக்கழகத்தில் வைத்திய கலாநிதிப்பட்டம் பெற்றார். தற்போது இலண்டனில் வைத்தியராகச் சேவையாற்றி வருகின்றார்.

# திரு. கந்தையா காசிநாதன்



**மா**ரீசன்கூடல் இளவாலையைப் பிறப்பிட மாகக் கொண்ட கந்தையா கனகாம்பிகை தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனாக 1976ம் ஆண்டு காசிநாதன் பிறந்தார். 1982ம் ஆண்டு ஆரம்பக் கல்வியை யா/இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் தொடங்கிய இவர் 1992ம் ஆண்டு க.பொ.த சாதாரணதரம் வரை இங்கேயே கல்வி கற்று சித்தி அடைந்தார். அதன் பின்னர் க.பொ.த (உ/த) கணிதப் பிரிவு இப்பாடசாலையில் இல்லாத காரணத்தினால் யா/தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியில் சேர்ந்து கணிதப்பிரிவிற் கற்று பொறியியல் பீடத்திற்கு தெரிவாகினார். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கற்று பொறியியற் துறையில் பட்டம் பெற்று இன்று சிங்கப்பூரில் பொறியியலாளராகக் கடமையாற்றுகின்றார்.

யா/இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்ற காலத்தில் தமிழ், ஆங்கிலம், விஞ்ஞான, கணிதப் போட்டிகளில் அம்பனைக் கொத்தணி மட்டம், பண்டத்தரிப்புக் கல்விக் கோட்ட மட்டம் என்பவற்றில் பரிசில் பெற்று மாவட்ட மட்டப் போட்டிகளிலும் பங்கு பற்றினார். பாடசாலைத் தேவையறிந்து நிழற்பிரதி இயந்திரத்தை (Photo Copy mechine) வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

# திரு. சிவராஜரட்ணம் சுரேஷ்



**இ**ளவாலை வடக்கு இளவாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு.திருமதி சிவராஜரட்ணம் தம்பதிகளின் கனிஷ்ட புதல்வனாக சுரேஷ் அவர்கள் 1965.12.10 ம் திகதி பிறந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியைப் பெறுவதற்காக 1971ம் ஆண்டு யா /இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் இணைந்து கொண்டார். 1976ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்று வேறு பாடசாலையில் சேர்ந்து கொண்டார். பாடசாலையில் கல்வி பயின்ற காலத்தில் சாரணர் அணியில் இருந்துள்ளார். இவர் 1993ம் ஆண்டு பல்கலைக்கழகத்தில் பொறியியலாளர் பட்டம் பெற்றார். தற்போது அவுஸ்ரேலியாவில் பொறியியலாளராக உள்ளார்.

# திரு. இராசரத்தினம் இராஜேஸ்வரன்



நெல்லோலை கருகம்பனையைப் பிறப்பிட மாகக் கொண்ட திரு. திருமதி இராசரத்தினம் தம்பதிகளின் ஏக புத்திரனாக இராஜேஸ்வரன் அவர்கள் 1980ம் ஆண்டு பிறந்தார். இவர் தனது ஆரம்பக்கல்வியைப் பெறும் நோக்கில் 1986ம் ஆண்டு யா / இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் இணைந்து கொண்டார். பாடசாலையில் கல்வி பயின்ற காலங்களில் ஆங்கில தினப் போட்டிகள், தமிழ்த்தினப் போட்டிகள், கணித விஞ்ஞானப் போட்டிகளில் பங்குபற்றி பரிசு பெற்றார். 1990ம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்றார். 1996ம் ஆண்டு க.பொ.த சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றி சிறந்த பெறுபேற்றை பெற்று பாடசாலைக்குப் பெருமையைத் தேடிக் கொடுத்தார். க.பொ.த உயர்கல்வியை கற்பதற்காக யா/ கொக்குவில் இந்துக் கல்லூரியில் சேர்ந்து கொண்டார். கணிதப் பிரிவில் கல்வி பயின்று மொறட்டுவப் பல்கலைக்கழகத்திற்கு தெரிவானார். இவர் 2005ம் ஆண்டு தேசிய தொழில்நுட்ப சான்றிதழ் பெற்று வெளியேறினார். 2005ம் ஆண்டிலிருந்து இன்று வரையும் ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்தில் தொழில்நுட்ப உத்தியோகத்தராக பணியாற்றி வருகின்றார். பாடசாலை வளர்ச்சிக்காகத் தொடர்ந்தும் பங்களிப்புச் செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

# திரு. இராசா இராமச்சந்திரன்



“வேரவல்” இளவாலை வடக்கு இளவாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு.திருமதி இராசா தம்பதிகளிற்கு மகனாக 1965ம் ஆண்டு பிறந்தார். 1971ம் ஆண்டு இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் தரம் ஒன்றில் இணைந்த இவர் தொடர்ச்சியாகக் கற்று 1981ம் ஆண்டு க.பொ.த சாதாரணதரத்தில் தோற்றி சித்தி பெற்றார். பொறியியலாளரான இவர் லண்டன் மாநகரில் வசித்து வருகின்றார்.

# திரு. இராசா இரவீந்திரன்



"வேரவல்" இளவாலை வடக்கு இளவாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் 1960ம் ஆண்டு பிறந்தார். 1967ம் ஆண்டு யா/இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் தரம் 1ல் இணைந்து தரம் 8 வரை கற்றார். பின் நடேஸ்வராக் கல்லூரியில் கற்று 1976ம் ஆண்டு க.பொ.த.சாதாரண தரத்திலும்1979 ம் ஆண்டு க.பொ.த உயர்தரத்திலும் சித்தியடைந்தார். 1981 ம் ஆண்டு பல்கலைக் கழகம் புகுந்த இவர் 1985ம் ஆண்டு சிறப்பு விஞ்ஞானமாணிப்பட்டத்தைப் பெற்றார். றஜரட்டை பல்கலைக்கழகத்தில் P G D M கல்வியை நிறைவுசெய்தார். ஆசிரியர், உதவி அரசாங்க அதிபர், பிரதி மாகாணப் பணிப்பாளர் (சுகாதார சேவைகள் பணிமனை) செயலாளர் விவசாய அமைச்சு வடமாகாணம், பிரதி பிரதம செயலாளர் (மாகாணப் பொது நிர்வாகஅமைச்சு வடமாகாணம்) ஆகிய பதவிகளில் கடமை புரிந்துள்ளார்.2008 முதல் சுகாதார சுதேச வைத்தியத் துறை அமைச்சின் வடமாகாணச் செயலாளராக இன்று வரை கடமையாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# திரு. நாகேந்திரன் அனந்தன்



திரு. நாகேந்திரன் அனந்தன் இளவாலை வடக்கு இளவாலையில் 1983ம் ஆண்டு பிறந்தார். 1989ல் இங்கு ஆரம்ப வகுப்பில் சேர்ந்து கல்வி கற்று 2000ம் ஆண்டு க.பொ.த. (சா/த) சிறந்த பெறுபேற்றைப் பெற்றார்.

பின் வேறு பாடசாலையில் கணிதப் பிரிவில் க.பொ.த. உயர்தரம் கற்று சித்தியடைந்து பேராதனை பல்கலைக்கழகத்தில் 2004 முதல் 2008 வரை B.Sc. Engineering துறையில் கல்வி கற்றார்.

தற்பொழுது பொறியியலாளராக Lanka Hydrolic Institute இல் தொழில் புரிந்து வருகின்றார்.

# திருமதி சாந்தி நாவுக்கரசன்



திரு. திருமதி சுப்பிரமணியம் கமலாம்பிகை தம்பதியினருக்கு சிரேஸ்ட புத்திரியாக 1958.11.16 ம் திகதி பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியைப் பாலர் வகுப்பு முதல் 6ம் வகுப்பு வரை இளவாலை மெய்கண்டானில் கற்றார். பின்னர் இளவாலை கன்னியர் மடத்தில் கல்வி கற்று யாழ் பல்கலைக்கழகம் சென்று இந்து நாகரீகத் துறையில் சிறப்புப் பட்டதாரியானார். SLAS தேர்வில் சித்தியடைந்து ஊர்காவற்றுறை, சண்டிலிப்பாய் ஆகிய பிரதேசங்களில் உதவி அரசாங்க அதிபராக சேவை புரிந்தார். அதன் பின்னர் கொழும்பு செனறு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக் களத்தில் பிரதிப்பணிப்பாளராக கடமை ஏற்றார். 2008ம் ஆண்டு முதல் பணிப்பாளராக பதவி உயர்வு பெற்றுள்ளார். இலங்கை, இந்தியா மலேசியா ஆகிய நாடுகளில் நடைபெற்ற இந்து மகாநாடுகளில் கலந்து கொண்டு சிறந்த சொற்பொழிவாளராக திகழ்ந்துள்ளார். தற்போது பொது முகாமைத்துவத்தில் முதுமாணி (M.A) பட்டம் பெற்றுள்ளார்.

அடிப்படைக் கல்வியை ஊட்டி வளர்த்த இவ்வித்தியாலயம் தனது உயர்வுக்கு ஏதுவாக அமைந்துள்ளதை பெருமிதத்துடன் என்றும் போற்றுகின்றார்.

# திரு. செல்லத்துரை பிரசாத்



வேரவல் இளவாலை வடக்கு இளவாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்லத்துரை பிரசாத் அவர்கள் 1984ம் ஆண்டு பிறந்தார். இவர் 1990ம் ஆண்டு யா/ இளவாலை மெய்கண்டானில் இணைந்து ஆரம்பக்கல்வியைக் கற்றார். 1994ம் ஆண்டு தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற இவர் வேறு பாடசாலையில் இணைந்து க.பொ.த சாதாரண தரம் 2000லும் க.பொ.த உயர்தரம் 2003லும் சித்தியடைந்து யாழ் பல்கலைக்கழகத்தின் மருத்துவபீட மாணவராக 2004ல் தெரிவு செய்யப்பட்டார். இவர் தனது மருத்துவக் கல்வியை 2010ம் ஆண்டு நிறைவு செய்து கொண்டு மருத்துவராக வெளியேறுவார்.

# திரு. பொன்னம்பலம் இராசேந்திரம்



"**வே**ரவில்" இளவாலை வடக்கு இளவாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு திருமதி பொன்னம்பலம் தம்பதிகளுக்கு மகனாகப் பிறந்தார். இவர் யா/இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் தரம் ஒன்று முதல் கல்வி கற்றார். 1967ம் ஆண்டு க.பொ.த சாதாரணதரத்தில் சித்தியடைந்தார். யாழ் நடேஸ்வராக்கல்லூரியில் க.பொ.த உயர்தரம் கற்று 1971 ம் ஆண்டு சித்தியடைந்தார்.

பாடசாலையில் கல்வி கற்ற காலத்தில் கூத்து, நாடகம், பாட்டுப் போன்ற நிகழ்வுகளில் பங்கேற்பது குறிப்பிடத்தக்கது. 1978 ம் ஆண்டு முதல் 1989 ம் ஆண்டு வரை பயிற்செய்கை உத்தியோகத்தராக கடமையாற்றினார்.1990 முதல் கிராமசேவையாளராக பதவி உயர்வு பெற்று இன்று வரை இளவாலை வடக்கு பிரதேச மக்களின் அபிவிருத்திக்கு பெரிதும் துணைபுரிந்து வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

நாதோலை முத்துமாரி அம்மன் ஆலய செயலாளராகவும், ஆனைவிழுந்தான் விநாயகர் ஆலய உபதலைவராகவும், கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினராகவும் வெண்புறா இளைஞர் கழகத்தின் செயலாளராகவும், இலுப்பையடி ஆலயத்தை அமைத்து அவ்வாலயத்தின் செயலாளராகவும் இருந்து செயற்பட்டு கிராம முன்னேற்றத்திற்கு உறுதுணை புரிந்து வருகின்றார். மேலும் இருபது வருடமாக துர்க்கை அம்மன் ஆலயத் திருவிழாக் காலங்களில் நீர் விநியோகம் செய்து வருகின்றார். கிராமோதயசபைத் தலைவராகவும், நல்லூர் பத்தினாச்சி அம்மன் ஆலயத் தலைவராகவும் செயற்பட்டு வருகின்றார். யுத்தத்தினால் இடம்பெயர்ந்து சென்று மீண்டும் மீளக்குடியமர்ந்த காலப்பகுதியில் கிராம மக்களின் தேவையறிந்து பல உதவிகள் செய்துள்ளார். இக்காலப்பகுதியிலே பாடசாலையின் பழைய மாணவர் சங்கச் செயலாளராகவும் 1997 களில் செயற்பட்டு பாடசாலை முன்னேற்றத்திற்கு பாடுபட்டார். பாடசாலை மைதானம் புனரமைப்பு, விளையாட்டரங்கு ஏழூர் அரங்கு அமைப்பு போன்றவற்றிலும் இவருடைய பங்களிப்பு அளப்பரியதாகும்.

# திரு. சின்னக்கண்டு சுமந்திரன்



அவுஸ்ரேலியா நாட்டில் லிற்றில்சியா நிறுவனத்தின் செயற்றிட்ட அலுவலராகக் கடமையாற்றும் திரு. சின்னக்கண்டு சுமந்திரன் அவர்கள் 1962ம் ஆண்டு திரு.திருமதி சின்னக்கண்டு தம்பதிகளுக்கு மகனாகப் பிறந்தார். மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் ஆரம்ப வகுப்பு முதல் கல்வி பயின்று 1976ம் ஆண்டு க.பொ.த சாதாரணதரத்தில் சித்தியடைந்தார்.

கல்வி பயிலும் காலத்தில் கரப்பந்தாட்டம், விளையாட்டுத்தறை போன்ற நிகழ்வுகளில் ஈடுபாடு உடையவர். 1981ம் ஆண்டு க.பொ.த உயர்தரத்தை மகாஜனக்கல்லூரியில் கற்றார். 1987ம் ஆண்டு யாழ் பல்கலைக்கழகத்தில் வணிகமாணி சிறப்புபட்டத்தைப் பெற்றார். 1999ம் ஆண்டு பட்டயக் கணக் காளர் நிறுவனத்தில் (இலங்கை) பட்டபின் டிப்ளோமா பட்டமும் பெற்றார்.

இவர் பட்டதாரி ஆசிரியராகவும் வவுனியா கச்சேரியிலும் கொழும்பு துறைமுகங்கள் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சிலும் கிழக்கு மாகாண அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு கிராமிய வீடமைப்பு அமைச்சிலும் நுகர பொது வசதிகள் அமைச்சிலும் கணக்காளராகக் கடமையாற்றியுள்ளார்.

கொழும்பு நகர அபிவிருத்தி நீர் வழங்கல் அமைச்சின் உதவிப் பணிப் பாளராகவும் (நிதி) கொழும்பு நகர அபிவிருத்தி புனிதபூமி அபிவிருத்தி அமைச்சில் பிரதிப்பணிப்பாளராகக் கடமையாற்றி வருகின்றார். கிரயக் கணக்கீடு முகாமைக் கணக்கீடு கம்பனி போன்ற நூல்களை எழுதியுள்ளார். "கம்பனி" நூல் இலங்கைக் கல்விஅமைச்சினால் கொள்வனவு செய்யப்பட்டு பாடசாலை நூல்நிலையங்களுக்கு விநியோகிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கதாகும்.

# திரு. கதிரவேலு செல்வரட்ணம்



1965ம் ஆண்டு வசந்தபுரம் இளவாலையிற் பிறந்த இவர் 1979 ம் ஆண்டு இப்பாடசாலையில் தரம் 1 ல் இணைந்து கல்வி கற்று 1980 ம் ஆண்டு க.பொ.த சாதாரண தரத்தில் சித்தியடைந்தார்.தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் உயர்கல்வியினைக் கற்று பல்கலைக்கழகம் சென்றார். இளவாலை கன்னியர்மடம் மகா வித்தியாலயத்தில் கற்பிக்கும் இவர் யாழ் பல்கலைக்கழகத்தில் 2004ம் ஆண்டு முதுகல்விமாணிக் கற்கையை முடித்துக் கொண்டார்.

## திரு. சிவயோகேஸ்வரன் சுதர்சன்



சித்திரமேழி இளவாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு.திருமதி சிவயோகேஸ்வரன் தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனாக சுதர்சன் அவர்கள் 1978ம் ஆண்டு பிறந்தார். இவர் தனது ஆரம்பக்கல்வியை மேற்கொள்வதற்காக 1984ம் ஆண்டு யா / இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் இணைந்து கொண்டார். 1994ம் ஆண்டு க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் தோற்றிச் சித்தி பெற்றார். 1998ம் ஆண்டு க.பொ.த உயர்தரப் பரீட்சையில் கணிதப் பிரிவில் தோற்றி சித்தி பெற்றார். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் 2000ம் ஆண்டு - 2004ம் ஆண்டு வரை கற்று பொறியியலாளராகப் பட்டம் பெற்று வெளியேறினார். 2004ம் ஆண்டு தொடக்கம் 2007ம் ஆண்டு வரை PRIME ENGINEERING & ARCHITECTUREINC நிறுவனத்தில் ENIGNEER ஆக பணி புரிந்தார்.

## திரு. சிவயோகேஸ்வரன் தர்சனன்



சித்திரமேழி இளவாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. திருமதி சிவயோகேஸ்வரன் புஸ்பதேவி தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனாக தர்சனன் அவர்கள் 1979ம் ஆண்டு பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியைப் பெறுவதற்காக 1985ம் ஆண்டு யா/இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் இணைந்து கொண்டார். க.பொ.த சாதாரணதரப் பரீட்சைக்கு 1995ம் ஆண்டு தோற்றி சித்தி பெற்றார். க.பொ.த உயர்தரத்தில் கணிதப் பிரிவில் பயின்று 1999ம் ஆண்டு பரீட்சைக்குத் தோற்றி சித்தி பெற்றார். 2000ம் ஆண்டு மொறட்டுவப் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகி பல்கலைக்கழகக் கல்வியை நிறைவு செய்து 2004ம் ஆண்டு பட்டம் பெற்று பொறியியலாளராக வெளியேறினார்.

## திரு. பிறேமதாசன் நர்த்தனன்



இளவாலை வடக்கு இளவாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு.திருமதி பிறேமதாசன் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனாக நர்த்தனன் அவர்கள் 1981.12.25 ம் திகதி பிறந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியைப் பெற்றுக் கொள்வதற்காக 1987ம் ஆண்டு யா/ இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் இணைந்து கொண்டார். 1992ம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து வேறு பாடசாலையில் சேர்ந்து கொண்டார். இப்பாடசாலையில் கல்வி பயின்ற காலங்களில் நாடகத்துறை விளையாட்டுத் துறைகளில் பங்கு பற்றினார். 2002ம் ஆண்டு இந்தியாவிலுள்ள அண்ணா மலைப் பல்கலைக்கழகத்தில் கணணிப் பொறியியலாளராக பட்டம் பெற்றார். இவர் 2007ம் ஆண்டு கொழும்பு HTN கணணி நிறுவனத்தில் கணணிப் பொறியியலாளராகப் பணிபுரிந்தார். யாழ் இந்துக் கல்லூரியில் செஞ்சிலுவைச் சங்கத் தலைவராகவும் லியோக் கழகத்தின் அங்கத்தவராகவும் இருந்துள்ளார். தற்போது சிங்கப்பூரில் கணணிப் பொறியியலாளராக பணியாற்றி வருகின்றார்.

## திரு. செல்லத்துரை அகிலன்



வேரவல் இளவாலை வடக்கு இளவாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்லத்துரை அகிலன் அவர்கள் 1980ம் ஆண்டு பிறந்தார். இவர் 1986ம் ஆண்டுயா/இளவாலை மெய்கண்டானில் இணைந்து ஆரம்பக்கல்வியைக் கற்றார். இவர் 1990ம் ஆண்டு தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்றார். இவர் வேறு பாடசாலையில் இணைந்து க.பொ.த சாதாரண தரம் 1996லும் க.பொ.த உயர்தரம் 1999லும் சித்தியடைந்து மொறட்டுவப் பல்கலைக்கழகத்தில் பொறியியல் மாணவராக 2000ல் தெரிவு செய்யப்பட்டார். 2004ம் ஆண்டு B.SC (Hons) Engineering(second upper class) பட்டம் பெற்றார். தொடர்ந்து அமெரிக்கப் பல்கலைக்கழகத்தில் பொறியியலில் M.Sc(Hons)Engineering First class சித்தியும் அடைந்தார். தற்போது பொறியியலாளராகக் கடமையாற்று கின்றார்.

## திரு. செல்லையா ஆனந்தீஸ்வரன்



சித்திரமேழி இளவாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் 1954.05.07ஆம் திகதி பிறந்தார். இவர் தனது ஆரம்பக்கல்வியைக் கற்கவென 1959ம் ஆண்டு யா/இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் இணைந்து கொண்டார். தரம் 7 வரை கல்வி கற்ற இவர் நடேஸ்வராக் கல்லூரிக்கு சென்றார். அங்கு 1969ம் ஆண்டு க.பொ.த சாதாரண தரத்திலும் 1973ம் ஆண்டு க.பொ.த உயர்தர விஞ்ஞானப் பிரிவிலும் சித்தியடைந்தார். பல்வேறு பாடசாலையில் கடமையாற்றிய இவர் யா/இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் கணித விஞ்ஞான ஆசிரியராகவும் உப அதிபராகவும் கடமையாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## திருமதி வசந்தகுமாரி இராமச்சந்திரன்



நகுலேஸ்வரா வீதி கருகம்பனையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் திரு திருமதி சங்கரப்பிள்ளை தம்பதியினருக்கு இரண்டாவது மகளாகப் பிறந்தார். இப்பாடசாலையில் க.பொ.த உயர்தரத்தில் கல்விகற்று சிறந்த பெறுபேற்றைப் பெற்று இப்பாடசாலைக்குப் பெருமைசேர்த்தார். 1987 - 1989 வரை இப்பாடசாலையில் தொண்டராசிரியராக இருந்து கடமை ஆற்றினார். 1990.03.25 தொடக்கம் சமூகக்கல்வி வரலாறு என்ற பாடத்தில் ஆசிரிய நியமனம் பெற்றார். யா/கொல்லங்கலட்டி சைவத் தமிழ்க்கலவன் பாடசாலையில் பணிபுரிந்து மீண்டும் இப்பாடசாலைக்கு மாற்றம் பெற்று வந்தார்.

பின் கிளி/ கனகபுரம் ம.வி., மல்லாவி மத்திய கல்லூரி ஆகியவற்றில் கடமையாற்றினார். மீண்டும் 2003ம் ஆண்டு இப்பாடசாலையில் கடமை யேற்றார்.

## திரு. தருமராசா பிரதீஸ்வரன்



மா ரீசன்கூடல் இளவாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு.திருமதி தருமராசா தம்பதிகளின் புத்திரனான பிரதீஸ்வரன் அவர்கள் 1974.12.23 ம் திகதி பிறந்தார். இவர் தனது ஆரம்பக்கல்வியைக் கற்பதற்காக 1984ம் ஆண்டு யா/இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் இணைந்து கொண்டார். பாடசாலை யில் கல்விபயின்ற காலங்களில் தமிழ்மொழித்தினப் போட்டிகள், விளையாட்டுத்துறைகளில் பங்கு பற்றினார். க.பொ.த சாதாரணதரப் பரீட்சைக்கு 1992 ம் ஆண்டு சித்தி பெற்றார். க.பொ.த உயர்தரக்கல்வியை கலைத்துறையில் பயின்று பல்கலைக்கழகம் தெரிவானார். 2001ம் ஆண்டு கலைமாணி சிறப்புப்பட்டம் பெற்று வெளியேறினார். 2005ம் ஆண்டிலிருந்து இந்துசமய கலாசார அலுவலகத்தில் அபிவிருத்தி உதவியாள ராகப் பணியாற்றி வருகின்றார்.

## திருமதி தவேந்திராதேவி சிவகுருநாதன்



இளவாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. திருமதி தம்பிப்பிள்ளை தம்பதிகளின் புதல்வியாக தவேந்திராதேவி அவர்கள் 1960.12.05ம் திகதி பிறந்தார். 1966ம் ஆண்டு யா / இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியை பெறுவதற்காக சேர்ந்து கொண்டார். 1981ம் ஆண்டு யாழ் பல்கலைக்கழகத் திற்குத் தெரிவாகி 1983ம் ஆண்டு விஞ்ஞானப் பட்டதாரி யாக வெளியேறினார். 1997ம் ஆண்டு யாழ். பல்கலைக் கழகத்தில் பட்டப்பின் கல்வி டிப்ளோமாப் பயிற்சியை முடித்தார். 2002ம் ஆண்டு யாழ் பல்கலைக்கழகத்தில் முதுகல்விமாணிப் பட்டத்தினைப் பெற்றுக் கொண்டார். இவர் யாழ். பல்கலைக்கழத்தில் இரசாயனவியல் செய்முறைப் போதனாசிரியராகவும் இருந்துள்ளார். நான்கு வருடங்கள் தி/சேனையர் மகா வித்தியாலயத்தில் (மூதூர்) ஆசிரியராகப் பணியாற்றினார். கடந்த இருபது வருடங்களாக யா / புனித ஹென்றி யரசர் கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றி வருகின்றார்.

## திரு. நாகமுத்து இராசரத்தினம்



திரு.நாகமுத்து இராசரத்தினம் அவர்கள் யா / இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் தரம் ஒன்று முதல் க.பொ.த சாதாரண தரம் வரை கற்று சித்தி பெற்றார். க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேற்றிற் காக கல்வி அமைச்சினால் உயர்கல்விக்கான புலமைப் பரிசில் கிடைத் தமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். க.பொ.த உயர்தரக் கல்வியை தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியில் கற்றார். யாழ் பல்கலைக் கழகத்தில் கற்று 1979ம் ஆண்டு பொருளியல் சிறப்புப் பட்டத்தைப் பெற்றார்.

வசந்தபுரம் மாதிரிக் கிராமம் அமைக்கப்பட்டபோது வீடமைப்புக் கழகத் தலைவராக இருந்தார். நு / பூண்டுலோயா தமிழ் மகாவித்தியாலய த்தில் உதவி ஆசிரியராகக் கடமையாற்றினார். அங்கு சிலகாலம் உப அதிபராகவும் கடமையாற்றியுள்ளார். 1989 - 1992ம் ஆண்டு காலப்பகுதியில் தான் கற்ற பாடசாலையிலேயே கடமையாற்றும் வாய்ப்பும் கிடைத்தது.

## திருமதி இராஜேஸ்வரி அபிராமன்



சேரடக்கண் இளவாலையை வசிப்பிடமாகக் கொண்ட இராமச்சந்திரக் குருக்கள் சறோஜினிஅம்மா தம்பதியினரின் கனிஷ்ட புத்திரியாக இராஜேஸ்வரி அவர்கள் 1972.05.06ம் திகதி பிறந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியைக் கற்பதற்காக 1978.01.09ம் திகதி இளவாலை மெய்கண்டானில் சேர்ந்துகொண்டார். க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் 1988ம் ஆண்டு சித்திபெற்றார். உயர் கல்வியைக் கலைத்துறையிற் கற்று பல்கலைக்கழகம் தெரிவானார். 1998ம் ஆண்டு யாழ் பல்கலைக்கழகத்தில் இருந்து சிறப்புப் பட்டதாரியாக வெளியேறினார். திறந்த பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் படிப்பை முடித்து 2006ம் ஆண்டு வெளியேறினார். தற்போது யா/ விக்னேஸ்வராக் கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றி வருகின்றார்.

## திரு. இராஜரட்ணம் புஸ்பரட்ணம்



யா/கன்னியர்மடம் மகா வித்தியாலயத்தில் ஆங்கில மொழி மூல பௌதீகவியல் ஆசிரியராகக் கடமை யாற்றும் இவர் திரு.திருமதி இராஜரட்ணம் தங்கலட்சுமி தம்பதிகளுக்கு 1967ம் ஆண்டு மகனாகப் பிறந்தார். 1971ம் ஆண்டு முதல் யா/இளவாலை மெய்கண்டான் மகா வித்தியா லயத்தில் கல்வி கற்று க.பொ.த சாதாரண தரத்தில் சித்தி யடைந்தார். இவர் க.பொத.உயர்தரத்தில் கணிதப் பிரிவில் கற்பதற்காக தெல்லிப்பளை மகாஜனக்கல்லூரியில் இணைந்து கற்றார். முதற் தடவையே யாழ் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவானார். இவர் யாழ் பல்கலைக் கழகத்தில் விஞ்ஞானப் பட்டதாரியாக 1994 ம் ஆண்டு வெளியேறினார். இவர் 1994ம் ஆண்டு கிளி / இந்துக்கல்லூரியில் முதல் ஆசிரிய நியமனத்தை ஏற்றுக் கொண்டார். அங்கு 1998ம் ஆண்டு முதல் பிரதி அதிபராகக் கடமை யாற்றினார். தொடர்ந்து பேராதனைப்பல்கலைக்கழகத்தில் விஞ்ஞான முதுமாணிக் (பௌதீகவியலில்) கல்வியைக் கற்றார். தொடர்ந்து ஆங்கிலமொழி மூல விஞ்ஞான ஆசிரியராகக் கடமையாற்றும் இவர் அதிபர் தரம் 2-11ற்கான பதவி உயர்வும் பெற்றுள்ளார்.

## திரு. கதிர்காமத்தம்பி நவரூபன்



இளவாலை வடக்கு இளவாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட நவரூபன் அவர்கள் 1978.03.29ம் திகதி பிறந்தார். இவர் தனது ஆரம்பக்கல்வியைக் கற்பதற்கு 1988ம் ஆண்டு யா/இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் இணைந்து கொண்டார். இவர் க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் 1994ம் ஆண்டு சித்தி பெற்றார். க.பொ.த உயர்தரத்தில் விஞ்ஞானப் பிரிவில் கற்பதற்காக யா/ சென் ஜோன்ஸ் கல்லூரியில் சேர்ந்து கொண்டார். 2000ம் ஆண்டு யாழ் பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகி 2004ம் ஆண்டு விஞ்ஞான மாணிப் பட்டம் பெற்று வெளியேறினார். தற்போது நோர்வே நாட்டில் தொழில் புரிகின்றார்.

# திரு. மாதினி உதயகுமார்



மாரீசன்கூடல் இளவாலையைச் சேர்ந்த திரு. திருமதி கந்தையா தம்பதிகளின் கனிஷ்ட புத்திரியாக பிறந்தவரே மாதினி. இவர் 1980ம் ஆம் ஆண்டு தரம் ஒன்றில் கல்வி கற்க இணைந்து கொண்டார். தொடர்ந்து க.பொ.த (சா.த) க.பொ.த(உ.த) ஆகிய வகுப்புக்களிலும் இங்கேயே கல்வி கற்று சித்தியடைந்து 1998ம் ஆண்டு ஆசிரிய நியமனம் பெற்றார். இன்று பயிற்றப்பட்ட ஆசிரியராக (தமிழ்) கல்வி கற்ற பாடசாலையிலேயே சேவையாற்றுகின்றார்.

# திருமதி இந்திராவதி யோகலிங்கம்



யா / இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் ஆரம்பக்கல்விப் பட்டதாரியாகக் கடமை யாற்றும் திருமதி யோ.இந்திராவதி அவர்கள் திரு. திருமதி. இராஜரட்ணம் தங்கலட்சுமி தம்பதிகளுக்கு மகளாகப் பிறந்தார். பாடசாலையில் 1980ம் ஆண்டு தரம் ஒன்றில் சேர்ந்து ஆரம்பக் கல்வியைக் கற்க ஆரம்பித்த இவர் தொடர்ச்சியாக க.பொ.த.சாதாரண தரம் 1990ம் ஆண்டும் 1993ம் ஆண்டு க.பொ.த .உயர்தரமும் சித்தி அடைந்தார். 2000ம் ஆண்டு யாழ் பல்கலைக் கழகத்தில் கலைமாணிப் பட்டமும் பெற்றுக்கொண்டார். 2003ம் ஆண்டு வவுனியா புதுக்குளம் மகா வித்தியாலயத்தில் பட்டதாரி நியமனம் கிடைத்தது. அங்கு ஐந்து ஆண்டுகள் இடைநிலை மாணவர்களுக்கு தமிழ்மொழி கற்பித்து வந்தார். அவ்வேளை யாழ் பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பட்டமும் பெற்றுக் கொண்டார். மேலும் கல்வி கற்கச் சிறந்த பாடசாலை கிடைத்தது போலவே ஆசிரியர் நியமனமும் சிறந்த அதிபரான திரு.தா.அமிர்தலிங்கம் அவர்களின் கடமை, கண்ணியம் , கட்டுப்பாடு என்பன காரணமாக ஆசிரியத் தொழில் மேலும் சிறக்க எனக்கு வாய்ப்பு ஏற்பட்டதையிட்டு பெருமை யடைகின்றேன். 2008ம் ஆண்டு முதல் இடமாற்றமும் பெற்றுக் கல்வி கற்ற பாடசாலையிலே ஆசிரியராகக் கடமையாற்ற இறைவன் பணித்துள்ளான்.

எல்லாப் புகழும் இறைவனுக்கே.

# திருமதி சகுந்தலாதேவி இலட்சியன்



இளவாலை வடக்கு இளவாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. திருமதி நவரத்தினம் தம்பதிகளின் கனிஷ்ட புத்திரியாக சகுந்தலாதேவி அவர்கள் 1959ம் ஆண்டு பிறந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியை மேற்கொள்ள 1964ம் ஆண்டு யா / இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் இணைந்துகொண்டார். யா/ இளவாலை கன்னியர்மடம் மகா வித்தியாலயத்தில் தரம் 6 முதல் 11 வரையும், க.பொ.த உயர்தரத்தை மகாஜனக் கல்லூரியிலும் கற்றார். 1984ம் ஆண்டு கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் பயிற்றப்பட்ட மனைப்பொருளியல் ஆசிரியராக யா / இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் பணியாற்றி வருகின்றார். இவருடைய மனைப்பொருளியல் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டின் சிறப்பிற்காக வலிகாமம் கல்வி வயலயத்தினால் சான்றிதழ்கள் வெற்றிக் கேடயங்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# திருமதி பிரபாஜினி ஜெயதீபன்



காடிவளை இளவாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. திருமதி பாலசிங்கம் விஜயலட்சுமி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியாக பிரபாஜினி அவர்கள் 1978.10.08ம் திகதி பிறந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியைக் கற்பதற்காக 1983ம் ஆண்டு யா/ இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் இணைந்து கொண்டார். 1994ம் ஆண்டு க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றைப் பெற்றார். உயர்தரத்தில் வர்த்தகத் துறையில் பயில்வதற்காக தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியில் சேர்ந்து கொண்டார். வர்த்தகத்துறையில் சிறந்த பெறுபேற்றை பெற்றுக் கொண்டார். யாழ் பல்கலைக்கழகத்தில் நான்கு ஆண்டுகள் கல்வி பயின்று (B.Com) பட்டம் பெற்றார். மன்னார் நகர சபையில் நிகழ்ச்சித்திட்ட உதவியாளராக இரண்டாண்டுகள் பணிபுரிந்தார்.

# திருமதி புஸ்பராணி திருநாவுக்கரசு



**வ**சந்தபுரம் இளவாலையைப் பிறப்பிடமாகவும் தற்போது பொல்வத்தை இளவாலையை வசிப்பிடமாகவும் கொண்ட இவர் இளையவன் பூரணம் தம்பதிகளின் புதல்வியாக 1962.08.30ல் பிறந்தார். இடைநிலைக் கல்வியை யா/ இளவாலை மெய்கண்டான் ம.வி இல் கற்றுள்ளார். இவர் சிறந்த வீராங்கனையாவர். க.பொ.த (உ/த) வர்த்தகத்துறையைத் தெரிவுசெய்து யா/காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியில் உயர்தரம் பயின்று சித்தி அடைந்துள்ளார். பின்னர் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியில் பயின்று சித்தி பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. பயிலுநர் ஆசிரிய போட்டிப் பரீட்சையில் சித்தி பெற்று மேற்படி பாடசாலையில் 1990-03-21 வாத்தக ஆசிரியர் நியமனம் பெற்றது முதல் தொடர்ந்து சேவையாற்றி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. பாடசாலையின் வளர்ச்சிக்கு அயராது தனது பங்களிப்பை வழங்கி வருகின்றார்.

# திருமதி பத்மாதேவமலர் மரியதாஸ்



**திரு** திருமதி பத்திநாதர் இராஜேஸ்வரி தம்பதிகளுக்கு மகளாக 1974ம் ஆண்டு பிறந்தார். 1980ம் ஆண்டு தைத்திங்கள் 16ம் நாள் இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் தனது ஆரம்பக்கல்வியை ஆரம்பித்தார். மாவட்டமட்டத்தில் முதற்பரிசு பெற்ற காத்தவராஜன் சிந்து நடைக் கூத்தில் மாரியாக நடித்து சிறந்த புகழை ஈட்டிக் கொடுத்தார். இவர் ஆரம்பக்கல்வி முதல் 15 ஆண்டுகள் ஒரே பாடசாலையில் கல்வி பயின்று பல்கலைக்கழகம் புகுந்தார்.

1992ம் ஆண்டு க.பொ.த சாதாரண தரத்தில் சித்தியடைந்தார்.1994ல் க.பொ.த உயர்தரத்தில் சித்தியடைந்தார். 2002ல் நுண்கலைமாணிப்பட்டம் பெற்றார். பின் மெய்கண்டான் பாடசாலையில் தொண்டராசிரியராகக் கடமையாற்றினார். 2005ம் ஆண்டு அரசாங்கத் தொழிலில் இணைந்து கலாசார உத்தியோகத்தராக வவுனியா தெற்கில் கடமையாற்றுகிறார்.

# திருமதி இந்துமதி சதீஸ்சன்



**பு**னித பூமி நகுலேஸ்வர வளாகத்திலுள்ள மயிலங்கூடலில் கணேசலிங்கம் அமுதாதேவி தம்பதிகளுக்கு முதல் மகவாகி 1970 மே ஏழாம் திகதி பிறந்தவர்தான் இந்துமதி அவர்கள். உரியபோது வித்தியாரம்பம் செய்விக்கப்பெற்ற இந்துமதி 1976-01-05 இல் மயிலிட்டி வடக்கு கலைமகள் மகா வித்தியாலயத்தில் ஆரம்பக்கல்வி பெறும் நோக்குடன் சேர்ந்து கொண்டார். ஆறாம் ஆண்டிற் கற்றுக் கொண்டிருக்கும் வேளையில் 1981இல் இளவாலை வடக்கு மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் சேர்க்கப்பட்டார். க.பொ.த. சாதாரண தரம் வரை திறமையாகக் கற்றுக்கொண்டிருந்தவர் அந்த வகுப்புடனாய பரீட்சையிலும் **திறமைச் சித்தி** பெற்றார். அதனால் மெய்கண்டான் வித்தியாலயத்திலிருந்து தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியில் க.பொ.த. உயர்தரம் கணிதத்துறை வகுப்பிற் சேர்ந்தார். அந்த வகுப்பிற்கான இறுதித் தேர்விலும் நல்ல சிறப்பான சித்தி பெற்று யாழ் பல்கலைக்கழகக் கல்வி பெறுவதற்காகச் சேர்ந்து கொண்டார்.

இந்துமதி தன் கணித ஆற்றலைத் தனிப்பட்ட முறையில் சகல பிள்ளைகளுக்கும் ஊட்டுகின்றார். இவர் வட இலங்கைச் சங்கீத சபையின் மூன்றாந் தரப் பரீட்சையிற் சித்தியடைந்தவர் என்பது குறிப்பிட வேண்டியது.

# திருமதி கலைவாணி கெங்காதரமூர்த்தி

**பொ**ல்வத்தை, இளவாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. திருமதி இரத்தினம் தம்பதிகளின் ஏக புத்திரியாகக் கலைவாணி அவர்கள் 1977ம் ஆண்டு பிறந்தார். 1983ம் ஆண்டு தனது ஆரம்பக் கல்வியைக் கற்க யா/இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் இணைந்து கொண்டார். 1993ம் ஆண்டு க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் சித்தி பெற்று உயர்கல்வி கற்பதற்காக தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரிக்குச் சென்றார். விஞ்ஞானத் துறையில் கல்வி பயின்று 1996ம் ஆண்டு சித்தி பெற்றார். அவர் 2002ம் ஆண்டு பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு சென்று ஆங்கிலப் பயிற்சி ஆசிரியராக 2004ம் ஆண்டு வெளியேறினார். 2004ம் ஆண்டு முதல் ஆங்கில ஆசிரியராக யா/இளவாலை கன்னியர்மடம் மகா வித்தியாலயத்தில் பணியாற்றி வருகின்றார்.

## திருமதி அகிலாதேவி ஜெயானந்தன்



**கீரி**டிவளை இளவாலையை வசிப்பிடமாகக் கொண்ட செல்லத்துரை மகேஸ்வரி தம்பதிகளின் கனிஷ்ட புதல்வியாக 1972.10.04ம் திகதி அகிலாதேவி அவர்கள் பிறந்தார். இவர் தனது ஆரம்பக்கல்வியை 1978ம் ஆண்டு இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் ஆரம்பித்தார். 1988ம் ஆண்டு க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் சித்தி பெற்றார். யா/மகாஜனக் கல்லூரியில் க.பொ.த உயர்தரம் சித்தி பெற்றார். பின்னர் ஆசிரிய நியமனம் பெற்று கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் கற்பித்தற் பயிற்சி பெற்றார். அத்துடன் வெளிவாரியாகப் பட்டப்படிப்பினை மேற்கொண்டு கலைமாணிப் பட்டம் பெற்றதுடன் பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் படிப்பினையும் முடித்துள்ளளார். தற்போது யா / இளவாலை கன்னியர்மடம் மகா வித்தியாலயத்தில் ஆசிரியராகச் சேவையாற்றி வருகின்றார்.

## திருமதி சுனித்தா கார்த்திகைக்குமார்



**கீ**ருகம்பனை காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. திருமதி தம்பதிகளின் கனிஷ்ட புத்திரியாக சுனித்தா அவர்கள் 1978.11.06ம் திகதி பிறந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியை மேற்கொள்வதற்காக 1984.01.23ம் திகதி யா / இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத் தில் இணைந்து கொண்டார். க.பொ.த சாதாரண தரப் பரீட்சையை 1994லும் க.பொ.த உயர்தரம் 1998லும் சித்தி பெற்றார். 1998ம் ஆண்டு யாழ் பல்கலைக்கழக நுண்கலைப் பீடத்திற்குத் தெரிவாகி 2002ம் ஆண்டு நடனமாணிப் பட்டம் பெற்று வெளியேறினார். தற்போது சுவிஸ்லாந்தில் வசித்து வருகிறார்.

# இளவாலை செல்லத்துரை மாவிரதன்



திரு. செல்லத்துரை மாவிரதன் பத்தாவத்தை இளவாலையில் செல்லத்துரை சிவகாமசுந்தரி தம்பதிக்கு இரண்டாவது புதல்வனாக 1978 -10-30 இல் பிறந்தார். இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் ஏடு தொடக்கப் பெற்றார். 1985 இல் இங்கு ஆரம்ப வகுப்பில் சேர்ந்து கல்வி கற்று 1995 மார்கழியில் க.பொ.த. சா/த தரத்தில் சித்தியடைந்தார். தொடர்ந்து இங்கேயே உயர்கல்வி கற்று 1998ஆவணியில் க.பொ.த. உயர்தரத் தேர்வில் சித்தி பெற்றார்.

இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் கல்வி கற்கும் காலத்தில் சிரேஷ்ட மாணவர் தலைவனாயிருந்து பாடசாலையின் அதியுயர் மாணவனுக்குரிய "மெய்யவன்" விருது பெற்றார். சாரணீயம், கரப்பந்து, உதைபந்தாட்டம் போன்றவற்றில் சிறந்து விளங்கினார். பாடசாலை விட்டு விலகிய பின்னும் கரப்பந்தாட்டப் பயிற்றுநராகப் பல வருடங்கள் உழைத்துள்ளார்.

பல்கலைக்கழகக் கல்வி கற்கும் காலத்தில் யாழ். உயர் கலைக் கல்லூரியில் 2002இல் கலை மலரின் ஆசிரியராயிருந்து வெளியிட்டுள்ளார். காடிவளை இந்து இளைஞர் சனசமூக நிலையத்தின் தலைவராயிருந்து பொன்விழா ஆண்டில் ஒல்லுடை அறநெறிப் பாடசாலைக்கும், இந்து இளைஞர் சனசமூக நிலையத்துக்கும் தனித்தனியான பொன்விழா நினைவுக் கட்டிடங்கள் அமைத்து 2002இல் "நித்திய கல்யாணி" எனும் பொன் மலரும் வெளியிட்டுப் பொன் விழாவையும் சிறப்பாக நடத்தினார். 2004 முதல் இந்து சமய கலாசாரத் திணைக்களத்தில் (கொழும்பு) கலாசார உதவியாளராக அரச உத்தியோகத்தில் பணியாற்றி வருகின்றார்.

# திரு. கதிரவேலு சிதம்பரநாதன்



1969ம் ஆண்டு வசந்தபுரம் இளவாலையில் பிறந்த இவர் 1976ம் ஆண்டு இப்பாடசாலையில் தரம் 1ல் இணைந்து கல்வி கற்று 1985ம் ஆண்டு க.பொ.த சாதாரண தரத்தில் சித்தியடைந்தார். தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியில் வர்த்தகப்பிரிவில் உயர்கல்வியினைக் கற்று 1991ம் ஆண்டு பல்கலைக்கழகம் சென்ற இவர் 1994ம் ஆண்டு வணிகமாணிப் பட்டத்தைப் பெற்று வெளியேறினார். தற்போது காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் சமூக சேவை அலுவலராக 2006 முதல் கடமையாற்றி வருகிறார்.

## திருமதி தயாளினி ஸ்ரீசண்முகா



திரு. திருமதி தேவதாசன் தம்பதிகளின் ஏக புத்திரியாக தயாளினி அவர்கள் 1979.04.14ம் திகதி பிறந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியைப் பெறுவதற்காக 1985ம் ஆண்டு யா /இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் இணைந்து கொண்டார். க.பொ.த சாதாரணதரப் பரீட்சை 1995ம் ஆண்டு சித்தி பெற்றார். க.பொ.த உயர்தரத்தில் வர்த்தகத்துறையில் கல்வி பயின்று 1998ம் ஆண்டு சித்தி பெற்றார். யாழ்ப்பாணம் உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தில் 2004ம் ஆண்டு உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமாப் பட்டம் பெற்றார். யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையில் திட்டமிடல் உதவியாளராகப் பணியாற்றிய இவர் தற்போது யா/இளவாலை கன்னியர்மடம் மகா வித்தியாலயத்தில் பட்டதாரி ஆசிரியராகப் பணியாற்றி வருகின்றார்.

## செல்வி கிரிஜா குமாரசாமி சர்மா

இளவாலையை வசிப்பிடமாகக் கொண்ட திரு. திருமதி குமாரசாமி தம்பதிகளின் கனிஷ்ட புதல்வியாக கிரிஜா அவர்கள் 1980ம் ஆண்டு பிறந்தார். இவர் தனது ஆரம்பக்கல்வியைக் கற்பதற்காக 1986ம் ஆண்டு யா/இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் இணைந்து கொண்டார். 1996ம் ஆண்டு க.பொ.த சாதாரண தரத்திலும் 2000ம் ஆண்டு உயர்தரப்பரீட்சையிலும் சித்தி பெற்றார். 2003ம் ஆண்டு தர்காநகர் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு ஆரம்ப பாடநெறிக்கு தெரிவாகி கற்கை நெறியை நிறைவு செய்து கொண்டு 2005ம் ஆண்டு வெளியேறினார். 2007ம் ஆண்டு வ/ விபுலானந்த மகா வித்தியாலத்திற்கு ஆசிரிய நியமனம் பெற்று சேவையாற்றி வருகின்றார்.

## திரு. தம்பிநாயகம் நாகநாதன்



சித்திரமேழி இளவாலையை வசிப்பிடமாகக் கொண்ட திரு. திருமதி தம்பிநாயகம் தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனாக நாகநாதன் அவர்கள் 1974.04.02 ம் திகதி பிறந்தார். அவர் 1980ம் ஆண்டு தனது ஆரம்பக் கல்வியைத் தொடர்வதற்காக மெய்கண்டானில் இணைந்து கொண்டார். 1993ம் ஆண்டு க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சித்தி பெற்றார். 1996ம் ஆண்டு க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சித்தி பெற்றார். 2002ம் ஆண்டு யாழ் பல்கலைக்கழகத்தில் உடற்கல்விப் பாடத்தில் Diploma பட்டம் பெற்றார். 2006ம் ஆண்டு யாழ் பல்கலைக் கழகத்தில் Advanced Diploma in Physical Education பட்டம் பெற்றார். யா/புனித ஹென்றியரசர் கல்லூரியில் உடற்கல்விப் பாட ஆசிரியராக நிரந்தர நியமனம் பெற்றுள்ளார்.

## திரு. எட்வேட்ராஜா இராஜநாதன்



பத்தாவத்தை இளவாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு.திருமதி எட்வேட்ராஜா தம்பதிகளின் புதல்வனாக பிலிப் இராஜநாதன் அவர்கள் 1975ம் ஆண்டு பிறந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியைக் கற்பதற்காக 1981ம் ஆண்டு யா/இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் இணைந்து கொண்டார். க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் 1991ம் ஆண்டு சித்தி பெற்றார். க.பொ.த உயர்தரப் பரீட்சை 1994 ஆகஸ்டில் சித்தி பெற்று 1998ம் ஆண்டு யாழ் பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகி B.Sc பட்டம் பெற்றார். தற்போது தெல்லிப்பளை பிரதேச செயலகத்தில் Science & Technology officer ஆக பணியாற்றுகிறார்.

## திருமதி சுகிர்தா சபேசன்



கீருகம்பனை காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. திருமதி சுந்தரலிங்கம் தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியாக சுகிர்தா அவர்கள் 1976ம் ஆண்டு பிறந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியைப் பெறுவதற்காக 1982 ஆண்டு இளவாலை மெய்கண்டானில் சேர்ந்து கொண்டார். க.பொ.த சாதாரணதரம் 1992லும், க.பொ.த உயர்தரம் கலைப் பிரிவில் 1995லும் சித்தி பெற்று யாழ் பல்கலைக்கழக நுண்கலைப்பீடத்திற்குத் தெரிவானார். 2001ம் ஆண்டு இசைமாணிப்பட்டம் பெற்று வெளியேறினார். 2005ம் ஆண்டு முதல் யா / வட்டு மத்திய கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றி வருகின்றார்.

## செல்வி பிருந்தா கதிர்காமத்தம்பி



இளவாலை வடக்கு இளவாலையைப் பிறப் பிடமாகக் கொண்ட திரு.திருமதி கதிர்காமத்தம்பி தம்பதி களின் சிரேஷ்ட புத்திரியாக பிருந்தா அவர்கள் 1980ம் ஆண்டு பிறந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியைப் பெறுவதற்காக 1988ம் ஆண்டு யா/இளவாலை மெய் கண்டான் மகா வித்தியாலயத்தில் இணைந்து கொண்டார். 1995ம் ஆண்டு க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் சித்தி பெற்றார். க.பொ.த உயர்தரக் கல்வியை யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் விஞ்ஞானப் பிரிவில் கற்றார். யாழ் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானமாணிப் பட்டம் பெற்று வெளியேறினார். 2009ம் ஆண்டு திறந்த பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் கல்வி டிப்ளோமாப் படிப்பை மேற்கொள்கின்றார். தற்போது யா/பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலையில் விஞ்ஞான ஆசிரியராகப் பணியாற்றி வருகின்றார்.

## திருமதி ஜெயந்தா பகீரதன்



இளவாலை வடக்கு இளவாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. திருமதி கதிர்காமத்தம்பி தம்பதிகளின் கனிஷ்ட புத்திரியாக ஜெயந்தா அவர்கள் 1982ம் ஆண்டு பிறந்தார். இவர் தனது ஆரம்பக்கல்வியைப் பெறுவதற்காக 1988ம் ஆண்டு யா / இளவாலை மெய்கண்டான் மகா வித்தியால யத்தில் இணைந்து கொண்டார். க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் சித்தி பெற்றார். க.பொ.த உயர்தரப் பரீட்சையில் (கலைப்பிரிவு) 2001ம் ஆண்டு சித்தி பெற்றார். 2004ம் ஆண்டு றுகுனு கல்வியியற் கல்லூரியில் பயிற்சி பெற்று ஆரம்பக்கல்வி ஆசிரியராக வெளியேறினார். தற்போது வ/பேயாடி கூழாங்குளம் மகாவித்தியாலயத்தில் கற்பித்து வருகின்றார்.

## செல்வி விஜயகலா சத்தியமூர்த்தி

மயிலங்கூடல் இளவாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு.திருமதி சத்தியமூர்த்தி தம்பதிகளின் கனிஷ்ட புதல்வியாக விஜயகலா அவர்கள் 1980.11.23 திகதி பிறந்தார். இவர் தனது ஆரம்பக்கல்வியை யா/இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் பெற்றுக் கொண்டார். இவர் 1996ம் ஆண்டு க.பொ.த சாதாரணதரத்திலும் 1999ம் ஆண்டு க.பொ.த உயர்தரத்திலும் சித்திபெற்றார். 2003ம் ஆண்டு தர்காநகர் தேசியக் கல்வியியற் கல்லூரிக்கு ஆரம்பப் பாடநெறிக்கு தெரிவாகி 2005ம் ஆண்டு வெளியேறினார் 2006ம் ஆண்டு கொழும்பு விவேகானந்தாக் கல்லூரிக்கு நியமனம் பெற்று அங்கு ஆரம்ப பாடநெறி ஆசிரியராகப் பணியாற்றி வருகின்றார்.

## திருமதி கந்ததர்ஷினி பத்மராஜா



பத்தாவத்தை இளவாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு சி. சுப்பிரமணியம் நகுலேஸ்வரி தம்பதிகளுக்கு சிரேஷ்ட புதல்வியாக 1980.03.20ம் திகதி பிறந்தார். இவர் 1983ம் ஆண்டு இளவாலை மெய்கண்டானில் அதிபராக இருந்த திரு.சு.செல்லத்துரை அவர்களால் ஏடு தொடக்கப் பெற்று 1986ம் ஆண்டு யா /இளவாலை மெய்கண்டானில் கல்வியை ஆரம்பித்தார். இப்பாடசாலையிலே 1996ம் ஆண்டு க.பொ.த சா/தரப் பரீட்சைக்குத் தோற்றி சித்தி பெற்றார். க.பொ.த உயர்தரப் பரீட்சையில் 1999ம் ஆண்டு சித்தி பெற்றார். 2003ம் ஆண்டு தர்காநகர் கல்வியியற் கல்லூரிக்கு தமிழ்மொழிப் பாட நெறிக்குத் தெரிவாகினார். கல்லூரியிலும் பல நிகழ்வுகளிலும் பங்குபற்றி சாதனை படைத்தார். 2005ம் ஆண்டு சிறந்த பெறுபேற்றைப் (Merit Pass) பெற்றார். 2004.01.25ம் திகதி முதல் 2006.06.06ம் திகதி தி/ இ.இ.ச. ஸ்ரீகோணேஸ்வரா இந்துக் கல்லூரியில் (தேசிய பாடசாலை) ஆசிரியராக முதல் நியமனம் பெற்றுச் சென்றார். தான் முதல் கற்ற பாடசாலைக்குச் சேவை செய்யவென 2009.01.26ம் திகதி மாற்றம் பெற்று வந்துள்ளார். இவர் வெளிவாரியாக பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பட்டப் படிப்பினை மேற்கொண்டு வருகிறார்.

## திரு. கணேசலிங்கம் சசிகேஸ்



இளவாலை வடக்கு இளவாலையைச் சேர்ந்த திரு. கணேச லிங்கம் மகேஸ்வரி தம்பதியினருக்கு 1978ம் ஆண்டு மகனாகப் பிறந்தார். இவர் 1984ம் ஆண்டு யா/இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் இணைந்து தரம் 5 வரை கற்றார். யாழ் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானமாணிப் பட்டதாரியாக 2004ம் ஆண்டு வெளியேறினார். 2005ம் ஆண்டு யாழ் பல்கலைக்கழகத்தில் கடமையாற்றிய இவர் லண்டன் Oxford பல்கலைக்கழகத்தில் P.H.D. மாணவனாக உள்ளார்.

# திருமதி ஜஸ்மின் பாமளா நோபிள் சுரேந்திரன்



பத்தாவத்தை இளவாலையைச் சேர்ந்த திரு. திருமதி செல்வநாயகம் தம்பதிகளுக்கு மகளாகப் பிறந்தார். இப்பாடசாலையில் இணைந்து ஆரம்பக்கல்வியைக் கற்றார். க.பொ.த சாதாரணதரத்திலும் க.பொ.த உயர்தரத்திலும் சித்தயடைந்த இவர் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் கற்று கலைமாணிப் பட்டதாரியாக வெளியேறினார். இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் டிப்ளோமாப் பாட நெறியை நிறைவு செய்துள்ளார். குடும்பப் புனர்வாழ்வு நிறுவனத்தில் மாவட்ட ஒருங்கிணைப்பாளராகக் கடமையாற்றியுள்ளார்.. தொடர்ந்து வவுனியா விஞ்ஞான குளம் நவரட்ணம் வித்தியாலயத்தில் கற்பித்த இவர் யாழ் ஹென்றியரசர் கல்லூரியில் தற்காலிக இணைப்பில் உள்ளார்.

# செல்வி விஸ்வலிங்கம் சேந்தினி

இளவாலை வடக்கு இளவாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட சேந்தினி அவர்கள் 1980ம் ஆண்டு பிறந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியைக் கற்பதற்காக 1986ம் ஆண்டு யா/ இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் இணைந்து கொண்டார். பாடசாலையில் கல்வி பயின்ற காலங்களில் விளையாட்டுத்துறையில் சிறந்து விளங்கினார். 1996ம் ஆண்டு க.பொ.த சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றி சித்தி பெற்றார். 2000ம் ஆண்டு வவுனியா தேசியக் கல்வியியற் கல்லூரிக்கு உடற்கல்விப் பாடநெறிக்கு தெரிவாகி 2005ம் ஆண்டு வெளியேறினார். தற்போது வ/விபுலானந்தா வித்தியாலயத்தில் உடற்கல்வி ஆசிரியராகப் பணியாற்றி வருகின்றார்.

# திரு. செல்லத்துரை நாவரசன்
## (வானொலிக் கலைஞர்)



திரு. செல்லத்துரை நாவரசன் பத்தாவத்தை இளவாலையில் செல்லத்துரை சிவகாமசுந்தரி தம்பதியினருக்கு மூத்த மகனாக 1968 -05-13 இல் பிறந்தவர்.

காடிவளை இந்து இளைஞர் சனசமூக நிலைய விஜயதசமி விழாவில் 1971 இல் ஏடு தொடக்கப் பெற்று 1974-01-01 இளவாலை மெய்கண்டானில் ஆரம்ப வகுப்பில் சேர்ந்து 1984இல் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சித்தி பெற்றவர். மாணவப் பருவத்திலே பேச்சுப் போட்டி, நாடகம், வில்லிசை ஆகியவற்றில் பரிசுகள் பல பெற்றுள்ளார். மாணவ தலைவராகவும் இருந்துள்ளார். சிறந்த சாரணராகவும், விளையாட்டு வீரராகவும் திகழ்ந்துள்ளார். 1985-01-01 இல் க.பொ.த. உயர்தரக் கல்விக்காக தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் சேர்ந்து 1986இல் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்துள்ளார்.

தெல்லிப்பழை கலை இலக்கியக் களத்தின் "சங்கநாதம்" என்னும் இளைஞர் அணிக்குத் தலைவராயிருந்து மேடைப் பேச்சுப் பயிற்சி பெற்றுச் சிறந்த பேச்சாளராகத் திகழ்ந்துள்ளார். காடிவளை இந்து இளைஞர் சனசமூக நிலையச் செயலாளராகவிருந்து சமய சமூகப் பணிகள் பல புரிந்துள்ளார்.

1989இல் (G.A.Q) பல்கலைக்கழக முதல் ஆண்டுத் தேர்வுக்குத் தோற்றிய இவர் நாட்டின் போர்ச்சூழல் காரணமாக இலண்டனுக்குச் சென்றார். இளவாலையில் இருக்கும் காலத்தில் போரால் பாதிக்கப்படுபவர்களுக்கு உதவுகின்ற இளவாலை வடக்கு வெண்புறாக் கழகத் தலைவராயும், சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் உறுப்பினராயுமிருந்து முதலுதவிச் சேவை செய்துள்ளார்.

இலண்டன் சென்ற இவர் இலண்டன் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் எலக்ரோனிக் துறையில் (1991-1992) கல்வி பயின்று இலண்டன் (I.B.C.) சர்வதேச ஒலிபரப்புக் கூட்டுத்தாபன வானொலியில் இணைந்து கொண்டார். அங்கு நிகழ்ச்சித் தயாரிப்பாளராகவும், செய்தி வாசித்தல், நேர்காணல், புலம் பெயர் நாடுகளின் விழாக்களில் நேர்முக அஞ்சல் செய்தல் ஆகியவற்றில் சிறந்து விளங்கினார்.

ஐரோப்பிய சிவநெறிக் கழகத்தைத் தொடக்கிப் புலம்பெயர் நாடுகளிலுள்ள மாணவர் சைவசமயம் பயில வாய்ப்பாக 'சிவநெறி' எனும் நூலையும் வெளியிட்டுப் பரீட்சைகளையும் நடத்தி வருகிறார், அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தின் புலம்பெயர் நாடுகளின் இணைப்பாளராகவும் பணிபுரிகிறார்.

## திருமதி சாந்திமதி சிவபாலன்



புனித தலம் கீரிமலை வளாகத்திலுள்ள மயிலங்கூடலில் கணேசலிங்கம் அமுதாதேவி தம்பதிகளுக்கு 1971-07-12 இல் இரண்டாவது மகவாகப் பிறந்தவர்தான் சாந்திமதி கணேசலிங்கம் அவர்கள். உரியவேளை வித்தியாரம்பஞ் செய்விக்கப் பெற்ற அவர் ஆரம்பக் கல்வி பெறுவதற்காக 1977-01-04 இல் மயிலிட்டி வடக்கு கலைமகள் மகா வித்தியாலயத்திற் சேர்க்கப்பட்டார். ஐந்தாவது ஆண்டிற் படித்துக் கொண்டிருந்த வேளை இளவாலை வடக்கு மெய்கண்டான் மகாவித்தியாலயத்திற்கு மாற்றப்பட்டார். க.பொ.த. சாதாரண தரம் வரை அங்கு கற்றுச் சித்தியடைந்தவர் யாழ். இந்து மகளிர் கல்லூரிக்கு மாற்றம் பெற்று அங்கு க.பொ.த உயர்தரத்திற் கற்றார். அங்கு உயர்தர மாணவர் மன்றத்தின் தலைவராகவும் இருந்துள்ளார். தற்பொழுது திருமணம் புரிந்து கனடாவில் வசித்து வருகின்றார்.

## மயிலங்கூடலூர் அ. இளவழகன்



நகுலேஸ்வரப் புனித நில வளாகத்திலுள்ள மயிலங்கூடலின் அப்புத்துரை இரத்தினம் தம்பதிக்கு இரண்டாவது புதல்வனாக 1975-06-07 அந் திகதி பிறந்தவர்தான் இளவழகன் அவர்கள். முறைப்படி உரிய வேளை வித்தியாரம்பஞ் செய்விக்கப்பெற்ற அவர் ஆரம்பக்கல்வி பெறும் நோக்குடன் 1981-01-05 அந் திகதி மயிலிட்டி வடக்கு கலைமகள் மகா வித்தியாலயத்திற் சேர்க்கப்பட்டார். மாணவர்களின் போக்குவரவிற்கும் இடைஞ்சலானது. அதனால் 1981 இடைப் பகுதியில் இளவாலை வடக்கு மெய்கண்டான் மகா வித்தியாலயத்திற்கு மாற்றப்பட்டார். க.பொ.த. சாதாரண தரம் வரை அங்கு கற்றவர். அதற்கான பரீட்சையில் நல்ல தேர்ச்சி பெற்று க.பொ.த. உயர்தரத்திற்கு புனித பத்திரிசியார் கல்லூரியிற் சேர்ந்து கொண்டார். க.பொ.த. உயிரியல் விஞ்ஞான உயர்தரப் பரீட்சையில் தேர்வுக் குறைபாடு இருந்தமையால் மீண்டும் கொழும்பு சென்று சந்தைப்படுத்தல் துறைக் கல்வி கற்றார். அதன் இறுதிப் பரீட்சையில் நல்ல தேர்ச்சி பெற்றவர். பம்பலப்பிட்டி ஸ்ரீலங்கா மருத்துவமனையில் எழுதுவினைஞராகச் சேர்ந்து பணி புரிந்தார். தற்போது லண்டனில் வர்த்தகத்துடனாகி வேலை செய்து வருகின்றார்.

## திரு. முருகையா பிறேமதாசன்



இளவாலை வடக்கு இளவாலையை பிறப்பிடமாகக் கொண்ட திரு.திருமதி முருகையா தம்பதிகளின் புத்திரனாக பிறேமதாசன் அவர்கள் 1951.12.28ம் திகதி பிறந்தார். இவர் தனது ஆரம்பக்கல்வியை 1957ம் ஆண்டு யா/இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் பெற்றுக் கொண்டார். 1961ம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசல் பரீட்சையில் தோற்றினார். 1990ம் ஆண்டு இலங்கை வங்கியாளர் நிலையத்தில் A.I.B உயர் கல்வியை பெற்றார். 1979ம் ஆண்டு தொடக்கம் 2002ம் ஆண்டு வரை ஹற்றன் நஷனல் வங்கியில் நிறைவேற்று அதிகாரியாக கடமையாற்றினார். தற்போது செலான் வங்கியில் நிறைவேற்று அதிகாரியாகப் பணியாற்றி வருகின்றார்.

## திரு. வேலும்மயிலும் சண்முகநாதன்



இளவாலை வடக்கு இளவாலையை வசிப்பிடமாகக் கொண்ட திரு. திருமதி வேலும்மயிலும் தம்பதிகளின் புத்திரனாக சண்முகநாதன் அவர்கள் 1962-01-07ம் திகதி பிறந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியைக் கற்பதற்காக 1968ம் ஆண்டு யா/இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் இணைந்து கொண்டார். பாடசாலையில் கல்வி பயின்ற காலங்களில் விளையாட்டுத்துறையில் சிறந்த வீரனாகத் திகழ்ந்தார். 1977ம் ஆண்டில் கரப்பந்தாட்டம் யாழ் மாவட்டத்தில் 2ம் இடத்தைப் பெற்றார். க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் 1978ம் ஆண்டு தோற்றி சித்தி பெற்றார். 1982ம் ஆண்டு தொடக்கம் லங்கா சீமென்ற் லிமிட்டெட்டில் இயந்திர இயக்குனராகக் கடமையாற்றினார். தெல்லிப்பழை ப.நோ.கூ. சங்க இயக்குனராகவும், மெய்கண்டான் மகா வித்தியாலயத்தின் அபிவிருத்திச் சங்க செயலாளராகவும் பதவி வகித்து வருகின்றார். மெய்கண்டானின் வளர்ச்சிக்கு அயராது உழைத்து வருகின்றவர்களில் இவரும் குறிப்பிடத் தக்கவர்.

## திரு. சின்னத்தம்பு குமாரலிங்கம்



இளவாலை வடக்கு இளவாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. திருமதி சின்னத்தம்பு தம்பதிகளின் கனிஷ்ட புதல்வனாக 1956.02.21ம் திகதி குமாரலிங்கம் அவர்கள் பிறந்தார். இவர் தனது ஆரம்பக்கல்வியை கற்பதற்காக 1962ம் ஆண்டு யா / இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் இணைந்து கொண்டார். 1966ம் ஆண்டு 5ம் தரப்புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்றார். 1972ம் ஆண்டு க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் தோற்றி சித்தி பெற்றுள்ளார். 1974ம் ஆண்டு உயர்தொழில் நுட்பக் கல்லூரியில் தேசிய தொழில்நுட்ப சான்றிதழ் பெற்றார். 1989ம் ஆண்டிலிருந்து 1998ம் ஆண்டு வரை மாநகரசபையில் ஸ்ரீலங்கா தொழில்நுட்ப சேவை IIA (மின்சாரம்) இல் தொழினுட்ப உத்தியோகத்தராகப் பணிபுரிந்தார். 1999ம் ஆண்டிலிருந்து இன்று வரை இலங்கை மின்சார சபை (யாழ்ப்பாணம்) மின் அத்தியட்சராக(E.S) பணி புரிந்து வருகின்றார்.

## திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம்

மயூரம் கோப்பாய் தெற்கு, கோப்பாயில் வசித்து வரும் இவர் ஆரம்பக் கல்வியை ஓரிரு ஆண்டுகள் இப்பாடசாலையில் கற்றார். கன்னாதிட்டி மக்கள் வங்கியின் முகாமையாளராக இருந்து ஓய்வுபெற்ற இவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கலைப்பட்டதாரியுமாவார். இவர் இலங்கையின் பிரபல சிறுகதை எழுத்தாளர் ஆவார். சிறுகதை எழுத்தாளருக்கான விருது பெற்றுள்ளார்.

## திரு. இராசா ரிஷீந்திரன்



**வே**ரவல் இளவாலை வடக்கு இளவாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு.திருமதி இராசா தம்பதியினரின் புத்திரனாக ரிஷீந்திரன் 1967.08.29ம் திகதி பிறந்தார் இவர் தனது ஆரம்பக்கல்வியை யா/ இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் பெற்றுக் கொண்டார். க.பொ.த சாதாரணப் பரீட்சைக்கு 1984ம் ஆண்டு தோற்றினார். தற்போது கனடாவில் வசித்து வருகின்றார்.

# திருமதி தவமணிதேவி தனபாலசிங்கம்



முள்ளானை இளவாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் 1964ம் ஆண்டு திரு.திருமதி.செல்லத்துரை தம்பதியினருக்கு கனிஸ்ட புத்திரியாகப் பிறந்தார். இவர் தரம் ஒன்று முதல் இப்பாடசாலையில் கல்வி கற்று க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் சித்தியடைந்து 1980ம் ஆண்டு இப்பாடசாலையில் முதன் முதலாக ஆரம்பிக்கப் பட்ட உயர்தரக்கலைப்பிரிவில் கல்விகற்று சிறந்த பெறுபேற்றைப் பெற்று பாடசாலைக்குப் பெருமை சேர்த்தார். பாடசாலைக் காலத்தின் பின் இப்பாடசாலையில் தொண்டராசிரியராக பணியாற்றியமையும் குறிப்பிடத்தக்கது. இப்பாடசாலையின் வளர்ச்சிக்காக 1999ம் ஆண்டு தனது செலவில் சிறுவர் பூங்காவின் அணிமதிலை அமைத்துக் கொடுத்தார்.

1989 ம் ஆண்டு சுவிஸ்நாடு சென்று அந்நாட்டின் மொழியை நன்கு கற்றுத் தேர்ச்சி பெற்று இன்று மொழிபெயர்ப்பாளராக அந்நாட்டில் கடமையாற்றி வருகிறார்.

# திருமதி அற்புதமலர் ஞானானந்தன்



சித்திரமேழி இளவாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் 1962ம் ஆண்டு திருமதி கந்தையா தம்பதியினருக்கு ஏகபுத்திரியாக பிறந்தார்.இவர் தரம் ஒன்றிலிருந்து இப்பாடசாலையிலேயே கல்வி கற்று க.பொ.த சாதாரண தரப்பரீட்சையில் சித்தியடைந்து இப்பாடசாலையில் 1980ம் ஆண்டு முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்ட க.பொ.த உயர் தரக் கலைப்பிரிவில் கல்வி கற்று சிறந்த பெறுபேற்றைப் பெற்று இப்பாடசாலைக்குப் பெருமை சேர்த்தார். எறிபந்து அணியில் சிறந்த விளையாட்டு வீராங்கனையாகச் செயற்பட்டு பாடசாலை அணி வெற்றிபெற காரணமானார். பாடசாலையில் தொண்டராசிரியராகவும் சேவையாற்றியுள்ளார்.

## திரு. முருகதாசன் மயூராஜ்



ஆனைவிழுந்தான் இளவாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. திருமதி முருகதாசன் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனாக 1981ம் ஆண்டு மயூராஜ் அவர்கள் பிறந்தார். இவர் 1987ம் ஆண்டு தனது ஆரம்பக்கல்வியைப் பெறுவதற் காக யா/இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் இணைந்து கொண்டார். 1991ம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றிச் சித்தி பெற்றார். 1996ம் ஆண்டு க.பொ.த சாதாரணதரக் கல்வியை யா/சென் ஜோன்ஸ் கல்லூரியில் தொடர்ந்தார். B.SC in Information System கல்வியைக் கற்றார். தற்போது Virtusa corporation நிறுவனத்தில் Project Lead ஆக பணியாற்றி வருகின்றார்.

## செல்வி நிருபா முருகதாசன்



ஆனைவிழுந்தான் இளவாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. திருமதி முருகதாசன் தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியாக 1984ம் ஆண்டு பிறந்தார். தனது ஆரம்பக்கல்வியைக் கற்பதற்காக 1990ம் ஆண்டு யா/இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் இணைந்து கொண் டார். க.பொ.த சாதாரணதரக் கல்வியை யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் தொடர்ந்தார். B.SC in Business Information System Programme கல்வியை பெற்றுள்ளார். தற்போது இலண்டனில் வசித்து வருகின்றார்.

## திருமதி கலாரஞ்சினி விஜேந்திரன்



திரு. திருமதி நாகரத்தினம் தம்பதிகளின் மகளான கலாரஞ்சினி அவர்கள் 1971.06.05ம் திகதி பிறந்தார். இவர் 1977 ம் ஆண்டு யா/இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் இணைந்து தரம் ஒன்றில் கல்வி கற்றார். இவர் தொடர்ந்து கற்று 1987ம் ஆண்டு க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் தோற்றி சித்தி பெற்றார். தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியில் 1990 ம் ஆண்டு உயர்தரத்தில் சித்தி பெற்றார். இவர் யாழ் கூட்டுறவுச் சபையில் கூட்டுறவு உயர்பிரிவிலும், கூட்டுறவு வியாபார முகாமைத்துவ உயர் டிப்ளோமாப் பயிற்சி நெறியையும் பூர்த்தி செய்து யாழ் மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தில் 1999 முதல் கடமையாற்றி வருகின்றார்.

## செல்வி சுவர்ணா நாகேந்திரன்



இளவாலை வடக்கு இளவாலையை வசிப்பிடமாகக் கொண்ட திரு.திருமதி நாகேந்திரன் புனிதவதி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியாக சுவர்ணா அவர்கள் 1981ம் ஆண்டு பிறந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியைக் கற்பதற்காக 1986ம் ஆண்டு யா / இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் இணைந்து கொண்டார். 1991ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றி சித்தி பெற்று பாடசாலைக்குப் பெருமையைப் பெற்றுக் கொடுத்தார். தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியில் க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் சித்தி பெற்றார். 2000ம் ஆண்டு க.பொ.த உயர்தரத்தில் விஞ்ஞானப் பிரிவில் சித்தி பெற்று பல்கலைக்கழகம் சென்றார். யாழ் பல்கலைக்கழகத்தில் விவசாயத்துறையிற் பயின்று விவசாய விஞ்ஞானமாணியாக 2007ம் ஆண்டு வெளியேறினார். தற்போது இலங்கை சிறுவர் பாதுகாப்பு நிதியத்தில் திட்டமிடல் உத்தியோகத்தராகப் பணிபுரிந்து வருகின்றார்.

## திரு. வைரவன் செல்வம்



வலிமேற்கு பிரதேச செயலகத்தில் சமூகசேவை உத்தியோகத்தராக கடமையாற்றும் திரு வ.செல்வம் அவர்கள் வசந்தபுரம் இளவாலையில் 1964ம் ஆண்டு பிறந்தார். இப்பாட சாலையிலே தரம் 1 முதல் க.பொ.த.சாதாரண தரம் வரை கற்று க.பொ.த உயர்தரத்தை நடேஸ்வராக் கல்லூரியிலும் கற்று பல்கலைக்கழகம் சென்றார். 1997ம் ஆண்டு கலைமாணிப் பட்டம் பெற்று வெளியேறினார். 21 வருடங்களாக சமூக சேவை உத்தியோகத்தராகக் கடமையாற்றி வருவதும் குறிப்பிடத்தக்கது.

## திரு. கதிரவேலு சுபாஸ்கரன்



வசந்தபுரம் இளவாலையைச் சேர்ந்த இவர் 1980ம் ஆண்டு பிறந்தார். தரம் 1 முதல் க.பொ.த உயர்தரம் வரை இப்பாடசாலையிலேயே கற்று பல்கலைக்கழகம் தெரிவானார். இவர் B.A(Hons) பட்டமும் பெற்றார். தற்போது ஆசிரியராகக் கடமையாற்றுகின்றார். பாடசாலையின் தேவைஅறிந்து தொண்ட ராசிரியராகக் கடமையாற்றியிருந்தார்.

## நாகேந்திரன் ராஜி



